
# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
ஊனாகி...
உயிராகி...
காதலாகி...
ஸ்ரீகலா
OONAGI... UYIRAGI...
KADHALAGI...


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

# ஸ்ரீகலாவின் “ஊனாகி… உயிராகி… காதலாகி…”

Contents


உயிர் : 1
உயிர் : 2
உயிர் : 3
உயிர் : 4
உயிர் : 5
உயிர் : 6
உயிர் : 7
உயிர் : 8
உயிர் : 9
உயிர் : 10
உயிர் : 11
உயிர் : 12
உயிர் : 13
உயிர் : 14
உயிர் : 15
உயிர் : 16
உயிர் : 17
உயிர் : 18
உயிர் : 19
உயிர் : 20
உயிர் : 21
உயிர் : 22
உயிர் : 23


## உயிர் : 1

“ஹூ லெட் த டாக்ஸ் அவுட்… ஹூ ஹூ ஹூ…” அலைப்பேசியில் இருந்து வழிந்த பாடலின் இசைக்கு ஏத்தபடி லேசாக உடலை வளைத்து நடனமாடிக் கொண்டும், பாடிக் கொண்டும் இல்லை இல்லை கத்திக் கொண்டும் மாடிப்படியில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

செந்தமிழ்நம்பி. அவனின் பெயர் தான் சுத்த தமிழ்... ஆனால் ஆள் பார்ப்பதற்குப் பக்கா ஆங்கிலேயன் தான்.

நீல நிற ஜீன்சும், மேலே அவன் நடத்தும் கம்பெனியின் பெயரைப் பொறித்த வெண்ணிற டீ சர்ட்டும், வலதுக் காதில் கடுகு போன்ற ஒற்றை வைரம் நட்சத்திரம் போல் கண்ணைச் சிமிட்ட, அவன் நடந்து வந்த அழகு எப்பொழுதும் போல் அவனின் பாட்டி தையல்நாயகிக்குக் கடுப்பைக் கிளப்பியது.

“ஏலே தமிழு... என்னவே இது... தினமும் தான் இந்த வேசம் கட்டுவன்னு பார்த்தா... இன்னைக்குமாடா இப்படித் துணி போடணும்” மனதின் அங்கலாய்ப்பை வார்த்தையில் கொட்டினார்.

“அப்பத்தா... இது தான் லேட்டஸ் பேசன்... அது தெரியுமா உனக்கு? நீ மட்டும் அந்தக் காலத்துல சரோஜாதேவி மாதிரி ஹேர் ஸ்டையில், மேக்கப்புன்னு கலக்குவியாமே” தன் கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சியவாறுக் கேட்ட பேரனின் கையை வெடுக்கென்று தட்டி விட்டவர்,

“இந்த மாதிரி கூறுகெட்ட விசயமெல்லாம் உனக்கு யாருடாச் சொன்னது?” கேள்வி என்னமோ பேரனைப் பார்த்துக் கேட்டாலும், அவரின் பார்வைச் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த கணவர் ஆதிமூலம் மீது பாய்ந்தது.

“வேற யாரு... எல்லாம் உன் அருமை புருஷன் தான்...” தாத்தாவைப் பாட்டியிடம் போட்டுக் கொடுத்துவிட்டுச் சமத்தாகத் தாத்தாவின் அருகில் அமர்ந்தான் பேரன்.

“உங்கள... வயசுக்கேத்த பேச்சு வேணாம்” தையல்நாயகியின் கோபப் பார்வை ஆதிமூலத்தைச் சுட்டுப் பொசுக்கியது.

“நான் உண்மையைத் தான்டி சொன்னேன்... அது ஒரு குத்தமா?” பரிதாபமாக விழித்தார் அந்தக் கிழவர்.

PDF தமிழ் .com

“சரி விடு அப்பத்தா… என்னைக்கும் இல்லாம இன்னைக்கு என்ன என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்கிற? நான் டெயிலி இப்படித்தானே ட்ரெஸ் பண்றேன்”

“கார் விக்கிறவன் மாதிரியா துணி போடற… கழைக்கூத்தாடி மாதிரியில்ல துணி போடற”

புகழ் பெற்ற அனைத்துக் கம்பெனிக் கார்களின் டீலர்ஷிப் எடுத்து அதை இறக்குமதி செய்து விற்பனை செய்து வரும் செந்தமிழ்நம்பியைப் பார்த்து ரொம்பச் சாதாரணமாகக் கேட்டார் அவர். அவனின் கார் விற்பனை நிலையம் சென்னை எங்கும் பரவி இருந்தது. கோடிக்கணக்கில் பணம் போட்டுக் கோடிக்கணக்கில் பணம் அள்ளும் அவனைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தை சொல்லிவிட்டார் அவனின் அருமைப் பாட்டி.

“ஐயோ அப்பத்தா… என்னம்மோ ரோட்டில் பேரீச்சம் பழம் விக்கிறவன் ரேஞ்சுக்கு என்னை நீ பேசுற… இது கொஞ்சமும் நல்லாயில்ல…” சுட்டு விரல் ஆட்டி எச்சரித்தான் பேரன்.

“போடா போக்கத்தவனே… அவம் கூட இப்பல்லாம் நல்ல துணிமணி தான் போடுறான்” அவனின் முகவாயை கையால் இடித்தபடி அவனின் எச்சரிக்கை தன்னை ஒன்றும் செய்யாது என்பதைத் தன் பேச்சிலும், செயலிலும் நிரூபித்தார் அந்த மூதாட்டி.

“அப்பச்சி… இந்த அப்பத்தாவை எங்கே இருந்து பிடிச்சீங்க?” தாத்தாவின் காதைப் பேரன் கடிக்க…

‘காதல்ங்கிற பேரில் இந்த ராட்சசிக் கிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கேன்டா என் பேராண்டி. அன்னைக்கே என் அய்யஞ் சொன்னாரு… இவ உனக்குச் சரிப்பட மாட்டான்னு… அன்னைக்கு நா அவரு பேச்சைக் கேட்காததுக்கு இன்னைக்கு அனுபவிக்கிறேன். ம்ஹூம்… எல்லாம் என் நேரம்’ மனதுக்குள் அலுத்துக் கொண்ட ஆதிமூலம் இதை

வாய்விட்டுச் சொல்லி தையல்நாயகியின் வாய்ப்பாட்டில் இருந்து அவ்வளவு லேசாகத் தப்பித்து விட முடியுமா…?

“தமிழு… உம் பொறந்தநாளுக் கூடவா உனக்கு மறந்துப் போகும்” தையல்நாயகியின் பேச்சில் அவனின் மறதியைக் கண்டிக்கும் ஆட்சேபணை சிறிது தெரிந்தது.

“ஓ… சாரி… அப்பத்தா மறந்தே போயிட்டேன்…” நாக்கை மடக்கிக் கடித்துக் கொண்டு சிறுப்பிள்ளைப் போல் பாவனைச் செய்தப் பேரனின் அழகில் பழைய நாட்களின் நினைவுகள் நெஞ்சில் மலர தையல்நாயகியின் முகம் கனிந்தது.

“இதெல்லாம் மறக்கக் கூடிய விசயமா தமிழு…” என்றவர், “சித்த எம் ரூமுக்கு வந்துட்டுப் போப்பா”

“கொஞ்சம் இரு அப்பத்தா… என் பிரண்ட்சை பார்ட்டிக்கு இன்வைட் பண்ணிட்டு வர்றேன்” என்றவன் அலைப்பேசியைத் தட்டி யாருக்கோ அழைத்தான். மறுபக்கம் எடுத்ததும்,

“ஹாய் பேபி… ஹவ் ஆர் யூ?” என்று சத்தமாக விசாரித்தவன், பாட்டியின் முறைப்பில் மெதுவாக வாயில் பக்கம் நழுவினான். மேலும் பத்து நிமிடங்கள் பேசிவிட்டு வந்தவன்,

“இப்பச் சொல்லு அப்பத்தா…” என்றவனின் கையைப் பிடித்துக் கொண்டு அவரின் அறைக்கு அழைத்துச் சென்றவர், அவன் கையில் ஒரு பார்சலைத் திணித்தார். அதை வாங்கி ஆவலுடன் பிரித்தவனின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போலானது.

“அப்பத்தா…”

“ஏம்ல… சவுண்ட் விடுற… இன்னைக்கு நான் சொல்றத நீ கேளு. போய் இந்தப் பட்டு வேஷ்டி கட்டிட்டு எங்க கூடக்

PDF தமிழ் .com

கோவிலுக்கு வர்ற வழியைப் பாரு. அப்புறம் இந்தா… இந்த முள்ளம் பன்னித் தலையை ஒழுங்கா கலைச்சிட்டு உச்சி எடுத்து சீவிட்டு நல்ல பிள்ளையா வா”

“அப்பத்தா… ஜெல் போட்டு எவ்வளவு அழகா ஸ்பைக் செட் பண்ணியிருக்கேன். இதைப் பார்த்து முள்ளம்பன்னித் தலைன்னா சொல்ற… உன்னை…” கைகள் இரண்டையும் அவரின் கழுத்தை நெறிப்பது போல் கொண்டு போனவன்… அது முடியாமல் அவரின் கையிலிருந்ததைப் பறித்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

‘யார் கிட்ட உன் ஜம்பத்தைக் காட்டுற… என் கிட்டேயே வா… நான் உன் அப்பனுக்கு ஆத்தா… உன் அப்பத்தாவாக்கும்’ அவன் போவதைக் கண்ணில் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் தையல்நாயகி.

தலைக் கேசத்தில் ஜெல் போட்டு இருந்ததால் அது எப்படிச் சீவினாலும் விறைப்பாக நிற்க மீண்டும் ஒரு முறைக் குளித்து விட்டு வந்தவன் பாட்டி கொடுத்த பட்டு வேஷ்டி கட்டி கண்ணாடி முன் நின்றவனுக்குத் தன் தோற்றமே புதிதாக இருந்தது.

‘எந்த ட்ரெஸ் போட்டாலும் நீ அழகு தான்டா தமிழ்…’ அவனுக்கு அவனே பெருமைப்பட்டுக் கொண்டவன் கீழிறங்கி வந்தான். மகனை அச்சில் வார்த்தது போலிருந்த பேரனைக் கண்ணில் நிறைத்துக் கொண்டு ஆசைத் தீரப் பார்த்துக் கொண்டிருந்தனர் முதியவர்கள் இருவரும்.

“சாமியறைக்கு வா தமிழு…” இருவரும் அழைக்க அவனும் மறுக்காமல் அவர்கள் பின் சென்றான். தீபாராதனையைக் கண்ணில் ஒத்திக் கொண்டவன் அவர்கள் இருவரின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க,

“நூறாயுசோட நீ நல்லா இருக்கணும். கூடிய சீக்கிரம் இதே மாதிரி மாப்பிள்ளைக் கோலத்தில் உன்னை நான்

பார்க்கணும் தமிழு” சொல்லும் போதே தையல்நாயகியின் குரல் தழுதழுத்தது.

குனிந்திருந்தவனின் முகம் திருமணம் என்றதும் ஒரு நிமிடம் கறுத்து வெறுப்பில் சுருங்கியது. மீண்டும் எழுந்த போது அந்த வெறுப்பின் சுவடே அதில் தெரியவில்லை.

“அப்பத்தா… இப்பத்தான் இருபத்தியேழு வயசாகுது. இன்னும் ஐஞ்சு வருஷம் போகட்டும். அதுவரை லைப்பை என்ஜாய் பண்ண விடு” என்னத்தான் பேரன் சிணுங்கினாலும் அவர் தன் பேச்சை விடுவதாய் இல்லை.

“இப்போ பார்க்க ஆரம்பிச்சாத்தான் இன்னும் ரெண்டு வருசத்துக்குள்ள முடிக்க முடியும். நீ உன் வேலையைப் பாரு… நாங்க எங்க வேலையைப் பார்க்கிறோம். என்ன நான் சொல்றது சரி தானே” கணவரைப் பார்த்துக் கேட்க, அதில் சரி என்று சொல் என்ற மறைப் பொருளை உணர்ந்தவராய் ஆதிமூலம் ஆமாம் சாமி போட்டார்.

“அப்பத்தா சொல்றதைக் கேளுப்பா” என்ற ஆதிமூலத்தை முறைத்த செந்தமிழ்நம்பி அவர் பக்கம் குனிந்தவன், “விஸ்கி கொடு… பிராந்தி கொடுன்னு என் கிட்ட வருவேல அப்ப உன்ன நான் கவனிச்சுக்கிறேன்” அவர்க்கு மட்டும் கேட்கும் குரலில் மிரட்ட,

“டேய் பேராண்டி அப்படி மட்டும் பண்ணிடாதேடா. உன் பாட்டிக்கிட்ட இருந்து தப்பிக்க எனக்கு இருக்கிற ஒரே ரிலீப்பு அதான்டா. அதுல போய்க் கை வச்சுடாதே”

“அப்போ என் கல்யாணப் பேச்சை தடுத்து நிறுத்தற வழியைப் பாரு பெரிசு”

“அதுக்கென்னடா செஞ்சிட்டாப் போச்சு”

“ம்… அஃது…” இவர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் கண்டுக்காமல் முன்னால் நடந்தார்

PDF தமிழ் .com

தையல்நாயகி.

“தமிழு… முதல்ல கோவிலுக்குப் போயிட்டு வந்திடலாம். அப்புறம் நீ உன் வேலைக்குப் போ” பாட்டியின் பேச்சைத் தட்ட முடியாமல் அவர் சொன்னதைச் செய்தான் செந்தமிழ்நம்பி.

************************************

“ஏண்டி இப்படி அரக்கப் பரக்க கிளம்பிட்டு இருக்க? இந்தா ஒரு வாய் சாப்பிடுடுடி…” கையில் இட்லித் துண்டுடன் சூரியபிரியா பின் அலைந்து கொண்டிருந்தார் அவள் அன்னை சிவகாமி.

சூரியபிரியா, மேகநாதன் – சிவகாமி இவர்களின் செல்ல மகள்… பரணீதரனின் ஒரே அக்கா. மேகநாதன் மத்திய வங்கி ஒன்றில் மேலாளராக இருந்தார். வசதிக்கு ஒன்றும் குறைவில்லை. நிம்மதியான, நிறைவான, சந்தோசமான வாழ்க்கை அவர்களது வாழ்க்கை.

“அப்படியாவது உன் உடம்புக் குறையுதான்னு பார்ப்போம் சிவா…” மேகநாதன் சிவகாமியைக் கிண்டலடிக்க… அவரைப் பார்த்து முறைத்த அவர் மனையாள்,

“இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல… அதான் உங்க அத்தை மக அந்த மேனாமினுக்கி இருக்காளே அவளை வேணா ரெண்டாம் தாரமா கட்டிக்கோங்க”

“ஏண்டி… என் மேல உனக்கு இத்தனை காண்டு… சொல்றது தான் சொல்ற… ஒரு ஸ்ரேயாவோ, நயன்தாராவோ சொல்லக் கூடாது” அலுத்துக் கொண்டார் அவர்.

“அப்பா… நஸ்ரியாவை விட்டுட்டீங்களேப்பா” எடுத்துக் கொடுத்துத் தந்தையிடம் ஹைபை கொடுத்தான் பரணி.

“நீயும் உங்க அப்பா கூடக் கூட்டா? இருடா அம்மா… அம்மா… சிக்கன் சிக்ஸ்டி பை வேணும், அந்த ஹோட்டல்ல செஞ்ச மாதிரி பிரியாணி வேணும்ன்னு கேட்ப இல்ல… அப்ப செமத்தியா கவனிச்சுக்கிறேன்” கவனிப்பு என்ற வார்த்தையிலிருந்த அழுத்தம் பரணியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

“அப்பா… இது கொஞ்ச கூட நல்லாயில்ல… அம்மா நமக்காகக் காலையில் இருந்து ராத்திரி வரை எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாங்க…! அவங்களைப் போய் இப்படி எல்லாம் நீங்க பேசலாமா?” அம்மாவிடம் தான் பேசியது சரியா என்பது போல் பரணி சைகையால் வினவ, சிவகாமியின் மனம் அதில் திருப்தியுற்று சரி என்பது போல் கண்களை மூடித் திறந்தார். மனைவி மகன் கூட்டணிக் கண்டு டெபாசிட் இழந்த வேட்பாளர் போல் களத்தை விட்டு மெல்ல ஜகா வாங்கினார் மேகநாதன்.

இத்தனைக்கும் காரணமான சூரியபிரியாவோ பூஜையறைக்குள் புகுந்து கண்களை மூடி, வாய் சுலோகத்தை உச்சரிக்கப் பக்திப் பழமாய்க் கடவுளை வேண்டிக் கொண்டு நின்றிருந்தாள் அந்த இருபத்திரெண்டு வயது பாவை.

“போதும்ண்டி சூர்யா… என்னத்தான் சாமி கும்பிட்டாலும் நீ ஒழுங்காப் படிச்சாத்தான் நல்லா எழுத முடியும். புரிஞ்சதா?” சாமிக் கும்பிட்டப்படி வெளியில் வந்தவளைப் பார்த்துக் கிண்டலடித்தான் பரணி.

“பரணி… நாம என்னத்தான் தான் முயற்சி செய்தாலும் அதில் வெற்றி பெறணும்ன்னா அந்தக் கடவுள் துணை வேணும்டா” அவனுக்குப் பதிலளித்தபடி புத்தகங்களைப் பையில் எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தாள்.

“சூர்யா… ஒரு வாய் தான் இருக்கு சாப்பிடும்மா…” சிவகாமி மகள் வாயில் ஊட்டி விட… அதை மறுக்காமல் வாங்கிக் கொண்டவள்,

PDF தமிழ் .com

“அம்மா... போதும்மா... அப்பா, அம்மா, டேய் பரணி எல்லாருக்கும் பை” அவசரமாய் விடைபெற்றவள் தன் ஸ்கூட்டியைக் கிளப்பினாள்.

“அடுத்தத் தெருவில இருக்கிற பிள்ளையார் கோவிலுக்குப் போகுறதுக்கு இவ்வளவு அவசரம் கூடாதும்மா உங்க பொண்ணுக்கு”

“எப்பப் பாரு அவளைக் குறைச் சொல்லிட்டு... போடா போய் உன் வேலையைப் பாரு” பரணியின் தலையில் செல்லமாகத் தட்டியவர் அவனைக் குளிக்க அனுப்பியப் பின் சமையலறைக்குள் நுழைந்தார்.

கோவிலுக்குள் அவசரமாக நுழைந்தவள் நேரே சன்னிதிக்கு சென்று, ‘அப்பா பிள்ளையாரப்பா... இது தான் பைனல் செமஸ்டர். இதில் நான் நல்லா மார்க் வாங்கினாத் தான் வேலையைப் பத்தி யோசிக்க முடியும். வேலைக்குப் போனாத் தான் உனக்குப் பிடிச்ச மோதகம் சுண்டல் எல்லாம் உனக்குத் தருவேன். எனக்கு வேலை... உனக்கு மோதகம்... டீல் ஓகேவா?’ பிள்ளையாரிடமே டீல் விட்டு வேண்டிக் கொண்டாள்.

பின் பிரகாரத்தை வலம் வர வந்தவள் அங்கே இருந்த வாழைப்பழத் தோலைக் கவனிக்காமல் அதன் மேல் கால் வைக்க, சட்டென்று வழுக்கி விழப் பார்த்தாள். அந்த நேரம் பார்த்து வலிய நீண்ட இரு கரங்கள் அவளைக் கீழே விழாதபடி தன்னுடன் சேர்த்து அணைத்துப் பிடித்தது. யார் தன்னைப் பிடித்தது என்று நிமிர்ந்துப் பார்த்தவளுக்கு அங்கே அழகான வாலிபனைக் கண்டதும் கன்னம் இரண்டும் வெட்கத்தில் சிவக்க, தன்னைத் தானே திட்டிக் கொண்டு அவனிடம் இருந்து விலக முயன்றாள். அவனோ தன் பிடியைத் தளர்த்தாமல் அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

யாரோ ஒரு பெண் கீழே விழப் போகிறாளே என்று பதைபதைப்புடன் வேகமாக அவளைத் தாங்கி நிறுத்திய

செந்தமிழ்நம்பி அவளின் அழகில் தன்னை மறந்தான். அவனும் எத்தனையோ பெண்களிடம் எல்லை மீறிப் பழகி இருக்கிறான் ஆனால் இது போல் குடும்பப் பாங்கான அழகை அவன் கண்டது இல்லை.

‘ஒரு நாள் வாழ்ந்தாலும் இந்த மாதிரி ஒரு அழகியோட வாழ்ந்துட்டுச் செத்துடணும். ஹப்பா… என்ன அழகுடா சாமி… கண்ணை அங்கே இங்கே திருப்ப முடியலியே’ அவன் சந்தித்த பெண்களுடன் அவளையும் சேர்த்துப் பத்தோடு பதினொன்றாக அவன் அவளைப் பார்த்து ரசித்தவன்,

“ஹேய் பியூட்டி… உன் பேர் என்ன?” மென்மையான குரலில் அவன் கேட்க, அவளோ அவன் பார்வையிலும் பேச்சிலும் இன்னமும் முகம் சிவந்தவளாய் அவன் கையிலிருந்து வலுக்கட்டாயமாய் விடுபட்டு விலகிச் சென்றாள்.

அவன் அவள் அழகைக் கண்களால் அணு அணுவாய் அளவெடுத்தபடி நின்றிருக்க… அவளோ, ‘சூர்யா… இப்படியா கண்ணைப் பின்னாடி வச்சிட்டு நடப்ப… அவன் மட்டும் பிடிக்கல உன் நிலைமை அவ்வளவு தான்… அய்யோ என்னைப் பத்தி என்ன நினைச்சானோ தெரியலியே’ தன்னைத் தானே கடிந்து கொண்டு பின்னந்தலையில் தட்டிக் கொண்டாள்.

கோவிலின் வாயிலுக்கு வந்தவள் மனம் திரும்பிப் பார் என்று அடித்துக் கொள்ள… மெல்லத் திரும்பிப் பார்த்தாள். அதற்காகக் காத்திருந்தார் போல் செந்தமிழ்நம்பி, கன்னத்தில் குழி விழக் குறும்பாய் அவளைப் பார்த்துச் சிரித்தவன், அவள் எதிர்பாரா விதமாய்ச் சட்டென்று கண்ணைச் சிமிட்டினான். அவனின் கன்னங்குழிச் சிரிப்பும், ஆண்மை நிறைந்த அவன் அழகும் அவளின் மனதைச் சுனாமியாய் சுருட்டிச் சென்றது.

PDF தமிழ் .com

## உயிர் : 2

“ஏய் சூரி... பூரி... எப்படிடி எக்ஸ்சாம் பண்ணின?” கேட்டபடி சூரியபிரியாவின் அருகில் வந்து அமர்ந்தாள் குறிஞ்சி. இருவருமே பள்ளியிலிருந்து கல்லூரி வரை ஒன்றாகவே சேர்ந்துப் படிக்கின்றனர். பொறியியல் கல்லூரியில் இரண்டாம் வருடம் பாடப் பிரிவு பிரிக்கும் போதும் இருவரும் ஒரே பிரிவைத் தான் தேர்ந்தெடுத்தனர். அந்தளவுக்கு ஒற்றுமை அவர்களிடத்தில்.

“குறிஞ்சி... என்னை அப்படிக் கூப்பிடாதேன்னு உனக்கு எத்தனை தடவைச் சொல்றது” சொல்லிக் கொண்டே அவள் கையில் நறுக்கென்று கிள்ளினாள் சூரியபிரியா.

“சாரி... பூரி” என்ற குறிஞ்சியின் தலையைப் பிடித்து அவளைக் குனிய வைத்த சூரியா, அவள் முதுகில் ஓங்கி அடித்தாள்.

“ஏண்டி குரங்கே... இப்படியா வலுவா அடிப்ப” கையைப் பின்னால் வளைத்து முதுகை தடவி கொண்டே குறிஞ்சி அவளைப் பார்த்து முறைக்க,

“பின்னே என்னடி சூரியபிரியாங்கிற அழகான பேரை நீ மட்டும் கொலைப் பண்ணலாமா?” அவள் தோழியை முறைக்க,

“ஓ... நான் மட்டும் உன் பேரைக் கொலைப் பண்ணக் கூடாது. நீயும் என் கூடச் சேர்ந்துக் கொலைப் பண்றேன்னு சொல்றியா? என்னவொரு பெருந்தன்மை... உன் பெருந்தன்மையை நினைச்சு எனக்கு அப்படியே சிலிர்த்துப் போச்சு. இந்த உலகத்தில் தன்னோட பேரைத் தானே டேமேஜ் பண்ணிக்கிற முதல் ஆள் நீ தான்டி பூரி...” நமட்டுச் சிரிப்புடன் சொன்னவள், சூரியா அடிக்க வரும் முன் சிட்டாகப் பறந்தாள் குறிஞ்சி.

“ஏய் குறிஞ்சி… மவளே என் கையில மாட்டினே… உனக்குச் சங்கு தான்டி…” சொல்லிக் கொண்டே அவளை விடாமல் துரத்தினாள் சூரியா.

“போதும் முடியலடி…” மூச்சு வாங்க நின்றக் குறிஞ்சியை முறைத்துக் கொண்டே அவள் அருகில் வந்தாள் சூரியா.

“ஓகே முறைக்காதே சூர்யா…” தோழியிடம் சமாதானப் புறாவைப் பறக்க விட்டாள் குறிஞ்சி.

“இதை முதல்லேயே சொல்லியிருக்கலாம்ல…” மனத்தாங்கலுடன் சொன்னவள் அந்த மரத்தடியில் தொப்பென்று அமர்ந்தாள்.

“சூர்யா… எக்ஸாம் எல்லாம் முடிஞ்சது தானே… நாம எங்கேயாவது வெளியில் போயிட்டு வரலாமா?”

“எங்கேடி போகலாம்?”

“இந்த வெயிலுக்கு வேற எங்கே போக… ஏதாவது ஷாப்பிங் மால் போகலாம். ஷாப்பிங் பண்ணின மாதிரியும் ஆச்சு… ஏசியில இருந்த மாதிரியும் ஆச்சு”

“ஓகே டன். நான் அம்மாவுக்குப் ஃபோன் பண்ணிச் சொல்லிட்டு வர்றேன்” என்ற சூரியா அன்னையை அழைத்து விசயத்தைக் கூறிச் சம்மதம் வாங்கியவள், உற்சாகமாகக் குறிஞ்சியுடன் கிளம்பினாள்.

வார நாட்கள் என்பதால் ஷாப்பின் மாலில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை. இருவரும் ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கிப் பேரம் பேசிக் கொண்டு இருந்தனரே தவிர ஒரு பொருள் வாங்கவில்லை. அங்கிருந்த புட் கோர்ட்டில் உணவு உண்டு விட்டு, ஐஸ்க்ரீம் வாங்கிச் சுவைத்துக் கொண்டிருக்கும் போது, குறிஞ்சியின் அலைப்பேசி அழைக்க, அதை எடுத்துப் பேசிவிட்டு வைத்தவள்,

PDF தமிழ் .com

“சூர்யா… ஊரிலிருந்து அக்கா வந்திருக்காளாம்… அம்மா வரச் சொன்னாங்க. நிதீஷ் கண்ணுக்குள்ளேயே இருக்கான்டி. நான் வீட்டுக்குக் கிளம்பவா?” ஏக்கக் குரலில் கேட்டவளின் ஏக்கம் சூரியாவுக்கும் புரிய,

“சரிடி… நீ போ… நானும் அப்படியே கிளம்பறேன்”

“தேங்க்ஸ் சூர்யா…” தோழியின் கன்னத்தில் முத்தமிட்டவள், அவசராகப் புறப்பட்டுச் சென்றாள். நிதீஷ்… குறிஞ்சியோட அக்காவின் ஒரு வயது மகன். அவனை இவளும் பார்த்திருக்கிறாள். குண்டுக் கன்னங்களுடன் கொழுக் மொழுக்கென்று இருக்கும் நிதீஷை இவளுக்கும் ரொம்பப் பிடிக்கும்.

கொஞ்ச நேரம் அங்கும் இங்கும் வேடிக்கைப் பார்த்தவளுக்குப் பொழுதைக் கடத்துவது கஷ்டமாகத் தெரிய வேறுவழியில்லாமல் கையிலிருந்த ஐஸ்க்ரீமுடன் எழுந்து கீழ் தளம் செல்வதற்காக மின்தூக்கியில் ஏறப் போனாள். அங்கே உள்ளுக்குள் நின்றிருந்தவனைக் கண்டு ஒரு கணம் திகைத்தவள், பின் அவனைப் பார்க்காதவாறு உள்ளே நுழைந்து மறுப்பக்கம் சென்று நின்றுக் கொண்டாள். மின்தூக்கியில் இருவரைத் தவிர வேறு யாருமில்லை. அவளின் இதயம் பயத்தில் வேகமாகத் துடிக்க, முகத்தில் வியர்வை முத்துக்கள் தோன்றிப் பளிச்சிட ஆரம்பித்தது.

செந்தமிழ்நம்பியோ, காலையில் பார்த்த அழகியை மீண்டும் கண்டதும்… காண்பது கனவோ என்ற மனநிலையில் கண்ணிமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, “ஹாய் பியூட்டி…” ஸ்டைலாக அவளைப் பார்த்துக் கை அசைத்தான். அவன் குரலில் அவனைத் திரும்பிப் பார்த்தவள், அவன் செய்கையினால் வெட்கத்தில் சிவந்த முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

அவனோ அவள் தன்னை உதாசீனப் படுத்துவதாக எண்ணி அவள் மீது கோபம் கொண்டான். வெட்கத்தில் சிவந்திருந்த அவள் முகத்தைப் பார்த்திருந்தால் அவனுக்குப் புரிந்திருக்கும். கோபம் கொண்ட அவன் வேகமாக அவள் முன் வந்து நிற்க, அவனின் செய்கையில் அவள் பதறிப் போனவளாய் அவனை நிமிர்ந்துப் பார்த்தவள் கிடைத்த இடைவெளியில் நழுவ முயன்றாள். அவளின் செய்கை அவனின் கோபத்தை இன்னமும் அதிகப்படுத்த, அவள் நகரா வண்ணம் அவளின் இருபுறமும் தன் கைகளால் சிறை செய்தவன், அவளின் அழகை வெளிப்படையாய் ரசிக்க ஆரம்பித்தான்.

ஏற்கெனவே அவனிடம் மயங்கிப் போயிருந்த அவள் நெஞ்சம், அவனின் அருகாமையில் இன்னமும் மயங்கித் தவித்தது. அவனின் ஊடுருவும் பார்வையை எதிர் கொள்ளும் சக்தி இல்லாமல் அவள் கண்கள் அங்குமிங்கும் நர்த்தனமாடி, கடைசியில் தாங்க முடியாமல் தாமாகவே மூடியது. கருவிழி அங்குமிங்கும் ஓட, செவ்விதழ் துடிக்க, உடல் மெல்லியதாக நடுங்க பெண்மையின் இலக்கணமாய் அவள் நின்றிருந்த அழகு நியாயத்திற்கு அவனை மயக்கியிருக்க வேண்டும்.

அடங்காத குதிரைப் போல் திமிருடன் இருக்கும் பெண்களைத் தான் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அவளையும் அவள் செய்கையை வைத்து, திமிர்பிடித்தவளோ என்று எண்ணித் தான் அருகில் வந்தான். அதற்கே அவள் தாங்க முடியாதவளாய் கண்களை மூடி, உடல் நடுங்க நின்றிருந்ததைக் கண்டவனுக்கு மனதுக்குள் மெல்லியதாக ஆச்சிரியம் உண்டானது. இப்படியும் மென்மையாகப் பெண்கள் இருப்பார்களா? என்று...

‘டேய்... உன் ரசனைக்கு ஏத்தப் பெண் இவள் இல்லை’ அவன் மனசாட்சி அவனை அடக்கினாலும், அவளின் பூவினும் மென்மையான அவள் பெண்மை அவனைக்

காந்தம் போல் இழுக்கத் தான் செய்தது. துடிக்கும் அவள் செவ்விதழை தன் இதழால் அணைத்து ஆறுதல் படுத்தலாமா என்ற பைத்தியக்கார யோசனைக் கூடத் தோன்றியது அவனுக்கு.

அவனிடமிருந்து எந்தவிதப் பேச்சும் இல்லை என்றதும் மெதுவாகக் கண்களைத் திறந்தாள் சூரியபிரியா. அவன் அசையாது அவளைக் கைகளால் சிறைச் செய்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருக்க, அவனின் பார்வையில் அவளுக்கு இன்னமும் முகம் சிவந்தது.

‘ஹையோ... பப்ளிக் ப்ளேசில் ஏன் இப்படி அலும்புப் பண்ணுகிறான்?’ என்று நினைத்தவளுக்கு அப்பொழுது தான் மின்தூக்கியில் இருக்கிறோம் என்ற உணர்வே வந்தது. கதவைப் பார்த்தவளுக்கு அது திறந்திருப்பதைக் கண்டு பயத்துடன், கண்கள் கலங்கச் செய்வதறியாது பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

அவளின் கண்கள் சென்ற இடத்தைக் கண்டவன், கதவுத் திறந்திருப்பதை உணர்ந்து அவளை விடுவித்தான். விட்டால் போதுமென்று வேகமாக வெளியேறப் போனவளின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி, அவள் கையில் வழிந்து கொண்டிருந்த ஐஸ்க்ரீமை மெல்லக் குனிந்துச் சுவைத்தவன்,

“சோ ஸ்வீட் பேபி... உன்னைப் போல” கண்ணைச் சிமிட்டியபடிச் சொல்லியவன் வேகமாக வெளியேறினான்.

அதிர்ச்சியில் அப்படியே நின்றிருந்தவளை எங்கேயோ ஒலித்த காரின் ஹார்ன் ஒலி சுயநினைவுக்குக் கொண்டு வந்ததது. அவனின் செயலுக்கு நியாயத்திற்கு அவளுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். ஆனால் ஏனோ அவளுக்குக் கோபம் வரவில்லை. அவனைப் பார்த்தால் ஏதோ ஜென்ம ஜென்மாய்ப் பழகியது போல் ஒரு உணர்வுத் தோன்ற அவள் மனம் அவனிடம் விருப்பமாய்ச் சிக்கிக் கொண்டது.

அவன் ருசித்த ஐஸ்க்ரீமைப் பார்த்தவள், அதைக் கீழே போடலாமா? வேண்டாமா? என்று இருமனதாய் யோசித்தவள், பின் ஏக மனதாய் அதைச் சுவைக்க முடிவு செய்தாள். ஐஸ்க்ரீமை ஒவ்வொரு வாயாய் எடுத்துச் சுவைத்தவள் மனம், ஏனோ அவனே அவளுக்கு ஊட்டியது போல் சிலிர்த்துப் போனது.

இரவின் தனிமையில் சூரியபிரியா தூக்கம் வராமல் புரண்டுப் புரண்டுப் படுத்துக் கொண்டிருந்தாள். அவளின் மனம் முழுவதும் செந்தமிழ்நம்பியே நிறைந்திருந்தான்.

'அவன் பேர், ஊர் தெரியாது? அவன் யார் என்றும் தெரியாது? ஆனால் என் மனம் ஏன் அவனிடம் மயங்குகிறது? அவனின் அருகாமையை மனம் ஏன் விரும்புகிறது? அவனின் பார்வை என்னைக் கொல்லாமல் கொல்லுதே... என்னைப் போன்ற ஏக்கம் அவனுக்கும் இருக்குமா?' மனதில் நினைத்தவள் காலையில் அவன் தொட்ட அவளின் இடுப்பைத் தடவிப் பார்த்துக் கொண்டாள். அவனின் ஸ்பரிசத்தை இப்பொழுதும் உணர்ந்தவளாய் கண்களில் மயக்கத்துடன் தலையணையில் முகம் புதைத்தாள்.

அங்கே ஒருத்தி தன் நினைவில் தாபத்தில் வெந்துச் சாம்பலாகிக் கொண்டிருக்கிறாள் என்பதை அறியாதவனாய் செந்தமிழ்நம்பி... அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் பாரில் கையில் மதுவுடன் மங்கையர்களுடன் ஒட்டி உரசிக் கொண்டு ஆடிக் கொண்டிருந்தான்.

"ராகினி இவனையா நீ சொன்ன... இவன் அப்படி ஒண்ணும் பெரிய அழகில்லையே. அப்படி என்னத்தான்டி அவன் கிட்ட இருக்கு... இப்படி அவன் கிட்ட மயங்கியிருக்க" செந்தமிழ்நம்பியை பார்த்துவிட்டு ராகினியின் தோழி அவளிடம் குறைப்பட்டுக் கொண்டாள். ராகினியின் அழகுக்கும், பணத்துக்கும் இவனெல்லாம் கால் தூசிப் பெற மாட்டான் என்பது அவள் தோழியின் கருத்து.

தமிழ் நாவல்

“வாழ்க்கைக்கு அழகாடி முக்கியம்... நாய் குட்டி மாதிரி என்னைச் சுத்திச் சுத்தி வர்றானே அது தானே எனக்கு வேணும். அது எல்லாத்தையும் விட அவன் கிட்டே இருக்கிற பணம்... அதை நீ மறக்கக் கூடாது” சொன்ன ராகினி தமிழைப் பார்த்து மையலுடன் கையசைத்தாள்.

“ஹாய் பேபி... அங்கே வந்து டான்ஸ் பண்ணாம இங்கே வந்து உட்கார்ந்துட்டு இருக்க. கமான்...” அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்று அவளுடன் இணைந்து ஆடினான். அவனின் கைகள் அவள் உடலில் எல்லை மீறித் தடவிச் செல்ல, அவளோ அதை எதிர்க்காமல்... புன்சிரிப்புடன் அனுமதித்தாள். அதை அவனும் நன்கு பயன்படுத்திக் கொண்டான்.

“ராகி... பர்த்டே பேபிக்கு ஸ்பெசல் கிப்ட் இல்லையா?” அவள் கழுத்தில் முகம் புதைத்துக் கொண்டே அவன் கேட்க, அவனின் மனம் புரிந்தவளாய் அவனின் முகத்தைத் தன் தோளிலிருந்து நிமிர்த்தி அவனின் இதழில் அழுத்தமாய்த் தன் முத்திரையைப் பதித்தவள் வெகுநேரம் கழித்தே அவன் இதழை விடுவித்தாள்.

“நோ பேபி... இது சீட்டிங்...” கண்களில் மயக்கத்துடனும், கிறக்கத்துடன் கூறியவனைக் கர்வத்துடன் பார்த்தவள்,

“வேற என்ன வேணுமாம்?” கெஞ்சல் குரலில் அவள் கேட்க,

“அதை ரூமுக்குப் போய்ச் சொல்றேன்” என்றவன் அவளை ஹோட்டல் அறைக்கு அழைத்துச் சென்றான்.

அறைக் கதவைத் தாளிட்டதும் முரட்டுத்தனமாய் அவளை அணைத்தவன் அதை விட முரட்டுத்தனமாய் அவளின் இதழைத் தன் இதழால் பற்றி இழுத்துச் சுவைத்தான். மேலும் மேலும் முன்னேறியவனை,

“வேண்டாம் தமிழ்... மேரேஜ்க்கு அப்புறம் எல்லாம்...” ராகினி அவன் கையைத் தட்டிவிட, அவனோ அதைக்

கொஞ்சமும் சட்டைச் செய்யாமல் தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். அவளின் எதிர்ப்புகள் எல்லாத்தையும் தன் பலத்தால் அடக்கியவன் அவளைத் தூக்கி படுக்கையில் கிடத்தித் தான் நினைத்ததைச் சாதித்த பின்பே அவளை விடுவித்தான்.

“தமிழ்… நீங்க இப்படிச் செய்வீங்கன்னு நான் கொஞ்சமும் நினைக்கல. இப்போ எனக்குப் பயமாயிருக்கு. நம்ம மேரேஜை எவ்வளவு சீக்கிரம் வச்சுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வச்சுக்கலாம்” கெஞ்சும் குரலில் அவள் கூற, அவனோ அவளைக் கண்டு கொள்ளாமல் உடை மாற்றிக் கொண்டே,

“ஹ… உனக்குப் பயமா? குட் ஜோக் ராகி. அதுவும் மேரேஜ்… உனக்கும் எனக்கும்…” ஏதோ ஹாஷ்யத்தைக் கேட்டவன் போல் விழுந்து விழுந்துச் சிரித்தான். அவனின் சிரிப்பை ராகினி பயத்துடன் பார்த்தாள்.

“உன் இஷ்டத்துக்குக் கொஞ்சம் வளைஞ்சுக் கொடுத்தா… என்ன என்ன ஆட்டம் போட்ட… அழகால ஆண்களைத் தன் பின்னால் அலைய விடும் உன்னை மாதிரிப் பொண்ணுகளுக்கு இது தான் கதி. உன் போல முரட்டுக் குதிரையை அடக்குறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதான் அடக்கிட்டேன்” அவனின் குரல் திமிராய் ஒலிக்க, அவள் அவனை நம்ப முடியாமல் பார்த்தாள்.

“தமிழ் நீயா இப்படிப் பேசறது?”

“ஆமாம்… நானே தான்டி பேசறேன். இப்ப அதுக்கு என்ன பண்ணப் போற?”

“உன்னை லவ் பண்ணுனதுக்கு எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?” மெல்ல விசும்பினாள் அவள்.

“லவ்வா… அதுவும் நீயா?” அருவருப்பாய் அவள் மேல் அவன் பார்வைப் படிந்து விலகியது,

தமிழ் நாவல்

“எனக்கு முன்னாடி நீ லவ் பண்ணின நாலுப் பேரை எந்த லிஸ்டில் சேர்க்கப் போற... ம்...” இளக்காரமாய் அவன் வினவ,

“அது வந்து...” ராகினியால் பதில் பேச முடியவில்லை. அவள் செய்ததும் அப்படிப்பட்ட ஒரு கேவலமான காரியம் தான். ஒருத்தனை விட இன்னொருத்தன் பணக்காரன் என்று மலர் விட்டு மலர் தாவும் வண்டு போல் அவளும் தாவத் தான் செய்தாள். நிச்சயம் செந்தமிழ்நம்பியை விடப் பணக்காரன் வேற யாராவது கிடைத்தால் இவனையும் அவள் கைக் கழுவி விட்டிருப்பாள் தான். அதுதான் உண்மையும் கூட.

“அதுக்காக நீ பண்ணியது கொஞ்சமும் நல்லாயில்ல தமிழ்” அழுகை மறைந்து அவள் கோபமாகப் பேச, அவள் அருகே நிதானமாக வந்தவன்,

“இங்கே பாரு... நீயும் உன் தேவைக்குத் தான் பழகினே. நிச்சயம் அதில் காதலில்லை. அதே மாதிரி நானும் என் தேவைக்குத் தான் பழகினேன். இப்போ என் தேவை முடிஞ்சது... நமக்குள் இருக்கும் உறவும் முடிஞ்சது. வரட்டுமா பேபி பை...” அவள் கன்னத்தைத் தட்டி விட்டுச் சென்றவனை எதுவும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டே இருந்தவள் பின் அழுதக் கண்களை அழுந்த துடைத்துவிட்டு எழுந்தவள், உடையை மாற்றிக் கொண்டு தன் வீட்டிற்குக் கிளம்பினாள்.

இரவில் தள்ளாடியபடி வீட்டிற்கு வந்தவன், வரவேற்பறையில் அமர்ந்திருந்த தையல்நாயகியைக் கண்டதும் அப்படியே பம்மிக் கொண்டு மாடிப்படியில் காலை வைத்தான்.

“ஐயா தமிழு...” பாட்டியின் குரல் தளுதளுப்பில் மனம் கரைந்து அவர் அருகில் வந்து அமர்ந்தவன் தவறு செய்துவிட்ட குழந்தையைப் போல் தலைக் கவிழ்ந்தான்.

“ஏன் ராசா... உனக்கு என்னடா குறை? இப்படிக் குடிச்சுக் குடிச்சுக் கெட்டுப் போற” அதற்கும் பதில் பேசாமல் இருந்தவனை என்ன செய்வது என்று தெரியவில்லை அந்த மூதாட்டிக்கு. குனிந்திருந்த அவன் முகத்தைப் பற்றித் தன் சேலை முந்தானையில் துடைத்து விட்டவர்,

“உனக்காகவே வாழுற இந்த ரெண்டு வயசான ஜீவனை நினைச்சுப் பாரய்யா” அவரின் கண்கள் கலங்கியது கண்டு பதறியவனாய்,

“கொஞ்சம் கொஞ்சமாய் என்னை மாத்திக்கிறேன் அப்பத்தா” என்றவன் அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் எழுந்து சென்றான்.

பேரனின் சட்டையிலிருந்த உதட்டுச் சாயம் பாட்டியின் கண்ணில் அப்பொழுது தான் பட்டது. ‘அடியாத்தி... என் குடியையே கெடுத்தானே...’ அதிர்ந்துப் போய் நெஞ்சில் கையை வைத்துக் கொண்டு சோபாவில் சாய்ந்தவர், ‘ம்ஹும் இதுக்கு மேலே இவனை இப்படியே விட்டா கெட்டுச் சீரழிஞ்சுத் தான் போவான். முதல்ல பொண்ணைப் பார்த்துக் கல்யாணத்துக்கு நாள் குறிக்கணும்’ மனதில் உறுதியுடன் எண்ணியவர் அதே உறுதியுடன் படுக்கச் சென்றார்.

அறைக்குள் நுழைந்துப் படுக்கையில் விழுந்தவன் கண்கள் உறக்கத்தைத் தழுவ மறுத்தது. கண்களை மூடிப் படுத்திருந்தவனின் காதில்,

‘டேய் இந்தப் பொம்பளைங்களே இப்படித்தான்டா. நம்மளை நாய் மாதிரி அவங்கப் பின்னாடி அலைய விடுறதுல அவளுகளுக்கு அப்படியொரு சந்தோசம். இவளுகளுட்ட எல்லாம் கெஞ்சக் கூடாதுடா. அதே மாதிரி மென்மையையும் காட்டக் கூடாதுடா. அப்படி நாம நடந்துகிட்டோம்ன்னா நம்மளப் பொட்டைப் பய மாதிரி பார்ப்பாளுங்க. இதோ என்னைய பார்த்த மாதிரி. இவளுகளுக்கு எல்லாம் முரட்டுத்தனம் தான்டா சரி. நாய்

தமிழ் நாவல்

மாதிரிக் குழையக் கூடாது... புலி மாதிரிப் ஆக்ரோசமாய்ப் பாயணும்டா’ எங்கோ தூரத்தில் கேட்பது போல் ஒரு குரல் கேட்க, தாங்க முடியாதவனாய் கைகளால் காதை இறுக மூடிக் கொண்டான்.

அவனின் கண்ணுக்குள் பழகிய பெண்களின் முகமும், காதில் அந்தக் குரலும் ஒலிக்கச் சட்டென்று எழுந்தமர்ந்தவன் தலையைக் கைகளால் தாங்கியப்படி அப்படியே அமர்ந்திருந்தான். பின்பு தன்னை முயன்று நிதானப்படுத்திக் கொண்டு ஜக்கில் இருந்து தண்ணீரைக் குடித்தவன் மீண்டும் படுத்தான்.

படுக்கை விரிப்பில் இருந்து வந்த நறுமணம், காலையிலும் மதியமும் சந்தித்த அந்தப் பெண்ணின் வாசத்தை நியாபகப்படுத்தியது. அவளின் மருண்டப் பார்வையும், உடல் நடுங்க கண்கள் மூடி அவள் நின்றக் கோலமும் அவன் கண்களில் வலம் வந்தது. அதையெல்லாம் விட அவளின் பட்டு போன்ற இடையின் மென்மையான ஸ்பரிசத்தை அவன் கைகள் இன்னமும் உணர்ந்தது. அவள் கையிலிருந்த ஐஸ்க்ரீமை சுவைக்கும் போது அவள் கையையும் சேர்த்துச் சுவைத்த போது உண்டான தித்திப்பு, இப்பொழுது நினைக்கும் போதும் அந்த ஐஸ்க்ரீமை போல் அவன் நெஞ்சில் சில்லென்று இனிமையாய் இறங்கியது. அந்த இனிமைத் தந்தச் சுகத்தில் அமைதியாகக் கண்களை மூடியவன், ஒரு சில நிமிடங்களில் ஆழ்ந்த உறக்கத்தைத் தழுவினான்.

## உயிர் : 3

“கண்ணாளனே எனது கண்ணை நேற்றோடு காணவில்லை...

என் கண்களைப் பறித்துக் கொண்டு ஏன்னின்னும் பேசவில்லை”

திரையில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சூரியபிரியா. அந்தப் பாடலின் நாயகன், நாயகியின் முகம் அவளுக்குத் தெரியவே இல்லை. அதற்குப் பதில் அவளுக்குச் செந்தமிழ்நம்பியின் முகமும் அவள் முகமும் தெரிய, ஏதோ வானில் பறப்பது போன்று ஒருவித மயக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

அன்று ஷாப்பிங் மாலில் அவனைப் பார்த்து இன்றோடு கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் முடிந்து விட்டது. அவள் வெளியில் செல்லும் போதெல்லாம் அவளையும் அறியாமல் அவள் கண்கள் அவனைத் தான் தேடியது. ம்ஹும்... எங்கும் அவனைக் காணக் கிடைக்கவில்லை. இந்த இரு மாதங்களாய் அவனைத் தேடி... தேடி... அவள் கண்களும், மனமும் சோர்ந்தது தான் மிச்சம்.

‘என் மனதை அலைப்பாயச் செய்துவிட்டு... நீ எங்கேயடாப் போனாய்? உன்னைக் காணாமல் தவிக்கும் கண்களையும், மனதையும் அடக்கும் வழி எனக்குத் தெரியவில்லையே...’ தொலைக்காட்சிப் பெட்டியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் மனம் புலம்பித் தவித்தது.

“அம்மா... நம்ம சூர்யாவுக்கு என்னமோ ஆச்சு...! டிவியை முறைச்சுப் பார்த்துட்டு உட்கார்ந்து இருக்கா” அங்கு வந்த பரணி, சூரியா அமர்ந்திருக்கும் லட்சணம் கண்டு சிவகாமியை கூக்குரலிட்டு அழைத்தான்.

“உனக்கு எத்தனை தடவைத் தான்டா சொல்றது. வயசுப் பொண்ணுக்கிட்ட வம்பு இழுக்காதேன்னு. அவ என்ன

பண்ணினா உனக்கு என்னடா” சமையலறையிலிருந்து கைகளைத் துடைத்தவாறு வெளியில் வந்தவர் மகனை நோக்கிக் கோபமாய்ச் சத்தமிட்டார்.

“உங்க வயசுப் பொண்ணு உட்கார்ந்திருக்கும் அழகை நீங்களே வந்து பாருங்க” பரணி குற்றச்சாட்டில் மகளைத் திரும்பிப் பார்த்தவர், அவளின் நிலைக் கண்டு சற்றுக் குழம்பித்தான் போனார்.

வெளியில் உள்ளவர்களைப் பொறுத்தவரை சூரியபிரியா ரொம்ப அமைதியான பெண் தான். ஆனால் வீட்டில் இந்தளவுக்கு அவள் அமைதியாய் இருந்து அவர் பார்த்ததில்லை. அவள் வீட்டில் இருக்கும் நாளில் தம்பி கூடவோ இல்லை அவரிடமோ ஏதாவது பேசிக் கொண்டும், வம்பிழுத்துக் கொண்டும் இருப்பாள். அவளின் இந்த மோன நிலைக்கான காரணம் அவருக்கு என்னவென்று தான் தெரியவில்லை.

“சூர்யா… டீ… சூர்யா” அவளைக் கூப்பிட்டும் திரும்பிப் பார்க்காமல் அவளிருந்ததைக் கண்டு, அவள் தோளில் தட்ட, அவளோ தூக்கத்திலிருந்து விழிப்பவள் போல் விழித்தவள், ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க அன்னையைப் பார்த்து விழித்தாள். அவளின் பார்வையில் என்ன கண்டாரோ சிவகாமி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

“பரணி நீ சொன்னதைக் கேட்டு அவளை அரட்டப் போய்… பாரு குழந்தை எப்படிப் பயந்துட்டான்னு?” சிவகாமி சொன்னதைக் கேட்டுப் பரணி பல்லைக் கடித்தான்.

“இதுக்குப் பேர் தான் உங்க ஊரில் அரட்டுறதாம்மா… அவளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டீங்க… அதுக்கு அவ அப்படியே ஒண்ணும் தெரியாத பாப்பா மாதிரி ஒரு ரியாக்சன் கொடுத்தா… நீங்க அப்படியே கட்டிப் பிடிச்சுக்கிட்டீங்க… இது அரட்டுறதா… அடப் போங்கம்மா?”

சலித்துக் கொண்ட மகனைக் கண்களால் அடக்கினார் சிவகாமி.

“வேற வீட்டுக்கு வாழப் போற பொண்ணுடா... அவளைப் போய் ஏன் திட்டணும்... அரட்டணும்?” மகனைக் கடிந்தவர், மகளைப் பாசத்துடன் பார்த்தார்.

அன்னையும் தம்பியும் தனக்காக மோதிக் கொள்ளத் தானோ முகவரித் தெரியாத ஒருவனுக்காக உருகிக் கொண்டு இருக்கிறோமே என்ற குற்ற உணர்வு அவள் மனதைக் கொல்ல, மெல்ல அங்கிருந்து நழுவ முயன்றாள்.

“சூர்யா நில்லு... ஏன் உன் முகமே சரியில்லை? காய்ச்சல் அடிக்குதா?” அருகில் வந்து அவள் நெற்றியை சிவகாமி தொட்டுப் பார்க்க, அது பனிக்கட்டி போல் சில்லென்று இருந்தது.

“ஒண்ணுமில்லம்மா...” என்றவளின் கண்கள் அவளையும் அறியாமல் தொலைக்காட்சிப் பக்கம் போக, அவள் கண்களின் மயக்கம் சிவகாமியின் கண்களிளிருந்துத் தப்பவில்லை. அவளின் வயதின் தாக்கத்தை அறிந்தவராய்... வயது பெண்ணின் தாயாராய்... மகளுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். கணவர் வந்ததும் அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று அவரின் வருகைக்காகக் காத்திருக்கலானார்.

**********************************

“தமிழு... இந்தப் பொண்ணு போட்டோ பாருய்யா... அம்சமா இருக்காள்ல...” தையல்நாயகி தன் கையிலிருந்த புகைப்படத்தைப் பேரன் கையில் திணித்தார்.

செந்தமிழ்நம்பியோ அதை அசுவாரசியமாய் வாங்கி நன்றாக உற்றுப் பார்த்தவன், யோசனையுடன் அதைத் தள்ளி வைத்துப் பல கோணங்களில் பார்த்தான். பின்பு

தமிழ் நாவல்

தலைகீழாய் அப்படியும் இப்படியுமாய்த் திருப்பிப் பார்த்தவன் உதட்டைப் பிதுக்கினான்.

“ம்ஹும்… பொண்ணு சுமாருக்கும் கீழே தான் அப்பத்தா…” என்றவனைக் கடுப்புடன் பார்த்தார் பாட்டி.

“எலேய் இது எல்லாம் நல்லாயில்ல… சொல்லிப்புட்டேன். இதை விட எந்த அழகு ரதிடா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கக் காத்திட்டிருக்கா? அப்படி உங்கிட்ட மயங்கி எந்த ரதி தவம் இருக்காளோ அவளைக் காட்டு… நான் மறு முஹூர்த்ததுல கல்யாணம் பண்ணி வைக்கிறேன். அதை விட்டுட்டு நான் பார்த்தப் பொண்ணைக் குறைச் சொன்ன… நான் பொல்லாதவளாயிடுவேன் ஆமாம்…” தையல்நாயகி நொடித்துக் கொள்ள, அதைக் கேட்டதும் அவன் மனமோ அவளை நினைத்தது.

அவன் மனக்கண்ணில்… அன்றொரு நாள் மின்தூக்கியில் அவன் கைச்சிறையில் கண் மூடி மயங்கி நின்ற அந்தப் பெயர் தெரியாத அழகியின் முகம் ஒரு கணம் வந்து போனது. ‘இப்போ எதுக்கு அவள் நினைப்பு?’ தலையைக் குலுக்கி அவள் நினைப்பை விரட்டியவனைப் பார்த்து,

“பார்த்தியா… உனக்கே நீ சொல்றது சரியாப்படல” என்றவரை முறைத்தவன்,

“அப்பத்தா… நான் அழகில்லன்னு குத்திக் காண்பிக்கிறீயா?” கோபமாய்ப் பேசியவனை இடைமறித்தவர்,

“ஐயோ கடவுளே… என் ராசா மாதிரி இந்த ஊர் உலகத்துல யாராவது அழகுண்டா” பேரனின் முகத்தில் இரு கையை வைத்து நெட்டி முறித்தவர், அவனின் அழகைப் பார்த்து ரசித்தார்.

நல்ல நெடு நெடுவென்ற உயரம், மாநிறத்துக்கும் சற்றுக் கீழே தான் நிறம்… இருந்தாலும் அதுவே அவனுக்குத் தனிக்

கம்பீரத்தைக் கொடுத்தது. பரந்த நெற்றியும், சிறிய கண்களாக இருந்தாலும் அதன் கூரியக் கழுகைப் போன்ற பார்வை அவன் நினைத்ததைச் சாதிப்பவன் என்பதைச் சொல்லாமல் சொல்லியது. கத்தை மீசை அளவாய் நறுக்கப்பட்டு, அதன் கீழே எப்பொழுதும் புன்னகையை வாடகைக்கு எடுத்திருக்கும் சிரிக்கும் உதடுகள், நாடியின் நடுவே சிறு பிளவு... அதுவே அவனுக்கு மேலும் அழகைக் கொடுக்க... மொத்தத்தில் ஆணழகனாய் இருந்தவனை யாராவது அழகில்லை என்று கூறுவார்களா?

“எனக்குப் பிடிக்கலைன்னா விடேன் அப்பத்தா” செல்லமாய்ச் சிணுங்கியவனைக் கோபமாய் முறைத்தார் அப்பத்தா.

“தமிழு அப்பத்தா சொல்றதத் தான் கேளேன்” என்று சொன்ன ஆதிமூலத்தைச் சந்தேகமாய்ப் பார்த்தவன்,

“அப்பச்சி உனக்கு இந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கோ?”

“ஆமான்டா பேராண்டி... சும்மா ஹன்சிகா மாதிரி கும்முன்னு இருக்காள்ல” பேரனிடம் ரகசியமாய் ஜொள்ளியவாறுச் சொன்னவரை நமட்டுச் சிரிப்புடன் பார்த்தவன்,

“அப்பத்தா உம் புருசனுக்கு இந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சியிருக்காம். பேசாம அவருக்கே இதைக் கட்டி வச்சுறேன். அதுவும் எப்படி எல்லாம் பொண்ணை வர்ணிக்கிறாருத் தெரியுமா? பொண்ணு சும்மா ஹன்சிகா மாதிரி கும்முன்னு இருக்காம்” தாத்தாவைப் பார்த்துக் கண் சிமிட்டியபடி அவன் சொல்ல, தையல்நாயகி பேரனை விட்டு விட்டுக் கிழவரிடம் பாய்ந்துவிட்டார்.

“என்னது கும்முன்னு இருக்கா... ச்சீ... இது என்ன பேச்சுன்னு பேசுறீரு... வயசாக வயசாக உமக்குப் புத்தி பொசக் கெட்டுப் பேச்சு. நா குடும்பத்துக்கு விளக்கேத்தப்

பொண்ணைத் தேடுனா... நீரு ரெக்கார்ட் டான்சுக்கு ஆளுத் தேடுறீரா. பல்லு போன காலுத்துல காதலு கேட்குதோ... காதலு" தையல்நாயகியின் பார்வையின் உக்கிரம் தாங்காமல் அவர் பரிதாபமாகப் பேரனைப் பார்க்க, அவன் அங்கு இருந்தால் தானே... அவன் தான் எப்பொழுதோ அங்கிருந்துத் தப்பி ஓடிவிட்டானே.

அலுவலகத்தில் வந்து அமர்ந்த செந்தமிழ்நம்பிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதுவும் அப்பத்தாவிடம் அவன் அப்பச்சி மாட்டிக் கொண்டு முழித்ததை நினைத்து நினைத்துப் பார்த்தவன் வாய் விட்டுச் சிரித்தான்.

'ஆனாலும் இந்த வயசுல இந்தக் கிழவனுக்கு லொள்ளு ஜாஸ்தி தான். ஹன்சிகா மாதிரி இருக்காளாம்ல... ம்... ஒரு விதத்தில் பார்த்தா அவள் ஹன்சிகா மாதிரி அழகாத் தான் இருக்கா. ஆனால் அதுக்காக அவளைக் கல்யாணம் பண்ணிக்க முடியுமா? அவளை மட்டுமா... வேறெந்தப் பெண்ணா இருந்தாலும் கல்யாணம் வரைக்கும் போக முடியுமா.... ம்ஹும்... முடியவே முடியாது. பெண் என்பவள் கட்டில் வரைக்கும் தான்... கல்யாணமேடை வரை இல்லை' மனதில் வன்மமாய் நினைத்தவனைக் கதவைத் தட்டும் ஒலி நனவுலகத்திற்கு அழைத்து வந்தது.

"எஸ் கமின்..." கம்பீரமாய் அவன் குரல் கொடுக்க, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் ராகினி. அவளைக் கண்டதும் அவன் கண்கள் யோசனையில் ஒரு கணம் சுருங்கி விரிந்தது.

"அட அடடே... ராகி வா... வா..." உற்சாகமாய் வரவேற்றவனை வெறுப்புடன் பார்த்தவள் அவன் சொல்லாமலே அங்கிருந்த நாற்காலில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தாள். கைப்பையிலிருந்து ஏதோ எடுத்தவள் அதை அவன் முன் நீட்டினாள்.

"என்ன இது?" கேள்வியாய் பார்த்தவனை,

“ம்… என்னோட மேரேஜ் இன்விடேசன்…”

“ஓ… யாரந்த அப்பாவி… அவருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைச் சொல்லிவிடு” நக்கல் சிரிப்புடன் சொன்னவன் கல்யாணப் பத்திரிக்கையைப் பிரித்துப் பார்த்தான்.

“அட… அமெரிக்கா மாப்பிள்ளையா? பேஷ் பேஷ் ரொம்ப நன்னாயிருக்கு… உன் வண்டவாளம் தெரிஞ்ச லோக்கல் மாப்பிள்ளை யாரும் உன்னைக் கட்டிக்குவானா?” அவன் குரலில் ஏகத்துக்கும் நக்கல் எட்டிப் பார்த்தது.

“எல்லாரையும் உன்னை மாதிரியே நினைக்காதே தமிழ்… உலகத்தில நல்லவங்களும் இருக்காங்க தான்” குற்றம் சாட்டும் குரலில் அவள் பதில் கூற,

“நான் கெட்டவன் தான் ஒத்துக்கிறேன் ராகி… அதே சமயம் நீயும் நல்லவள் கிடையாதே. என்னமோ நல்லவள் மாதிரி பத்தினி வேசம் போடுற… நீயும் என் கூடச் சேர்ந்த… சாரி சாரி… சேர்ந்துக் கெட்டுப் போனவள் தானே ராகி…” சொல்லியவன் வில்லன் சிரிப்புச் சிரிக்க, அது ராகினியின் ஆத்திரத்தைக் கிளப்பியது.

“தமிழ்… திஸ் இஸ் த லிமிட்” கோபத்துடன் இரைந்தவளைக் கையமர்த்தித் தடுத்தவன்,

“ஓகே கூல் பேபி கூல்… போனது போகட்டும் விடு. நல்ல விசயம் சொல்லியிருக்க. அதுக்கு ஒரு ட்ரீட்க்கு ஏற்பாடு பண்ண வேண்டாமா? நீ கொடுக்கணும்ன்னு அவசியம் இல்லை… நானே கொடுக்கிறேன். அதே மாதிரி எனக்கு வேண்டியதை நீயும் கொடுத்தால்…” கண்களால் அவளை மேலும் கீழும் அளவெடுத்த படிக் கூறியவனை அருவருப்புடன் பார்த்தவள்,

“தமிழ்… பெண்களை ரொம்ப லேசா எடை போட்டுட்ட… என்னை நீ ஏமாத்தி இருக்கலாம். என்னைக்காவது

ஒருநாள் நீ செய்தப் பாவம் உன்னைத் துரத்தத் தான் போகுது. என்னை மாதிரி எந்தப் பெண்ணும் பேசாம போக மாட்டா. உன்னைக் குற்றவாளிக் கூண்டில் ஏத்தி கேள்வி கேட்க யாராவது ஒருத்தி வரலாமலா போய்டப் போறா? வரும் அப்படியொரு நாள் கண்டிப்பா வரும். அப்ப என்னோட வலி உனக்குப் புரியும். அப்போ நிச்சயம் என்னை ஒரு நிமிசமாவது நினைப்ப... இல்ல கட்டாயம் நினைச்சுப் பார்ப்ப. அந்த நாள் கூடிய சீக்கிரம் வரணும்ன்னு தான் நான் கடவுளை வேண்டிக்கிறேன்" என்றவள் அவனின் பதிலை எதிர்பாராமல் புயல் போல் வெளியேறினாள்.

"பெரிய பத்தினி தெய்வம்... சாபம் கொடுக்குறாங்களாம்... இவங்கச் சொன்னதும் எனக்கு அப்படியே பலிக்கப் போகுது. போடி போ... என்னை எதிர்க்க எவளுக்காவது தைரியம் இருக்கா? அதுக்கே தைரியம் இல்லாதவளுங்க... குற்றவாளிக் கூண்டில் ஏத்துவாங்களாக்கும்... அதுவரைக்கும் நான் என்ன வாயில விரலை வச்சு சூப்பிக்கிட்டா இருப்பேன். என்னை யாருன்னு நினைச்சே... நான் செந்தமிழ்நம்பி டீ..." மூச்சிரைக்கக் கோபத்துடன் இரைந்தான்.

அப்பொழுது அவன் ஒரு உண்மையை அறியவில்லை அது... அவனைக் கேள்விக் கேட்க ஒரு பெண் தான் வர வேண்டும் என்று இல்லை... கூடிய விரைவில் அவனின் மனசாட்சியே அவனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி அவனைக் கேள்விக் கேட்கப் போகிறது என்று அவனுக்கு அப்பொழுதுத் தெரியவில்லை. தெரியும் போது காலம் கடந்து இருக்குமோ?

"யாருடா அந்தப் பொண்ணு... அப்படிக் கோபமாப் போகுது? உன் கிட்ட எத்தனை தடவைச் சொல்றது பொண்ணுங்கக் கிட்ட டிஸ்டன்ஸ் மெயின்டைன் பண்ணுன்னு" கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் செந்தமிழ்நம்பியின் ஆருயிர் தோழன் ஆதவன்.

அந்தப் பெண்ணைப் போல் செந்தமிழ்நம்பியின் முகமும் ஆத்திரத்தில் சிவந்து போயிருப்பதைக் கண்டவன், “என்னடா... மேட்டர் ஓவரா?” இரு பொருள் படக் கேட்க, அதற்குப் பதிலளிக்க முடியாமல் தலையைக் குனிந்த நண்பனைக் கோபத்துடன் பார்த்தவன்,

“ஏண்டா தமிழ்... உனக்கு எத்தனை தடவைச் சொன்னாலும் நீ திருந்த மாட்டியா? பெண்களை எல்லாம் போகப் பொருளாப் பார்க்கிறத எப்பத் தான் நிறுத்த போறீயோ? அவங்களுக்கும் மனசு இருக்குதுடா. உனக்குத் தேவைப்பட்டா... பேசாம கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே. இப்படிப் பெண்களோட சாபத்தை ஏன் தான் விலைக் கொடுத்து வாங்குறீயோ? உனக்கு என்ன தான்டா பிரச்சினை... ஏண்டா இப்படிக் கெட்டுச் சீரழியற...?” படபடவெனக் கோபத்துடன் பேசியவனைக் கையமர்த்தித் தடுத்தவன், அவன் கண் முன்னால் ராகினி கொடுத்து விட்டுப் போன கல்யாணப் பத்திரிக்கையைத் தூக்கிப் போட்டான்.

“அவளுக்காக நீ ரொம்ப உருக வேண்டாம்... அவளுக்கு வர்ற மன்த் மேரேஜ்” அசால்ட்டாகச் சொன்னவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் ஆதவன்.

“பின்னே கல்யாணம் பண்ணாம... உன் காலைப் பிடிச்சு வாழ்க்கைக் கொடுன்னு கெஞ்சுவாங்களா? உன்னை மாதிரி ஆண்கள் எல்லாம் படுக்கையில் ஆண் திமிரைக் காட்டி ஏமாத்தினா, அதுக்காகப் பெண்கள் வருந்தி அழாமல் எதிர்த்து நிமிர்ந்து நிற்கிற காலம் இது. ஏதோ உன்னைச் சுத்தி வந்த பெண்களில் யாரும் பிரச்சினைப் பண்ணாததால நீ தப்பிச்ச. போதும்டா... இந்தப் பழக்கத்தை இத்துடன் விட்டுடு”

“டேய் ஆதி... சும்மா சும்மா என்னைக் கேள்வி கேட்காதே. நான் கூப்பிட்டதும் ஓடி வந்தாளுங்களே... அவங்களைப் போய்க் கேள்விக் கேளு. நான் என்ன பிடிக்காத பெண்ணையாக் கையைப் பிடிச்சு இழுத்தேன். என்னை

மாதிரித் தான் அதுங்களும்... இதுல நீ என்னை மட்டும் திட்டுறது நியாயம் இல்ல” கோபாவேசத்துடன் கத்திய நண்பனை ஆயாசத்துடன் பார்த்த ஆதவன், அவன் கூறுவதில் இருந்த உண்மைப் புரிந்ததால் பேசாமல் இருக்கையில் அமர்ந்தான்.

கோபத்துடன் கையிலிருந்த போனைச் சுழற்றிக் கொண்டிருந்த செந்தமிழ்நம்பியைப் பார்க்கும் போது ஆதவனுக்குச் சற்று இரக்கமாகத் தான் இருந்தது. சிறுவயதிலிருந்து தன்னுடன் பள்ளி முதல் கல்லூரி வரை ஒன்றாய் படித்தவன், உயிர் நண்பன்... அவனைப் பற்றி முழுவதும் தனக்குத் தெரியும் என்று நேற்று வரை அவன் இறுமாந்துத் தான் இருந்தான்.

ஆனால் தன் நண்பனைப் பற்றித் தான் இன்னமும் சரியாகத் தெரிந்துக் கொள்ளவில்லை என்று இப்பொழுது அவனுக்கு நன்றாகப் புரிந்தது. எந்தப் புள்ளியில் தன் நண்பன் தவறு செய்யத் தொடங்கினான் என்பதை யோசித்தவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. இந்தப் பெண்கள் பழக்கம் அவனை எந்த நிலைக்குக் கொண்டு செல்லுமோ என்ற கவலை ஆதவன் மனதை அரித்தது. நண்பனை மீட்பதற்கான வழி என்னவென்று தான் அவனுக்குத் தெரியவில்லை.

## உயிர் : 4

“சூர்யா... உனக்குத் தேவையான ட்ரஸ், ஜுவல்ஸ் எல்லாம் எடுத்து வச்சிட்டேன்” என்ற சிவகாமியை இடுப்போடு சேர்த்தணைத்த சூரியபிரியா, அவர் வயிற்றில் முகம் பதித்தாள்.

“அம்மா... நானும் உங்க கூடவே மேரேஜுக்கு வர்றேனே. ஒரு வாரம் அதுவும் ஏழு நாட்கள்... உங்களை எல்லாம் பிரிஞ்சி என்னால் இருக்க முடியாதும்மா. ப்ளீஸ்...” விட்டால் அழுது விடுபவள் போலிருந்த மகளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்ட சிவகாமி,

“சூர்யா... நீ சின்னப் பிள்ளை இல்லை. குறிஞ்சி உனக்குச் சின்ன வயசுல இருந்து பிரண்ட். அதுவும் அவங்க பேமிலியும், நம்ம பேமிலியும் நல்ல க்ளோசும் கூட. நீ இப்படிப் போக மாட்டேன்னு அடம் பிடிக்கிறது கொஞ்சமும் நல்லாயில்லைடா. அவங்க உன்னைப் பத்திரமா பார்த்துக்குவாங்கன்னு எனக்கு நம்பிக்கையிருக்கு”

“ம்... ம்...” செல்லமாய்ச் சிணுங்கியவள் அரை மனதாய் தலையாட்டினாள்.

“எல்லார் வீட்டிலேயும் பிள்ளைங்க தான் பிரண்ட்ஸ்க்கு மேரேஜ்ன்னா போகணும் போகணும் துடிப்பாங்க. அம்மா எல்லாம் போகக் கூடாதுன்னு தடுப்பாங்க. இங்கே என்னடா எல்லாமே தலைக்கீழா நடக்குது. இந்தக் கொடுமையை நான் எங்கே போய்ச் சொல்ல...” போலியாய் வருத்தப்பட்டப்படி அங்கே வந்தான் பரணி.

“என்னைக் குறிஞ்சி மேரேஜுக்கு போக வேண்டாம்ன்னா சொல்ற. இரு... இரு... அவக் கிட்ட உன்னைப் பத்தி வத்தி வைக்கிறேன்” ஒரு விரல் நீட்டி எச்சரிக்கைச் செய்த அக்காவைப் பார்த்துப் பெரிதாகக் கும்பிடுப் போட்டப் பரணி,

“அய்யோ... அந்த வாயாடி அக்கா கிட்ட மட்டும் என்னைப் போட்டுக் கொடுத்திடாதே. முதல் வேலையா என்னை எண்ணெய் சட்டியில் போட்டு வறுத்தெடுத்துட்டுத் தான் மறுவேலைப் பார்ப்பாங்க அவங்க”

“ம்... அந்தப் பயம் இருக்கணும்டா மகனே” அவனைப் பார்த்துப் பழிப்புக் காட்டியவள், அங்கே வந்த தந்தையைக் கண்டதும் அமைதியாக அமர்ந்தாள்.

“இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கிற மாதிரி பாவம் போல மூஞ்சியை வச்சிக்கிறியே அது எப்படிச் சூர்யா?” அவள் காதில் ரகசியமாய்ச் சொன்னப் பரணியை முறைத்தவள்,

“சூர்யா...” மேகநாதன் அவளை அழைக்கவும் அவர் புறம் திரும்பினாள்.

“சொல்லுங்கப்பா...”

“இந்தாம்மா ஐயாயிரம் ரூபா...”

“எனக்கு எதுக்குப்பா? நான் குறிஞ்சி வீட்டுக்குத் தானே போறேன்”

“இருந்தாலும்... ஏதாவது தேவைப்பட்டா அடுத்தவங்க கையை எதிர்பார்த்துட்டு இருக்க முடியுமா? வச்சுக்கம்மா...” அவர் மகள் கையில் பணத்தைத் திணிக்க,

“உனக்கு வேண்டாமான்னா அதை என் கிட்ட கொடேன்” பரணி பணத்தை ஆசையாகப் பார்த்துக் கொண்டு கேட்க,

“ம்... ஆசைத் தோசை... அப்பள வடை...” என்றவள் தன் கைப்பையில் பணத்தை வைத்துவிட்டு எழுந்தாள்.

மேகநாதன் அவளின் பெட்டியைத் தூக்கிக் கொள்ள, அவர் பின்னே எல்லோரும் வாயிலுக்கு வந்தனர். காரிலேறிய

மகளிடம் சிவகாமி,

“கல்யாணத்துக்கு முதல் நாள் நாங்க வர்றோம்ன்னு குறிஞ்சி அம்மா கிட்டச் சொல்லிரு. அப்புறம் டெய்லி ஃபோன் பண்ணு. பார்த்து... பாத்திரமா இருக்கணும்” அம்மாவாய் அறிவுரைச் சொல்ல, மகள் மௌனமாய்த் தலையாட்டினாள்.

“மிஸ் யூ சூர்யா...” காரின் ஜன்னல் அருகே வந்த பரணி அக்காவின் கையைப் டித்துக் கொண்டு கண் கலங்க... அதைக் கண்டு அவளுக்கும் கண்கள் கலங்கியது.

“பரணி... கிளம்பும் போது என்ன இது?” மேகநாதன் மகனை அதட்டவும் தான் அவன் தன்னை ஒருவாறு நிலைப்படுத்திக் கொண்டான்.

“சூர்யா... கல்யாண வீட்டில் சாப்பாடு நல்லாயிருக்குன்னு... ரொம்ப மொக்கிடாதே. அப்புறம் வாசக் கதவை உடைச்சுத் தான் உன்னை நாங்க வீட்டுக்குள் கொண்டு போக வேண்டியிருக்கும்” கிண்டலடித்தவனைக் கோபமாய் முறைத்தவள்,

“போடா குண்டுப் பூசணிக்கா...” பதிலுக்கு அவனை வார... அங்கே சிரிப்பலைக் கிளம்பியது. அந்தச் சந்தோசத்துடனே மேகநாதன் காரைக் கிளப்ப, தாயும், தம்பியும் கண்களை விட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டே சென்றாள் சூரியபிரியா.

**********************************

“தமிழ்... என்னடா இது... உனக்கு எத்தனை தடவை ஃபோன் பண்ணிச் சொன்னேன். இன்னுமாடாக் கிளம்பல” செந்தமிழ்நம்பியின் வீட்டினுள் நுழைந்த ஆதவன் அவனை அதட்ட,

“சாரிடா... ஒரு நிமிசம் வெய்ட் பண்ணு” என்ற தமிழ் தன்னறையை நோக்கி ஓடினான்.

“வாப்பா... எப்படி இருக்க? கல்யாண வேலைகள் எல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு?” தையல்நாயகி அவனிடம் விசாரிக்க,

“எல்லாம் சிறப்பா நடந்துட்டிருக்கு பாட்டி. பெரியவங்க நீங்க ரெண்டுப் பேரும் என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க” என்றவன் ஆதிமூலம், தையல்நாயகி கால்களில் விழுந்தான்.

“சீரும் சிறப்புமா நல்லா இருய்யா” என்றவர் கண்கள் அவரையும் அறியாமல் கலங்கியது. அதைக் கண்டுவிட்ட ஆதவனின் மனம் சங்கடப்பட்டது.

“பாட்டி...” என்றவன் அவரின் தோளை ஆதரவாகப் பிடித்துச் சோபாவில் அமர வைத்தான்.

“நீயும், தமிழும் சிநேகிதப் புள்ளைங்கத் தானே. நீ மட்டும் எப்படிப் புடம் போட்டத் தங்கமா ஜொலிக்கிற... ஆனா அவம் மட்டும் ஏன்ய்யா இப்படிச் சீரழிஞ்சுப் போயிட்டான்?” ஆதங்கமாய்க் கேட்டவரை என்ன சொல்லிச் சமாதானம் செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

“சரியாகிருவான் பாட்டி... நீங்க கவலைப் படாதீங்க”

“அவனைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கச் சொல்லுப்பா... நீ கொஞ்சம் எடுத்துச் சொன்னா அவம் கேட்பான்ய்யா”

“கண்டிப்பா பாட்டி... நான் அவன்ட்ட சொல்றேன்” ஆதவன் சொல்லும் போதே தமிழ் வந்துவிட, இருவரும் பெரியவர்களிடம் விடைப் பெற்று வெளியில் வந்தனர்.

“ஆதி உன் கல்யாணத்தை ஏண்டா கிராமத்தில் போய் வைச்சிருக்க. பேசாம இங்கேயே வச்சிருக்கலாமே” காரை

ஓட்டிக் கொண்டிருந்த ஆதவன், தமிழைத் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் சாலையில் கவனத்தைச் செலுத்தினான்.

“அப்பா, அம்மா அங்கே தானடா இருக்காங்க. நான் பொழைக்கத் தான் இங்கே வந்தேன். நீ அங்கே வந்ததே இல்லைல்ல. வந்து பாரு… உனக்கும் கிராமம் பிடிச்சுப் போயிரும்”

“ஆமாம் உன் கிட்டக் கேட்கணும்னு நினைச்சேன்… பொண்ணும் கிராமமா?”

“பொண்ணு… என் அத்தைப் பொண்ணுத் தான். இங்கே தான் சென்னையில் இருக்கா”

“உனக்கு அத்தைப் பொண்ணு… அதுவும் சென்னையிலேயே இருந்திருக்கா… என் கிட்ட நீ சொல்லவே இல்லையே. நீயும் என்னைத் தப்பா நினைச்சிட்ட இல்ல? உன் ஆளு எனக்குச் சிஸ்டர் மாதிரிடா” இறங்கிப் போன குரலில் கூறிய நண்பனைக் கண்டு பதறிப் போனவனாய்,

“லூசு மாதிரி ஏதாவது பேசினே பல்லை உடைச்சுடுவேன் ராஸ்கல். நான் உன்னை அந்த மாதிரி என்னைக்காவது நினைச்சிருக்கேனா? எத்தனை நாள் வீட்டுக்குக் கூப்பிட்டு இருப்பேன். ஒரு நாளாவது வந்திருக்கியா? குறிஞ்சியை உன் கிட்ட காட்டக் கூடாதுன்னு வேண்டுதல் எல்லாம் இல்லை. என் அத்தைப் புருஷன்… அதான் என் மாமனார் குணம் கொஞ்சம் ஒரு மாதிரி. இவ்வளவு நாள் ரெண்டுக் குடும்பத்துக்கும் சண்டை. இப்பத் தான் இந்தக் கல்யாணம் மூலமா ஒண்ணு சேர்ந்திருக்காங்க. வேற எந்தக் காரணமும் இல்லைடா. உன் கிட்டச் சொல்லாமல் மறைக்கக் கூடிய ரகசியங்கள்ன்னு என்னிடம் ஏதுமில்லை. ஆனால் உன்னிடம் தான் ஏதோ பெரிய, பெரிய ரகசியம் எல்லாம் புதைஞ்சு இருக்கிற மாதிரித் தெரியுது”

ஆதவனின் பேச்சுக்குப் பதிலளிக்க முடியாமல் ஜன்னல் வழியே வெளியே தெரிந்த மலை முகட்டை வெறித்துப் பார்த்தான் செந்தமிழ்நம்பி. அவன் முகம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தது.

“தமிழ்...” ஆதவனின் குரலில் தன் யோசனைக் கலைந்தவன் என்ன என்பது போல் அவனைப் பார்க்க,

“பாட்டி... ரொம்ப வருத்தப்படுறாங்கடா. அவங்களுக்காகவாவது நீ கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா? அவங்களுக்கும் உன் வாரிசைப் பார்க்கணும்ன்னு ஆசை இருக்காதா? நீ உன் நிலையிலிருந்து யோசிக்காம மத்தவங்க நிலையிலிருந்தும் யோசிச்சுப் பார்க்கணும். அவங்கப் பார்த்திருக்கிற பொண்ணை நீ ஏன் வேண்டாம்ன்னு சொல்ற?” என்ற ஆதவனை ஒரு மாதிரியாகப் பார்த்த செந்தமிழ்நம்பி பதில் பேசவில்லை.

“இப்ப என்னையே எடுத்துக்கோ... குறிஞ்சி என் அத்தைப் பொண்ணா இருந்தாலும்... எனக்கு அவ்வளவா பழக்கம் இல்லை. ஆனாலும் அப்பா, அம்மாவுக்காகத் தான் நான் ஓகே சொன்னேன். இப்ப ஒரு மாசமாத் தான் பேசிப் பழகிட்டு இருக்கோம். இந்த ஒரு மாசத்தில் அவ இல்லாம நானில்ல... நான் இல்லாம அவளில்ல... அந்த நிலைக்கு ரெண்டுப் பேருமே வந்திட்டோம். மனசுக்குப் பிடிச்சப் பொண்ணோட மேரேஜ் லைப் அமைஞ்சா ரொம்ப இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்டா” கண்களில் மயக்கத்துடன் கூறிய ஆதவனைப் பார்த்து நக்கல் சிரிப்புச் சிரித்தவன்,

“உன் சிந்தாந்தத்தை நீயே வச்சுக்க. முதல்ல காரை ஓரம் கட்டு...”

“எதுக்குடா...” கேள்வி கேட்டாலும் நண்பனுக்காகக் காரை ஓரமாய் நிறுத்தினான் ஆதவன். அவன் காரை நிறுத்தியதும் இறங்கிய செந்தமிழ்நம்பி அவன் புறம் வந்து கதவைத் திறந்தவன்,

“எனக்கு நூறு வயசு வரை வாழணும்ன்னு ஆசையிருக்கு ஆதி. நீ கனவுக் கண்டுக்கிட்டே காரை எங்கேயாவது விட்டுட்டா... அப்போ என் கதி?” கிண்டலுடன் கேட்டாலும், ஆதவனை இறங்கச் சொல்லித் தானே காரை எடுத்தான் தமிழ்.

ஆதவன் சிரிப்புடன் நண்பனைப் பார்த்தவன், பின் தன் அலைப்பேசியை எடுத்துக் குறிஞ்சிக்கு அழைத்தான்.

“டேய் யாருக்குடா... சிஸ்டருக்கா?” கண்சிமிட்டிச் சிரித்த தமிழின் தோளில் செல்லமாக அடித்தவன், ‘உஷ்... பேசாம இரு’ என்பது போல் சைகை செய்தான் ஆதவன். மறுமுனையில் எடுத்ததும் ஆதவன் உருகி உருகி மெல்லிய குரலில் பேச, அந்தப் பக்கம் என்ன பேசினார்களோ ஆதவன் முகம் மலர்ந்து கனிந்தது.

நண்பன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தமிழுக்கு ஆச்சிரியமாக இருந்தது. காதலும், கல்யாணமும் இவ்வளவு சந்தோசத்தைக் கொடுக்கக் கூடியதா என்று? அவனைப் பொறுத்த வரையில் அது மீள முடியாத சிறை என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தான். அதில் விருப்பபட்டுச் சிக்கிக் கொள்ளும் ஆதவனின் மகிழ்ச்சியைக் கண்டு சந்தோசப்படுவதா இல்லை வேதனைப்படுவதா? என்று அவனுக்குப் புரியவில்லை.

****************************************

“ம்... ம்ஹும்...” காரிலிருந்த மற்றவர் கவனத்தைச் சிதறாமல் மெல்லிய குரலில் ஒற்றை வார்த்தையில் பதிலளித்துக் கொண்டிருந்த குறிஞ்சியைக் கண்ணிமைக்காமல் பார்த்தாள் சூரியபிரியா. அவள் குறிஞ்சி குடும்பத்துடன் அவர்களின் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தாள்.

குறிஞ்சியின் கண்களில் இருந்த மயக்கமும், முகத்தில் காணப்பட்ட வெட்கச் சிரிப்பும் அந்தப் பக்கம் பேசுவது யார்?

என்று சொல்லாமல் சொல்லியது. காதலும், கல்யாணமும் கொடுக்கும் மயக்கத்தைத் தோழியின் முகத்திலிருந்து கண்டவள் மனம் கண்டபடி அலைபாயத் தொடங்கியது.

தனக்கும், அவனுக்கும் திருமணம் பேசினால் தானும் இது போல் அவனுடன் பேசுவோமோ? அவனும் இதே மாதிரிப் பேசி தன்னை முகம் சிவக்க வைப்பானோ? அப்படி முகம் சிவக்கும் அளவுக்கு என்ன பேசுவான்? என்று ஏதேதோ கற்பனைகளில் மூழ்கிய அவள் மனம் பெருமூச்சு விட்டது.

'ம்ஹூம்... அவன் யார்ன்னுத் தெரியாது? அன்னைக்கு ஒருநாள் பார்த்தது... அதுக்கப்புறம் அவனை ஆளையே காணல. இந்த லட்சணத்துலக் காதல்... கல்யாணம் வரைக்கும் போயிட்டியே... லூசு சூர்யா' மனதில் தன்னைக் கடிந்தவள் ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள்.

"பூங்காற்றிலே உன் சுவாசத்தைத் தனியாகத் தேடிப் பார்த்தேன்

கடல் மேல் ஒரு துளி வீழ்ந்ததே அதைத் தேடி தேடிப் பார்த்தேன்

உயிரின் துளி காயும் முன்னே என் விழி உன்னைக் காணும் கண்ணே

என் ஜீவன் ஓயும் முன்னே ஓடோடி வா..."

காரில் ஒலித்த பாடல் அவள் செவியில் விழ, அவள் அந்தப் பாட்டின் தாக்கத்தில் அவன் நினைவுகளில் மருகித் தனக்குள் கரைந்தே போனாள். அவளையும் அறியாமல் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவனைக் காணாது அவள் மனம் ஒரு நிலையில்லாமல் தவித்துத் துடித்தது.

"அம்மாடி.. குறிஞ்சி அந்தத் தண்ணிப் பாட்டிலை எடுத்துக் கொடும்மா" குறிஞ்சியின் அப்பாவின் குரலில் தன்னை மீட்டுக் கொண்டவள் யாருக்கும் தெரியாமல் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இந்தக் காதல் அவளுக்குச் சரிப்பட்டு வருமா? அவளின் குடும்பம் இதற்கு ஒத்துக் கொள்ளுமா? அதையெல்லாம் விட அவள் காதலிக்கும் அவன் அவள் காதலை ஏற்றுக் கொள்வானா? என்று கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்கவில்லை அந்தப் பேதைப் பெண். ஆண்டவனிடத்தில் காதல் கொண்ட ஆண்டாளைப் போல், அந்த மீராவைப் போல் அவளும் அவன் அறியாமல் அவன் மேல் காதல் கொண்டாள்.

கண்ணனின் லீலைகளைக் கதைகளாய் கேட்டு ரசிக்கும் நாம் நிஜத்தில் அந்த மாதிரி ஆண்களை வெறுக்கத் தான் செய்வோம். அவர்களைப் போற்றிக் கொண்டாடுவது இல்லை. அவர்களைத் தூற்றத் தான் செய்வோம். அதே போல் அவளும் அவனை அரிய பொக்கிசமாய் நினைத்துப் போற்றிக் கொண்டாடுகிறாள்... ஒரு நாள் அவனைப் பற்றிய உண்மைகள் அவளுக்குத் தெரியும் போது அவள் என்ன செய்வாள்? இதே மாதிரிப் போற்றுவாளா? இல்லை தூற்றுவாளா?

****************************************

“டேய் வந்ததும் வராததுமா என்னை எங்கேடா இழுத்துட்டுப் போற?” செந்தமிழ்நம்பி அலுத்துக் கொண்டாலும் ஆதவன் பின் செல்லத் தயங்கவில்லை.

“குறிஞ்சியைத் தோப்புக்கு வரச் சொல்லியிருக்கேன்... நீயும் கூட வாடா?”

“நீ சிஸ்டர் கூடப் பேசிட்டு இருப்ப. ஊடையில நான் எதுக்கு வெட்டியா?”

“தமிழ்... உன் பாட்டி கூடச் சேர்ந்து நல்லா லோக்கல் லங்குவேஜ் பேசுற”

“நீ சொன்னத மட்டும் அப்பத்தா கேட்டுச்சு... அவ்வளவு தான்... யாருடா லோக்கலுன்னு சண்டைக்கு வந்திடும்”

“அய்யயோ சொல்லிறாதடா” அலறினான் ஆதவன். தையல்நாயகியிடம் அவனுக்குமே பயம் தான்.

“தமிழ்… நான் தனியாப் போனாத் தேவையில்லாத கேள்வி வரும். இதே இது நீ எங்கூட வந்தா… உனக்கு ஊரைச் சுத்திக் காண்பிக்கக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்லித் தப்பிச்சுக்குவேன். ப்ளீஸ்டா” நண்பனின் கெஞ்சலில் அவனை மறுக்க முடியாமல் அவனுடன் சென்றான் தமிழ்.

கொஞ்ச தூரம் வந்ததுமே அழகான தென்னந்தோப்புக் கண்ணில் பட்டது. அடர்த்தியாக அமைந்திருந்த அந்தத் தோப்பு கண்ணுக்குக் குளிர்ச்சியாய் பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது.

“வாவ்… சூப்பர் பிளேஸ்… ஐ லைக் இட்” என்ற தமிழ் அதைச் சுற்றித் தன் பார்வையை ஓட்டினான்.

“உனக்குப் பிடிச்சியிருக்கா… அப்பச் சரி… நீ இதைச் சுத்திப் பார்த்திட்டு இரு. நான் குறிஞ்சிக் கூடப் பேசிட்டு வர்றேன்” நண்பனின் பதிலை எதிர்பாராமல் வேகமாகத் தோப்புக்கு எதிர்த்திசையில் சென்று மறைந்தான் ஆதவன்.

அவனின் வேகத்தைக் கண்டு மனதுக்குள் சிரித்துக் கொண்டவன் மெல்லத் தோப்பிற்குள் நுழைந்தான். சிறிது தூரம் ரசித்துக் கொண்டே சென்றவன், அங்கே கண்டக் காட்சியை நம்ப முடியாமல் அப்படியே நின்றுவிட்டான். அவன் நினைவில் அவ்வப்போது வந்து போகும் அந்தப் பெயர் அறியாப் பெண், அங்கிருந்த மரம் ஒன்றில் சாய்ந்து நின்றுக் கொண்டிருந்தாள்.

மரத்தில் கொடி ஒன்று படர்ந்திருப்பதைப் போல், அந்த மரத்தின் மீது பச்சை வண்ணப் புடவையில் வன தேவதைப் போல் அவள் சாய்ந்து நின்றிருந்த கோலம் அவன் மனதில் அழியாக் கோலமாய் ஆழப் பதிந்தது. அவளைப் பார்த்துக் கொண்டே அவள் அருகில் வந்தவன், “ஹாய் அனாமிகா…” என்று மெல்ல அவளை அழைக்க,

கண்மூடி மரத்தில் சாய்ந்திருந்தவள் காதில் அவனின் குரல் அசரீரி போல் ஒலிக்க, அது பிரம்மை என்று எண்ணி அப்படியே நின்றிருந்தாள். மீண்டும் அவன் அழைப்பது போல் கேட்க, மெல்லத் தன் சிப்பி இமையைத் திறந்தவள் பார்வையில் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்த செந்தமிழ்நம்பி பட்டான்.

கனவில் மட்டுமே கண்டு வந்தவனை நேரில் கண்டதும் அவளால் அதை நம்ப முடியவில்லை. கண்களை அழுந்த தேய்த்துக் கொண்டு அவனை மீண்டும் பார்த்தாள். அவன் உருவம் அகலவில்லை... அழியவில்லை. அவன் நேரில் நிற்பது உண்மைத் தான் என்று அவள் மூளைக்கு உறைத்ததும், அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவனைக் காணாமல் அவள் தவித்த தவிப்பு, அதனால் ஏற்பட்ட ஏக்கம், இப்பொழுது அவனைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி எனப் பல்வேறு உணர்வுகளுக்கு இடையில் சிக்கித் தவித்தவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“வந்துட்டீங்களா...” என்றவள் ஒரு நொடி கூட யோசிக்காமல் அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். எங்கே விட்டால் அந்தக் காற்றுக் கூட அவனைத் தன்னிடம் இருந்து பிரித்துவிடுமோ என்பது போல் அதைக் கூட அவர்களுக்கிடையில் அவள் அனுமதிக்கவில்லை.

தன் மார்பில் முகம் புதைத்து விக்கி விக்கி அழுதுக் கொண்டிருப்பவளை அதிர்ந்து போய்ப் பார்த்தவன், அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றிருந்தான். கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் எல்லாப் பெண்களையும் எளிதாகக் கையாண்டவன், சூரியபிரியாவின் கண்ணீரில்... அவளை அணைக்கவா? இல்லை விலக்கவா? என்று ஒன்றும் புரியாமல் சிலைப் போல் செயலற்று நின்றிருந்தான்.

## உயிர் : 5

சூரியபிரியா தன் கண்களில் உள்ள கண்ணீர் எல்லாம் வற்றி விடுவது போல் அழுது கொண்டிருக்க, அவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் திகைத்துப் போய்ச் செந்தமிழ்நம்பி அசையாமல் நின்றிருந்தான். அவளோ தன் ஏக்கத்தை, மகிழ்ச்சியை அழுகையில் கரைத்தவள் சில நிமிடங்களில் இயல்புக்கு வந்துவிட்டாள். கன்னங்களின் கண்ணீரை அவன் சட்டையில் இயல்பு போல் துடைக்கும் போது தான், அதிலிருந்து வந்த வாசனைத் திரவியத்தின் நறுமணம், ஆணுக்கே உரிய பிரத்யேக வாசனை என்று எல்லாம் கலந்த ஒரு நறுமணத்தை அவள் நாசி உணர்ந்தது. அதுநாள் வரை அவள் உணர்ந்தறியாத ஓர் வாசம் அது. அதுவே அவள் மனதில் ஒருவித அந்நியத் தன்மையைக் கொடுக்க, சட்டென்று அவள் அவனிடமிருந்து விலகினாள்.

உணர்ச்சி வேகத்தில் தான் செய்தக் காரியத்தின் வீரியத்தை அப்பொழுது தான் அவள் உணர்ந்தாள். தான் செய்தச் செயலால் தன்னைப் பற்றித் தவறாக நினைத்திருப்பானோ என்ற எண்ணமே அவளை நிலைக் குலையச் செய்ய, முகம் அவமானத்தில் கன்றிச் சிவக்க... மண்ணிலேயே புதைந்துப் போய்விடுபவள் போல் மண்ணை நோக்கிக் கண்ணை வைத்துத் தலைக் குனிந்து நின்றிருந்தாள். என்ன தான் காதலனாக அவனை மனதில் வரித்திருந்தாலும், இன்னமும் அவனிடம் காதலைச் சொல்லாத நிலையில்... எந்தவித உரிமையும் இல்லாத போது... தான் இந்த மாதிரி நடந்து கொண்டது குறிந்து அவளுக்கே தன் மீது அருவருப்பாக இருந்தது.

“சாரி நா... நான்... வந்து... தெரியாம...” தான் செய்தக் காரியத்துக்கு என்ன விளக்கம் சொல்வது? என்று தெரியாமல் திக்கித் திணறியவள் உடல் பயத்தில் மெலிதாக நடுங்கியது.

அவனோ அவளை மேலும் கீழும் ஆராய்ச்சியாய் பார்த்து எடைப் போட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும், அவள் ‘வந்துடீங்களா?’ என்று ஆர்வமாய் ஓடி வந்து கட்டிக்

கொண்டது, அவள் அழுகை, அதன் பின் அவனை விட்டு விலகியவள் அவனை நிமிர்ந்தும் பார்க்காமல் முகமெல்லாம் சிவக்க அவள் நின்றிருந்த கோலம் அவனுக்கு ஏதோ ஒரு புதுக் கதைச் சொல்லுவது போலிருந்தது. பெண்களின் ஓர விழிப் பார்வைக்கே ஆயிரம் அர்த்தம் கண்டுப்பிடிக்கும் அவனுக்கா தெரியாது… இந்தப் பாவையின் மயக்கமென்ன? தயக்கமென்ன? என்று.

முதன் முதலில் அவளைப் பார்த்தப் போது அவள் தன் ரசனைக்கு ஏற்றவள் இல்லை என்று தான் எண்ணியிருந்தான். ஆனால் இன்று அவளே அவனிடம் வலிய வந்து விழும் போது விலகிச் செல்ல அவன் என்ன புத்தனா? அதிலும் அவளின் பயம், நடுக்கம் எல்லாம் அவனை அவளிடம் சீண்டி விளையாடிப் பார்க்கச் சொல்லியது.

“நீ தெரிஞ்சே கட்டிப் பிடிச்சாலும் நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்” இலகுவாகச் சொன்னவனைக் கண்டு திடுக்கிட்டு போய் அவள் நிமிர்ந்துப் பார்க்க, அவள் பார்ப்பது தெரிந்து அவன் கண்ணில் மையலுடன் மயக்கம் வருவது போல் போலியாக நடித்தான். அதைப் பார்த்து அதிர்ந்துப் போனவள் வேகமாய்த் தலையைக் குனிந்துக் கொண்டாள்.

அவள் நின்றிருந்த கோலம் அவனுக்கு மேலும் தைரியத்தைக் கொடுக்க, அவளருகே வந்து அவள் நாடியில் கை வைத்து நிமிர்த்தி, அவள் கண்களோடு தன் கண்களைக் கலந்தவன், “உண்மையைச் சொல்… நீ என்னை விரும்புறீயா?”

தன் மனதின் உண்மையை அவன் கண்டு கொண்டானே என்று திகைத்தவள், எங்கே தன் கண்கள் அவன் பார்வையில் மயங்கி, அவனுக்குத் தன் காதலைச் சொல்லி விடுமோ என்ற பயத்தில், தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினாள். அவனைப் பார்ப்பதற்குக் கூடத் தயங்கும் அவளின் நிலை, அவனை மேலும் முன்னேறுவதற்குத்

தைரியத்தைக் கொடுக்க, மெல்ல தன் கட்டை விரலால் அவளின் செவ்விதழை மென்மையாக வருடினான். அவனின் ஒற்றை விரல் வருடலில் அவள் உள்ளமும், உடலும் உருகி நிற்க, அவனுக்கோ அவளின் ஒவ்வொரு செயலும் இதுவரை பார்த்திராத ஒரு புதிய உணர்வை உண்டாக்கியது. அவன் பழகிய பெண்களிடத்தில் எல்லாம் இந்த மாதிரியான மென்மை, வெட்கம், தயக்கத்தைப் பார்க்க முடியாது. அவளுடனான இந்த அனுபவம் அவனுக்குமே புதுமையாக இருந்தது.

அதற்குள் யாரோ வருவது போல் ஒலிக் கேட்க, தமிழ் சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளை விட்டு விலகி நின்றான். சூரியாவிற்குத் தான் அவன் அளவுக்குத் தன்னைச் சமாளிக்க முடியவில்லை. அழுகையிலும், வெட்கத்திலும் முகமெல்லாம் சிவந்து பார்ப்பதற்குக் காய்ச்சல் வந்தவள் போலிருந்தாள். அப்பொழுது அங்கே வந்தவர்கள் ஆதவனும், குறிஞ்சியும் தான்...

“சூர்யா... என்னடி ஆச்சு? முகம் எல்லாம் சிவந்து வீங்கிப் போய்... அழுதியா?” தோழி நின்றிருந்த நிலைக் கண்டு பதறியவளாய் அவளருகே ஓடி வந்தாள் குறிஞ்சி.

ஆதவன் பார்வை நண்பனை, ‘என்ன?’ என்பது போல் பார்க்க... தமிழோ, ‘எனக்கு எதுவும் தெரியாது’ என்பது போல் தோளைக் குலுக்கினான். அவனை நம்பாத ஒரு பார்வைப் பார்த்து வைத்தான் ஆதவன்.

“பாம்பு ஒண்ணு இந்தப் பக்கமா போச்சு குறிஞ்சி. அதான் பயத்துல அழுதுட்டேன். அதைப் பார்த்துட்டு இவர் ஹெல் பண்ண வந்தாரு” என்ற தோழியை ஆதரவாக அணைத்துக் கொண்டாள் குறிஞ்சி. அழகாய் பொய் சொன்னவளைக் கண்டு மனதுக்குள் மெச்சி கொண்டான் தமிழ்.

“தேங்க்ஸ்ண்ணா...” மனதார தமிழுக்கு நன்றி சொன்னாள் குறிஞ்சி. அவளின் அண்ணா என்ற அழைப்பு தமிழின் மனதை அசைக்க,

“பரவாயில்லை சிஸ்டர்…” என்றான் மனப்பூர்வமாக.

“வர்றேன்…” குறிஞ்சி தமிழிடம் விடைப் பெற்றவள், ஆதவனிடம் கண்களால் விடைப் பெற்றாள்.

தமிழ், சூர்யா நிமிர்ந்துத் தன்னைப் பார்ப்பாளா என்று அவளையே பார்த்துக் கொண்டிருக்க, அவளோ அவனை மறந்தும் நிமிர்ந்துப் பார்க்கவில்லை. எந்த முகத்தைக் கொண்டு அவனைப் பார்ப்பது என்று அவள் உள்ளுக்குள் மருகிக் கொண்டிருப்பது அவனுக்கு எங்கே தெரியப் போகுது.

‘உண்மையில் பாம்பு தான் வந்ததா? இல்லை…” நண்பனைக் கேள்வியாய் ஆதவன் பார்க்க,

“ஆதி என்னைப் போய்ச் சந்தேகப்படுறீயே… இது நியாயமா? அதான் அவளே சொன்னாளே…” பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு தமிழ் சொல்ல, உண்மையில் ஆதவன் குழம்பித்தான் போனான்.

“பார்த்துடா… அந்தப் பொண்ணு குறிஞ்சியோட டியரஸ்ட் பிரண்ட்… பேர் சூரியபிரியா. இவ்வளவு நேரம் அவ புராணத்தைத் தான் நான் கேட்டுட்டு வர்றேன். இதுல இருந்தே உனக்குப் புரிஞ்சி இருக்கணும்… குறிஞ்சிக்கு அவள் எவ்வளவு முக்கியம்ன்னு? நீ தேவையில்லாமல் மத்தப் பொண்ணுங்கக் கிட்ட வாலாட்டுற மாதிரி இவக் கிட்ட வம்பிழுத்து… எனக்கு ஏழரையக் கூட்டிறாதே” கடுமையுடன் தமிழைப் பார்த்து அவன் எச்சரிக்க,

“எங்கே எப்படி நடந்துக்கணும்ன்னு எனக்குத் தெரியும்டா. நீ கவலைப்படாம கல்யாண மாப்பிள்ளையா லட்சணமாக் கனவுக் கண்டுட்டு இரு” என்று நண்பனைத் தேற்றியவன்,

‘சூரியபிரியா… ம்… பேரும் ஆளைப் போல் அழகாத் தான் இருக்கு’ அவள் பேரைச் சொல்லி பார்த்தவன், ‘ஒரு வாரம் பிகர் இல்லாமல் போர் அடிக்குமேன்னு நினைச்சேன்.

இப்படியொரு அழகான பிகர் வலிய வந்து மாட்டும்ன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல. தானா வலிய வந்து மாட்டுறக் கோழியைச் சும்மா விடலாமா? ம்ஹூம்… அப்படி விட்டா அது பாவமாச்சே… அடிச்சு குருமா வைச்சுற வேண்டாம்? கோழி ருசி எப்படி இருக்குன்னு ஒரு கை பார்த்துட வேண்டாமா? இல்லாட்டிக் கோழி கோச்சுக்காது' என்று மனதுக்குள் நினைத்த தமிழ், வாழ்க்கையை எப்பொழுதும் போல் விளையாட்டாய் விளையாடிப் பார்க்க ஆசைப்பட்டான். ஆனால் கடவுளோ அவன் வாழ்க்கையை வேறு விதமாய் விளையாடிப் பார்க்க ஆசைப்பட்டதை அவன் அறிந்திருக்கவில்லை.

************************************

"டேய் தமிழ்… என் நிலைமையைப் பார்த்தியா… கைக்கு எட்டிய தூரத்தில் மனசுக்குப் பிடிச்சவள் இருந்தும் தள்ளி நின்னு யாரோ போல் வேடிக்கைப் பார்க்க வேண்டியிருக்குப் பாரு. எல்லாம் இந்த மாமனார் வில்லனால் வந்தது. கல்யாணத்தை இன்னும் ஆறு நாள்ல வச்சிட்டு அவர் பொண்ணை நான் என்னமோ கடத்திட்டுப் போற மாதிரி என்னம்மா பில்டப் கொடுக்கிறாரு. என் கண்ணுலேயே காட்ட மாட்டேங்குறார். இப்ப கூடப் பாரு அவளை மறைச்சிட்டு உட்கார்ந்திட்டு இருக்கிறதை" தன் அருகில் நின்று கொண்டிருந்த தமிழிடம் ஆதவன் புலம்பித் தள்ளிவிட்டான்.

அந்த இரவு நேரத்தில் குடும்ப உறுப்பினர்கள் எல்லாம் மொட்டை மாடியில் குழுமியிருந்தனர். ஆதவன் வீட்டிற்கும், குறிஞ்சி வீட்டிற்கும் மாடிப் பகுதி சேர்ந்தே தான் இருந்தது. அங்கு வந்த குறிஞ்சியுடன் தனிமையில் பேச முடியாமல் அவளின் தந்தை அவள் அருகே இருந்து காவல் காக்க, அதைக் கண்டு ஆதவன் பொங்கி விட்டான். அவளின் கடைக்கண் பார்வை அவன் மேல் விழாதா என்று அவன் தவம் இருக்க, அவளோ அவனைக் கண்டு கொள்ளாமல் ஆதவன் அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

“குறிஞ்சி எங்கே உன் கையைக் காட்டு?” அங்கிருந்த பாட்டி குரல் கொடுக்க, குறிஞ்சிப் புரியாமல் கையை நீட்டினாள்.

“ம்... மருதாணி நல்லாச் சிவந்திருக்கு. அப்போ உன் மாமன்னா உனக்கு உசிருன்னு சொல்லு” அதைக் கேட்டதும் குறிஞ்சி ஓரக் கண்ணால் ஆதவனைப் பார்க்க, அவனோ கள் குடித்த மந்தி போல் அவளின் ஓர விழிப் பார்வைக்கே சொக்கித் தான் போனான். அதைக் கண்டும் காணாமல் பார்த்துக் கொண்டிருந்த தமிழுக்கு இந்தப் பார்வைப் பரிமாற்றம் வியப்பை அளித்தது.

“பாட்டி... மருதாணிக்கும் மாமனுக்கும் என்ன சம்பந்தம்?” புரியாமல் ஒரு இளசுக் கேட்க,

“மாமன் மேலே ஆசை இருந்தா தான்டி கைல வச்ச மருதாணி சிவக்கும். இது கூடத் தெரியாமக் காலேசுப் போய் என்னத்தப் படிச்சிக் கிழிக்கிறீங்களோ?” எம்பிஏ படிக்கும் அந்தப் பெண்ணை இரண்டாம் வகுப்புக் கூடத் தாண்டாத அந்தப் பாட்டி அசால்ட்டாய் கிண்டலடித்தார். அதைக் கேட்டுத் தமிழால் சிரிப்பை அடக்க முடிவில்லை.

“ஆதி... உங்க ஊர் பாட்டி எங்க அப்பத்தாவையே மிஞ்சிடும் போலிருக்கே” சிரிப்பில் குலுங்கிய படித் தமிழ் கேட்க,

“டேய்... அடங்குடா... நீ சிரிச்சதை அந்தக் கிழவிப் பார்த்துச்சு அவ்வளவு தான் உன்னைப் பிரிச்சி மேஞ்சிரும்” ஆதவன் நண்பனை அடக்கினான்.

“பாட்டி... எங்கே எங்க சூர்யா கைப் பார்த்துச் சொல்லுங்கப் பார்ப்போம்” குறிஞ்சியின் குரலில், தமிழ் சூரியாவைத் திரும்பிப் பார்த்தான்.

“அம்மாடி... என்னடி இது அதிசயமா இருக்கு” தாடையில் கை வைத்து அதிசயப்பட்ட அந்த மூதாட்டி, “என்னமாய்ச் செக்கச் செவேல்ன்னு சிவந்திருக்கு. உனக்கு வரப் போறவன் குடுத்து வச்சவன். இந்த மருதாணிச் சிவப்புப்

போலவே நீயும் அவம் மேலே அதிக ஆசை வச்சிருப்ப” இரு உள்ளங்களும் கலந்து, மெல்லப் புரிதல் ஏற்பட்டு, அதன் பின் வரும் காதலை… அந்த மூதாட்டி மருதாணிச் சிவப்பை வைத்துச் சொல்லியதை எல்லோரும் அதிசயமாய்ப் பார்த்தனர்.

சூரியபிரியாவோ அவர் சொன்னதைக் கேட்டு முகம் சிவக்கத் தலையைக் குனிந்தாள். அவள் மனதில் செந்தமிழ்நம்பியின் முகமே வியாபித்திருந்தது. அருகில் தான் அவன் நிற்கிறான் என்று தெரிந்தும் அவன் முகத்தை நிமிர்ந்துப் பார்க்க அவள் மனம் தயங்கியது.

தமிழோ தலைக் குனிந்து அமர்ந்திருந்தவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். ‘என்ன இவ… எப்போ பார்த்தாலும் எதையோ தேடுறவ மாதிரி கீழே குனிஞ்சிட்டு இருக்கா. கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தாத் தான் என்னவாம்? அவள் கற்பா குறைஞ்சிடப் போகுது?’ மனதுக்குள் சலிப்பாய் நினைத்தவன் அவள் நிமிர்ந்துப் பார்ப்பதற்காகக் காத்திருந்தான்.

எல்லோரும் பேசிக் கொண்டும், ஒருவரை ஒருவர் வாரிக் கொண்டும், கிண்டலடித்துக் கொண்டும் இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

“ரொம்ப நேரமாச்சு… நேரத்தோட போய்ப் படுத்தாத் தான் காலையில் ஜோலிக் கழுதைப் பார்க்கப் போக முடியும். போங்கப்பா போங்க…” ஒருவர் நேரமானதை உணர்த்த எல்லோரும் எழுந்துக் கீழே சென்றனர்.

“சூர்யா… நாமும் போகலாமா?” குறிஞ்சி தோழியைப் பார்த்துக் கேட்க,

“நீ போ குறிஞ்சி. நான் வீட்டுக்குப் ஃபோன் பேசிட்டு வர்றேன்”

“சரி சீக்கிரம் வா…” என்றபடி குறிஞ்சிச் செல்ல, சூரியா வீட்டிற்கு அழைத்துப் பேசினாள். பத்து நிமிடங்கள் பேசியவள் அலைப்பேசியை அணைத்துவிட்டு, அங்கிருந்த சுற்றுச் சுவரின் மேல் அமர்ந்து, வானவெளியில் உலா வந்து கொண்டிருந்த நிலாவைப் பார்த்து ரசித்தாள். இந்த மாதிரி அமைதியான சூழ்நிலையில் இப்படித் தனிமையில் அமர்ந்து வானவெளியை இலக்கில்லாமல் வெறித்துப் பார்க்க அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

“ஹாய்…” அவள் காதுக்கருகில் திடுமென ஒலித்த குரலில் அவள் பயந்து போய்ச் சட்டென்று திரும்ப… அதில் தடுமாறி மறுபக்கம் கீழே விழப் போனாள்.

“ஹேய் பார்த்து… பார்த்து” என்றபடி அவள் இடையில் கை வைத்து செந்தமிழ்நம்பி பிடிக்க, கீழே விழாமல் இருப்பதற்காகப் பிடிமானத்தைத் தேடிக் காற்றில் துளாவிய அவள் கைகளில் அவனின் சட்டைக் காலர் பகுதி அகப்பட அதை இறுக பற்றிக் கொண்டாள். திடீரென்று அவனின் சட்டைப் பகுதியைப் பற்றி அவள் இழுத்ததில் அவன் எதிர்பாராத விதமாய் அவள் முகம் நோக்கிக் குனிய, இருவரின் இதழும் பட்டும் படாமலும் மென்மையாகத் தீண்டிக் கொண்டது.

அந்த மெல்லிய உரசல் உண்டாகிய சிறு தீப்பொறி இருவரின் மனதிலும் பற்றி எரியத் தொடங்கியது. அவள் மனதின் மயக்கம் அவளின் கண்களில் தெரிய, அவன் அதைக் கண்டு கொண்டான். அவளின் நிலை அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. முயன்றுத் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு, அவன் அவளையே இமைக்காமல் பார்த்தான்.

‘என்னிடம் மயங்காத பெண்ணும் உண்டா?’ கர்வமாய் அவன் மனம் நினைத்தது. அவன் நினைத்திருந்தால் அவளின் இதழில் காதல் கவிதை எழுதியிருக்க முடியும். ஆனால் ஏனோ அவன் அதைச் செய்யவில்லை. மெல்ல அவளை நேராக நிமிர்த்தி நிற்க வைத்தான். அவனின் செயலில் அவளுக்கு மயக்கம் தெளிய, அவனை நிமிர்ந்துப்

பார்க்க அவனோ அவளைக் குறும்புச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனின் சிரிப்பில் அவள் செய்தக் காரியம் நியாபகத்தில் வர, மதியம் போல் இப்பொழுதும் அவனிடம் தான் மயங்கித் தொலைத்ததை எண்ணியவள் மனம் நிலைக் கொள்ளாமல் தவித்தது.

“சாரி...” அவன் முகம் பார்க்காமல் கீழே குனிந்தப்படிச் சொன்னவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

“ஆக்சிடென்ட்டா நடந்ததுக்கு எதுக்குச் சாரி?”

“நீங்க வரும் போதெல்லாம் நான் கீழே விழுந்துட்டே இருக்கேன். இப்ப உண்மையில் நான் பயந்து போயிட்டேன்”

“தாங்கிப் பிடிக்க அடியேன் தயாராய் இருக்கும் போது... தாங்கள் தாராளமாய்க் கீழே விழலாம். அதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” கண்களைச் சிமிட்டியபடிக் குறும்புடன் சொன்னவனைக் கண்டு அவள் தலைத் தானாகக் கவிழ்ந்தது.

“நான் ஒண்ணுச் சொன்னா கோவிச்சிக்க மாட்டியே” அவன் மெதுவே தூண்டில் வீச,

“ம்ஹூம்...” என்று தலையை மறுப்பாய் ஆட்டி சொன்னவளிடம்,

“உன் கையைக் கொஞ்சம் காட்டு...” அவன் கேட்டதற்கு அவள் புரியாமல் பார்த்தாலும் கையை அவன் முன் நீட்டத் தயங்கவில்லை.

அவளின் கையைப் பற்றித் தன் முகத்தை அதில் புதைத்தவன், அதிலிருந்து வந்த மருதாணி வாசத்தை, மூச்சை நன்கு இழுத்து முகர்ந்தான்.

“வாட் அ அரோமா… ஐ லைக் திஸ் ஸ்மெல்” இயல்பாகச் சொல்லியவன், “இந்த மருதாணிச் சிவப்பு போல்… உனக்கும் என்னைப் பிடிக்குமா?” கிசுகிசுப்பாய் ரகசியம் பேசுவது போல் சொன்னவனின் குரல் அவளை இன்ப அவஸ்தைக்கு உள்ளாக்கியது என்றால், அவனின் மீசை ரோமம் அவள் உள்ளங்கையில் உராய்ந்ததில் அவள் உள்ளம் எங்கோ பறந்து சென்றது.

“ப்ளீஸ் வேண்டாமே…” படபடக்கும் இதயத்துடன் கையை வெடுக்கென்று அவள் இழுத்துக் கொள்ள, அவளின் மனநிலை அவனுக்கும் புரிய அவன் அமைதியாகச் சுவற்றில் சாய்ந்து நின்றான். சேலை முந்தானையைத் திருகிக் கொண்டு முகத்தில் ஒருவிதப் பதட்டத்துடன் நின்றிருந்தவளைக் கண்டு அவன் மனம் சந்தோசப்பட்டது.

அப்பொழுதுப் பார்த்துச் சலங்கைப் போன்ற ஒலிக் கேட்க, அவள் அந்த ஒலியில் மிரண்டு போய், “ஏதோ கொலுசுச் சத்தம் போல் கேட்குதுல… என்னது?” அவள் குரலில் பயம் அப்பட்டமாய்த் தெரிந்தது.

அவள் சொல்லவும் தான் அவனும் கூர்ந்துக் கவனித்தான். அது மாட்டின் கழுத்தில் கட்டி இருக்கும் சலங்கையின் ஒலி என்று அவனுக்குப் புரிந்தது. ஆனால் அவளிடம் சிறிது விளையாடித் தான் பார்ப்போம் என்று எண்ணியவன்,

“கொலுசுச் சத்தம் மட்டுமா கேக்குது… எனக்கு மல்லிகைப் பூ வாசமும் சேர்த்து அடிக்குதே” அவள் கூந்தலில் வைத்திருந்த மல்லிகைப் பூவின் வாசத்தை நன்கு நுகர்ந்தபடிக் கூறியவன் குரலில் குறும்புத்தனம் ஏகத்தும் கொப்பளித்தது.

“ம்… அப்படியா?” என்றவள் அச்சத்துடன் அவன் அருகில் நெருங்கி நின்று அவன் கையைப் பிடித்துக் கொள்ள, அவனோ இது தான் சாக்கு என்று அவள் கையை இறுக பற்றிக் கொண்டான்.

“நாம கீழே போகலாமா?”

‘இப்படிக் கையைப் பிடிச்சிக்கிட்டு நீ கூப்பிட்டா… கீழே என்னடி மேலே கூட வருவேன்’ மனதுக்குள் நினைத்தவன், “வா… போகலாம்” அவள் கையை விலக்காமல் நடத்திச் சென்றான்.

அவனை ஒட்டிக் கொண்டே பயத்துடனேயே மாடிப்படிகளில் இறங்கியவளிடம், “இதுக்கு மேல் நான் உன் கூட வந்தா… யாராவது தப்பா எடுத்துக்குவாங்க. இனி நீயே போயிருவியா?”

“ம்…” மெல்லத் தலையாட்டியவள் முன்னே செல்ல, பின்னே வந்தவன் அவள் கையை எட்டிப் பிடித்து, “குட் நைட்…” சொல்லிக் கொண்டே அவள் புறங்கையில் அழுத்தமாய்த் தன் இதழைப் பதிக்க, அவனின் அந்தத் திடீர் முத்தம் அவளை விதிர்க்கச் செய்ய, திகைப்பாய் அவனைப் பார்த்தாள்.

“என்னை உனக்குப் பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும். அதே மாதிரி எனக்கும் உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்கு” வழக்கமாய்ப் பெண்களிடம் சொல்லும் வார்த்தையை அவன் அவளிடம் எடுத்து விட, அதை அவள் உண்மை என்று நம்பி, அவன் என்னமோ அவளைக் காதலிக்கிறான் என்று சொல்லியது போல் எண்ணிக் கொண்டு வெட்கத்தில் முகம் சிவக்க, அவன் கைகளிலிருந்து தன் கையை உருவி கொண்டு சிட்டாய் பறந்து சென்றாள். அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவன் முகத்தில் விசமப் புன்னகைப் பூத்தது.

## உயிர் : 6

“டேய் கல்யாண மாப்பிள்ளை... நேரா உட்காருடா... இப்படியாத் திரும்பி உட்கார்ந்துட்டுப் பொண்ணு எப்ப வரும்ன்னு ஜொள்ளு விட்டுட்டு இருப்ப” செந்தமிழ்நம்பி ஆதவனின் காதில் ரகசியமாய்க் கிண்டலடிக்க,

“போடா... உன் கல்யாணத்துல நீ எப்படி இருக்கேன்னு நானும் பார்க்கத் தானே போறேன்” நண்பனை பதிலுக்கு ஆதவன் கேலி செய்ய, அதைக் கேட்டு தமிழின் முகம் இறுகிப் போனது.

“அது நடக்கும் போது பார்க்கலாம்” இறுக்கமான குரலில் கூறியவனை ஆதவன் கேள்வியாய் நிமிர்ந்துப் பார்க்க... அதற்குள் குறிஞ்சியை அழைத்து வரவும், அவனின் கவனம் நண்பனிடம் இருந்து தன்னவளிடம் தாவியது. அழகுப் பதுமையாய் தன்னருகில் வந்து அமர்ந்தவளைக் கண்டவன் மனம் மயங்கித் தான் போனது.

செந்தமிழ்நம்பி நண்பனின் வார்த்தையில் முகம் இறுகிப் போனவனாய் நின்றிருக்க, அப்பொழுது அவன் கண்ணில் தன் அருகில் நின்று கொண்டிருந்த சூரியபிரியா தென்பட்டாள். வான் நீல நிறப் பட்டுச் சேலையில் அழகோவியமாய் நின்றிருந்தவள் அழகு அவனை இம்சிக்கத் தான் செய்தது.

அவனும் இந்த ஆறு நாட்களாக அவளைப் பின் தொடர்ந்து பேச முயற்சிக்கத் தான் செய்தான். ஆனால் அவளோ மீன் போல் நழுவி கொண்டே போனாள். அவன் வலியப் போய்ப் பேசினாலும் ஓரிரு வார்த்தைகளில் பதிலளிப்பவள், பெரும்பாலும் தலையைக் குனிந்து கொண்டு புதையல் எதையோ தேடுபவள் போல் தான் அவன் முன் படபடப்பாக நின்றிருப்பாள். அதுவே அவனுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. அவனை இந்தளவுக்குத் தன் அழகால் இம்சித்தவளும், பின்னால் அலைய விட்டவளும் இவள்

ஒருத்தி மட்டும் தான். அவன் தலைகீழாய் நின்றுப் பார்த்தும் பயனில்லை என்று தெரியவும், ‘ச்சீ… ச்சீ… இந்தப் பழம் புளிக்கும்’ என்ற நிலைக்கு அவனும் வந்துவிட்டான். அதிலும் இன்று ஊர் திரும்ப வேண்டும் என்பதால் ஒத்துவராத அவளைப் பற்றி அவனும் அதற்கு மேல் சிந்திக்கவில்லை.

‘ம்ஹூம்… ஒதுங்கிப் போகணும்ன்னு நினைச்சாலும் விட மாட்டேங்கிறாளே. ஹையோ இந்தப் பூ வாசனை வேற ஆளைத் தூக்குதே’ மனதுக்குள் புலம்பியவன் அவளை அடிக்கடி ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

சூரியபிரியாவும் தமிழின் பார்வையை உணர்ந்து இருந்தாலும்… எதிரே முன் வரிசையில் அமர்ந்திருந்த அன்னையின் முன் அவளால் அவனைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை. பட்டு வேஷ்டியில் கம்பீரமாக இருந்தவனைத் தூரத்தில் இருந்தே பார்த்துவிட்டாள். அவனின் அழகு அவளின் காதல் கொண்ட மனதைப் பித்துப் பிடிக்க வைத்தது. இத்தனை நாட்களும் அவனும் அவளிடம் வலிய வந்து பேசத் தான் செய்தான். ஆனால் பாழாய் போன இந்த வெட்கம் வந்து அவளை அவனுடன் பேசவிடாமல் தடுத்து விட்டது. அவளும் அவனுடன் பேசுவதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்துத் தான் பார்க்கிறாள்… ஆனால் வாயைத் திறந்தால் வார்த்தை வருவதற்குப் பதில் காற்றுத் தான் வருகிறது.

‘கடவுளே… இன்னைக்கு ஊருக்கு வேற கிளம்பணுமே… இன்னைக்கு விட்டா அதுக்கு அப்புறம் அவனிடம் பேசவே முடியாது. எப்படி அவனுடன் பேசுவது? அதற்கான வாய்ப்புக் கிடைக்குமா? சூர்யா… வாய்ப்புக் கிடைக்கலைன்னா என்ன… நீயே உருவாக்கிக்கோ’ மனதில் நினைத்தவள் சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கலானாள்.

ஆதவன் குறிஞ்சியின் கழுத்தில் திருமாங்கல்யம் அணிவிக்கும் போது தன்னையும் அறியாமல் சூரியாவின்

கண்கள் செந்தமிழ்நம்பியைப் பார்த்தது. அவனோ தாலிக் கட்டும் ஆதவனை உணர்ச்சியில்லாத முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டு அவள் ஆச்சிரியப்பட்டுப் போனாள். ‘நண்பனின் திருமணத்தில் சந்தோசமாக இருக்க வேண்டாமா? இது என்ன உணர்ச்சியில்லாமல் உம்ன்னு இருக்கிறது?’ என்று நினைத்தவள் அவனைக் குழப்பமாய்ப் பார்த்தாள்.

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காதவனாய் ஆதவனிடம் ஏதோ சொன்னத் தமிழ் பின் அங்கிருந்து நகன்றான். அவன் செல்வதைக் கண்டவளுக்குப் பதற்றம் வந்தது. இன்று விட்டால் அவனிடம் பேச முடியாதே என்று எண்ணியவள் குறிஞ்சியிடம் கூடச் சொல்லத் தோன்றாமல் அவன் பின்னே சென்றாள். அவளின் அன்னையும், தந்தையும் குறிஞ்சியின் பெற்றோரிடம் பேசிக் கொண்டிருந்ததால் அவளைக் கவனிக்கவில்லை. நல்லவேளை பரணி கல்யாணத்திற்கு வரவில்லை... வந்திருந்தால் அக்காவின் காதல் அவனுக்குத் தெரிய வந்திருக்கும்.

வாசலுக்கு வந்தவள் தமிழைக் காணாமல் எங்கே? என்று தேட, அவள் அருகே கார் ஒன்று உரசிக் கொண்டு நின்றது.

“ஹலோ... என்ன இங்கே நின்னுட்டு இருக்க?” அவளைக் கண்டதும் இடது பக்கம் இருந்த கார் கதவின் கண்ணாடியை இறக்கி விட்டுக் கொண்டே தமிழ் வினவினான்.

திடீரென்று அவன் குரல் கேட்டதும் அதிர்ந்து போய்ப் பார்த்தவள், காரிலிருந்த அவனைக் கண்டு ஆசுவாசமானாள். ‘உன்னைத் தான் தேடிக் கொண்டிருந்தேன்’ என்று எப்படிச் சொல்வது...? தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

“வீட்டுக்குப் போகணுமா?” என்று கேட்டவனிடம், அது தான் சாக்கு என்று ஆம் என்பது போல் அவசரமாய்த்

தலையசைத்தாள்.

“சரி வா... நானும் அங்கே தான் போறேன்...” மறுப்பேதும் சொல்லாமல் அவள் காரில் ஏறி அமர, அவன் காரைக் கிளப்பினான்.

சூரியாவிற்கு எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. தன் கைகளைப் பிசைவதும்... பின்பு அதை வெறித்துப் பார்ப்பதுமாய் நேரத்தை ஓட்டிக் கொண்டிருக்க... அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தான்.

‘எதுக்கு இவள் இவ்வளவு டென்சன் ஆகுறா? ஒருவேளை நம்மளைப் பத்தி ஏதும் தெரிஞ்சி இருக்குமோ? அதான் பயப்படுறாளோ? அப்படிப் பயப்படுறவ எதுக்குக் கூப்பிட்டதும் வரணும். ஆமாம்... இவ பெரிய கற்புக்கரசி...’ அவன் உதடுகள் ஏளனமாய் வளைந்தது.

அதற்குள் வீடு வந்து விட, காரை நிறுத்தி விட்டு இறங்கியவன் அவள் இறங்குவதற்காக நின்றான். அவளும் இறங்கியதும் அவனுக்கென்று ஒதுக்கப்பட்டு இருந்த அறையை நோக்கி அவன் செல்ல... அங்கே யாருமில்லாத தனிமை அவளுக்குச் சற்றுத் தைரியத்தைக் கொடுத்தது.

“நா... நான் உங்க கிட்டப் பேசணும்” தன் யோசனையில் உழன்றபடிச் சென்று கொண்டிருந்தவன் அவள் வார்த்தையில் திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டான்.

‘என்னடா பட்சி தானா வந்து வலையில் மாட்டுது? இவ்வளவு நாள் பேசாம ஊமச்சி மாதிரி இருந்தவ... இப்பப் பேசுறாளே... என்ன விசயமா இருக்கும்?’ மனதில் நினைத்தவன், எதுவாக இருந்தாலும் அவள் வாயிலிருந்தே வரட்டும் என்று அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

“இன்னைக்கு நான் ஊருக்குப் போயிருவேன்…”

‘அது தான் தெரியுமே… அதுக்குள்ள உன்னை மடக்கணும்ன்னு பார்த்தேன். நீ தான் மடிய மாட்டேங்கிறியே’ சலிப்பாய் மனதுக்குள் நினைத்தான்.

“இனி எப்பப் பார்ப்பேனோ தெரியல?”

‘அடப் பார்றா… இவ்வளவு நாளா குனிஞ்சத் தலை நிமிராம குடும்பக் குத்து விளக்கு நாந்தான் இருந்தவ… இன்னைக்கு இந்தப் போடு போடுறா’

“சென்னையில் உங்களைப் பார்க்க முடியுமா? இல்ல… நான் எப்படி உங்களைக் காண்டாக்ட் பண்றது?” அவள் அப்பாவியாய் அவனும் தன்னைப் போல் காதலிக்கிறான் என்று எண்ணிக் கொண்டு கேட்டாள்.

‘ஆஹா… உன் குணம் எனக்கு ஒத்து வராதுன்னுல நினைச்சேன். ஆனால் இப்படி வலிய வர்ற உன்னை வேண்டாம்ன்னு சொல்ல நான் என்ன பைத்தியக்காரனா? பேபி… இனி நீயே என்னை விட்டாலும்… நான் உன்னை விட மாட்டேனே. உன்னை மாதிரி ஒரு அழகியை நான் பார்த்ததும் இல்ல… அனுபவிச்சதும் இல்ல…’ மனதிற்குள் சப்புக் கொட்டிக் கொண்டு அவன் நின்றிருக்க…

தான் மட்டும் பேசிக் கொண்டு இருக்கிறோமே அவன் பதில் ஏதும் சொல்லவில்லையே என்று எண்ணியவள், அவன் முகத்திற்கு நேரே தன் கையை ஆட்டினாள். அதுவரை தனக்குள் உழன்றுக் கொண்டிருந்தவன் அவளின் செயலில் தன் உணர்வு அடைந்து, மனதின் கல்மிஷத்தை ஒரு நொடியில் மறைத்து அவளை அப்பாவியாய் பார்த்தான்.

“நான் பேசுறதை நீங்க கேட்டீங்களா? இல்ல…” தயங்கியவளைப் பார்த்தவன் அவள் தன் பதிலுக்காகக் காத்திருக்கிறாள் என்பதை உணர்ந்து,

“ஹேய் பேபி... அந்தக் கவலையே வேண்டாம்” என்றவன் அவள் கையிலிருந்த அலைப்பேசியைப் பறித்து அதிலிருந்து தன் எண்ணிற்கு அழைத்தவன், பின் தன் எண்ணை சேமித்தான்.

“என்னோட நம்பர் உன் போனில் சேவ் பண்ணியிருக்கேன். உனக்கு எப்பத் தோணுதோ அப்ப எனக்குப் பேசு. பார்க்கணும்ன்னு நினைச்சா... ஒரு கால் பண்ணு. அடுத்து நிமிசம் உன் முன்னால் நான் நிற்பேன்”

“ம்... சரி...” என்றவளின் அருகில் வந்தவன்,

“இந்தச் சேரியில் நீ எவ்வளவு அழகாயிருக்கத் தெரியுமா...!” சொல்லியபடி அவன் மயக்கமாய் அவளைப் பார்க்க... தன் வசீகரப் பார்வையால் அவளை வசீகரித்தவனின் கண்களைச் சந்திக்க முடியாமல் அவள் தலையைக் குனிந்துக் கொண்டாள். அவள் முகத்தை நிமிர்த்தியவன் துடிக்கும் அவள் செவ்விதழில் கவிதைப் பாட நினைக்கும் போது, கார் வந்து நிற்கும் ஓசைக் கேட்டது. யாராவது வந்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்தவன் அவசரமாக அவள் கன்னத்தில் தன் உதடுகளை அழுந்த பதித்துவிட்டு அதே வேகத்தில் தன்னறைக்குள் சென்று புகுந்து கொண்டான்.

கொஞ்ச நேரம் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு அப்படியே நின்றிருந்தவள் பின் சுதாரித்துக் கொண்டு தன்னுடைய அறைக்கு வந்தாள். அவள் மனதில் அவன் விதைத்த இனிமையான நினைவுகளுடன் படுக்கையில் சாய்ந்தவள், தன்னையும் மீறி அப்படியே உறங்கிவிட்டாள்.

“சூர்யா... சூர்யா...” சிவகாமியின் குரலில் கண்களை மெல்லத் திறந்தவளுக்கு உடனே எழும்ப முடியவில்லை. ஏனோ தலை எல்லாம் பாரமாய், கண்கள் எரிய... உடலெல்லாம் வலித்தது.

“ஏண்டி வீட்டுக்கு வர்றவ... சொல்லிட்டு வர வேண்டியது தானே. ப்ரெண்ட் கல்யாணத்துக்கு வந்திட்டு இப்படியா தூங்கி வழிஞ்சிட்டு இருப்ப” அவர் அதட்ட, என்ன பதில் சொல்வது? என்று தெரியாமல் அவரைப் பார்த்து முழித்தாள்.

“அம்மா... பீவரீசா இருக்கு” முனங்கிய மகளின் அருகில் வந்து சோதித்துப் பார்த்தவர்,

“ஆமாம்... சரி டேப்லட் தாரேன். போட்டுட்டுத் தூங்கி எந்திரி. நைட் கிளம்புறதுக்குள்ள சரியாகிடும்” என்றவர் மகளிடம் மாத்திரையைக் கொடுத்து முழுங்கச் செய்து அவள் படுத்த பின் தான் அங்கிருந்து அகன்றார்.

தாயை ஏமாற்றுகிறோமோ என்ற குற்ற உணர்வில்... கண்களை மூடிப் படுத்தாலும் அவளுக்கு உறக்கம் வரவில்லை. ஒரு பக்கம் மனதுக்கு இனியவனின் பேச்சு, நெருக்கம் மனதிற்குச் சந்தோசமாக இருந்தாலும், மறு பக்கம் பெற்றோருக்குத் தெரியாமல் இந்தக் காதல் தேவைத்தானா? என்ற எண்ணம் மனதைக் குத்திக் கிளறியது.

சூரியாவின் மனப் போராட்டம் எதுவும் அறியாத தமிழ் சந்தோச மிகுதியில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். சூரியாவின் பேச்சு, நடவடிக்கை எல்லாம் அவன் பழகி வரும் பெண்களோடு ஒரு சதவீதம் கூட ஒத்து வரவில்லை என்றதும் அவனும் சிறிது விலகித் தான் இருந்தான். இந்த மாதிரிப் பெண்களிடம் பழகினால் என்றாவது ஒருநாள் அவனுக்கே அது ஆப்பாய் முடியும் என்று அவனுக்கு நல்லாவே தெரியும்.

‘இவளிடம் பழகிவிட்டு நான் இவளை ஏமாற்றி விட்டேன்னு அப்பத்தாவிடம் இவள் அழுது புலம்பினால் போதும், உடனே அப்பத்தா... ‘எடுடா தாலியை... கட்டுடா அவள் கழுத்தில்...’ன்னு நாட்டாமை மாதிரி தீர்ப்புச் சொல்லி என்னைத் திருமணப் பந்தத்தில் சிக்க வைக்காமல் இருக்க

மாட்டாங்க. அதுக்கு நாமளே ஒதுங்கி போறது நல்லது’ என்று தான் சூரியாவிடம் அவன் அடக்கி வாசித்தான். ஆனால் அவளே வலிய வந்து மாட்டும் போது அவனும் என்ன தான் செய்வான்.

‘ம்... ஐயாவோட பர்சனாலிட்டி அப்படி...’ தன்னைப் பற்றிப் பெருமையாக நினைத்தவன் மனதுக்குள் மகிழ்ந்துத் தான் போனான்.

******************************************

“குறிஞ்சி போயிட்டு வரேன்டி... அண்ணா குறிஞ்சியைப் பத்திரமா பார்த்துக்கோங்க. வர்றேண்ணா...” தோழியிடமும் அவள் கணவனிடமும் விடைப் பெற்றவள், தமிழிடம் யாருக்கும் தெரியாமல் கண்களால் விடைப் பெற்றாள்.

‘பாருடா... அப்பா, அம்மா பக்கத்துல இருக்கும் போதே ஜாடையாய் பேசுறத... ம்... இந்தப் பொம்பளைங்களை எந்தக் காலத்திலேயும் நம்பக் கூடாதுடா சாமி. பேசாமடந்தை மாதிரி... நல்ல பொண்ணு மாதிரி ஆக்டிங் கொடுக்கிற இவளே இப்படின்னா... மத்தவங்க...?’ கேவலமாக நினைத்தவனின் நினைவுகள் நல்லவேளை அவளுக்குத் தெரியவில்லை.

யாரையும் ஏறெடுத்துப் பார்க்காதவள், அவனை மட்டும் பார்க்கிறாள்... பேசுகிறாள் என்றால் அது காதலில் மட்டுமே சாத்தியம் என்பது அந்த முட்டாளுக்குத் தெரியவில்லை. தெரியும் போது அவள் மனதளவில் அவனை விட்டுத் தூர விலகிப் போயிருப்பாள் என்பது அந்நேரம் அவன் உணரவில்லை.

காரில் ஏறி அமர்ந்தவள் அவனைத் திரும்பிப் பார்க்க, அதற்காகவே காத்திருந்தார் போல் அவன் விழிகள் மின்னியது. அவனின் கண்களின் மின்னலை அவள் வேறு மாதிரி நினைத்து மகிழ்ந்துப் போனாள். ‘ஃபோன் செய்கிறேன்’ என்று யாருக்கும் தெரியாமல் சைகையில்

சொன்னவனைக் கண்டு அவள் நாணத்துடன் தலையைக் குனிந்துக் கொண்டாள்.

கார் புள்ளியாய் சென்று மறையும் வரை அங்கேயே நின்றிருந்தவன், அடுத்து அவனும் கிளம்ப ஆயத்தமானான்.

“ஆதி… நானும் கிளம்பறேன்டா” என்றவனை முறைத்த ஆதவன்,

“அப்படி என்னடா வெட்டி முறிக்கிற வேலை இருக்கிற மாதிரி பறக்கிற? வந்ததுக்குக் கொஞ்ச நாள் இருந்திட்டுப் போடா”

“டேய்… நீ சிஸ்டரை கவனிப்பியா.. இல்லை என்னைக் கவனிப்பியா? முதல்ல அவங்களைப் பாரு. நான் சாவகாசமா ஒருநாள் வர்றேன்”

“ம்… அதுவும் சரி தான்…” என்று ஒத்துக் கொண்ட ஆதவன், “தமிழ்… உன் பாட்டி சொல்ற மாதிரிக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சாத் தான் என்னடா?”

“ஆதி… கல்யாணம்ங்கிற வார்த்தைத் தவிர வேறு எதைப் பத்தி வேணும்ன்னாலும் பேசு” என்று கண்டிப்புடன் கூறியவன், அவனிடமும், குறிஞ்சியிடமும் விடைப் பெற்றுச் சென்றான்.

“என்னங்க ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?” குறிஞ்சி கேட்டதற்குக் கூட… நண்பனைப் பற்றி அவளிடம் சொல்ல விருப்பமில்லாமல் ஏதோ சொல்லிச் சமாளித்தான் ஆதவன். மனதின் ஒரு மூலையில் இவன் என்று தான் திருந்துவானோ? என்று கலக்கமாக இருந்தது அவனுக்கு.

****************************************

அலுவலகத்திற்கு வந்தமர்ந்த செந்தமிழ்நம்பி வழக்கம் போல் அலைப்பேசியைப் பார்க்க... அது வழக்கம் போல் ஏமாற்றத்தை அளித்தது. இன்றோடு ஆதவன் திருமணத்திற்குப் போயிட்டு வந்து பத்துத் தினங்கள் ஆகிவிட்டது. சூரியாவிடமிருந்து ஒரு அழைப்புக் கூட அவனுக்கு வரவில்லை. தினமும் அவளின் அழைப்பை எதிர்பார்த்து ஏமாந்துத் தான் போவான்.

வழக்கம் போல் மற்ற பெண்களுடன் பழகினாலும் அவளின் அழைப்பை அவன் மனம் ஏனோ விரும்பியது. தன்னிடம் மயங்காத பெண்ணும் உண்டா என்று இறுமாந்து இருந்த அவனுக்கு அவளின் இந்த உதாசீனம் மனதளவில் பெரும் காயத்தை உண்டுப் பண்ணியது.

அதே நேரம் தானாக வலிய அவளை அழைத்துப் பேசுவதிலும் அவனுக்கு விருப்பம் இல்லை. அவனைத் தேடி அவளாகத் தான் வர வேண்டும். அவனாக அவளைத் தேடிப் போகக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

ஆனால் ஏனோ இன்று காலையில் எழுந்தது முதல் அவள் இன்று அழைப்பாள் என்று மனதில் மூலையில் ஒரு நம்பிக்கைக் குரல் ஒலித்தது. அவனின் உள்ளுணர்வு என்றுமே பொய்த்தது இல்லை. இன்று அவள் தன்னைக் கட்டாயம் அழைப்பாள் என்று அவன் மனம் உற்சாகமாய்க் கூவியது.

அங்கே சூரியாவும் அலைப்பேசியைக் கையில் வைத்துக் கொண்டு பேசலாமா? வேண்டமா? என்று தான் யோசித்துக் கொண்டிருந்தாள். பத்து நாட்களாகத் தயங்கித் தயங்கியே அவனுடன் பேசுவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தாள். இன்று அவனுடன் கட்டாயம் பேசியாக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது. அதனால் அவனிடம் மனம் விட்டு பேச அவளின் மனம் துடிதுடித்தது.

அவனை அழைப்போமா? வேண்டாமா? என்று இருமனதாய் ஊஞ்சலாடியவள், பின் ஒரு முடிவுக்கு வந்தவளாய்

அவனை அழைத்தாள்.

அவளின் எண் திரையில் ஒளிர்ந்ததும் தமிழ் அடைந்த உவகைக்கு அளவே இல்லை. ‘ஊ...’ என்று கையைக் காற்றில் அசைத்துச் சத்தமிட்டு தன் உற்சாகத்தை வெளிப்படுத்தியவன், பின்பு முயன்றுத் தன்னைச் சமன் செய்து கொண்டு அவளின் அழைப்பை ஏற்றுக் காதில் வைத்தவன், “ஹலோ...” என்க,

அவனின் கம்பீரக் குரலில் தன்னை மறந்தவளாய் அவள் அந்தப் புறம் மயங்கி நிற்க, அவள் குரலைக் கேட்க வேண்டும் என்ற ஆசையில் அவன் பொறுமையில்லாமல், “ஹலோ... ஃபோன் பண்ணிட்டுப் பேசாம இருந்தா எப்படி?”

“நான் தான்... சூர்யா பேசுறேன். என்னை மறந்திட்டீங்களா...?” ரகசியமாய் மென்மையாய் வினவியக் குரலைக் கேட்டு அவனுக்கு ஜிவ்வென்று வானத்தில் பறப்பது போலிருந்தது.

“மறக்கக் கூடியவளா நீ...” அவனும் முயன்று வரவழைத்த மென்மையான குரலில் பதிலளிக்க, அதைக் காதல் என்று நினைத்து விட்டாள் அந்தப் பேதை.

“ம்... என்ன விசயமாய் ஃபோன் பண்ணின?” அவள் வாயிலிருந்து விசயத்தை வரவழைக்க முயன்றான்.

“உங்க கிட்ட முக்கியமான விசயம் பேசணும். நான் உங்களை எப்போ பார்க்கலாம்...?” தயங்கித் தயங்கி அவனைச் சந்திக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தை அவள் சொல்லிவிட்டாள்.

‘வாடி மகளே வா... உன் வாயிலிருந்து வரும் இந்த வார்த்தைக்குத் தானே இவ்வளவு நாளா காத்திருந்தேன்...!’ என்று குரூரமாய் நினைத்தவன் மனம் அவளை நினைத்துப் பலவித ஆசைக் கோட்டைகளை மனதில் கட்டியது.

## உயிர் : 7

“என்னங்க சூர்யாவுக்கு மாப்பிள்ளைப் பார்க்கச் சொல்லி எத்தனை நாளாச்சு? அதுக்கு அப்புறம் அதைப் பத்தி நீங்க ஒண்ணுமே பேசல” சிவகாமி எரிச்சலுடன் கணவன் மேகநாதனிடம் கேட்க,

“இப்ப அது பத்தித் தான் பேச வந்தேன். நீ அதுக்குள்ள கடுப்பாயிட்ட... இன்னைக்குக் காலையில் நம்ம சாமிதுரை ஒரு வரன் கொண்டு வந்தான். வீட்டுக்கு ஒரே பையனாம்... ஏகப்பட்ட சொத்து இருக்கு. பிக்கல் பிடுங்கல் இல்லை. நீ என்ன சொல்ற சிவா?” என்றபடிப் பையனின் புகைப்படம், ஜாதகத்தை மனைவிடம் நீட்டினார். புகைப்படத்தை வாங்கிப் பார்த்த சிவகாமியின் முகம் திருப்தியை வெளியிட்டது.

“பையன் பார்க்க ஜம்ன்னு ராஜா மாதிரி தான் இருக்கான். ஆனா ரொம்ப வசதியானவங்க... நிறைய எதிர்பார்த்தா...?” அவரது குரலில் கவலை எட்டிப் பார்த்தது.

“அதையும் சாமிக்கிட்டக் கேட்டுட்டேன். அவங்களுக்குப் பொண்ணு அழகா, குணமா இருந்தாப் போதுமாம் வேற எதுவும் வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்களாம். நமக்கு இருக்கிறதும் ஒரே பொண்ணு. நம்மளால எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செஞ்சுத் தான் அனுப்பப் போறோம். பின்னே நீ எதுக்கு வீணாக் கவலைப்படுற?”

“ம்... நீங்க சொல்றதும் சரி தான்...” என்றவர், “என்னங்க... எதுக்கும் பையனைப் பத்தி வெளியில் விசாரிச்சிக்கோங்க. இந்தக் காலத்துப் பசங்க... வீட்டில் ஒரு மாதிரியும், வெளியில் வேறு மாதிரியும் வேசம் போடுவாங்க. அதனாலக் கவனமா விசாரிங்க”

“நாளைக்கு முதல் வேலையா பையனைப் பத்தி வெளியில் விசாரிக்கிறேன். எல்லாம் கூடி வந்தா மட்டுமே... சூர்யா

கிட்ட போட்டோவைக் காட்டு. அதுக்கு முன்னாடிக் காட்டி வீண் ஆசையை அவள் மனசில் நாமளே வளர்க்க வேண்டாம்” கணவரின் கூற்றை ஆதரித்தவராய் சிவகாமியும் சரி என்று சொல்ல... அவர்கள் இருவரும் பேசியதை மறைவாய் இருந்து கேட்ட சூரியபிரியாவிற்குத் தான் வியர்த்து விறுவிறுத்துப் போயிற்று.

தமிழை நினைத்த மனதில் வேறு யாரையும் நினைத்துப் பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்பது போல்... ஒருத்திக்கு ஒருவன் என்பதை விடாமல் கடைபிடிப்பவள் அவள். முதலில் இந்த விசயத்தைத் தமிழிடம் சொல்ல வேண்டும் என்று அவள் உள்ளம் பரபரத்தது. அலைப்பேசியைக் கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தவள், அவனிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? என்று யோசித்துத் தயங்கினாள்.

இன்னமும் அவனிடம் காதலைச் சொல்லாத நிலையில், ‘எனக்கு மாப்பிள்ளைப் பார்க்கிறாங்க’ என்று எப்படிச் சொல்வது? மனதுக்குள் போராட்டம் நடத்தியவள் முடிவாய் அவனை அழைத்தாள். அவள் நினைத்தது போல் அவனிடம் பேசி... நேரில் சந்திப்பதற்கும் சம்மதம் வாங்கிவிட்டாள். அவனுக்கும் தன்னைப் போல் காதலிருக்கும் என்று நம்பியவள் அவனைச் சந்திக்க உற்சாகமாய்ப் புறப்பட்டுச் சென்றாள்.

“ஹாய் பேபி... நான் கிளம்பிட்டேன். எங்கே வந்து உன்னைப் பிக்கப் பண்ண?” சூரியாவை அலைப்பேசியில் அழைத்த தமிழ் உல்லாசமாய்க் கேட்டான்.

“நீங்க ஒண்ணும் என்னைப் பிக்கப் பண்ண வர வேண்டாம். நேரே அஷ்டலட்சுமி கோவிலுக்கு வாங்க” என்றவள் அவன் பதில் பேசும் முன் அலைப்பேசியை அணைத்தாள்.

‘கோவிலுக்கா... அங்கே எதுக்கு? ஒருவேளை இவளை வச்சு அப்பாத்தா ஏதும் கேம் விளையாடுதோ? ம்ஹூம்... அப்படியெல்லாம் செய்ற அளவுக்கு அப்பத்தா மூளை

வேலைச் செய்யாதே. அப்புறம் என்னவா இருக்கும்?' தாடையைச் சொறிந்து கொண்டே யோசித்தவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அங்கே போய்ப் பார்த்தால் தானாகத் தெரியப் போகுது என்று எண்ணியவன் அவளைப் பார்க்கச் சென்றான்.

கோவில் வாசலிலேயே அவனுக்காகக் காத்திருந்தவள் அவன் வந்ததும் அவன் கையைப் பிடித்து இழுக்காத குறையாக அவனை உள்ளே அழைத்துச் சென்றாள். அவனும் அவள் என்ன தான் செய்கிறாள் பார்ப்போமே என்று அவளுடன் இணைந்து நடந்தான். கோவிலினுள் சென்று அமைதியாய் கடவுளை வழிப்பட்டவளைக் கண்டு செய்வதறியாதுப் பார்த்தவன் வேறுவழியில்லாமல் தானும் கண்ணை மூடிக் கொண்டு சும்மா நின்றிருந்தான்.

"எதுக்கு என்னை வரச் சொன்ன?" வெளியில் வந்தவன் அதற்கு மேல் பொறுக்கமாட்டாமல் அவளைப் பார்த்துக் கேட்க,

"அங்கே போய்ப் பேசலாமா?" கடற்கரை அவள் சுட்டிக் காட்ட, அவன் அமைதியாய் அவளுடன் நடந்தான். ஆனாலும் மனதிற்குள் எதற்கு அழைத்திருப்பாள்? என்ற கேள்வி வண்டாய்க் குடைந்தது. ஒருவேளை அவன் நினைத்தது போல் அவளும் தன்னிடம் மயங்கி... அப்படி மட்டும் இருந்தால்... ஏதேதோ நினைத்த மனம் தேன் குடித்த வண்டாய் மயங்கியது. அதன் பின் அவன் நினைத்த காரியம் வெற்றிப் பெறுவது எளிதல்லவா?

தூரத்தில் தெரிந்தக் கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு மனதில் நினைத்ததை அவனிடம் சொல்ல ஏனோ தயக்கமாக இருந்தது. அதே சமயம் சொல்லாமல் இருந்தால்... அவள் வாழ்க்கையே முடிந்துப் போய்விடும். அவனிடம் தன் காதலைச் சொல்வதற்காக மனதுக்குள் வார்த்தை முத்துக்களை அழகாகக் கோர்த்துக் கொண்டிருந்தாள்.

அதை அறியாத அவனோ, ‘அப்படி என்ன தான்டி சொல்லப் போற? சீக்கிரம் சொல்லேன்... ரொம்பத் தான் ஓவரா பில்டப் கொடுக்கிற...’ மனதில் அவளைத் திட்டினான்.

“உங்க பேரு வெறும் தமிழ் மட்டும் தானா? இல்லை...” அதிமுக்கியக் கேள்வியாய் அவள் கேட்க, அவள் சொன்னதைக் கேட்டுத் தமிழ் பல்லைக் கடித்தான்.

“செந்தமிழ்நம்பி...” ஒற்றை வார்த்தையில் தன் பேரைக் கடுப்புடன் சொன்னான்.

“ஓ... நைஸ் நேம்...” என்றவள், “நான் உங்களை நம்பின்னுக் கூப்பிடவா?” அவளின் நம்பி என்ற அழைப்பு அவன் மனதை லேசாக அசைக்கத் தான் செய்தது.

“ம்... ம்...” என்று மெல்ல முனங்கினான்.

“முதன்முதலா உங்களைக் கோவிலில் பார்த்த அன்னைக்கே நீங்க என் மனசுல ஆழப் பதிஞ்சிட்டீங்க. அந்த நொடியில் இருந்து இந்த நொடி வரை நீங்க மட்டும் தான் என் மனசில் இருக்கீங்க” அவள் பேசப் பேச அவன் மனம் உற்சாகக் கும்மாளமிட்டது.

‘பார்றா... அமைதிப் புறா இந்தப் பேச்சுப் பேசுது. ம்ஹூம்... இப்பவே நல்லாப் பேசிக்கோ... அதுக்கு அப்புறம் உனக்குப் பேச சான்ஸ் கிடைக்குதோ என்னமோ?’

“நம்பி... இதெல்லாம் நான் ஏன் உங்க கிட்ட சொல்றேன்னா...?” ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு அவன் கண்களைப் பார்த்தவள், “என் வீட்டில் மாப்பிள்ளைப் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க...” என்றவளை வினோதமாகப் பார்த்தவன், ‘பார்த்தால்... கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... அதை ஏன் என்னிடம் சொல்ற?’ மனதுக்குள் நினைத்தவன் ஒன்றும் பேசவில்லை.

“இதுக்கு மேலேயும் என் மனதை உங்க கிட்ட இருந்து மறைக்க என்னால் முடியாது. குறிஞ்சி ஊரில் வச்சு நீங்க உங்க காதலை என் கிட்டச் சொல்லும் போது நானும் சொல்லணும்ன்னு தான் நினைப்பேன்... ஆனால் ஏதோ ஒண்ணு தடுத்துட்டே இருந்தது. இப்பச் சொல்றேன் நம்பி... ஐ லவ் யூ...”

‘நான் எப்போ இவள் கிட்ட காதலிக்கிறேன்னு சொன்னேன்’ எவ்வளவு யோசித்துப் பார்த்தும் தான் எப்போழுது அப்படிச் சொன்னோம்? என்பது மட்டும் அவன் நினைவிற்கு வரவில்லை. அவளைப் பிடித்திருப்பதாய் அவன் சொல்லியதைக் காதல் என்று நம்பித் தன் காதலை அவனிடம் உளறிக் கொண்டிருந்தாள் அவள்.

“நம்பி... எனக்கு வேறு வழித் தெரியல... இப்பவும் நான் பேசாம இருந்தா... என்னை யாருக்காவது கல்யாணம் பண்ணி வச்சிருவாங்க. எனக்கு எங்க அப்பா, அம்மாவை எதிர்த்துப் பேசவும் பயமாயிருக்கு. நீங்க... என்னைப் பெண் கேட்டு வர்றீங்களா?” தயங்கிக் தயங்கிக் கேட்டாலும் அவள் முகத்தில் அவன் என்ன சொல்வானோ? என்ற எதிர்பார்ப்பு இருக்கத் தான் செய்தது.

அவன் மனதிலோ சத்தமே இல்லாமல் அணு குண்டு ஒன்று வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது. காதல் என்றாலே காத தூரம் ஓடுபவன் அவன்... அவனிடத்தில் போய் அவள் கல்யாணம் என்றால்...? இன்னமும் பின்னங்கால் பிடறியில் பட அவன் ஓடாமல் அவள் முன் நின்றுக் கொண்டிருப்பதே அதிசயம். ஒருவேளை அவன் மூளை வேலை நிறுத்தம் ஏதும் செய்துவிட்டதா?

“என்ன நம்பி பதில் சொல்லாமல் அப்படியே நிக்கிறீங்க?” அவன் அருகில் வந்து அவன் தோள் பற்றி அவள் உலுக்க,

“ஹான்ங்... என்ன சொன்ன... காதலா? கல்யாணமா?” தெளிவில்லாமல் வார்த்தைகளை வெளியிட்டவனை அவள்

புரியாமல் பார்த்தாள். நல்லவேளை யாருக்குக் கல்யாணம் என்று அவன் கேட்கவில்லை.

“ஆமாம் நம்பி... நம்மக் கல்யாணத்தைப் பத்தித் தான் சொன்னேன்” அவள் தெளிவாகப் பதிலளிக்க...

‘க்கும்... இதிலெல்லாம் தெளிவாத் தான் இருக்கா...’ மனதுக்குள் நொடித்துக் கொண்டவன், “இங்கே பாரு... நீ பாட்டுக்கு வந்த கல்யாணம்ங்கிற... பெண் கேட்டு வாங்கிற. இதுக்கு நான் என்னன்னு பதில் சொல்றது? எனக்குக் கொஞ்சம் யோசிக்க டைம் கொடு” அவளிடம் இருந்து தப்பித்தால் போதும் என்ற நினைவில் மழுப்பலாய் அவன் பதில் சொன்னான்.

“நம்பி... யோசிச்சு நல்ல பதிலாச் சொல்லுங்க. என் வாழ்க்கையே உங்க கையில் தான் இருக்கு” அவன் கையைப் பிடித்துக் கொண்டு கண்களில் கண்ணீர் மல்க, அவள் உருக்கமாய்ப் பேச...

‘ஹையோ... இது என்ன ஓவர் சென்டிமென்ட்டா இருக்கா... இந்த மாதிரி சீரியல் ஹீரோயின் நமக்குச் செட் ஆக மாட்டாளே... ஆளை விடும்மா தாயே... இப்ப மட்டும் நீ என்னை விட்டேன்னு வச்சுக்கோ... இப்படியே இந்தக் கடலில் குதிச்சு அந்தப் பக்கம் இருக்கிற சிலோனுக்கு ஓடிப் போயிருவேன். ஹப்பா சாமி... அந்தளவுக்கு உன் இம்சைத் தாங்க முடியலடி’

“பேபி... இருட்டிட்டு வருதுப் பாரு. நீ நேரத்தோட வீட்டுக்குப் போக வேண்டாம்” அவளிடம் இருந்து தப்பிக்க நினைத்து அவன் கேட்க, அவளோ அவன் தன் மேல் கொண்ட அக்கறையில் கேட்கிறான் என்று மனதிற்குள் பூரித்துப் போனாள்.

“என் மேலுள்ள அக்கறைக்கு ரொம்பத் தேங்க்ஸ். சரி... நான் கிளம்பறேன்” என்றவள் அவனுடன் இணைந்துத் தன் ஸ்கூட்டி நிறுத்தியிருக்கும் இடத்திற்கு வந்தாள்.

ஸ்கூட்டியைக் கிளப்பி அரை வட்டம் அடித்து, காரில் ஏறிக் கொண்டிருந்தவன் அருகில் வந்தவள், அவன் கையைப் பற்றி, “நம்பி… உங்களை நான் மலைப் போல் நம்பியிருக்கேன். என்னைக் கை விட்டுறாதீங்க. சீக்கிரம் நல்ல முடிவாச் சொல்லுங்க” ஏக்கத்துடனும் ஆர்வத்துடனும் கேட்டவளைப் பார்த்து, வேறுவழியின்றி அவனும் சரி என்பது போல் தலையசைத்தான்.

அவன் ஏதோ சம்மதம் என்று சொன்னது போல் அவள் மகிழ்ந்து போய்த் தன் ஸ்கூட்டியை முடிக்கி விட, அது காற்றாய்ப் பறந்தது. அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் அலைப்பேசி அழைக்க, அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்.

“ஹாய் டார்லிங்…” மறுமுனையில் நிம்மியின் குரல் தேனாக ஒலித்தது.

“ஹாய்… நிம்மி… என்ன இந்த நேரத்தில்…” என்ன தான் அவன் உற்சாகக் குரலில் பேசினாலும், சூரியா எற்படுத்திய கடுப்பு அவன் குரலில் எதிரொலிக்கத் தான் செய்தது.

“டார்லிங்… ரொம்பக் கோபமா இருக்கிற மாதிரித் தெரியுது… கோபத்தைத் தணிக்கப் பார்ட்டிக்கு வர்றீங்களா?” அவள் கேட்டதும், அவனுக்கும் போக வேண்டும் என்று ஆசையாகத் தான் இருந்தது. ஆனால் இப்போது இருக்கும் மனநிலையில் அங்கே சென்றால் பார்ட்டியின் உற்சாகம் குறைந்து விடும் என்று அவனுக்குத் தோன்ற,

“சாரி பேபி… எனக்கு நிறைய வேலை இருக்கு… நீ போயிட்டு வா”

“ஓ… வொர்க் டென்சனா… ஓகே ஓகே நீங்க உங்க வொர்க்கைப் பாருங்க” இங்கிதமாய் அவனிடமிருந்து விடைப் பெற்றாள் நிம்மி.

நிம்மி மாதிரிப் புரிந்து கொள்ளும் பெண்கள் தான் அவனுக்குச் சரி… சூரியா மாதிரியான பெண்கள் அவனுக்கு ஒத்து வர மாட்டார்கள். முதலில் இந்தச் சூரியா இருக்கும் திசைக்கே ஒரு பெரிய கும்பிடு போட வேண்டும் என்று நினைத்தவன், ‘இனி அவளிடமிருந்து அழைப்புகள் வந்தால் கூட, எடுத்துப் பேசக் கூடாது’ என்று முடிவுக்கு வந்தான். அதன் பின்பே அவன் மனம் லேசாக… காரை வீட்டை நோக்கிச் செலுத்தினான்.

“ஹாய் அப்பச்சி… ஹாய் அப்பத்தா…” என்றபடி உற்சாகமாக உள்ளே வந்த பேரனை அதிசயமாய்ப் பார்த்தார் தையல்நாயகி.

“என்ன இது… உம்மப் பேரன் அதிசயமா நேரத்தோட வந்தது மட்டுமில்லாம… தண்ணி அடிக்காம… தள்ளாடாம வந்திருக்கான்?”

“அது தானே எனக்கும் புரிய மாட்டேங்குது தையலு” என்ற ஆதிமூலத்தை முறைத்தார் தையல்நாயகி.

“அது என்ன தையலு… தொவையலுன்னுட்டு…”

‘பின்னே… நாயகியைச் சுருக்கி நாய்ன்னா கூப்பிட முடியும். ம்… நாய் இது கூட நல்லா… உனக்குப் பொருத்தமாத் தான் இருக்கு’ மனதில் சந்தோசப்பட்டுக் கொண்டவரின் மகிழ்ச்சி அப்பட்டமாய் அவரின் முகத்தில் தெரிய, அதை அவர் மனையாள் கண்டு கொண்டார்.

“ம்… மனசுக்குள்ள என்னை டேமேசு பண்ணியது போதும். உம்மப் பேரன் கிட்டக் கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்குற வழியைப் பாருங்க. இந்தப் பொண்ணு ஜாதகம் வந்த ராசித் தான்… இன்னைக்கு இவம் குடிக்காம வீடு வந்து சேர்ந்திருக்கான்னு நினைக்கிறேன். அவளே இவம் பொண்டாட்டியா வந்தா… இவம் நிச்சயம் திருந்திடுவான்”

‘எதுக்கும் எதுக்கும் இவ முடிச்சுப் போடுறாவ...’ மனதில் நினைத்தாலும் மனைவியின் வாய்க்குப் பயந்து கிழவர் பதில் பேசவில்லை. சம்மதத்திற்கு அறிகுறியாய் தலையை மட்டும் ஆட்டினார்.

“தமிழு... இங்கே வாய்யா...” அன்பொழுகும் குரலில் அப்பத்தாக் கூப்பிடுவது கண்டு செந்தமிழ்நம்பியின் மூளையில் அபாய மணி அடித்தது. எச்சரிக்கையோடு அவர் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

“என்ன அப்பத்தா சொல்லு?” பவ்யமாகக் கேட்டப் பேரனை ஒரு மாதிரியாகப் பார்த்தவர், அவன் கையில் ஒரு கவரைத் திணித்து,

“இந்தப் பெண்ணோட போட்டோவைப் பார்த்தே... கட்டுனா இவளைத் தான் கட்டுவேன்னு ஒத்தக் கால்ல நிப்ப... அவ்வளவு அழகுத் தெரியுமா?”

“யார் அந்தப் பியூட்டி க்வீன் அப்பத்தா? கல்யாணம் பண்ணிக்கிறேனோ இல்லையோ... நீ இப்படி வித விதமாப் பொண்ணு போட்டோவா காண்பிச்சு... நான் சைட் அடிக்க ஹெல் பண்ணுற... உன்னை மாதிரி அப்பத்தா யாருக்குக் கிடைப்பாங்க” அவர் கன்னம் பற்றிக் கொஞ்சியவன், கிண்டலடித்துக் கொண்டே கவரைப் பிரித்தான். அதிலிருந்த புகைப்படத்தைப் பார்த்தவன் அதிர்ந்துப் போய்.. பார்த்த விழிப் பார்த்தபடி இருக்க அப்படியே அசையாது அமர்ந்திருந்தான். ஏனெனில் அதிலிருந்த பெண் சாட்சாத் சூரியபிரியா தான்.

“நான் சொல்லல பையன் பிளாட்டு ஆயிருவான்னு” தையல்நாயகி தன் ஆங்கிலப் புலமையைக் கணவரிடம் காட்டிக் கொண்டிருக்க... ஆதிமூலம் மானசீகமாய்க் காதைப் பொத்திக் கொண்டார்.

“ஏய்யா தமிழு... பொண்ணை உனக்குப் பிடிச்சியிருக்கா?” தையல்நாயகி கேட்கவும் சுயநினைவுக்கு வந்தவன்,

புகைப்படத்திலிருந்த சூரியாவை முறைத்துப் பார்த்தான்.

‘நான் உனக்கு அப்படி என்னடி கெடுதல் பண்ணினேன். இப்பத்தான் உன் கிட்ட இருந்து தப்பிச்சு வந்தேன்னு சந்தோசப்பட்டேன். அதுக்குள்ள அந்தச் சந்தோசத்தை இப்படிக் குழித் தோண்டிப் புதைச்சிட்டியே... கடைசியில் உனக்குப் பார்த்திருக்கும் இளிச்சவாய் மாப்பிள்ளை நான் தானா?’ புகைப்படத்தைப் பார்த்து அவன் மனதுக்குள் புலம்பிக் கொண்டிருக்க... அப்பத்தாவோ அவனின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

## உயிர் : 8

“நாளைக்குப் பொண்ணுப் பாக்க வாறோம்ன்னு... பொண்ணு வீட்டில சொல்லிறவா தமிழு?” செந்தமிழ்நம்பியிடம் எதிர்பார்ப்பு நிறைந்த குரலில் கேட்டார் தையல்நாயகி.

அவ்வளவு நேரம் சூரியபிரியாவின் புகைப்படத்தைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்த தமிழ், இப்பொழுது அப்பத்தாவை முறைக்க ஆரம்பித்தான்.

“பொண்ணு பிடிச்சியிருக்குன்னு நான் எப்போ உன் கிட்டச் சொன்னேன்?” கோபத்துடன் வெளி வந்தது அவனின் வார்த்தைகள்.

“பிடிக்காமலா தமிழு... இவ்வளவு நேரம் போட்டோவை முறைச்சு முறைச்சுப் பாத்துட்டிருந்த?”

“உண்மையிலேயே முறைச்சுத் தான் பார்த்துட்டு இருந்தேன் அப்பத்தா... அது பிடிச்சியில்ல. நான் தான் ஏற்கெனவே சொல்லிட்டேனே இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேண்டாம்ன்னு?”

“இப்போ மட்டும் தானா? இல்லை எப்பவுமே வேணாமா?” அப்பத்தாவின் குரல் ஒரு மாதிரியாக ஒலிக்க... அவன் யோசனையுடன் அவர் முகம் பார்த்தான்.

“வேண்டாம்ன்னு சொன்னாக் கேளு அப்பத்தா...” என்றவன் பேச்சு முடிந்தது என்பது போல் அங்கிருந்து எழுந்தான்.

“இது தான் உன் முடிவா தமிழு...” என்று கேட்டப் பாட்டியின் புறம் திரும்பியவன்,

“ஆமாம்...” அழுத்தம் திருத்தமாய்ப் பதில் அளித்தான்.

“அப்போ நாஞ் சொல்றதையும் கேட்டுக்கோ... இவ தாம் உம் பொண்டாட்டி... இவ தாம் இந்த வீட்டு மருமக. நீ சம்மதிக்க வரைக்கும் நான் சாப்பிடாம இருக்கப் போறேன். என் பல்லுல பச்சைத் தண்ணிப் படாது சொல்லிட்டேன்” தையல்நாயகி பேரனின் சம்மதத்திற்காக அவனிடமே சபதம் செய்தார்.

இதைக் கேட்டத் தமிழ் அவர் அருகே வந்து அவர் தோளில் கை வைத்து, “ஏய் கிழவி... உனக்குத் தான் பிரசர், சுகர்ன்னு உடம்புப் பூரா வியாதி இருக்குல்ல. இதுல பச்சைத் தண்ணிக் கூடக் குடிக்க மாட்டேன்னு எதுக்குப் பெருசா சபதம் போடுற. இந்தப் பட்டினிக் கிடக்குறது எல்லாம் உனக்கு ஒத்து வராது. வயசானக் காலத்துலப் பேசாம நல்லாச் சாப்பிட்டு நிம்மதியா இருக்கிற வழியைப் பாரு. நீ பட்டினிக் கிடந்தாலும் என் மனசு மாறாது. போய் முக்கியமான வேலை ஏதுமிருந்தா அதைப் போய்ப் பாரு” நக்கல் குரலில் அவன் கூற, அவ்வளவு தான் தையல்நாயகி கொதித்தெழுந்து விட்டார்.

“உன் கல்யாணத்தை விட எனக்கு முக்கியமான வேலை எதுவும் கிடையாதுல. நீ சம்மதிக்கிற வரை... நான் இப்படித் தான் விரதம் இருப்பேன். உனக்கு உன் அப்பத்தாளைப் பத்தி நல்லாத் தெரியும்”

“பார்ப்போம்... பார்ப்போம்... யாரு ஜெயிக்கிறான்னு... பசிச்சாத் தன்னால வந்து கொட்டிக்கப் போற... போ அப்பத்தா...”

“ஏலேய் தமிழு... என்னவே இப்படி அப்பத்தாவை எதுத்துப் பேசுற. அவ பிடிவாதம் உனக்குத் தான் தெரியுமே? பேசாம கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லுய்யா” ஆதிமூலத்திற்கு மனைவியின் பிடிவாதம் தெரிந்திருந்ததால்... பேரனிடம் கெஞ்சினார்.

“அதுக்கு அவ்வளவு பிடிவாதம் இருந்தா... அதோட பேரன் எனக்கு எவ்வளவு பிடிவாதம் இருக்கும்?” தன்னை விட்டுக்

கொடுக்காமல் பேசியவன் இருவரிடமும் முறுக்கிக் கொண்டு தன்னறைக்குச் சென்றான்.

“தையலு... அவம் தாம் சொல் பேச்சுக் கேட்க மாட்டான்னு தெரியுமே. நீ ஏன் அவனை நினைச்சு உன் உடம்பைக் கெடுத்துக்குற?” மனைவியிடம் எடுத்துச் சொன்னார் ஆதிமூலம்.

“இவனை இப்படியே விட்டாச் சரி வர மாட்டான். அவனைப் பத்தி நாஞ் சொன்னா நீரு தாங்க மாட்டீரு. அவம் போறப் போக்குச் சரியில்ல. அதான் நா இம்புட்டுப் போராடுறேன். இந்தப் போராட்டத்துல நானா? இல்லை அவனான்னு? ஒரு கைப் பார்த்துறேன். நீங்க இதுல தலையிடாம ஒதுங்கியிருங்க” தையல்நாயகி அவர் வாயை அடைத்துவிட்டார்.

மறுநாள் காலையில் அலுவலகம் கிளம்பி வந்த தமிழ் நேரே அப்பத்தாவிடம் வந்தான். வரவேற்பறையில் அமர்ந்திருந்த தையல்நாயகி அவன் வரவைக் கண்டும் கண்டு கொள்ளாதவர் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

“ஹாய் ஓல்ட் பியூட்டி... வந்து டிபன் எடுத்து வை... எனக்கு நேரமாச்சு” நேற்று இரவு ஒன்றுமே நடக்காதது போல் இயல்பாகப் பேசிக் கொண்டு அவர் கைப் பற்றி எழுப்பினான். அவரோ அவனிடம் இருந்து தன் கைகளை உருவி கொண்டு... கணவரைப் பார்த்துப் பேசினார்.

“அவனை என் கூடப் பேச வேணாம்ன்னு சொல்லுங்க. என் சொல் பேச்சுக் கேக்குறது இல்ல. அப்புறம் நான் எதுக்கு அவனுக்குச் சோத்தைப் போடணும்?”

“அப்பத்தா... அது சோறு இல்ல... டிபன்...” பேரனின் கிண்டலில் அவனைப் பார்த்து முறைத்தார்.

“இப்ப நீ டிபன் எடுத்து வைக்கிறியா? இல்ல... நான் சாப்டாம போகவா?” எங்கே உணவு உண்ணாமல் போய்

விடுவானோ என்ற அக்கறையில் அவர் ஒன்றும் பேசாமல் உணவு மேஜையை நோக்கி நடக்க... அவனோ அப்பச்சியைப் பார்த்துக் கட்டை விரலை உயர்த்தி நமட்டுச் சிரிப்புச் சிரித்தான். அவரோ மௌனமாய்த் தலையில் அடித்துக் கொண்டார்.

“அப்பத்தா... வா... நீயும் உட்காரு...” தனக்குப் பரிமாறிக் கொண்டிருந்த தையல்நாயகியைத் தன் அருகில் அமர வைத்தவன் அவருக்குத் தானே பரிமாறி... உணவை எடுத்து அவர் வாயருகில் கொண்டு போனான்.

“நாஞ் சொன்னா சொன்னது தான். நீ சம்மதிக்கிற வரைக்கும் நான் பட்டினி தான்”

“ஆமாண்டா தமிழு... நேத்து ராவுல இருந்து பச்சைத் தண்ணிக் கூடப் பல்லுலப் படாம இருக்காடா. பாவம் தமிழு... அவளுக்காகவாவது உன் முடிவை மாத்திக்கக் கூடாதாய்யா?” ஆதிமூலம் மனைவியின் நிலையை எடுத்துச் சொல்லி அவனிடம் ஏறக்குறையக் கெஞ்சினார்.

“உங்க ரெண்டுப் பேரோட ஒரே டார்ச்சரா இருக்கு. எனக்கு இஷ்டமில்லைன்னா விட வேண்டியது தானே. எனக்குக் கல்யாணம் பிடிக்கல... பிடிக்கல... பிடிக்கல. இனியும் வற்புறுத்துனீங்க நான் வீட்டுக்கே வர மாட்டேன்” கோபமாய்க் கத்தியபடித் தட்டைத் தள்ளிவிட்டு எழுந்தவன், கையைக் கழுவி கொண்டு அவர்களைத் திரும்பியும் பார்க்காமல் வாயிலை நோக்கி நடந்தான்.

பேரன் இப்படியே திருமணம் ஆகாமல் ஒற்றை ஆளாய் நின்று விடுவானோ? அவனின் வாரிசை எடுத்துக் கொஞ்சும் பாக்கியம் தங்களுக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற எண்ணமே தையல்நாயகி மனதைப் பெரிதாகத் தாக்க... அவருக்குத் திடீரென்று உடலெல்லாம் வியர்த்து விறுவிறுவித்து... படபடப்பாய் வர... அப்படியே அவர் மயங்கிக் கீழே சரிந்தார். வேகமாய் வந்து அவரைப் பிடித்த ஆதிமூலம்,

“தமிழு…” என்று கூச்சல் போட… வாயில் பக்கம் சென்றவன் காதில் அவரின் கத்தல் விழுந்தது.

“இப்ப எதுக்கு இப்படிக் கத்துற அப்பச்சி?” கடிந்தபடித் திரும்பியவன் அங்கே அவனின் அப்பத்தாக் கிடந்த கோலம் கண்டு ஓடி வந்து அவரைக் கைகளில் தாங்கிக் கொண்டான்.

“அப்பத்தா… என்னாச்சு உனக்கு?” என்று கேட்டுக் கொண்டே, “அப்பச்சி என்ன பார்த்துட்டு இருக்க… தண்ணியை எடுத்து முகத்துலத் தெளி”

“ஆங்… இதோ…” என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த ஆதிமூலம் தண்ணியை எடுத்து மனைவியின் முகத்தில் தெளிக்க… தையல்நாயகியோ பேச்சு மூச்சு இல்லாமல் அப்படியே கிடந்தார்.

“அப்பச்சி… சீக்கிரம் வா…” என்றவன் தையல்நாயகியை இருகரத்தில் தூக்கிக் கொண்டு தன் காரை நோக்கி ஓடினான். பேரனின் பின் ஓடிய ஆதிமூலம் காரின் பின் இருக்கையில் அமர்ந்து மனைவியைத் தன் மடியில் தாங்கிக் கொண்டார். தமிழ் காரை மருத்துவமனை நோக்கி விரட்டினான்.

“தையலு…” ஆதிமூலம் கண்கள் கலங்க மனைவியின் கையை ஒரு கையால் பற்றிக் கொண்டு, மறு கையால் அவரின் தலையைக் கோதிக் கொடுத்தார்.

இருவருக்கும் திருமணமாகி இத்தனை வருடங்களில் ஒருநாள் கூடத் தையல்நாயகி உடல்நலம் சரியில்லாமல் படுத்தது கிடையாது. குடும்பத்தில் ஏற்பட்ட இழப்புகளைக் கூடக் கம்பீரமாகத் தாங்கிக் கொண்டவர், தமிழின் திருமண விசயத்தில் இவ்வளவு பிடிவாதம் பிடித்துத் தன் உடலை வருத்திக் கொள்கிறார் என்றால் அந்தளவுக்குப் பேரனின் மீது அதிகம் பாசம் வைத்திருக்கிறார்.

“தமிழு... எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பொண்டாட்டிடா... வெரசா போய்யா... எனக்குப் பயமாயிருக்கு” புலம்பிய ஆதிமூலத்தைத் திரும்பிப் பார்த்து முறைத்தான் தமிழ்.

“அப்பச்சி... இப்ப உனக்குப் பத்துப் பதினைஞ்சு பொண்டாட்டி இருக்காங்கன்னு யாரவது சொன்னாங்களா? வாயை மூடிக்கிட்டுப் பேசாம வா. இருக்கிற டென்சன்ல நீ வேற” மனதில் உள்ள பதட்டத்தைத் தாத்தாவிடம் காட்டியவன் வேகமாகக் காரை ஓட்டினான்.

மருத்துமனையில் அப்பத்தாவைச் சேர்த்தப் பின் தான் அவனால் நிம்மதியாய் மூச்சு விட முடிந்தது. இருகைகளால் தலையை அழுந்த பிடித்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் அப்படியே அமர்ந்தான். எப்பொழுதும் ஏதாவது சாக்குச் சொல்லித் திருமணத்தில் இருந்து தப்பித்துக் கொண்டிருந்தான். ஆனால் இந்த முறை அப்பத்தாவை ஏமாற்றுவது அவ்வளவு எளிதானக் காரியம் இல்லை என்று அவனுக்குப் புரிந்தது. அதற்காகத் திருமணத்திற்குச் சம்மதம் சொல்லவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடையை வாழ்க்கையை ஒரு பெண்ணின் கையில் பணயம் வைக்க அவன் விரும்பவில்லை. என்ன தான் செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை?

யோசித்துக் கொண்டிருக்கும் போது தான் அப்பச்சி நியாபகம் வர... அவர் எங்கே என்று விழியுயர்த்திப் பார்த்தான். தையல்நாயகியை அனுமதித்து இருந்த அறையின் வாயிலின் முன் படபடப்பாய் கைகளைப் பிசைந்தப்படி அவர் நின்றுக் கொண்டிருப்பதைக் கண்டு அவர் அருகில் சென்றான்.

“அப்பச்சி... அப்பத்தாவுக்கு ஒண்ணும் இருக்காது... நீ இங்கே வந்து உட்காரு” அவர் தோள் பற்றி அங்கே இருந்த நாற்காலியில் அமர வைத்தான்.

“தமிழு… அவளுக்கு ஒண்ணுன்னா நா உசுரோட இருக்க மாட்டேன்டா” சொல்லியவாறே கண்ணீர் விட்டத் தாத்தாவை அதிசயமாகப் பார்த்தான்.

அவர் அவனுடன் சேர்ந்து மது அருந்தும் போதெல்லாம், “அந்தக் கிழவி கெடக்கா விடுல. எப்பப் பாரு தார் குச்சிப் போட்டுத் துரத்தாத குறையா துரத்திட்டு இருப்பா. எல்லாம் என் அய்யா… அந்தக் கிழவனைச் சொல்லணும்… இந்த ராட்சசியைக் கல்யாணம்ங்கிற பேரில் என் தலையில் கட்டிட்டு அவன் போய் நிம்மதியா சேர்ந்துட்டான். ஆனா இப்ப அவஸ்தைப்படுறது யாரு…? நாந்தான்…” என்று புலம்பும் ஆதிமூலமா இது? என்று அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்தது.

“அப்பச்சி… நீயா இப்படிப் பேசுற? நீ எப்பவும் அப்பத்தாவைப் போட்டுத் தாக்கத்தானச் செய்வ… இன்னைக்கு என்ன இந்த உருகு உருகுற?” தாத்தாவை சந்தேகமாய்ப் பார்த்தான் பேரன்.

“சும்மா ஜாலிக்குப் பேசியதை எல்லாம் நிஜம்ன்னு நம்பிட்டியாக்கும். அவ என் தேவதைடா. அந்தக் காலத்துலேயே அவளைக் காதலிச்சு… வீட்டுல எல்லார் எதிர்ப்பையும் மீறி நா அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவனாக்கும். என்னைப் போய் என்ன பேச்சு பேசுற நீ?” அவனை முறைத்தார் ஆதிமூலம்.

முதன் முறையாகத் தாத்தாவின் காதல் சரித்திரத்தைக் கேட்டவன் அவரை ஆச்சிரியமாகப் பார்த்தவன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை அமைதியாய் அமர்ந்திருந்தான். இந்த வயதிலும் தன் மனைவி மேல் அன்பைப் பொழியும் தாத்தாவின் நேசம் அவனுக்குப் புதிதாய் இருந்தது.

“சார்… தையல்நாயகி பேஷண்ட் கூட வந்தவங்க நீங்க தானே…?” தாதிப்பெண் ஒருத்தி அவன் அருகில் வந்து கேட்க,

“ஆமாம் சிஸ்டர்...” என்றபடி எழுந்தான் செந்தமிழ்நம்பி.

“அவங்க ட்ரீட்மென்ட்க்கு ஒத்துழைக்க மாட்டேங்குறாங்க... உங்களைப் பார்க்கணும்ன்னு சொல்றாங்க... சீக்கிரம் வாங்க” அவர் சொன்னவுடன்... தாத்தாவுடன் அங்கே விரைந்தான் அவன்.

“தையலு...” ஆதிமூலம் மனைவியின் கைப்பிடித்துக் கண் கலங்க... அவரையே கண் இமைக்காமல் பார்த்தார் தையல்நாயகி.

ஊர் மெச்சும் ஜமீன் குடும்ப வாரிசு... சாதாரண அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர் மகளான தன்னைக் கண்டு கண் கலங்குகிறார் என்றால் அது காதலில் மட்டுமே சாத்தியமாகும். அந்தக் காதலை... கல்யாணத்தைத் தன் பேரன் வெறுக்கிறானே என்று அவருக்கு வருத்தமாக இருந்தது.

“எனக்கு ஒண்ணுமில்லை...” கணவரிடம் ஆறுதலாகக் கூறிப் புன்னகைத்தார் அவர்.

“ஒண்ணுமில்லைன்னா... எதுக்கு ட்ரீட்மென்ட்க்கு ஒத்துழைக்கக் மாட்டேங்கிற அப்பத்தா?” கனிவாய் ஒலித்த பேரனின் குரலில் அவன் புறம் திரும்பியவர்,

“நீ ஒண்ணும் பேச வேணாம். இப்ப இங்கே எதுக்கு நீ வந்த? நா உயிரோட இருக்கேனா இல்லச் செத்துட்டேனான்னுப் பாக்க வந்தியா? நீ பண்ணுற அலும்பு எல்லாம் பாக்க முடியாம நா சீக்கிரம் கண்ணை மூடிடுறேன். அதுக்கு அப்புறம் உன் அப்பச்சியும் எங் கூட வந்து சேரட்டும். ஆனா நீ மட்டும் உம் இஷ்டத்துக்கு இரு. உன்னக் கேள்விக் கேக்க நாங்க யாரு ராசா?” சொல்லும் போதே அவருக்குக் கண்கள் கலங்கியது.

“அப்பத்தா... ப்ளீஸ் சொன்னாக் கேளு” அப்பத்தா பேசியது கேட்டு அவனுக்கும் கண்ணோரம் கரித்தது.

“நீ சொல்றதை நான் கேக்கணும்ன்னா... நாஞ்சொல்றதை நீ கேக்கணும்” பாட்டியின் கிடுக்குப் பிடியில் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் முழித்தான் அவன்.

‘சபாஷ் தையலு...’ மனதுக்குள் மனைவியை மெச்சி கொண்டார் ஆதிமூலம்.

“அப்பத்தா...”

“உன் அப்பத்தாத் தான். முதல்ல நீ கல்யாணத்துக்குச் சத்தியம் பண்ணிக் கொடு. அப்புறமா நான் ட்ரீட்மென்ட்டு எடுக்கறேன்” அப்பொழுதும் யோசித்த பேரனைக் கண்டு அவருக்குக் கோபம் வந்தது.

“என் உசிரை விட... உனக்கு உம் கொள்கைத் தான் முக்கியமாப் போச்சில்ல. எலேய் டாக்டரு எனக்கு விசத்தைக் கொடுத்துக் கொன்னுடுவே” எங்கோ இருந்த மருத்துவரை கூச்சல் போட்டுக் கூப்பிட்டார். சத்தம் போட்டுக் கத்தியதில் மூச்சு விடச் சிரமப்பட்ட அவரைக் கண்டு அவன் பதறித் தான் போனான்.

“அய்யோ அப்பத்தா... ப்ளீஸ் கத்தாதே... இப்ப உனக்கு என்ன வேணும்... நான் கல்யாணம் பண்ணிக்கணும் அவ்வளவு தானே... சரி அப்பத்தா... உன் இஷ்டம் போல் நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன். முதல்ல ட்ரீட்மென்ட் எடுத்துக்கோ”

“பொறவு பேச்சு மாற மாட்டியே...” அந்த நிலையிலும் பேரன் குணம் அறிந்து அவர் கேட்க, அவர் வலதுக் கையின் மீது தன் கையை வைத்தவன்,

“சத்தியமா அப்பத்தா... நான் பேச்சு மாற மாட்டேன்” அவன் சத்தியம் பண்ணிய பிறகே சிகிச்சைக்கு ஒத்துழைத்தார் அந்த மூதாட்டி.

பாட்டிக்குச் சத்தியம் செய்து கொடுத்த தமிழோ மனம் முழுவதும் குழப்பமாய் நின்றிருந்தான். இந்தத் திருமணம் தன் வாழ்க்கையில் என்ன என்ன திருப்பத்தைக் கொண்டு வரப் போகிறதோ? இது நல்லதுக்கா? இல்லை கெட்டதுக்கா? என்று தான் அவனுக்குத் தெரியவில்லை.

‘ம்ஹூம்... வாழ்நாள் முழுவதும் அந்தச் சீரியல் ஹீரோயின் அழுமூஞ்சியைத் தான் இனி நான் பார்க்கணுமா? சென்டிமென்ட் டயலாக் பேசிப் பேசியே என்னை லாக் பண்ணி ஒரு வழிப் பண்ணப் போறா... கடவுளே உனக்கு இரக்கமே இல்லையா? செட் செஞ்சதுத் தான் செஞ்ச... ஒரு நல்ல பெண்ணா... அந்த நிம்மியை மாதிரி செட் பண்ணித் தொலைச்சிருக்கக் கூடாதா?’ மனதுக்குள் புலம்பியவனுக்கு ஆயாசமாக வந்தது.

உடல்நலம் சரியாகி வந்த அப்பத்தா மறுநாளே பெண் பார்க்கும் வைபவத்தை வைக்க வேண்டும் என்று சொல்லிவிட, செந்தமிழ்நம்பி நன்றாக அகப்பட்டுக் கொண்டான். அவனால் மறுத்துப் பேச முடியவில்லை. ஒரு பார்வையாளனாய் எல்லாவற்றையும் வேடிக்கைத் தான் பார்க்க முடிந்தது.

**************************************

“சூர்யா... மாப்பிள்ளைப் போட்டோ பார்த்தியா... சும்மா ஹீரோ கணக்கா அழகா இருக்கார். அவர் கார் சேல்ஸ் பண்ணுறாராம். அப்போ உன் பேரைச் சொல்லித் தினமும் ஒரு காரை ஓட்டிப் பார்க்கலாம். என்ன சூர்யா நான் சொல்றது சரி தானே?” தமிழின் போட்டோவைப் பார்த்தபடி பரணி கூற, அவன் சொன்னதைக் காதில் வாங்கியும் வாங்காமலும் அமர்ந்திருந்தாள் சூரியபிரியா.

‘நம்பி... என்ன வேலைப் பார்க்கிறான்னு கேட்கவே இல்லையே? வேலைப் பார்க்கிறானா? இல்லை பிசினசா? என்ன செய்கிறான்னுக் கூடத் தெரியாமல் லவ் பண்ணி இருக்கேனே. ஆமாம்... அவன் வேலையையா நான்

காதலிக்கிறேன்... அவனைத் தானே காதலிக்கிறேன்' என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டாள்.

"சிவா... சிவா..." என்று அழைத்தபடி அங்கே வந்தார் மேகநாதன்.

"எதுக்கு என்னை ஏலம் போடுறீங்க?" என்றபடி சிவகாமி அங்கே வர,

"நாளைக்கு மாப்பிள்ளை வீட்டில் இருந்து பெண் பார்க்க வர்றாங்க" என்றார் சந்தோசமாக. அவர் தமிழைப் பத்தி வெளியில் விசாரித்ததில் எல்லோரும் அவனைப் பத்தி நல்லவிதமாகச் சொல்ல அவன் தான் தன் மருமகன் என்று அவர் தீர்மானித்து விட்டார். பாவம் அவர்... தமிழ் செல்லும் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் விசாரித்து இருந்தால் அவனின் மறுபக்கம் அவருக்குத் தெரிந்திருக்கும்.

"நாளைக்கேவா...?" சிவகாமிக்கு மலைப்பாய் இருந்தது.

"இதுக்கு ஏன் மலைச்சுப் போற? வீட்டில் ஒண்ணும் செய்ய வேணாம். நான் எல்லாத்தையும் கடையில் இருந்து வாங்கிட்டு வந்திர்றேன்" மேகநாதன் ஆறுதல் சொல்ல...

"அதெல்லாம் வேணாம்... நானே செஞ்சுருவேன்" என்று மறுத்துச் சொன்னவர், "சூர்யா... நாளைக்கு உனக்கு என்ன என்ன தேவைன்னு ஒரு லிஸ்ட் போடு. பரணி சூர்யா கேட்கிறதை வாங்கிக் கொடு. என்னங்க... நீங்க உள்ளே வாங்க..." எல்லோருக்கும் ஒவ்வொரு வேலைக் கொடுத்தபடி அவர் உள்ளே செல்ல... சூரியா திக்பிரமைப் பிடித்து அமர்ந்திருந்தாள்.

"சூர்யா... சீக்கிரம் சொல்லு... உனக்கு வாங்கிக் கொடுத்துட்டு நான் வேற வேலைப் பார்க்கணும்" பரணி அவசரப்படுத்த...

“எல்லாம் இருக்கு... நீ போடா” அவனிடம் எரிந்து விழுந்தவள் தன் அறைக்குச் சென்றாள்.

அறையினுள் நுழைந்தவள் வேகமாய்க் கதவைச் சாத்திக் கொண்டு தன் அலைப்பேசியை எடுத்து தமிழுக்கு அழைத்தாள். மறுபுறம் அழைப்புப் போனாலும் யாரும் அதை எடுக்கவில்லை. மறுபடியும் மறுபடியும் அழைத்துப் பார்த்தாள். ம்ஹும்... பலன் என்னமோ பூஜ்யம் தான். முதல் முறையாகப் பயப்பந்து மனதில் உருள அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் அப்படியே அமர்ந்திருந்தாள்.

## உயிர் : 9

செந்தமிழ்நம்பியின் அலைப்பேசி விடாமல் அலறிக் கொண்டிருக்க… அவனோ அதைக் கண்டு கொள்ளாமல் தன் வேலையைத் தொடர்ந்தான். மீண்டும் மீண்டும் அது அழைத்ததைக் கண்டு சட்டென்று அவனுக்குள் எரிச்சல் மண்டியது. சூரியபிரியா தான் அழைக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியும். அதனாலேயே வேண்டுமென்றே அழைப்பை எடுக்காமல் இருந்தான்.

'எடுத்தால் மட்டும் என்ன சொல்லப் போகிறாள்… எனக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை நீங்க தான் நம்பி… அது தெரியுமா உங்களுக்கு? நான் ரொம்பச் சந்தோசமா இருக்கேன்… இப்படி லூசுத்தனமா ஏதாவது பேசுவா. அதைக் கேக்கிறதுக்கு எனக்கு டைம் இல்லை. அதுக்கு எடுக்காமலே இருக்கலாம்' என்று முடிவுக்கு வந்தவன் அலைபேசியைச் சைலண்ட் மோடில் போட்டு விட்டுத் தன் வேலையைப் பார்க்கத் தொடங்கினான்.

'நம்பி… ஃபோனை எடு நம்பி ப்ளீஸ்…' உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு விடாமல் அவனுக்கு அழைத்துக் கொண்டிருந்தாள் சூரியா. அவன் அவள் அழைப்பை எடுக்காதது அவளுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏன் நம்பி இப்படிச் செய்கிறான்? என்று அவளுக்குத் தெரியவில்லை. ஒருவேளை அவன் வீட்டில் அவளை ஏற்றுக் கொள்ளவில்லையோ? அதை நினைக்கும் போதே அவள் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

அவனை நேரில் பார்க்கலாமா என்று அவள் யோசிக்கும் போதே… அவனை நேரில் பார்த்துப் பேசுவதற்கும் அவன் அழைப்பை எடுத்தால் தானே சொல்ல முடியும்? என்ற எண்ணம் தோன்ற அப்படியே சோர்ந்தாள். மனதில் உள்ள பாரத்தை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றக் குறிஞ்சிக்கு அழைத்தாள். ம்ஹூம்… அவளின்

அலைப்பேசியும் அணைக்கப்பட்டு இருந்தது. அதன் பின்னரே தோழியின் நிலை அவளுக்கு உறைத்தது.

‘சூர்யா… வர வர உனக்கு விவஸ்தையே கிடையாது. குறிஞ்சி புதிதாய் திருமணமானவள். அவளைப் போய்த் தொந்திரவுப் பண்றியே?’ தனக்குத் தானே கடிந்துக் கொண்டாள்.

இப்பொழுது என்ன தான் செய்வது? என்று யோசித்தவளுக்கு… நாளை காலை வரை நேரம் இருப்பதால் கொஞ்சம் தெம்பாய் இருந்தாள். எப்படியும் காலைக்குள் நம்பியைத் தொடர்பு கொண்டு விடலாம். நிச்சயம் நம்பி தன்னைக் கைவிட்டு விட மாட்டான் என்று அவன் மேல் நம்பிக்கைக் கொண்டவள் கொஞ்சம் நிம்மதியடைந்தாள்.

தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்த அலைப்பேசி பத்து நிமிடங்களாக அமைதியாய் இருப்பதைக் கண்டு யோசனையுடன் அதைக் கையில் எடுத்தான். இருக்கையில் சாய்ந்து அமர்ந்தவன், கையில் இருந்த அலைப்பேசியையே பார்த்துக் கொண்டிருந்தான். ஏன் என்னவானது? என்று தனக்குள் குழம்பியவனை அலைப்பேசி மீண்டும் அதிர்ந்து, ‘நான் இருக்கிறேன்’ என்று உணர்த்தியது. தன் கவனம் கலைந்து அதைப் பார்த்தவன் மீண்டும் சூரியா அழைப்பது தெரிந்ததும் எரிச்சலுடன் அதைத் தூக்கி மேஜையில் எறிந்தான்.

அவள் அழைக்காமல் இருந்த போது அவளைப் பற்றி யோசித்தவன், அவள் அழைத்ததும் எரிச்சல் கொண்டான். அவன் மனம் என்ன தான் நினைக்கிறது என்று அவனுக்கே தெரியவில்லை. தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டான். ஏனோ ஆதவனிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று தோன்றியது. ஆனால் புதிதாய் திருமணமான அவனைத் தொந்திரவு செய்ய இவனுக்கு மனம் வரவில்லை. அதிலும் அவன் தேனிலவுக்குச் சென்றிருக்கும் வேளையில் தொந்திரவு செய்வது என்பது

அவனுக்கே அபத்தமாகப் பட, அந்த எண்ணத்தைக் கைவிட்டவன் தன் கவனத்தை வேலையில் செலுத்த முயன்று அதில் வெற்றிப் பெற்றான்.

“தமிழு… இங்கே வாய்யா…” இரவு வீட்டிற்குள் நுழைந்தவனைத் தையல்நாயகி கனிவுடன் கூப்பிட்டார்.

“என்ன அப்பத்தா…” அவர் அருகில் அமர்ந்து அவரது மடியில் தலை சாய்த்துக் கண்களை மூடினான்.

“வேலை அதிகமோ தமிழு?” ஆதரவாய் அவன் தலையை வருடிய அப்பத்தாவின் கையைப் பிடித்துத் தன் கன்னத்தோடு வைத்துக் கொண்டவன்,

“அதிகம் எல்லாம் இல்ல… எப்போதும் இருக்கும் வேலைத் தான்” என்றவன் அவரின் கண்ணைப் பார்க்கத் தயங்கியவனாய், “அப்பத்தா… நாளைக்கே பொண்ணுப் பார்க்கப் போகணுமா? அதைக் கொஞ்சம் தள்ளிப் போட கூடாதா?”

“தமிழு… நான் அவ்வளவு சொல்லியும் நீ இப்படிப் பேசறது… வேதாளம் திரும்ப முருங்க மரம் ஏறியக் கதையா இருக்கு” சலித்த குரலில் கூறினார் தையல்நாயகி.

“அப்படியில்ல அப்பத்தா… எனக்கு ஏனோ கல்யாணத்து மேல நம்பிக்கையும் இல்ல… பிடிப்பும் இல்ல…”, ‘என்னைப் புரிந்துக் கொள்ளேன் அப்பத்தா…’ என்ற பாவனையில் அவன் குரல் கெஞ்சியது.

“ஏன்ய்யா…?” அவரின் குரலில் கவலை அடங்கியிருந்தது.

“கதிர்…” ஒற்றை வார்த்தையில் பெரியவர்கள் இருவரின் மனதிலும் சத்தமில்லாமல் மிகப் பெரிய பிரளயத்தை உண்டாக்கினான் தமிழ்.

“தமிழு... நீ... நீ... கதிரு வாழ்க்கையில் நடந்ததை மறக்கலையாப்பா...” அப்பத்தாவின் குரல் தழுதழுத்தது.

“எப்படி மறக்க முடியும் அப்பத்தா? மறக்கிற மாதிரியா அந்த ராட்சசி நடந்துக்கிட்டா...? அவன் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என்ன சுகத்தைக் கண்டான்? இந்தப் பெண்கள் எல்லாம் பேய்கள்... சுயநலம் பிடிச்சப் பிசாசுகள்...” ஆத்திரத்தில் சூடாய் வெளிவந்தது அவனின் வார்த்தைகள்.

“தமிழு... அப்படி எல்லாம் சொல்லாதய்யா... பொம்பளைங்கள்ல நல்லவங்களும் இருக்காங்க. ஏன் உன் அம்மா, அப்பத்தா இல்லையா?” ஆதிமூலம் பேரனுக்குப் புரிய வைக்கும் நோக்கத்துடன் பேச,

“அவங்க இருக்கலாம்... ஆனால் இந்தக் காலத்தில் சுயநலம் இல்லாத பெண்களைத் தேடுவது கஷ்டம் அப்பச்சி” அவரின் கூற்றை அவன் ஏற்க மறுத்தான்.

“கதிர் வாழ்க்கைக் கோணலானா... அதே மாதிரி உம் வாழ்க்கையும் ஆகும்ன்னு நீ ஏன் தப்பா நினைக்க? இந்த அப்பத்தா மேல் பாரத்தைப் போடு... நான் பாத்துக்கிறேன் தமிழு” தையல்நாயகி பேரனைச் சமாதானப்படுத்தினார்.

“ம்... என்னவோ செய்ங்க... இந்தக் கல்யாண ஏற்பாடே உங்களுக்காகத் தான். இதுல எந்தப் பிரச்சினை வந்தாலும் வர்றவளைத் தூக்கித் தூரப் போட்டுட்டுப் போயிட்டே இருப்பேன். அதுக்கப்புறம் நீங்க ரெண்டுப் பேரும் என் கிட்ட வந்து ஒப்பாரி வைக்கக் கூடாது... சொல்லிட்டேன்” முடிவாய் சொன்னவனைப் பார்த்து,

“நீ கவலைப்படாதே... நாங்க எதுக்கு இருக்குறோம்? அப்புறம் தமிழு... நாளைக்குக் காலையிலப் பொண்ணுப் பார்க்கப் போணும். வேற வேலை எதுவும் வச்சுக்காதே” என்ற அப்பத்தாவிடம் தலையசைத்துச் சரியென்றவன் மேற்கொண்டு பேசாமல் எழுந்து சென்றான்.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த தையல்நாயகியின் கண்கள் கலங்கியது. அவரின் கண்கள் கலங்குவதைக் கண்ட ஆதிமூலம்... தன் கைகளை ஆதரவாய் அவர் மேல் போட்டு, மனைவியைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டார்.

“கதிரு வாழ்க்கையில நடந்தத இவம் மறக்கவே இல்ல போல. அந்தக் கேடுகெட்டச் சிறுக்கி மவ ஆடிய ஆட்டதுக்கு அவம் தான் பலியானான்னா... இவம் மனசும் இம்புட்டுத் தூரம் பாதிச்சிருக்கே. இந்த வயசானக் காலத்துல அந்தக் கடவுள் இன்னும் எம்புட்டுத் துன்பத்தைத் தான் கொடுக்கப் போறாரோ? என்னால தாங்க முடியலியே” என்று அரட்டியவரை என்ன சொல்லிச் சமாதானம் செய்வது என்று தெரியவில்லை ஆதிமூலத்திற்கு.

பெரியவர்களுக்குத் தெரியாத... செந்தமிழ்நம்பிக்கு மட்டுமே தெரிந்த... அறிந்த... ஒரு ரகசியம் இருக்கிறது. அது தான் அவன் மனதைப் போட்டு இந்தப் பாடுப்படுத்துகிறது என்று பெரியவர்கள் இருவருக்கும் தெரியவில்லை. அதை அவன் இவ்வளவு வருடங்கள் தன் மனதுக்குள் போட்டுப் புழுங்கிக் கொண்டிருப்பது யாருக்கும் தெரியாது. அதன் விளைவுத் தான் பெண்களிடத்தில் அவனுக்கு ஏற்பட்ட அவநம்பிக்கை. அவனின் அடி ஆழ்மனதில் உறங்கும் நல்லவனை இந்த அவநம்பிக்கை மேகம் போல் மூடி மறைத்திருக்கிறது. சூரியாவின் அன்பு அவனின் அவநம்பிக்கை என்ற மேகத்தை விலகச் செய்து அவனின் உண்மையான நல்ல மனதைத் தட்டி எழுப்புமா?

********************************************

“சூர்யா... மாப்பிள்ளை வீட்டில் வரும் நேரமாச்சு... இன்னுமா கிளம்பாம இருக்க?” சிவகாமி மகளைக் கடிந்து கொள்ள...

“இதோ ஐஞ்சு நிமிசத்துல ரெடியாகிடுறேன்ம்மா” என்றவள் தன்னறைக்குச் சென்று யாருக்கும் தெரியாமல் தமிழுக்கு அழைத்தாள்.

‘நம்பி… கடைசி வாய்ப்பாய் உனக்குப் ஃபோன் பண்ணுறேன். ப்ளீஸ் நம்பி ஃபோனை எடு…’ மனதுக்குள் எதிர்பார்ப்புடன் காத்திருக்க… அங்கே அவனோ மனதில் மூண்ட எரிச்சலுடன் அதைத் துண்டித்தான்.

‘நம்பி… ஏன் நம்பி எடுக்கல… அப்போ உனக்கு என் மேல் காதலே இல்லையா? நான் தான் வலிய வந்து உன்னைக் காதலித்தேனா? இப்போ நான் என்ன செய்றது நம்பி? உன்னை மனசில் நினைச்சிட்டு வேற ஒருத்தன் முன்னாடி அலங்காரம் பண்ணிக்கிட்டு நான் போய் நிக்க முடியுமா? என்னால அது மட்டும் முடியாது?’ மனதுக்குள் அழுதவளால் வாய்விட்டு அழ முடியவில்லை.

“ஏய் சூர்யா… உள்ளே போய் எவ்வளவு நேரமாச்சு… இன்னுமா ரெடியாகல?” பூட்டியிருந்த கதவை உடைத்து விடுவது போல் ஓங்கித் தட்டினார் சிவகாமி. வேறுவழியின்றிச் சூரியா அழுதக் கண்களை அழுந்த துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள்.

“இன்னுமாடி நீ தயாராகல? சரி வா… நானே உனக்கு அலங்காரம் பண்ணி விடறேன்” அன்னையின் வார்த்தை மீற முடியாமல் அவர் சொல்வதற்குக் கட்டுப்பட்டாள்.

மெல்லிய சரிகைக் கரையிட்ட பட்டில், மிதமான அலங்காரத்தில் தேவதைப் போல் ஜொலித்த மகளை ரசித்தவர், “இப்போ தான் பொண்ணு மாதிரி அழகாயிருக்கே. என் கண்ணே பட்டுடும் போலிருக்கு சூர்யா” மகளின் கன்னம் வழித்துத் திருஷ்டிக் கழித்தார் சிவகாமி.

அந்தப் பக்கமாய் வந்த பரணி, “அம்மா… இங்கே சூர்யா… சூர்யான்னு ஒரு அருந்தவால் பொண்ணு இருந்துச்சே… அவ எங்கேம்மா?” சூரியாவைத் தேடுவது போல் பாவனைச் செய்தான்.

“அம்மா பாருங்கம்மா இவனை...” மகள் சிணுங்கியது பொறுக்காமல், மகனின் தலையில் தட்டிய சிவகாமி,

“எப்பப் பாரு அவக் கிட்ட வம்பிழுத்துக்கிட்டு... ஹாலில் சேர் எல்லாம் ஒழுங்காப் போட சொன்னேனே அதைச் செஞ்சியா?”

“மறந்துட்டேன்ம்மா...” தலையைச் சொரிந்தப் பரணியை மேலும் கடிந்தவர் அவனை அனுப்பிவிட்டு தானும் தயாராகத் தொடங்கினார். அதன் பின் தனிமை என்பது சூரியாவிற்குக் கிடைக்கவே இல்லை.

“அம்மா... மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்துட்டாங்க...” பரணி குரல் கொடுக்க... அவர்களை வரவேற்க சிவகாமி செல்ல... சூரியாவுக்குத் தேவையான தனிமை அப்பொழுது தான் அவளுக்குக் கிட்டியது.

மெல்ல எழுந்துக் குளியலறைக்குள் நுழைந்துக் கதவைச் சாத்தியவள்... இறுதியாகத் தமிழுக்கு அழைத்தாள். அவள் வீட்டின் வாயில் முன் காரை நிறுத்திய அவனோ, ‘அதான் உன் வீட்டு முன்புத் தானே இருக்கேன்... அதுக்குள்ள என்ன ஃபோன் வேண்டிக் கிடக்கு. நேரில் பார்த்துப் பேசிக்கலாம்’ என்று நினைத்தவன் அதை அணைத்துப் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு காரை விட்டு இறங்கினான்.

அங்குச் சூரியாவோ தன் இறுதி முயற்சியும் தோல்வி அடைந்ததை நினைத்துக் கண்ணீர் விட்டாள். பின் மனதில் எழுந்த உறுதியுடன் கண்களைத் துடைத்துக் கொண்டவள், புடவைக்குள் மறைத்து வைத்திருந்த பேனாக் கத்தியை எடுத்துத் தன் மணிக்கட்டில் வைத்து அழுத்தினாள். பூப் போன்ற மெல்லிய மேனியில் கத்தி வெண்ணையில் இறங்குவது போல் வழுக்கிக் கொண்டு சுலபமாக இறங்க... ரத்தம் சொட்டுச் சொட்டாய் கீழே விழுந்து அவள் புடவையை நனைத்தது.

தமிழைப் பற்றி முழுவதும் அறியாமல் கண்டதும் காதலில் விழுந்து... அவன் தன்னைத் திருமணம் செய்து கொள்வான் என்று நம்பிய அந்த அறியாப் பெண்... அந்தச் சிறு ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தன் உயிரைத் துறக்க முடிவுச் செய்தாள்.

“அதுக்குள்ள இந்தச் சூர்யா எங்கே போய்த் தொலைஞ்சா...?” மகளின் அறைக்குள் நுழைந்த சிவகாமி... அங்கு மகளைக் காணாமல் சுற்றும் முற்றும் தேட... அவர் விழிகளில் பூட்டியிருந்த குளியலறைக் கதவுப் பட, “சூர்யா... மாப்பிள்ளை வீட்டில் வந்துட்டாங்க... இன்னும் பாத்ரூமில என்ன பண்ணிக்கிட்டு இருக்க?” கதவைத் தட்டினார்.

அன்னை கதவைத் தட்டுவது தெரிந்தும் திறக்காமல்... கையிலிருந்து ஒழுகும் ரத்தத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் சூரியா. மகளிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்றதும், சிவகாமிக்கு மனதில் கலவர மேகம் வந்து சூழ்ந்து கொண்டது.

“சூர்யா... சூர்யா...” கொஞ்சம் பலம் கொண்ட மட்டும் தட்டினார். வரவேற்பறையில் அமர்ந்திருக்கும் மாப்பிள்ளை வீட்டு ஆட்களுக்குக் கேட்டு விடுமோ என்ற பயம் வேறு அவர் மனதை அழுத்தியது.

சூரியாவின் வீட்டினுள் வந்து அமர்ந்திருந்த தமிழுக்கோ கொஞ்சமும் பொறுமை இல்லை. ஏதோ முள் மேல் அமர்ந்திருப்பது போன்ற அவஸ்தையுடன் அவன் அமர்ந்திருக்க... ஆதிமூலமும், தையல்நாயகியும் மேகநாதனிடம் பேசிக் கொண்டிருந்தனர். பரணியோ... தமிழைப் பார்த்துச் சிரிப்பதும் பின் தலைக் கவிழ்வதுமாய் என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்திருந்தான்.

“என்னங்க... இங்கே கொஞ்சம் வாங்களேன்...” சிவகாமி... மேகநாதனைக் கண் ஜாடைக் காட்டி அழைக்க,

“நீங்க கொஞ்சம் இருங்க...” பொதுப்படையாய் சொன்னவர் யோசனையுடன் உள்ளே சென்றார்.

“என்ன சிவா?”

“சூர்யா... பாத்ரூம் உள்ளே இருந்துட்டுக் கதவைத் திறக்க மாட்டேங்கிறாங்க... எனக்கு என்னமோ பயமாயிருக்கு”

“நீ தேவையில்லாம பயப்படற... தாழ்ப்பா திறக்க முடியாம இருந்திருக்கும்” என்றவர் நேரே மகளின் குளியலறை முன் நின்றுக் கதவைத் தட்டினார். ம்ஹூம்... உள்ளே இருந்து அவளிடம் இருந்து பேச்சு மூச்சு இல்லை.

இப்பொழுது இருவருக்குமே பதட்டம் தொற்றிக் கொண்டது. வேறுவழியே இல்லை கதவை உடைத்துத் தான் திறக்க வேண்டும். மகளுக்கு என்னவானதோ என்ற பதற்றத்தில்... வந்திருந்தவர்களைப் பற்றிய எண்ணம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. குடும்பக் கௌரவத்தைப் பாசம் வென்றது.

மேகநாதன் கதவை ஓங்கித் தள்ள... அது மூன்றாவது முயற்சியில் திறந்து கொண்டது. உள்ளே ரத்த வெள்ளத்தில் கிடந்த மகளைக் கண்டதும் இருவருக்கும் உயிர் ஒரு நொடிக் கையிலில்லை.

“சூர்யா... என்னடி இது இப்படிப் பண்ணிட்ட...?” கத்திக் கொண்டே மகளை நோக்கி கீழே குனிந்தார் சிவகாமி. மேகநாதனோ எதுவும் செய்யத் தோன்றாதவராய் திக்பிரம்மைப் பிடித்து அப்படியே நின்றிருந்தார்.

சிவகாமியின் அலறல் சத்தம் கேட்டுப் பரணி உள்ளே ஓட... அவனைத் தொடர்ந்து தையல்நாயகியும், ஆதிமூலமும் உள்ளே விரைந்தனர். வேறுவழியின்றி வேண்டா வெறுப்பாய் தமிழும் உள்ளே சென்றான். அங்கே அவன் கண்டக் காட்சி அவனின் இரும்பு மனதையும் அதிரச் செய்தது. அப்படியே அதிர்ந்துப் போய் நின்றுவிட்டான்.

‘இதற்குத் தானா அத்தனை தடவை என்னை அழைத்தாய்? கடவுளே இது எனக்குத் தெரியாமல் போச்சே? காதலுக்காக ஒரு பெண் தன் உயிரையும் விடத் துணிவாளா?’ அவனால் அதுக்கு மேல் யோசிக்க முடியவில்லை.

“பொண்ணுக்குக் கல்யாணத்துல இஷ்டமில்லையா? ஏதாச்சும் லவ்வு கிவ்வு இருக்குமோ?” தையல்நாயகியின் வார்த்தையில் தமிழ் சட்டென்று சுதாரித்தான்.

“அப்பத்தா… அந்தப் பொண்ணு இப்படி இருக்கும் போது… என்ன பேச்சுப் பேசற?” அவரைக் கடிந்தவன், குளியலறையின் வாயில் நின்று கொண்டிருந்த மேகநாதனை விலக்கி விட்டு உள்ளே சென்று சூரியாவின் அருகில் சென்று குனிந்தான். மகளின் அருகில் முந்தானையை வாயில் வைத்து அழுது கொண்டிருந்த சிவகாமியைச் தயக்கத்துடன் ஒரு நொடிப் பார்த்தவன், மறுநொடி தன் சட்டையைக் கழட்டி வெட்டுப் பட்ட இடத்தில் இறுக்கிக் கட்டிவிட்டு மெல்ல அவள் கன்னம் தட்டினான்.

“சூர்யா… சூர்யா…” என்று குரல் கொடுக்க… அவளிடம் இருந்து எந்த அசைவும் இல்லை. பேரனின் செயலை முதியவர்கள் இருவரும் ஆச்சிரியமாய் வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தனர்.

“சூர்யா… நா… நான் நம்பி வந்திருக்கேன்” ‘நம்பி’ என்ற வார்த்தைக் கேட்டதும் அவளிடம் மெல்லிய அசைவு தெரிந்தது.

“ம்… நம்பி தான் வந்திருக்கேன்” மீண்டும் அவன் சொல்லவும் அதற்குப் பலன் இருந்தது. கண்களை மெல்லத் திறந்தவள் தன் முன் இருந்த அவனை நம்ப முடியாமல் பார்த்தாள்.

“நம்பி…” மெலிதாய் முனங்கியவள் ரத்தம் தொய்ந்தத் தன் கையை அவனை நோக்கி மெல்ல நீட்டினாள்.

‘நம்பி’ என்ற வார்த்தையும், ரத்தம் தோய்ந்தக் கைகள் காற்றில் துலாவிய காட்சியும் அவன் மனதில் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்த, அவனையும் அறியாது அவன் கண்களில் கண்ணீர் துளிர்க்க தானாகவே அவள் கையை இறுக பற்றிக் கொண்டான். இனி நம்பி தன்னைக் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கையில் எல்லையற்ற நிம்மதியுடன் சூரியா தன் சுயநினைவைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்தாள்.

## உயிர் : 10

செந்தமிழ்நம்பி மருத்துவமனை வராந்தாவில் நின்று கொண்டு வெளியில் பெய்து கொண்டிருந்த மழையை வெறித்துக் கொண்டிருந்தான். சூரியபிரியாவின் செயலில் அவன் கொஞ்சம் ஆடித் தான் போய்விட்டான். ஏதோ தவறு செய்துவிட்ட குற்ற உணர்வு ஒன்று அவன் மனதை உறுத்தியது. ரத்த வெள்ளத்தில் அவளைப் பார்த்தப் போது அது அவன் மனதில் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அது என்ன மாதிரியான தாக்கம்? என்று அவனால் சொல்ல முடியவில்லை. இனி அடுத்து அவன் செய்ய வேண்டியது என்ன? என்று தான் அவன் மனதுக்குள் யோசித்துக் கொண்டிருந்தான்.

அங்கிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த மேகநாதன், சிவகாமி, பரணி மூவரும் சூரியாவின் உடல்நலம் பற்றிய கவலையில் பதற்றத்தில் இருந்தனர். ஆதிமூலமும், தையல்நாயகியும் பேரனின் முகத்தை யோசனையுடன்... அதே சமயம் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது சூரியாவுக்குச் சிகிச்சை அளித்த அறையில் இருந்து செவிலிப் பெண் வர, தமிழ் அவர் அருகில் பரபரப்பாய் சென்று,

“அவளுக்கு ஒண்ணுமில்லையே?” அவன் குரலில் இருந்த பதற்றத்தை அவன் உணர்ந்தானோ இல்லையோ அவனின் தாத்தா, பாட்டி உணர்ந்தனர். அவனின் இந்தத் தவிப்பு அவனின் இயல்புக்கு மாறாய் இருப்பதை உணர்ந்து அவனை வியப்புடன் பார்த்தனர். ஆனால் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை.

“இப்போதைக்கு ஒண்ணும் சொல்ல முடியாது சார். கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க” எல்லோருக்கும் சொல்லும் பதிலை அவனிடமும் சொன்னவள், அவள் வேலையைப் பார்க்கப் போனாள். அதன் பின் கடந்த மூன்று மணி

நேரமும் அங்கிருந்தவர்களின் மனநிலை பெருத்த போராட்டத்துடன் கடந்தது.

“இப்போ பேஷண்ட்டைப் பார்க்க போகலாம். ஒவ்வொருத்தராப் போய்ப் பாருங்க. ரொம்பப் பேசி டிஸ்டர்ப் பண்ண வேணாம்” செவிலிப்பெண் சொன்னதும்... தமிழ் வேகமாய்ச் செல்ல முயன்றவன் அவளின் பெற்றோரைக் கண்டு தயங்கி நின்றான்.

தங்கள் மகள் அவனுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தாள் என்றால்... அவர்களின் உறவு எப்படிப்பட்டதாய் இருக்கும்? என்று அவர்களுக்குப் புரியாமல் இல்லை.

“நீங்க போய்ப் பாருங்க தம்பி...” சிவகாமி தான் அவனிடம் மெல்லச் சொன்னார். நன்றியுடன் அவரைப் பார்த்தவன் வேகமாய் அறையினுள் நுழைந்தான்.

கட்டிலில் படுத்திருந்த சூரியாவின் ஒரு கையில் கட்டும்... மறுகையில் குளுக்கோஸ்சும் ஏறிக் கொண்டிருந்தது. அவள் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். தனக்காக உயிரைத் துறக்கும் அளவுக்குத் தன் மேல் அவள் கொண்ட காதல் அவனைப் பிரமிக்க வைத்தது.

அவனின் வரவை உணர்ந்தோ என்னமோ சூரியாவிடம் அசைவு தெரிந்தது. மெல்லக் கண் திறந்தவள் தன் முன் அமர்ந்திருந்த தமிழைக் கண்டதும் புன்னகைப் புரிந்தாள். பதிலுக்கு அவனும் சிரிக்க முயன்று தோற்றான். மனம் முழுவதும் பாரம் ஏறி இருக்க அவனால் புன்னகைக்க முடியவில்லை. வெகுவாக முயன்று அவளுக்காக லேசாகச் சிரித்தான்.

“நீங்க வர மாட்டீங்களோன்னு ரொம்பப் பயந்துட்டேன்” அவள் சொல்வதற்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

“நீங்க ஏன் என் ஃபோனை எடுக்கல?” இந்தக் கேள்விக் கேட்டதும் அவளைப் பார்க்க முடியாமல் தலைக் குனிந்தான்.

“அப்போ என்னைப் பார்க்க வந்த மாப்பிள்ளை நீங்க தானா? சர்ப்ரைஸ் கொடுக்கலாம்ன்னு நினைச்சீங்களா?” அவளே அதற்குப் பதில் கூறவும் வேகமாய்த் தலை நிமிர்ந்தவன்,

“ம்… ம்…” என்று அதை விட வேகமாய்த் தலையை ஆட்டினான்.

“ச்சே… நான் ஒரு மடச்சி… உங்களை நம்பாமல் அவசரப்பட்டு… தேவையில்லாமல் எல்லோரையும் வருத்தப்பட வச்சுட்டேன்” என்றவள்,

“ம்… ம்…” இதைத் தவிர அவனால் வேறு எதுவும் பேச முடியவில்லை.

“நம்பி… ஐ லவ் யூ நம்பி. நீங்க இல்லாமல் ஒரு வாழ்க்கையை என்னால் நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட நான் வேறு ஒருத்தன் முன்னாடி எப்படி அலங்காரம் பண்ணிக்கிட்டு நிக்க முடியும்? என்னுடைய அழகு நீங்க ரசிக்கிறதுக்கு மட்டும் தான்… கண்டவனும் பார்த்து ரசிக்கிறதுக்கு இல்லை. அதான் வேறுவழித் தெரியாமல் நான் இப்படிப் பண்ணிட்டேன். நீங்க தான் பொண்ணுப் பார்க்க வர்றீங்கன்னுச் சத்தியமா எனக்குத் தெரியாது. தெரிஞ்சி இருந்தா… இப்படிப் பண்ணி இருக்கவே மாட்டேன்”

அவள் பேசப் பேச… அவன் கண் முன்னே அவன் கருத்தையும் கவனத்தையும் தங்கள் மேல் திசைத் திருப்பும் வண்ணம் நடந்து கொள்ளும் பெண்களின் தோற்றம் ஒரு நொடி வந்து போனது. அவர்களிடம் இருந்து சூரியா தனித்துத் தெரிந்தாள். தமிழுக்குத் தான் இந்த நொடி வரை சூரியாவை காதலிக்கிறோமா? என்று தெரியவில்லை.

ஆனால் அவளின் மாசற்ற... ஆழமான காதலை அவன் உணர்ந்தான். அவளின் காதல் மழையில் சுகமாய் நனைந்தான். காதலிப்பதை விடக் காதலிக்கப்படுவது எவ்வளவு சுகம் என்பதை அந்தக் கணம் உணர்ந்தான்.

"நம்பி... உங்களுக்கு என் மேல் கோபம் ஏதும் இல்லையே?" பரிதாபமாய்க் கேட்டவளின் கையைப் பிடித்துத் தன் கைக்குள் வைத்தவன், 'இல்லை' என்பது போல் தலையசைத்தான். முதன்முதறையாக இன்று தான் எந்தவொரு கெட்ட எண்ணமும், காமமும் இல்லாமல் ஒரு பெண்ணைத் தொடுகிறான்.

"அம்மா, அப்பா, பரணி எல்லாம் எங்கே?"

"வெளியில் வெய்ட் பண்றாங்க. நான் போனால் தான் அவங்க உன்னைப் பார்க்க வர முடியும். அப்போ நான் கிளம்பவா?"

"ம்... சரி..." என்று அவள் தலையசைக்க... அவள் கையை விட்டு விட்டு எழப் போனவனின் கையைப் பிடித்தவள்,

"இனியாவது நான் ஃபோன் பண்ணினா எடுப்பீங்களா?" கண்களில் எதிர்பார்ப்புடன் கேட்டவளின் குழந்தைத்தனத்தில்... வெகுளித்தனத்தில்... அவன் அப்படியே கரைந்தான்.

"ம்... கட்டாயம்..." நெகிழ்ச்சியுடன் சொன்னவனைப் பார்த்தவள்,

"இது பரணி டீசர்ட் தானே?" அவன் போட்டிருந்த சட்டையைச் சுட்டிக் காட்டி அவள் கேட்க,

"ஆமாம்... என்னோட சட்டையை உன் காயத்தில் கட்டி விட்டேன். அதான் உன் தம்பி இதைக் கொண்டு வந்து கொடுத்தான். சரி நான் வர்றேன்" என்றவன் வேகமாய் வெளியேறினான்.

வெளியில் நின்று கொண்டிருந்த சூரியாவின் பெற்றோரிடம் வந்தவன், “எல்லாவற்றுக்கும் காரணம் நான் தான். என்னை மன்னிச்சுக்கோங்க… எனக்கு மனைவின்னு ஒருத்தி வந்தா… அது சூர்யா மட்டும் தான். அதனால் நீங்க கவலைப்படாதீங்க. நாங்க இப்போ கிளம்பறோம். சூர்யா உடல் தேறியதும் நேரில் வர்றோம்”

“சரி தம்பி…” என்றவர்கள் அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் மகளைப் பார்க்க விரைந்தனர்.

“நாம போகலாமா?” பேரனின் கேள்விக்குப் பெரியவர்கள் இருவரும் ஒன்றும் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தனர். வீடு செல்லும் வரை காரிலும் மௌனமே ஆட்சி செய்தது.

“தமிழு… கொஞ்சம் உள்ளே வந்துட்டுப் போய்யா…” வீடு வந்ததும் பெரியவர்களை இறக்கி விட்டவன் அப்படியே அலுவலகத்துச் செல்ல எண்ணிக் காரை எடுக்க, தையல்நாயகி அவனை உள்ளே வரச் சொன்னார். அவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வீட்டினுள் வந்தவன்,

“என்ன அப்பத்தா?” அவனின் கேள்விக்கு, ‘என்னன்னு உனக்குத் தெரியாது?’ என்பது போல் அவனை முறைத்துப் பார்த்தார் அவர்.

“தமிழு என்ன தான்ய்யா நடக்குது? உன்னை அந்தப் பொண்ணு நம்பின்னு சொல்லுது… நீ அவளை ரொம்பத் தெரிஞ்சவன் மாதிரி சூர்யாங்கிற… அவ உனக்காகக் கையை அறுத்துட்டு இருக்கா? ஒருவேள நீ அவ கூடப் பழகிட்டு ஏமாத்திட்டியால?” தையல்நாயகியின் கேள்வி கத்தி போல் அவனை நோக்கிப் பாய்ந்தது.

“லூசுத்தனமா உளறாதே அப்பத்தா…” அவரின் பேச்சைக் கேட்டு அவனுக்கும் கட்டுக்கடங்காமல் கோபம் வந்தது.

“நீ பண்ணுறக் காரியமெல்லாம் அப்படித்தான இருக்கு…” நொடித்துக் கொண்டே பதிலளித்தார் அவர். இருவரையும்

மாறிப் மாறிப் பார்த்தாலும் ஆதிமூலம் வாயைத் திறக்கவில்லை. தன்னை என்றால் பேரன் எளிதில் சமாளித்துவிடுவான்... இதே இது அவன் அப்பாத்தாவிடம் அவன் ஜம்பம் பலிக்காது... . அதனால் அமைதிக் காத்தார்.

“ஆமாம்... நான் அப்படித்தான்... இவ்வளவு ஏன் காலையில் அவளை ரத்த வெள்ளத்தில் பார்க்கும் வரைக்கும் நான் அப்படித்தான் இருந்தேன். ஆனா... இப்போ நான் எப்படி இருக்கேன்? என்ன பீல் பண்றேன்னு எனக்கே புரிய மாட்டேங்குது?” தலையில் கை வைத்தபடி சோபாவில் அமர்ந்தான் அவன்.

“நான் அவளை ஏமாத்தி இருப்பேன்னு நினைக்கிறியா அப்பத்தா?” பரிதாபமாய்க் கேட்டவனின் அருகில் அமர்ந்து அவனை அணைத்துக் கொண்ட தையல்நாயகி,

“இல்ல ராசா...”

“இல்ல அப்பத்தா... அவளை நான் அப்படி நினைச்சது உண்மை தான். ஆனா நான் ஏமாத்தல” என்றவன் தன்னைப் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை என்று அவளை முதன்முதலில் சந்தித்தது முதல் இப்போ நடந்தது வரை எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

தையல்நாயகிக்கு பேரனின் மறுபக்கம் ஏற்கெனவே தெரியும் ஆதலால்... அவரிடம் அதிர்வு கொஞ்சம் குறைவாகத் தான் இருந்தது. ஆதிமூலம் தான் பேரனின் மனநிலை அறிந்து அதிர்ந்து போனார். இனியாவது பேரன் தன் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்று கடவுளிடம் மனதுக்குள் வேண்டிக் கொண்டார்.

அதே சமயம் சூரியாவின் காதலை எண்ணி அவரும், தையல்நாயகியும் பிரமித்துப் போயினர். அவளை மாதிரி ஒரு பெண் தான் பேரனுக்குச் சரியானவள்... அவள் தான் தமிழின் மனைவி... என்று அந்தக் கணம் முடிவு செய்தனர்.

“அவ இப்படிச் செய்வான்னு தெரியாது அப்பத்தா. தெரிஞ்சி இருந்தா அவ ஃபோனை நான் அட்டென்ட் பண்ணி இருப்பேன். ஒரு பொண்ணு காதலுக்காகத் தன் உயிரையும் கொடுப்பான்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல” என்ற பேரனை...

‘அடேய் முட்டாளே... தன் மனதை கவர்ந்தவனின் காதலுக்காக மட்டுமே ஒரு பெண் தன் உயிரைக் கொடுப்பாளடா’ என்பது போல் அவனைப் பார்த்தனர் இருவரும். ஆனால் அவன் இவர்களின் பார்வையை உணரும் நிலையில் இல்லை.

“எனக்காக உயிரையும் விடத் துணிஞ்ச அவளை விட வேறு யார் எனக்கு மனைவியா வர முடியும்? நான் முடிவு பண்ணிட்டேன் அவள் தான் என் மனைவின்னு. இந்தக் கல்யாணம் அவளுக்காக நான் எடுத்த முடிவு. எனக்குக் காதல்ன்னா என்னன்னுத் தெரியாது? இப்பவும் அந்தக் காதல் உணர்வு எனக்குக் கொஞ்சமும் இல்லை. ஆனா... அவளோட காதலை நான் உணர்றேன். கல்யாணத்துக்கு அப்புறம் நான் இப்படியே இருப்பேனா? இல்லை மாறுவேனா... எதுவுமே இப்போ என்னால் சொல்ல முடியல. அதைக் காலம் தான் பதில் சொல்லணும்” என்று முடித்தவன் அப்பத்தா பக்கம் திரும்பினான்...

“அப்பத்தா... நான் அவள் காதலுக்குத் தகுதியானவனா? என்னைக் கல்யாணம் பண்ணுறதால அவளுக்கு ஏதும் பாதிப்பு வந்திடாதே?” குழப்பத்துடன் கேட்டவனை... தீர்க்கமாய்ப் பார்த்தார் தையல்நாயகி.

பேரனின் மனநிலை அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. சூரியாவின் தற்கொலை அவன் மனதைச் சிறிது சலனப்படுத்தி இருக்கிறது. அதனால் தான் அவளைத் திருமணம் செய்யும் அளவுக்கு அது அவனைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அதற்குப் பின் வரும் வாழ்க்கையைப் பற்றி அவனுக்கே தெளிவானச் சிந்தனை இல்லை. அது அவருக்குச் சிறிது வருத்தம் அளித்தாலும்...

அதிலும் சூரியாவின் நிலைப் பற்றி அவன் கவலைப்படுவது அவருக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. இந்தச் சிறு அனுசரணை, அக்கறை வரப் போறவளிடம் காண்பித்தால் போதுமே... மண வாழ்க்கைச் சிறப்பாக அமைந்துவிடுமே. ஆனால் அதைப் பேரன் இன்னமும் உணரவில்லை என்பது அவருக்குப் புரிய,

“அது நீ நடந்து கொள்வதைப் பொறுத்தது தமிழ்...” சுருக்கமாய் முடித்துக் கொண்டார். அவரின் பதிலைக் கேட்டு அவன் குழம்பிப் போனது தான் மிச்சம்.

“எனக்கு ஒரே குழப்பமாய் இருக்கு...” என்றவன், “இருந்தாலும் பரவாயில்லை... சூர்யா வீட்டில் கல்யாணத்தைப் பத்திப் பேசு அப்பத்தா. இப்போ நான் வெளியில் போறேன்” சொல்லிவிட்டுச் செல்லும் பேரனைப் பார்த்துக் கொண்டிருந்த முதியவர்கள் இருவரின் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

அலுவலகத்திற்கு வந்தவனுக்கு ஏனோ ஆதவனிடம் தன் முடிவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. உடனே அவனுக்கு அழைத்தான்.

“டேய் தமிழ்... எப்படி இருக்க?” மறுபக்கம் ஆதவன் குரல் உற்சாகமாய் ஒலித்தது.

“சாரிடா ஆதி... புது மாப்பிள்ளை உன்னைத் தொந்திரவு பண்ணிட்டேன்” தமிழ் சங்கடத்துடன் வருத்தம் தெரிவிக்க...

“சாரி சொன்ன உதை படப் போற ராஸ்கல். சொல்லு என்ன விசயம்டா...? முக்கியமான விசயம் இல்லைன்னா நீ கூப்பிட மாட்டியே”

“ம்... முக்கியமான விசயம் தான்... குறிஞ்சி சிஸ்டர் பக்கத்தில் இருக்காங்களா?”

“இல்லைடா… அவள் அம்மா கூடச் சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிருக்கா… நீ விசயத்தைச் சொல்லு”

“அது வந்து… எப்படிச் சொல்றதுன்னு தெரியல…?”

“அடப் பார்றா… தமிழுக்கும் வார்த்தைத் திக்குதே” ஆதவன் கிண்டலடிக்க…

“அப்படியெல்லாம் இல்லைடா…” என்றவன் சூரியாவைப் பற்றிச் சொல்லி முடித்தான். கேட்டுக் கொண்டிருந்த ஆதவனிடம் இருந்து ஒரு பதிலும் வரவில்லை.

“ஆதி லைன்ல இருக்கியா?”

“ம்… இருக்கேன். உனக்கு எத்தனை தடவைச் சொன்னாலும் புத்தி வராதாடா. அந்தப் பொண்ணை இப்படிக் கொண்டு வந்து நிறுத்திட்டியே… உன்னை எல்லாம்…?”

“அதான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேனே ஆதி. அப்புறம் ஏன் என்னைத் திட்டுற?”

“கல்யாணம் பண்ணி… நீ தினமும் அவளை உயிரோட சாகடிக்கவா? கல்யாணத்துக்கு அப்புறம் உன்னால ஒழுங்கா இருக்க முடியுமா? முடியும்ன்னா சொல்லு… உனக்கு வாழ்த்து சொல்ற முதல் ஆள் நான் தான்”

“அது தெரியலடா… அவள் மேல் காதலான்னுச் சொல்லத் தெரியல. இப்போதைக்கு உள்ளப் பிரச்சினையைப் பார்ப்போம். மத்ததை அதுக்கு அப்புறம் யோசிப்போம்”

“பார்த்தியா உனக்கு மனசுக்குள்ள ஒரு தடுமாற்றம் இருக்கிறதால தான்… உன்னால பதில் சொல்ல முடியல. ப்ளீஸ் தமிழ்… அந்தப் பொண்ணு வாழ்க்கையில் விளையாடாதே…”

“நான் கல்யாணம் பண்ணிக்கலன்னா உயிரை விட்டுருவாடா...”

“உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு அவள் உயிரை விடுறது எவ்வளவோ மேல்...” ஆதவன் கோபமாய் வார்த்தையை உதிர்த்தான்.

“டேய்... என்னடா ஆதி இப்படிச் சொல்ற?” தமிழ் குரலில் அடிப்பட்ட வலி தெரிய... ஆதவன் மௌனம் காத்தான்.

“சாரிடா தமிழ்... நீ நிச்சயம் மனசு மாறிக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... சந்தோசப்படுற முதல் ஆள் நாந்தான். உன் மனசு மாறியிருந்தா ரொம்பச் சந்தோசம்டா. அந்தப் பொண்ணோட காதலை உணர்ந்து வாழ்ந்துப் பாரு... கல்யாண வாழ்க்கையின் சந்தோசம் உனக்குப் புரியும். தமிழ் என் மேல் கோபமாடா?”

“இல்லைடா... என்னைக் கண்டிக்கிற உரிமை உனக்கு இருக்குடா. நீ சொல்றது போல் நான் நடக்க முயற்சிக்கிறேன்” தமிழின் வார்த்தையில் மனம் நெகிழ்ந்து போனான் ஆதவன்.

“ஆதி... குறிஞ்சி சிஸ்டருக்கு சூர்யா ஹாஸ்பிட்டல் இருக்கும் விசயம் தெரிய வேண்டாம். அவங்களுக்காத் தெரிஞ்சா தெரியட்டும். நாம சொல்ல வேணாம்”

“சரி நான் எதுவும் சொல்லல. ஆனால் இன்னும் நாலு நாளுல நாங்க சென்னைக்குக் கிளம்பிருவோம்னு நினைக்கிறேன்”

“அப்போ நேரில் பார்க்கலாம் ஆதி...” என்று ஆதவனிடம் பேசிவிட்டு அலைப்பேசியை வைத்த தமிழின் மனம் குற்ற உணர்வில் குழப்பித் தான் போனது.

அந்நேரம் அலைப்பேசி அழைக்க... அழைப்பைப் பார்த்தவனுக்கு அது சூரியா தான் என்றதும் ஒரே ஒலியில்

அதை எடுத்தான்.

“நம்பி...” அவளின் காதல் மிகுந்த அந்த அழைப்பு அவன் காதில் விழுந்து அவன் உணர்வில் கலந்து அவனைச் சிலிர்க்க வைத்தது.

“ம்... சொல்லு...”

“சாப்பிட்டீங்களா...?” அவளின் கேள்வியில் குழம்பியவன், தன் கைகடிக்காரத்தைப் பார்க்க... அது மாலை நான்கு மணி என்று காட்டியது. உணர்வுகளின் தாக்கத்தில் இருந்தவனுக்குப் பசி என்ற உணர்வே தெரியவில்லை.

“இல்லை... இன்னும் சாப்பிடல...”

“அச்சச்சோ... இவ்வளவு நேரம் சாப்பிடாம இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகுறது? முதல்ல சாப்பிடப் போங்க?” அவளின் அக்கறை அவனின் இதயத்தைத் தீண்டிச் சென்றது. அவ்வளவு நேரம் இருந்த மனக் குழப்பம் அவளின் வார்த்தையில் பனி போல் விலகி ஓடியதைக் கண்டு ஆச்சிரியம் அடைந்தவன்... முதன்முறையாகக் காதலிக்கப்படுவதால் ஏற்படும் சுகத்தைக் கண் மூடி அனுபவித்தான்.

## உயிர் : 11

“ஏண்டி சூரியா... எப்படி டி இப்படியொரு காரியம் செய்யத் துணிஞ்ச?” சிவகாமி சூரியபிரியாவின் அருகில் அமர்ந்து அவள் தலையை வருடியபடி மனம் தாங்காமல் புலம்பினார்.

மருத்துவமனையில் இருந்தவரை அவளை வேதனைப்படுத்த வேண்டாம் என்று யாரும் ஒன்றும் சொல்லாமல் இருந்தனர். அவளை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வந்த பின் அவள் கொஞ்சம் சகஜமான மனநிலைக்கு வந்ததும் தான் சிவகாமி இவ்வாறு புலம்பினார். மேகநாதனோ பேச்சற்றுப் போனவராய் மனைவி அருகில் நின்றிருந்தார். பரணி கண்களில் கண்ணீர் மல்க அவளின் மறுபக்கம் நின்று கொண்டிருந்தான்.

“அம்மா...” அன்னையின் கையைப் பிடித்து அதில் முகம் புதைத்துக் கொண்டு தேம்பி தேம்பி அழுதவளைப் பார்க்கும் போது மூவருக்குமே பரிதாபமாக இருந்தது.

“நீ காதலிக்கிறேன்னு ஒரு வார்த்தைச் சொல்லியிருந்தா... நாங்க உனக்கு மாப்பிள்ளைப் பார்த்திருக்க மாட்டோமே” சிவகாமி புலம்ப...

“அந்தளவுக்கு நாங்க உன்னிடம் பாசத்தைக் காண்பிக்கலையா? உங்க ரெண்டுப் பேர் கூடவும் பிரண்ட்ஸ் மாதிரி தானே பழகினோம்? மனதில் உள்ளதை எங்களிடம் சொல்ல எதுக்கும்மா தயக்கம்?” மேகநாதனின் வார்த்தைகள் அவளைச் சுளீரென்று தாக்கியது. தந்தையின் விழிகளைச் சந்திக்க முடியாமல் தலைக் கவிழ்ந்தாள்.

“அப்பா... நான் காதலிக்கிறேன்னு உங்க கிட்டச் சொல்லத் தயக்கமாயிருந்தது. அதை நீங்க ரெண்டுப் பேரும் எப்படி எடுத்துக்குவீங்களோ பயமாயிருந்தது. ஒருத்தரைக்

காதலிச்சிட்டு இன்னொருத்தரைக் கல்யாணம் பண்ணிக்க என்னால முடியலப்பா. அதான்... ஆனால் அவர் தான் பெண் பார்க்க வர்றான்னு எனக்குத் தெரியாதுப்பா...” மெல்லிய குரலில் தன் மனதை உரைத்த மகளைப் பரிதாபமாகப் பார்த்தார் சிவகாமி.

‘சூர்யாவைப் போன்ற பயந்தப் பெண்களைக் கூடக் காதல் விட்டு வைக்கவில்லை. இந்த மாதிரிப் பெண்களுக்குக் காதல் வருவதே பாவம். அதில் வேறொருவன் பெண் பார்க்க வரப் போகிறான் என்றால் அவளும் என்ன தான் செய்வாள்? பயத்தில் உயிரை மாய்க்க முடிவுச் செய்திருக்கிறாள். மொத்தத்தில் என்ன தான் படித்தாலும் பெண்களின் மனநிலை மாறப் போவதில்லை’ ஒரு பெண்ணாய் மகளின் நிலை சிவகாமிக்கு நன்கு புரிந்தது.

“இப்ப என்னவாகிப் போச்சுன்னு எல்லோரும் இப்படிப் பேசிட்டு இருக்கீங்க. அதான் சூர்யா காதலிக்கிறவர் தானே பெண் பார்க்க வந்தார். ப்ராப்ளம் சால்வ்ட்... அப்பா... எப்போ நிச்சயம் வச்சுக்கலாம்ன்னு மாப்பிள்ளை வீட்டில் கேட்டு அதற்கான ஏற்பாடைப் பாருங்க. அம்மா... நிச்சயத்துக்கு என்ன என்ன தேவைன்னு ஒரு லிஸ்ட் ரெடி பண்ணுங்க. ட சூர்யா... நீ நிம்மதியா வீட்டில் உட்கார்ந்துட்டு கல்யாணக் கனவுக் கண்டுட்டு இரு” எல்லோரையும் விரட்டிய பரணியைப் பார்த்து அவர்கள் முறைத்தனர்.

“ஏண்டா... எல்லோருக்கும் ஒவ்வொன்றைச் சொல்லுறியே... உனக்குச் செய்றதுக்கு ஒண்ணுமே இல்லையா?” மேகநாதன் அவன் காதைத் திருகிக் கொண்டு கேட்க...

“அப்பா... வலிக்குது விடுங்கப்பா...” என்றவன் அவர் விட்டதும் காதை நன்றாகத் தேய்த்து விட்டுக் கொண்டு, “ஏன் இல்லை... விருந்து சமைக்கிறதை சாப்பிடறதுக்கு ஒரு ஆள் வேண்டாமா? அவ்வளவு பெரிய வேலையை நான் மட்டும் தான் கஷ்டப்பட்டுச் செய்யப் போறேன்” சிரியாமல் சொன்னவனைக் கண்டு... மற்ற மூவரும் வாய்விட்டுச்

சிரிக்க... அதைப் பாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்த பரணியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். அங்கிருந்த இறுக்கச் சூழ்நிலை மாறி சந்தோசம் உண்டானது.

காலையில் எழுந்த செந்தமிழ்நம்பி மணியைப் பார்த்தான். ஏழு மணி தான் ஆகி இருந்தது. ஞாயிறு என்பதால் ஒருவிதச் சோம்பேறித்தனம் உடலைத் தாக்க... அப்படியே கண் மூடிப் படுத்திருந்தான். அந்நேரம் பார்த்து அவன் அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி வர... அதை எடுத்துப் பார்த்தான். சூரியபிரியா தான் அனுப்பி இருந்தாள். அவள் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்து இரண்டு நாட்கள் ஆகிறது.

“Heart beats 72 times a min,

Even if ur heart beats only once a min,

U'll stil live coz 71 times my heart beats 4 u..

Good Morning & Have a good day”

அந்தக் குறுஞ்செய்தியின் அர்த்தம் புரிந்தவனின் இதழ்கள் தானாக மலர்ந்தது. அலைப்பேசியை நெஞ்சோடு அணைத்தப்படி மல்லாந்துப் படுத்தவன் மனம் சூரியாவைப் பற்றிச் சுற்றி வந்தது. அவளின் ஒவ்வொரு பார்வையும், ஒவ்வொரு செயலும், அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அவள் அவன் மீது கொண்டிருக்கும் காதலை அவனுக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது. இப்படியொரு பெண்ணால் தான் உயிருக்கு உயிராய் காதலிக்கப்படுவோம் என்று அவன் கனவிலும் நினைத்தது பார்த்ததில்லை.

அவளை முதன்முதலில் பார்த்தப் போது அவளின் உடல் அழகு அவன் கண்ணைப் பறித்துக் கருத்தைக் கவர்ந்தது என்னமோ உண்மைத் தான். அதான் அவளை அடுத்து அந்த ஷாப்பிங் மாலில் பார்க்கும் போது வேண்டுமென்றே வம்பிழுத்தான். அதன் பின்னர் ஆதவன் திருமணத்தின் போது... அவள் தன் மேல் கொண்ட ஆசையைப்

பயன்படுத்தி அவளை அனுபவிக்கத் தான் எண்ணினானே தவிர... அதில் துளியும் நேசமோ... காதலோ... கிடையாது. அவள் அவன் கோட்பாட்டிற்கு ஒத்துழைக்கவில்லை என்றதும் அவன் அவளைக் கழட்டி விடத்தான் எண்ணி இருந்தான். ஆனால் அவளோ அவனுக்காகத் தன் உயிரையும் அல்லவா விடத் துணிந்திருக்கிறாள்.

அவனுடன் பழகிய பெண்களில் யாரும் இந்த மாதிரியான ஒரு காரியத்தைச் செய்தது இல்லை. இவ்வளவு ஏன்...? அவன் சூரியாவிடம் பழகியதை விட அந்த ராகினியிடம் இன்னமும் நெருக்கமாய்ப் பழகி இருக்கிறான். அவன் அவளை வேண்டாம் என்று தூக்கிப் போட்டதும்... அவள் என்ன அவனுக்காக உயிரையா கொடுத்தாள்... இல்லையே... அடுத்தச் சில மாதங்களில் வேறுவொருவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அமெரிக்கா சென்று விடவில்லையா? இவள் மட்டும் ஏன் அவன் கிடைக்கவில்லை என்றதும்... அவனைத் தூக்கியெறியாமல் அவனுக்காகத் தன் உயிரை விட முயன்றாள்.

‘உருகி... உருகி... காதலிப்பது என்பது இது தானா? இந்தக் காதல்... கல்யாணம்... இதெல்லாம் என் வாழ்க்கைக்குச் சரி வருமா? ஒருவேளை அன்று அவளை ரத்த வெள்ளத்தில் பார்த்ததால் மனம் தடுமாறி அவசரப்பட்டு இந்த முடிவை எடுத்தேனா? அன்று அவளைப் பார்த்தப் போது அவளா என் கண்ணுக்குள் தெரிந்தாள்... இல்லையே கதிர் அல்லவா தெரிந்தான். கதிர் இந்தக் காதல்... கல்யாணம்... கருமாந்திரத்தால் உன் வாழ்வுச் சிதைந்ததால் தான் நானும் யாரையும் காதலிக்காமல் இருந்தேன்’

‘ஆனால் இவள் தன் காதலால் என்னைக் கட்டிப் போடுகிறாளே நான் என்ன செய்யட்டும்? என்னால் அவளைத் தவிர்க்க முடியவில்லை. நான் இல்லையென்றால் செத்து விடுவேன் என்பவளிடம் செத்துப் போ... என்று சொல்ல முடியவில்லை. எல்லாப் பெண்களிடம் உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்

என்று உதாசீனமாகப் பேசிய நான்... இவளிடம் அந்த மாதிரிப் பேச முடியாமல் கோழையாகிப் போனேனே. சூர்யாவின் காதலில் மூழ்கித் தவிக்கிற என்னை... கதிர் நீ தான் நல்லவிதமா வழி நடத்தணும்' தெய்வமாகிப் போன செங்கதிர் என்கிற கதிரிடம் மானசீகமாக மனதுக்குள் வேண்டிக் கொண்டான்.

குளித்து முடித்துக் கீழே வந்த தமிழை... அப்பொழுதுத் தான் கோவிலுக்குப் போய்விட்டு வந்த தையல்நாயகி எதிர்கொண்டார். அவன் நெற்றியில் குங்குமம் வைத்து விட்டவரைக் கேள்வியாய் அவன் பார்க்க,

“உனக்குக் கல்யாணம் நல்லபடியா முடிஞ்சா பெருமாளுக்குப் பாலு அபிசேகம் பண்றதா வேண்டி இருந்தேன்... அதான்”

“அப்பத்தா... கல்யாணம் பேசிக்கிட்டுத் தான் இருக்கு... இன்னும் முடியல”

“ஒருவேள... உம் அப்பத்தா சாமியை ஐஸ் வைக்கிறாளோ என்னமோ?” ஆதிமூலம் தன் மனையாளைக் கிண்டலடித்தார்.

“அப்படியில்ல தமிழு... நீயா கல்யாணத்துக்குச் சம்மதிச்சப் பாரு... அதுவே எனக்குக் கல்யாணம் முடிஞ்ச மாதிரித் தான்” பேரனிடம் சொன்னவர், கணவரைத் திரும்பிப் பார்த்து முறைத்தார்.

அப்பத்தா தன் வயதையும் பொருட்படுத்தாமல் உண்ணாவிரதம் இருந்து... மருத்துவமனை வரை சென்று அவன் வாழ்க்கைக்காகப் போராடினார். அதே போல் சூரியாவும் அவன் கிடைக்க மாட்டானோ? என்று உயிரையும் விட முயன்றாள். எந்தப் பெண்களை அவன் வெறுத்தானோ... அந்தப் பெண்ணினத்தில் பிறந்த இருவர் அவனுக்காகத் தங்கள் உயிருடன் போராடுகின்றனர் என்றால்... அவர்களின் பாசம் எப்படிப்பட்டதாய் இருக்கும்?

தமிழ் அந்தப் பாசத்தில் நெகிழ்ந்து போய்க் கண்கள் கலங்க, “தேங்க்ஸ் அப்பத்தா…” அவரை அணைத்து அவர் தோளில் முகம் புதைத்துக் கொண்டான். தமிழ் எப்பொழுதும் இவ்வாறு மனம் நெகிழ்கிறவன் அல்ல. அவனின் இந்த நெகிழ்ச்சிப் பெரியவர்கள் இருவரின் மனதையும் நெகிழ்த்தியது.

“அப்பத்தாவுக்கு எதுக்குய்யா தேங்க்சு எல்லாம்…” தையல்நாயகி பேரனின் தலையை ஆறுதலாய் வருடினார்.

“அது தேங்க்சு இல்லை தையலு… தேங்க்ஸ்… எங்கே சொல்லுப் பார்ப்போம்?” ஆதிமூலம் மனைவியின் ஆங்கிலத்தைச் சரி செய்ய முயன்றார்.

“நா அந்தக் காலத்து…” அவர் முடிக்கும் முன்,

“ஐஞ்சாம் கிளாஸ் ஆக்கும்” தாத்தாவும், பேரனும் ஒருமித்த கிண்டல் குரலில் கூற,

“என்னாது… ஐஞ்சாம் கிளாசா…. வாத்தியார் மகளையே ஐஞ்சாம் கிளாசுன்னா கிண்டலடிக்கிறீங்க. நா அந்தக் காலத்து பியூசி ல. என்னைப் பார்த்தா ரெண்டுப் பேரும் கிண்டல் பண்றீங்க… உங்களை…” கோபமாய்ச் சொன்னவர் தமிழைப் பார்த்து அடிப்பது போல் கையைத் தூக்க,

“வாடா பேராண்டி… உம் அப்பத்தா அடிக்கறதுக்கு முன்னால ஓடிப் போய்டுவோம்” ஆதிமூலம் கூற,

“விடு ஜூட்…” அப்பத்தாவைப் பார்த்துப் பழிப்புக் காட்டியவன், தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து நழுவினான். அவர்களின் பயத்தைக் கண்டு அப்பத்தா நகைக்க… அதைக் கண்ட இருவரும் திரும்பிப் பார்த்து அவர் அருகில் வர… வசமாய் அப்பத்தாவிடம் சிக்கிக் கொண்டனர் இருவரும்.

அந்நேரம் தமிழின் அலைப்பேசி அழைக்க... “அப்பத்தா... சூர்யா ஃபோன் பண்றா...”

“ம்... எம் பேத்திக்காக உன்னை விடறேன். பொழைச்சுப் போ” என்று அவனை விட்டவர், கணவனைப் பிடித்துக் கொண்டார். சரமாரியாக ஆதிமூலத்துக்கு விழுந்த திட்டைக் கண்டு சிரித்தபடி அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான் தமிழ்.

“குட்மார்னிங் நம்பி...” மறுபுறம் இருந்து சூரியாவின் குரல் உற்சாகமாக ஒலித்தது.

“ம்... குட்மார்னிங்...” என்றவன் என்ன பேசுவது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தான்.

“சாப்பிட்டாச்சா...”

“இன்னும் இல்லை... இப்பத் தான் எழுந்தேன்...”

“ஓ... அப்பச் சரி...”

“நீ என்ன செய்துட்டு இருக்க? உங்க கிட்ட ஃபோன் பேசிட்டு இருக்கேன்னு மொக்கை ஜோக் அடிச்சிறாதே...” என்று சொன்னவன் வாய் விட்டுச் சிரித்தான்.

அவனின் சிரிப்பு அவளின் இதயத்தை மழைச் சாரலாய் வருடிச் சென்றது. அவனின் சிரிப்பில் மனம் மயங்கி அப்படியே நின்றிருந்தாள்.

“சூர்யா... சூர்யா... லைன்ல தான் இருக்கியா?” அவனின் படபடக்கும் குரலில் மயக்கம் தெளிந்தவள்,

“நம்பி...” அவள் குரல் மிருதுவாக ஒலிக்க... அவளின் அந்த ரகசியக் குரலின் இனிமையில் அவன் பேச்சிழந்தான்.

“உங்க சிரிப்புச் அசட்டுத்தனம் இல்லாம… ரொம்ப அழகா… கம்பீரமா இருக்கு நம்பி” அவள் சொல்லவும் தான்… அவன் வாய்விட்டுச் சிரித்தது அவனுக்கு உறைத்தது. தான் எப்படி… இப்படி…? கேள்வி அவனுக்குள் குழப்பமாய் எழுந்தது.

“ம்… ம்…” அவன் குரல் எழும்பவில்லை. இருவருமே ஒரு சில நொடி மௌனம் காக்க…

அந்த மௌனத்தைக் கலைப்பதற்கு என்று சூரியாவின் அறைக்கு வெளியே இருந்த பால்கனியில் குருவி ஒன்று வந்தமர்ந்தது. ஒரு சின்னக் கிண்ணத்தில் அவள் போட்டு வைத்திருந்த அரிசியை… அந்தக் குருவி அழகாய் கொத்திச் சாப்பிட்டது. அதைக் கண்ட சூரியா உற்சாகம் அடைந்துச் சற்று முன் இருந்த மோன நிலையை அவளே கலைத்தாள்.

“நம்பி… இங்கே ஒரு குருவி எவ்வளவு அழகா நான் போட்ட அரிசியைக் கொத்தி… கொத்திச் சாப்பிடுது தெரியுமா? சோ க்யூட்…” உற்சாகமாய்க் கூவியவளின் திடீர் உற்சாகத்தில் சற்றுத் திகைத்தவன்… பின் சகஜமாகி அவனும் அவளுடன் சேர்ந்து உற்சாகம் அடைந்தான்.

“ஓ… அப்படியா…”

“ம்… எவ்வளவு அழகுத் தெரியுமா? பிரவுன் கலர்ல குட்டியா… அழகா… இருக்கு” நேரடி கிரிக்கெட் வர்ணனைப் போல் அவள் ஒவ்வொன்றாய் சொல்லச் சொல்ல… அவளின் வார்த்தையை அவன் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

இவ்வளவு நாளாய் அவன் ரசித்த அழகே வேறு. ஆனால் இன்று அவளுடன் சேர்ந்துக் குருவியை ரசிக்கிறான். அவனுக்கே அவனின் மனநிலை என்னவென்று தெரியவில்லை. சிறு குழந்தைப் போல் குதூகலத்துடன் அவள் பேசியது அவன் மனதை அப்படியே புரட்டிப்

போட்டது. சூரியாவின் அன்பு அவனைக் கயிறுப் போட்டுக் கட்டி வைத்து இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்.

“நம்பி… குறிஞ்சி வந்திருக்கா போலிருக்கு…” வரவேற்பறையில் சத்தம் கேட்டுச் சூரியா தமிழிடம் சொல்லும் போதே… குறிஞ்சி புயல் போல் அவள் அறைக்குள் நுழைந்தாள். தோழியைப் பார்த்தும் அலைப்பேசியை அணைக்க மறந்தவளாய் சூரியா,

“குறிஞ்சி… எப்ப டி சென்னைக்கு வந்த? நல்லாயிரு…” அவள் முடிப்பதற்குள் குறிஞ்சியின் கை முழு வேகத்துடன் அவள் கன்னத்தில் இறங்கியது.

எதிர்பாராத இந்த இடி போன்ற அடியால் ஸ்தம்பித்துப் போன சூரியா, தன் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அப்படியே நின்றுவிட்டாள்.

“குறிஞ்சி…” கண்கள் கலங்கத் தோழியைப் பரிதாபமாகச் சூரியா பார்க்க,

“பேசாதே… நீ ஒண்ணும் பேசாதே…” குறிஞ்சி ஆள்காட்டி விரலைத் தன் உதட்டின் மேல் வைத்துச் சைகை செய்தாள். குறிஞ்சியின் பின் நின்றிருந்த சிவகாமியின் கலங்கிய கண்கள் அவர் குறிஞ்சியிடம் விசயத்தைச் சொல்லிவிட்டார் என்பது புரிந்தது.

“எவனோ ஒருத்தனுக்காக… உன்னைப் பெத்து… இவ்வளவு நாள் வளர்த்து ஆளாக்கியவங்களை ஒரு நொடியில் நீ மறந்துப் போயிருவியா? அந்தளவுக்குக் காதல் உன்னை ஆட்டிப் படைக்குதா?” சரமாரியாய் அவளின் கேள்விகள் சூரியாவைத் தாக்கியது.

“அவர் எவரோ இல்லை… அண்ணாவோட பிரண்ட் தமிழ் தான்” மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

“அந்த அவர்... குட்டிச்சுவர்... யாரடி? கொஞ்சம் சத்தமாய்ச் சொல்லு?”

“அண்ணோவோட பிரண்ட் தமிழ்...” சூரியா சொல்லியதும்... குறிஞ்சி திரும்பித் தன் பின்னால் நின்று கொண்டிருந்த ஆதவனைப் பார்த்தாள்.

“இவள் சொல்றது உண்மையா...?”

“எனக்கென்ன தெரியும்? நானும் உன் கூட இப்பத் தான் இங்கே வர்றேன்” தோளைக் குலுக்கி அவன் தப்பித்துக் கொண்டான்.

“தமிழ் அண்ணாவா...? குட் செலக்சன் தான்... இருந்தாலும் காதலுக்காக நீ தற்கொலைக்கு முயன்றது கொஞ்சமும் சரியில்லை சூர்யா” கண்டிப்புடன் பேசினாள் குறிஞ்சி.

“சாரிடி...”

“சாரி சொன்னா... எல்லாம் சரியாப் போச்சா? போன உயிர் திரும்பி வந்திருமா? உனக்கு மட்டும் ஏதாவது ஆகியிருந்தா...?” கண்கள் கலங்கச் சொன்னக் குறிஞ்சி தோழியை ஆறுதலுடன் அணைத்துக் கொண்டாள். சூரியாவும் குறிஞ்சியின் அன்பில் மனம் நெகிழ்ந்துப் போனாள்.

இவையெல்லாம் தமிழ் கேட்டுக் கொண்டிருந்தான். அவர்களின் நட்பில் அவன் மனமும் நெகிழ்ந்திருந்தாலும், குறிஞ்சி சூரியாவை அடித்த அடிக் கண்டு அவன் கொஞ்சம் கதிக் கலங்கிப் போய்விட்டான். சூரியாவின் அழைப்பைத் துண்டித்தவன், ஆதவனுக்கு அழைத்தான்.

“சொல்லு தமிழ்...” சூரியாவின் அறையை விட்டு வெளியேறி வீட்டின் வாயிலுக்கு வந்தான் ஆதவன்.

“என்னடா சிஸ்டர்... இந்த அடி அடிக்கிறாங்க?”

“டேய்... உனக்கு எப்படிடா தெரியும்?” சுற்றும் முற்றும் கண்களை ஓட்டினான் ஆதவன்.

“இவ்வளவு நேரம் சூர்யாவோட தான் ஃபோன்ல பேசிட்டு இருந்தேன். அப்போ தான் சிஸ்டர் வந்து அவளை அடிச்சாங்க...”

“ஓ...”

“என்னடா ஓ... நீ சிஸ்டர் கிட்ட என்னைப் பத்தி எதுவும் சொல்லலியே...” படபடக்கும் இதயத்துடன் தமிழ் கேட்க,

“இல்லைடா... நீ தான் எதுவும் சொல்ல வேண்டாம்ன்னு சொன்னே இல்ல. அதான் நான் குறிஞ்சி கிட்ட ஒண்ணும் சொல்லல. ஆனா... இங்கே வந்தவுடன் அவங்க அம்மா சொல்லிட்டாங்கடா. நான் என்ன செய்ய முடியும்?”

“ஆதி... நான் அதைச் சொல்லல... நான் எதைப் பத்தித் சொல்றேன்னு உனக்குப் புரியலியா?” தயக்கத்துடன் கூறியத் தமிழின் வார்த்தையில் தான் அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது ஆதவனுக்குப் புரிந்தது.

“லூசாடா நீ... அவள் என் உயிருக்கு உயிரான மனைவியா இருந்தாலும்... உயிர் நண்பன் உன்னைப் பத்தி நான் அவக் கிட்டச் சொல்லுவேனாடா... முட்டாள் மாதிரி பேசாதே” கோபமாய் நண்பனைக் கடிந்தான் ஆதவன்.

“ரொம்ப ரொம்ப... தேங்க்ஸ்டா... எங்கே சிஸ்டருக்கு தெரிஞ்சி... அது அப்படியே சூர்யா காதுக்குப் போய்டுமோன்னு பயந்துட்டேன். இப்பத் தான் ரிலாக்ஸா இருக்கு”

“தமிழுக்குப் பயப்படக் கூடத் தெரியுமா?” ஆதவன் குரலில் ஏகத்துக்கும் நக்கல் இருந்தது.

“இது பயம்ன்னு சொல்ல முடியாது ஆதி. சூர்யா எனக்காக உயிரை விடத் துணிஞ்சவ... இப்போ என்னைப் பத்தித் தப்பா கேள்விப்பட்டா... மறுபடியும் உயிரை விடக் கொஞ்சமும் தயங்க மாட்டா... அதான்...” தமிழ் உணர்ந்துக் கூறிய வார்த்தைகள் ஆதவன் மனதை நிம்மதியடையச் செய்தது. இனி நண்பனின் வாழ்க்கை சரியான பாதையில் சென்று விடும் என்று நம்பினான். நண்பனின் நம்பிக்கையைத் தமிழ் காப்பாற்றுவானா...?

## உயிர் : 12

கண்ணாடியின் முன் நின்று உடையைச் சரி செய்து கொண்டிருந்த செந்தமிழ்நம்பி தன் முகத்தைச் சற்று அதிசயமாகப் பார்த்தான். அவனை அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும் சுமார் என்று ஒதுக்கித் தள்ளவும் முடியாது. ஆனால் ஏனோ இன்று அதீத அழகாய் இருப்பது போல் அவனுக்குள் ஒரு பிரம்மை. என்னவாக இருக்கும்? என்று தன் முகத்தை உற்று நோக்கியவனுக்கு விடையாக... அவனின் முகம் புன்னகையில் மலர்ந்து அழகாயிருந்த தோற்றம் கண்ணில் பட்டது.

அவன் எப்போதும் புன்னகை முகத்துடன் தான் இருப்பான். ஆனால் அது மற்றவர்களுக்காக வலுக்கட்டாயமாக அவன் போட்டிருக்கும் முகமூடி. அவன் தன் மனதின் வலியை மறைப்பதற்காக அணிந்திருக்கும் பொய் முகம் அது. ஆனால் அவன் என்று சூரியாவின் காதலுக்குக் கட்டுப்பட்டானோ அன்றிலிருந்து அவன் மனதில் இருந்த வலிக் கொஞ்சம் குறைந்து... சற்று நிம்மதியாய் சந்தோசமாய் இருக்கிறான். அது தான் இன்று அவன் முகத்தில் பிரதிபலிக்கிறது. அவளை நினைத்தும் அவன் முகம் மிருதுவானது.

நிச்சயம் வேண்டாம்... நேரே கல்யாணம் வைத்துக் கொள்வோம் என்று தையல்நாயகி கூறிவிட்டதால்... இந்த மாத இறுதியில் அவர்களின் திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. அதனால் இருவரும் தினமும் அலைப்பேசியில் பேசிக் கொண்டனர். அவன் பேசினான் என்பதை விட அவள் தான் அதிகம் அவனுடன் பேசினாள். அவனின் விருப்பு வெறுப்பு எல்லாம் தெரிந்துக் கொள்வதில் அவள் காட்டிய ஆர்வம் கண்டு அவனுக்கு மலைப்பாய் இருந்தது. மொத்தத்தில் அவளின் காதலின் வேகத்தில் அவன் சுகமாய் அடித்துச் செல்லப்பட்டான். அவளின் நினைவில் அவன் மூழ்கியிருக்க, அந்நேரம் அவன் அலைப்பேசி அழைக்க... எடுத்துப் பார்த்தவன்

சூரியா என்றதும் அவசரமாக அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்.

“எப்படி இருக்கீங்க…?” என்னமோ காலம் காலமாய்ப் பிரிந்தது போல் வெளிவந்தது அவளின் வார்த்தைகள். அவன் கண் மூடி அந்த வார்த்தையில் புதைந்திருந்த காதலை உணர்த்துக் கிரகித்தவன்… தன்னைச் சமாளித்துக் கொண்டு,

“ஹலோ மேடம்… நேத்து நைட் பன்னிரண்டு மணி வரை பேசிட்டுத் தான் படுத்தோம். நியாபகம் இல்லையா? அதுக்குள்ள எப்படி இருக்கீங்கன்னு கேட்கிற?” அவளைக் கிண்டலடித்தாலும் அவள் அப்படிக் கேட்டது அவனுக்கு மனதுக்குள் மிகுந்த விருப்பமாய்த் தான் இருந்தது. எந்நேரமும் அவனின் நலனை ஒருத்தி எண்ணுகிறாள் என்றால்… அதை விடப் பெரிய வரம் ஒரு ஆணுக்கு வேண்டுமா என்ன?

“ம்… பேசிட்டுத் தான் இருந்தோம்… ஆனா நான் ஒரு விசயத்தைக் கேட்க மறந்துட்டேன்?” ஏதோ தவறு செய்துவிட்டதைப் நாக்கைக் கடித்துக் கொண்டே அவள் பேச…

“என்ன சொல்லு?” என்னவாக இருக்கும்? ஒருவேளை அவளுக்குத் தன்னைப் பற்றி ஏதும்….? அவன் மனதுக்குள் திக்திக்கென்று பயத்துடன் யோசித்துக் கொண்டிருக்க…

“இன்னைக்குக் கல்யாணத்துக்கு வேண்டிய ட்ரெஸ் எல்லாம் எடுக்கப் போறோம்… நீங்க வரலைன்னு ஆச்சி சொன்னாங்க… அதான் உங்களுக்கு என்ன கலர் பிடிக்கும்ன்னு கேட்கலாம்ன்னு…” தன்னை அவள் ஆச்சி என்று தான் கூப்பிட வேண்டுமென்று தையல்நாயகி அவளிடம் கண்டிப்புடன் சொல்லிவிட்டார்.

அவளின் பதில் அவனின் போன உயிர் திரும்பி வந்தது. முத்துமுத்தாய் வியர்த்திருந்ததைத் தன் முகத்தைக்

கைகுட்டையால் துடைத்துக் கொண்டவன் மனம் சற்று நிம்மதியடைந்தது.

“உனக்கு என்ன கலர் பிடிக்குதோ அதை வாங்கு. உனக்குப் பிடிச்சா... அது எனக்கும் பிடிக்கும்” அவன் குரல் குழைந்து வந்தது.

“ம்... ம்...” என்றவள், “நம்பி...” தயக்கமாய் அவள் அழைக்க...

“ம்... நம்பி தான்... எதுக்கு இவ்வளவு தயக்கம்... சொல்லு?” எதுவாக இருந்தாலும் பட்டென்று முகத்துக்கு நேரே தைரியமாய்ப் பேசும் பெண்களைப் பார்த்தவனுக்கு அவளின் தயக்கம் புதுசாக இருந்தது.

“நான் ஒண்ணு சொன்னா... தப்பா நினைக்க மாட்டீங்கள்ல?”

“நீ ஒண்ணு என்ன லட்சம்... கோடி சொன்னாலும் தப்பா நினைக்க மாட்டேன். முதல்ல விசயத்தைச் சொல்லு”

“கல்யாணம்ங்கிறது நம்ம வாழ்க்கையில் ஒரு முறை வர்ற மறக்க முடியாத நிகழ்வு இது. இந்த நிகழ்வுல நாம செய்ற ஒவ்வொரு விசயத்திலும் நம்ம ரெண்டுப் பேரோட விருப்பம் இருக்கணும். அது இந்த ட்ரெஸ் வாங்கறாதாகட்டும்... இல்ல... மணமேடை அலங்காரமாகட்டும் எதுவாக இருந்தாலும் அது நம்ம ரெண்டுப் பேரோட விருப்பமும் இணைஞ்சு இருக்கணும் நம்பி. இதுன்னு இல்ல... இனிமே நாம எது செய்தாலும் அது நம்ம ரெண்டுப் பேரோட விருப்பமும் கலந்துத் தான் இருக்கணும். அதனால...” அவள் தயக்கத்துடன் நிறுத்த...

“அதனால...?” அவள் சொல்ல வருவது புரிந்தாலும் அவளாகச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று அவன் விரும்பினான்.

“நீங்களும் கடைக்கு வர்றீங்களா?” ஒருவித எதிர்பார்ப்புடன் அவள் கேட்க,

“நீ சொல்லி... நான் முடியாது சொல்வேனா... கட்டாயம் வர்றேன்” நேற்று அவன் அப்பத்தா கேட்டப் போது, ‘வேலை இருக்குது முடியாது’ என்று சொன்னவன் அவள் கேட்டதும் வேலையைக் கிடப்பில் தூக்கிப் போட்டு விட்டு அவளுடன் செல்ல முடிவெடுத்துவிட்டான். அவளுக்குச் சாதகமாகப் பதிலை அளித்து அவளைச் சந்தோசப்படுத்தியவன், அதே சந்தோசத்துடன் அலைப்பேசியை வைத்தான்.

“நேத்தைக்கு முடியாதுன்னு சொன்னே. இப்போ மட்டும் உனக்கு வர முடியுதாக்கும். அதுக்குள்ள எந்த மோகினிப் பேய் வந்து உன்னை மயக்குச்சு?” அவன் கடைக்குத் தானும் உடன் வருகிறேன் என்று சொன்னதும் தையல்நாயகிக்குச் சந்தேகம் வந்து விட்டது. காரில் ஏறியதில் இருந்து புலம்பிக் கொண்டே வந்தார்.

“அப்பத்தா... சூர்யா வரச் சொன்னா வர்றேன்... அவள் ஒண்ணும் மோகினி இல்ல... தேவதையாக்கும். எல்லாரையும் உன்னை மாதிரியே நினைக்காதே” காரை ஓட்டியப்படி தமிழ் கடுகடுத்தான்.

“ஏம்ல... நேத்து வந்தவ உனக்குத் தேவதை... அப்ப நான் என்ன பேயா?” முகத்தில் கடுமையுடன் அவர் கேட்க...

“நான் அப்படிச் சொல்லலியே... நீயா அப்படிச் சொன்னா நான் என்ன செய்ய முடியும்?” நமட்டுச் சிரிப்புடன் சொன்னவன், “அங்கே பாரு... சூர்யா வீட்டில் எல்லோரும் நிக்குறாங்க. நாம வீட்டில் போய் இதைப் பத்தி சாவகாசமா பேசிக்கலாம்... இப்போ நீ முதல்ல இறங்கு”

“ம்க்கும்... அது எங்களுக்குத் தெரியாதாக்கும்?” முகவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டே இறங்கிய அப்பத்தாவைக் கண்டு அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது.

பெரியவர்கள் இருவரும் இறங்கியதும் காரை எடுத்தவன் அங்குச் சற்றுத் தள்ளி நின்றுத் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சூரியாவைக் கண்டு... அவளைப் பார்த்ததற்கு அடையாளமாய்ச் சிரிக்க... அவன் புன்னகையில் சூரியனைக் கண்ட சூரியகாந்திப் பூவாய் மலர்ந்தாள் இந்தச் சூரியா. அவளின் மலர்ந்த முகம் என்றும் போல் இன்றும் அவன் மனதை நிறைத்தது.

“தையலு... நீ பண்றது கொஞ்ச கூடச் சரியில்ல” ஆதிமூலம் தன் மனைவி பேரனிடம் பேசிய பேச்சை ஆட்சேபிக்கும் விதமாய்ப் பேசினார்.

“நா பேசினதுல அப்டி எது சரியில்ல... கொஞ்சம் சொல்லுங்கப் பார்ப்போம்”

“சூர்யா வரச் சொல்லி அவன் வந்தா... அதுக்கு நீயும் நானும் சந்தோசப்படணும். அதை விட்டுட்டு நீ ஏன் இப்படிப் பேசற?” அவர் பேசுவதைக் கேட்ட அவர் மனையாள், ‘இவ்வளவு தான் உனக்குப் புரிந்ததா?’ என்ற ரீதியில் துச்சமாய் அவரைப் பார்த்து விட்டு,

“ம்ஹும்... ஒண்ணுந்தெரியாத கூதறை மனுசனைக் கட்டிக்கிட்டு நான் படுற அவஸ்தை இருக்கே அய்யய்யோ...” என்று சந்தானம் அளவுக்குப் புலம்பியவர்,

“உம்ம பேரன் சூரியாவை லவ்வு பண்ணிக் குடும்பம் நடத்தணுமா? வேணாமா?”

“அதுக்கும்... நீ பேசுறதுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு?”

“சம்பந்தம் இல்லாமல் இந்தத் தையல்நாயகி ஒரு காரியத்துல இறங்க மாட்டேனாக்கும். அவ மேல இவம் இரக்கப்பட்டுக் கல்யாணம் பண்ணினா... அது எத்தனை நாளைக்கு நீடிக்கும்? கொஞ்ச நாளுல புட்டுக்கிட்டுப் போயிரும். நா இப்படிப் பேசினாத் தான் இவம் சூர்யாவுக்குச் சப்போர்ட்டா இருப்பான். அவளும் ஆறுதல்

தேடி அவன் கிட்டத் தான் போவா. அப்போ தான் ரெண்டுப் பேருக்கும் இடையில அந்நியோன்யம் வரும். இவம் மாறுற வரைக்கும் நான் இப்படித் தான் இருப்பேன்... நடந்துக்குவேன். நீங்க பேசமா வேடிக்கைப் பார்த்தா மட்டும் போதும்" மனைவி சொல்லி முடித்ததும் அவரைப் பிரமிப்புடன் பார்த்த ஆதிமூலம்,

"தையலு... நான் உன்னை என்னமோ நினைச்சேன்... அரசியலுக்கு அந்தச் சாணக்கியன்னா... குடும்பத்துக்கு நீ தான்டி சாணக்கியன். என்னமா யோசிக்கிற..! எனக்குக் கூட இந்த யோசனை வரலியே"

"அதுக்குக் கொஞ்சமாவது இங்கே இருக்கணும்" தலையைத் தொட்டுக் காண்பித்து, ஆதிமூலத்தைச் சப்தமில்லாமல் ரன் அவுட் செய்து... அவர் பாராட்டைத் தூசி போல் தட்டி ஒரே ஊதாய் ஊதி தள்ளி விட்டார் தையல்நாயகி.

"சரி... உம்ம பேரன் வர்றான்... எதையாவது பேசிக் காரியத்தைக் கெடுத்துறாதீங்க" கணவனை எச்சரிக்க... அதுக்குப் பின்னர் வாயைத் திறக்க அவர் என்ன முட்டாளா?

"ஆச்சி, தாத்தா நல்லாயிருக்கீங்களா?" தன் கையைப் பிடித்துக் கொண்டு அன்பொழுகக் கேட்டச் சூரியாவின் பாசத்தைக் கண்டு மனதுக்குள் மெச்சி கொண்டார் தையல்நாயகி.

எல்லோரும் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டு கடைக்குள் நுழைய... தமிழின் பார்வை சூரியாவின் மேலேயே இருந்தது. அவளுக்கு அது தெரிந்தாலும் பெரியவர்கள் முன்னிலையில் காட்டிக் கொள்ளாமல் குனிந்தத் தலை நிமிராமல் நின்றிருந்தாள்.

கடைக்காரர் புடவையை ஒவ்வொன்றாய் எடுத்துப் போட்டுக் காட்ட... சூரியா எதை எடுப்பது என்ற யோசனையில் இருந்தாள். இருவரும் சேர்ந்து

தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தான் தமிழை அவள் அழைத்திருந்தாள். ஆனால் தையல்நாயகி முன்னால் அவனின் விருப்பத்தையும் கேட்க முடியவில்லை. போதாக் குறைக்கு அவள் அப்பா வேறு தமிழிடம் பேசிக் கொண்டிருந்தார்.

தமிழும் அவளின் தவிப்பைப் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். ஆனால் மேகநாதன் அவனிடம் பேசிக் கொண்டு இருக்கும் போது அவனாகப் பேச்சை முறித்துக் கொண்டு போவதிலும் அவனுக்கு விருப்பம் இல்லை. அதேசமயம் சூரியாவை தவிக்க விடவும் அவன் மனம் விரும்பவில்லை. எப்படியும் தன்னைக் கூப்பிடுவார்கள் என்று அவன் திடமாக நம்பிக் கொண்டு நின்றிருந்தான். அவன் நம்பிக்கையில் அவன் அப்பத்தா பெரிய கல்லை... இல்லை... கல் குவாரியையே அள்ளிப் போட்டார்.

“ஏம்மா சூர்யா... எம்புட்டு நேரமா தான் பொடவையைப் பார்த்துட்டு இருப்ப. சட்டுபுட்டுன்னு எடுத்தாத் தான் ஆம்பிளைகளுக்கு எடுக்கப் போக முடியும்” என்று சூரியாவைக் கண்டித்தவர், நல்ல சிவுப்பு நிறத்தில் உடல் முழுவதும் ஜிகு ஜிகுவெனச் சரிகை அதிகமாய் இருந்த ஒரு புடவையைக் காட்டி,

“இது நல்லாயிருக்கான்னு பாரு...” அவர் காட்டியதைக் கண்டு சூரியா மட்டும் அல்ல.. சிவகாமி கூட அதிர்ந்துவிட்டார். தள்ளி நின்று கொண்டிருந்த தமிழ் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டான். ‘இது என்ன டேஞ்சர் லைட் மாதிரி ஒரு புடவை... அப்பத்தா... வயசானக் காலத்துல சும்மாயிருக்க மாட்ட... உன்னை...’ மனதுக்குள் கடுப்புடன் நினைத்தான். அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மேகநாதனும் திகைத்துப் போய் நின்றிருந்தார்.

‘அடுத்தக் கேமை ஸ்டார்ட் பண்ணிட்டாளா? உன் நாரதர் வேலையை நடத்து... நடத்து’ மனதுக்குள் மனைவியைப் பாராட்டினார் ஆதிமூலம்.

“இங்கே வாம்மா...” சூரியாவை அருகில் அழைத்து அவன் மேல் அந்தப் புடவையைப் போட்டு அழகுப் பார்க்க... அதற்கு மேல் தாங்க முடியாமல் தமிழ்... மேகநாதனிடம் சொல்லி விட்டு அப்பத்தாவிடம் வந்தான்.

“அப்பத்தா... என் மனைவிக்கு நான் புடவை எடுத்துத் தர்றேன்... நீ உனக்குப் புடவை எடுக்கிற வேலையைப் பாரு” அவருக்கு மட்டும் கேட்கும் குரலில் கடுப்புடன் கூறியவன், சூரியாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேறு பக்கம் நகர்ந்தான். அதை ஒரு வெற்றிச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் தையல்நாயகி.

“சரி... சிவகாமி நமக்குப் புடவைப் பார்க்கலாமா?” ஒன்றும் நடவாதது போல் சிவகாமியின் அருகில் சென்று அமர்ந்துப் புடவையை ஆராய்ச்சி செய்தார். அதைக் கண்டு ஆதிமூலத்திற்குச் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டார்.

“இந்தச் சேரி நல்லாயிருக்கா...?” தன் முன் பரப்பியிருந்த புடவைகளில் இருந்து... நார்த்தங்காய் பச்சை நிறத்தில் உடல் முழுவதும் கொடி போல் தங்க சரிகையிட்டப் புடவையைக் கையில் எடுத்தவன் அவளிடம் நீட்டினான்.

“ம்... ரொம்ப நல்லாயிருக்கு நம்பி...” மெல்லிய குரலில் சொன்னவளை நிமிர்ந்துப் பார்த்தவன்,

“சும்மா... எனக்காகச் சொல்லாதே... உனக்குப் பிடிச்சியிருக்கா?”

“நான் இந்தக் கலர் தான் எடுக்கணும்ன்னு நினைச்சுட்டு வரல நம்பி. நீங்க எது சூஸ் பண்ணுறீங்களா... அதைத் தான் எடுக்கணும்ன்னு நினைச்சேன். உங்க விருப்பம் தான் என் விருப்பம் நம்பி” என்று சொன்னவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தவன், சந்தோச மிகுதியில் அவளின் தோள் மேல் கைப் போட்டுத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

“அய்யோ... நம்பி... அந்தச் சேல்ஸ்மேன் நம்மளையே பார்த்துட்டு இருக்கார். கையை எடுங்க... ப்ளீஸ்” உதட்டைச் சுழித்து அவள் கெஞ்ச... அந்தக் கெஞ்சல் அவனின் மனதுக்குள் புரியாத ஒரு உணர்வு ஒன்றை தோற்றுவிக்க... அவளின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து விலகி நின்றான்.

அதன் பின் அவன் விருப்பப்படியே அவள் தன் உடைகளை வாங்க... அதில் அவனுக்கோ மிகுந்த பெருமையாய்... கர்வமாய் இருந்தது. பிறகு எல்லோருக்கும் உடைகள் எடுக்க... தமிழ் மறக்காமல் ஆதவனுக்கும், குறிஞ்சிக்கும் உடைகள் வாங்கச் சொன்னான். அவனை நன்றியுடன் பார்த்தவளைப் பார்த்தவன்,

“குறிஞ்சி சிஸ்டர் உனக்குப் பிரண்ட் மட்டும் இல்ல... என் நண்பனின் மனைவியும் கூட...” அவனின் அலட்டல் இல்லாத வார்த்தையில் அவள் மனம் அப்படியே அவன் பால் சாய்ந்தது.

துணிக் கடையை விட்டு வெளியில் வரும் போது மதிய உணவுக்கு நேரமாகி விட்டதால்... அப்பத்தா உணவு விடுதிக்குச் செல்ல வேண்டும் என்று சொல்ல... மற்றவர்களும் பெரியவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டனர். மேகநாதன், சிவகாமி, ஆதிமூலம், தையல்நாயகி நால்வரும் ஒரு மேஜையில் அமர்ந்து கொள்ள... எங்கே அமர்வது என்று தெரியாமல் முழித்த சூரியாவைப் பார்த்து தையல்நாயகி,

“அதோ அங்கே ஒரு டேபிள் இருக்குப் பாரு...” அறையின் மூலையில் இருந்த மேஜையைச் சுட்டிக் காட்டியவர், “தமிழு வந்ததும்... அவம் கூடச் சேர்ந்து அங்கே போய் உட்காரு” என்றவர் அங்கிருந்த மெனுகார்டை படிக்க (பார்க்க...?) ஆரம்பித்தார்.

“நீயும் மாப்பிள்ளையும் சேர்ந்து உட்காருங்கம்மா...” சிவகாமியும் அவளிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே

தமிழ் அங்கு வந்துவிட... சூரியா நின்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தவன்,

“என்ன நின்னுட்டு இருக்க? உட்காரலியா?”

“தமிழு... இங்கே இடம் இல்ல... அங்கே போய் உட்காரு...” சூரியாவுக்குப் பதிலாக அப்பத்தா பதில் சொன்னார்.

“வா சூர்யா...” அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் அங்கே செல்ல... அவளும் உடன் நடந்தாள்.

“உனக்கு என்ன பிடிக்கும்? இங்கே சிக்கன் பிரியாணி சூப்பரா இருக்கும்? உனக்குச் சிக்கன் பிடிக்குமா?”

“இல்ல... நான்... வெஜிடேரியன்” தயக்கமாய் வந்தது அவள் வார்த்தைகள்.

“ஓ... பரவாயில்ல... இங்கே வெஜிடேரியன் ஃபுட்டும் கிடைக்கும். டோன்ட் வொர்ரி...” என்றவன் தனக்கும் அவளுக்கும் சேர்த்து சைவ உணவுகளை ஆர்டர் கொடுக்க... அவள் ஆச்சிரியத்துடன் அவனைப் பார்த்து,

“நீங்க வேணா சாப்பிடுங்க... எனக்கு ஒண்ணும் இல்ல...”

“இல்ல இருக்கட்டும்...” என்றவன், “ஏன் நான்வெஜிடேரியன் சாப்பிடறது இல்ல?”

“ஒரு உயிரைக் கொன்னு... அதைப் போய்ச் சாப்பிடறது பாவமில்ல...” பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டவளை ஆச்சிரியத்துடன் பார்த்தான்.

ஒரு உயிரைக் கொல்லுவது கூடப் பாவம் என்று யோசிக்கும் மென்மையான மனம் படைத்தவள்... எப்படித் தன் கையை அறுத்துக் கொண்டாள்? எந்த அளவிற்கு அவன் மேல் காதல் இருந்தால் தன் உயிரைத் துச்சமாக நினைத்து இருப்பாள்? அவன் மனம் பாகாய் உருக... தன்

வலக்கையைக் கொண்டு அவளது இடது கையைப் பிடித்துப் பார்த்தவன்... அங்கே இன்னமும் காயம் ஆறாத நிலையில் இருந்த வெட்டுப் பகுதியை அவன் விரல்கள் மென்மையாய் வருடியது.

“இந்தத் தடம் போகாதா... சூர்யா?” அவன் குரல் கரகரப்பாய் ஒலித்தது. அவன் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டு இருக்கிறான் என்பது அதிலிருந்தே அவளுக்குப் புரிந்தது.

“போனாலும் போகலாம்... இல்லைன்னா நம் காதலின் சின்னமாய் நான் இதை வச்சுக்கிறேன்...” தலையை ஒருபுறம் சாய்த்து சிரித்தவள்... அவன் கையை ஆறுதலாய் பிடித்துக் கொண்டாள்.

அவளின் வார்த்தையில் உணர்ச்சி வசப்பட்டவன்... அவள் கையைத் தூக்கிப் பிடித்து அதில் தன் உதட்டை அழுத்தமாய்ப் பதித்துத் தங்களின் காதல் சின்னத்திற்கு மரியாதை செலுத்தினான். முதன்முறையாக அவனின் முத்த ஸ்பரிசத்தை உணர்ந்தச் சூரியாவின் பூ மேனி உணர்ச்சி வேகத்தில் நடுங்கியது.

“நம்பி...” கண்கள் மூடியபடிக் கிறக்கமாய்க் கூறியவள் அவள் தோளில் தலைச் சாய... அவன் அவள் தோளில் கையைப் போட்டு அணைத்துக் கொண்டான். காமம் இல்லா அந்தக் காதல் அவன் அடிமனது வரை ஊடுருவிச் சென்றுச் அவன் தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. காதல் இல்லை... காதல் இல்லை என்று சொல்லியே அவன் தன்னையும் அறியாமல் காதலில் விழுந்து கொண்டிருந்தான்.

உணவு விடுதியை விட்டு வெளியில் வரும் வரை இருவருக்கும் இடையில் மௌனமே மொழியாய் அமைய... கைகள் கோர்த்திருக்க... இருவருமே ஒருவித மோன நிலையில் இருந்தார்கள். அப்பொழுது எங்கிருந்தோ வந்த ஒருவன் சூரியாவை தாண்டிச் செல்வது போல் சென்றவன் வேண்டுமென்றே அவளை இடித்துக் கொண்டு போனான்.

அதைக் கண்டு தமிழ் அவனை அடிக்கக் கையை ஓங்கும் முன்... சூரியா தன் கையை அவன் கன்னத்தில் வேகமாய் இறக்கி இருந்தாள்.

“ஏண்டா... பொறுக்கி ராஸ்கல்... எவ்வளவு தைரியம் இருந்தா இடிப்ப...? உங்களுக்கு எல்லாம் பொண்ணுங்கன்னா கேவலமா போயிருச்சா?” சொல்லியபடி அவனின் மற்றொரு கன்னத்தில் ஓங்கி இன்னொரு அடி அடித்ததில்... இடித்தவன் மிரண்டு போய் ஓடிவிட... அவளின் ஆவேசம் கண்டு தமிழ் தான் வெலவெலத்துப் போய்விட்டான்.

அவள் அடித்தது என்னமோ தன்னை இடித்தவனைத் தான்... ஆனால் தமிழுக்கோ தானே அந்த அடியை வாங்கியது போல் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அதிர்ச்சியில் சிலைப் போல் நின்றிருந்தான்.

## உயிர் : 13

“ஏம்ல... உம் தேவதை என்ன ரவுடி ரெங்கம்மா மாதிரி அந்த அடி அடிக்குறா... பார்த்துலே கல்யாணத்துக்கு அப்புறம் உன்னையும் போட்டு அப்படிக் கும்மிறப் போறா?” தையல்நாயகி பேரனைப் பார்த்துக் கேலி பேசினார்.

“அப்பத்தா... நானே இங்கே எரிச்சல்ல இருக்கேன்... நீ வேற... கொஞ்ச நேரம் சும்மா இரு” எரிச்சலுடன் மொழிந்தவன் சோபாவில் சாய்ந்தமர்ந்து விட்டத்தை வெறித்தான்.

அவன் மனக்கண்ணில் சூரியா கை ஓங்கி அடித்த காட்சியே வந்து போனது. பயந்தச் சுபாவம் என்று நினைத்துக் கொண்டிருந்த அவளுக்கு எங்கே இருந்து அவ்வளவு வலிமை... தைரியம் வந்தது? அவளை இடித்தவனை அடித்த ஒவ்வொரு அடியும் அவனுக்கே விழுந்தது போல் அல்லவா இருந்தது. ஒருவன் அவள் மேல் உரசியதற்கே இப்படிக் கோபப்படுபவள்... அவனின் மறுபக்கம் தெரிந்தால்... எப்படிக் கோபப்படுவாள்? யோசனையில் இருந்தவன் மனம் இருதலைக் கொல்லி எறும்பாய்த் தவித்தது.

“தமிழு... என்னய்யா... யோசனை?” தையல்நாயகி அவன் பக்கத்தில் வந்து அமர்ந்தார்.

“ஒண்ணுமில்ல அப்பத்தா...” அவர் முகம் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு பதில் சொன்னப் பேரனைக் கண்டு அவர் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

“தமிழு... சூர்யா அந்தப் பொறுக்கியை அடிச்சதையே நினைச்சிட்டு இருக்கியா?”

“அப்பத்தா... இந்தக் கல்யாணம் சரி வருமா?”

“ஏன் தமிழு இப்பப் போய்… இப்படியொரு கேள்வி கேக்குற?”

“இல்ல அப்பத்தா… இன்னைக்கு இல்லைன்னாலும் என்னைக்காவது ஒருநாள் நான் செஞ்சத் தப்பு அவளுக்குத் தெரிய வந்தால்… அவனுக்குக் கிடைச்ச அடி தான் எனக்கும் கிடைக்கும். அவள் எனக்கு எந்தத் தண்டனைக் கொடுத்தாலும் நான் சந்தோசமா அதை ஏத்துக்குவேன். ஆனால் அவள் ஏதும் தப்பா முடிவு எடுத்துட்டா? அவளுக்கு ஒண்ணுன்னா என்னாலத் தாங்க முடியாது. நான் இந்தக் கல்யாணத்துக்கு அவசரப் பட்டுட்டேனோன்னு தோணுது. எனக்கு அவளை நினைச்சா பயமாயிருக்கு அப்பத்தா” வேதனை சுமந்திருந்த அவன் முகத்தைக் கண்டு அவருக்கும் வேதனையாகத் தான் இருந்தது.

“அதெல்லாம் ஒண்ணுமில்ல ராசா. அவளுக்கேத்தப் புருசன் நீ தான்ய்யா. அவளை நினைச்சு நீ மருகுறப் பாரு… இந்த அன்பு ஒண்ணுப் போதாதாய்யா… உன் வாழ்க்கை அந்த ராசாவாட்டம் அமோகமா இருக்கும். நீ பயப்பட வேண்டியதே இல்ல” சிறு குழந்தைக்கு ஆறுதல் சொல்வது போல் அவர் சொல்ல… அவன் கொஞ்சம் மனம் தெளிந்தான்.

“ஒரு பொண்ணோட சுண்டு விரல கூட அவ விருப்பம் இல்லாம தொட முடியாது. அவ விருப்பம் இல்லாமல் அவம் தொட்டான்… அதான் அவ அடிச்சுட்டா. ஆனா உம் மேல அவளுக்குக் கொள்ளைப் பிரியம் தமிழு. எந்தக் காரணத்தக் கொண்டும் அவ உன்ன வெறுக்க மாட்டா. அப்படியே உன்னப் பத்தித் தெரிஞ்சாலும்… மன்னிச்சு விட்டுருவா பாரு. அவ உன்ன உசுருக்கு உசுரா நேசிக்கிறா தமிழு… அதனால அவ உன்ன விட்டுப் போக மாட்டா”

“உண்மையாவாச் சொல்ற அப்பத்தா…? பின்னாடி எந்தச் சிக்கலும் வந்துறாதே?” அவனுக்கு ஏனோ சூரியாவின் காதலை இழக்கச் சம்மதமில்லை. அவனின் மனது அவளின் காதலை… அருகாமையை மிகவும் விரும்பியது.

“உண்மையாத் தான் சொல்றேன் தமிழு” அவர் சொல்லில் மனம் தெளிந்தவன்,

“சரி அப்பத்தா... நான் கடைக்குப் போயிட்டு வர்றேன். நான் வர கொஞ்சம் லேட்டாகும். நான் வெளியில் சாப்பிட்டு வந்திர்றேன். நீ எனக்காகக் காத்திருக்காதே” என்றபடி எழுந்தவன் வெளியில் சென்றான்.

“மனசுல இம்புட்டுக் காதலை வச்சுட்டுப் பயபுள்ள... இந்தத் தவி தவிக்குதே” தையல்நாயகி கணவரிடம் கண் கலங்கினார்.

“இவம் கதிரு வாழ்க்கையை மாதிரி தன் வாழ்க்கையும் ஆகிருமோன்னு பயந்துத் தான் கல்யாணம் வேண்டாம்னான். இப்போ சூர்யாவோட இன்னொரு பக்கம் பார்த்ததுல பயந்துப் போய்ட்டான்” ஆதிமூலம் சொன்னதைக் கேட்டுத் தையல்நாயகி,

“இவம் தனக்காகப் பயப்படல. அவளுக்காகப் பயப்படுறான். ரெண்டுப் பேரு மனசுலேயும் காதல் இருக்கு. அதனால கவலையில்ல...”

“ம்... நீ சொல்றதும் சரி தான்” என்றதோடு பேச்சை முடித்துக் கொண்டார் ஆதிமூலம்.

அலுவலகத்திற்கு வந்தவனுக்கு வேலை காத்திருக்க... தன் மனதின் கவலையைச் சற்றுத் தள்ளி வைத்தவன் வேலையில் மூழ்கினான். வேலை முடிந்து அவன் தன் கைகளை முறுக்கி சோம்பல் முறித்தபடி கடிகாரத்தைப் பார்க்க... இரவு பத்து மணியாகி இருந்தது. வீட்டிற்குக் கிளம்ப வேண்டியது தான் என்று எண்ணி கார் சாவியை எடுத்துக் கொண்டு வெளியில் வரும் போது அவன் அலைப்பேசி அடித்தது.

“சொல்லு ஆதி...?” அலைப்பேசியைக் காதுக்குக் கொடுத்துக் கொண்டே காரில் ஏறினான் தமிழ்.

“என்னடா… என்ன என்னமோ பேசுறியாம்? என்னடா ஆச்சு உனக்கு?” ஆதவன் படபடவெனப் பேசியதில் இருந்தே… அப்பத்தா இவனிடம் நடந்ததைச் சொல்லி இருக்கிறார் என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

“ம்ப்ச்… ஒண்ணுமில்லடா… அப்பத்தா உன்ட்ட பேசினாங்களா?”

“ஆமாம்… நீ சூர்யாவை நினைச்சு வருத்தப்பட்டன்னு சொன்னாங்க”

“ம்… என்னை மாதிரி ஒருத்தனைக் கட்டிக்கிட்டு அவ ஏதும் கஷ்டப்படுவாளோன்னு பயமாயிருக்குடா”

“இதுக்குத் தான் தமிழ் நான் தலைப்பாடாய் அடிச்சுகிட்டேன்… பெண்கள் சவகாசம் வேண்டாம்ன்னு. நீ… நான் சொன்னதைக் கேட்டாத் தானே” ஆதவன் சொன்னதும் மறுபுறம் தமிழ் மௌனித்தான். அவன் கண் முன் கதிரின் வாழ்க்கைப் படமாக ஓடியது.

‘சாரி ஆதி… எல்லாப் பெண்களும் அந்த ராட்சசி மாதிரி நினைச்சேன். ஆனால் அப்படி இல்லை… தேவதைகளும் இருக்காங்கன்னு அந்தக் கடவுள் சூர்யாவை என் கண்ணில் காட்டியிருக்காரு. நான் செஞ்சது தவறுன்னு தோணுது. ஆனால் இப்போ உணர்ந்து என்ன செய்ய… காலம் கடந்த யோசனை’ ஆதவனுக்குப் பதிலளிப்பதாய் தனக்குள் பேசிக் கொண்டிருந்தான் தமிழ்.

“ஏய் தமிழ் இருக்கியா என்னடா… சத்தமே இல்ல”

“ஆங்… இருக்கேன் ஆதி. அப்போ நீ சொன்னது இப்போ புரியுதுடா. நான் என்ன செய்யட்டும்?” குழந்தைப் போல் கேட்பவனை அதற்கு மேல் ஆதவனாலும் திட்ட முடியவில்லை. நண்பனுக்கு நல்லவிதமாய் வழிக் காட்டுவது தன் கடமை என்று எண்ணியவன்,

“இனிமேலாவது ஒழுங்கா... திருந்தி வாழ்ற வழியைப் பாரு. எல்லாம் சரியாப் போகும்”

“ம்... நிச்சயமாய் ஆதி” உறுதியுடன் கூறியத் தமிழைக் கண்டு ஆதவனுக்கு நிம்மதியாய் இருந்தது.

“தமிழ்... நான் ஒண்ணுக் கேட்டாத் தப்பா நினைக்க மாட்டியே?”

“டேய் என்னடா அப்படிக் கேட்க போற... அஸ்திவாரம் எல்லாம் பலமாயிருக்கு”

“அடி கொஞ்சம் பலமோ...?” ஆதவன் என்ன சொல்கிறான் என்று முதலில் ஒன்றும் புரியாமல் முழித்தவன்... பின் புரிந்து கொண்டு,

“கொஞ்சம் இல்லடா... ரொம்பவே பலமா விழுந்தது...” தமிழ் சொல்லவும் ஆதவன் சிரித்து விட்டான். அவனின் சிரிப்புத் தமிழையும் தொற்றிக் கொண்டது.

“அங்கே எப்படி... சிஸ்டரும் அப்படித் தானா?”

“அன்னைக்குக் குறிஞ்சி சூர்யாவை அடிச்சதத் தான் நீ கேட்டியே. தினமும் வீட்டில் பூரிக் கட்டைப் பறக்கத் தான் செய்யுது. அதிலிருந்து எப்படித் தப்பிக்கிறதுன்னு தான்... நான் இப்பயெல்லாம் அதிகம் யோசிக்கிறேன்” ஆதவன் பாவம் போல் சொன்னதைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்த தமிழ்,

“அப்போ புக்ல வர்ற ஜோக் எல்லாம் உண்மைங்கற...”

“இல்லையா பின்னே... யாரோ என்னைப் போல் அனுபவிச்சவன் தான் அப்படி எழுதியிருக்கணும்” ஆதவன் போலியாய் நொந்தப்படிப் பேச... அதுவரை அவன் மனதில் அழுத்திக் கொண்டிருந்த கவலைகள் எல்லாம் துணிக் கொண்டு துடைத்தார் போல் காணாமல் போனது. தோள்

கொடுப்பான் தோழன் என்று சும்மாவா சொன்னார்கள் மனதுக்குள் நண்பனை நன்றியுடன் நினைத்துக் கொண்டான்.

வீட்டிற்கு வந்து படுக்கையில் விழும் வரை ஆதவனுடன் பேசியதை நினைத்து நினைத்துப் பார்த்தவன் மனதுக்குள் சிரிப்புப் பொங்கி வழிந்தது. அதே சிரிப்புடன் படுத்தவனை அவனின் அலைப்பேசி அழைத்தது. சூரியா அழைப்பதை உணர்ந்து அதை உடனே எடுத்துக் காதில் வைத்தான்.

“நம்பி… தூங்கிட்டீங்களா?”

“இல்ல… சொல்லு”

“நான் அந்தப் பொறுக்கியை அடிச்சதில் இருந்து நீங்க என் கூடச் சரியாவே பேசல. நான் அப்படி நடந்துகிட்டது உங்களுக்குப் பிடிக்கலையா? என் மேல் கோபமா? நான் இன்டீசென்ட்டா நடந்து கிட்டதா நீங்க ஃபீல் பண்ணினா… ஐயம் சாரி… மன்னிச்சுக்கோங்க” அவளின் மன்னிப்பைக் கேட்டதும் அதுவரை அரித்துக் கொண்டிருந்த அவனின் மனக்கவலை எல்லாம் நொடியில் பறந்து போனது.

“அப்படியெல்லாம் இல்ல… அமைதிப் பூங்காவாய் இருக்கிற நீ… எப்படித் திடீர்ன்னு சொர்ணக்கா ரேஞ்சுக்கு மாறுன? அதான் கொஞ்சம் ஷாக் ஆகிட்டேன்” அவன் சிரித்தபடி சொன்னதும்… அவனுக்குக் கோபமில்லை என்றதும் அவள் மனம் நிம்மதியானது.

“நான் அமைதி தான்… இவ்வளவு ஏன் பயந்தச் சுபாவம் உள்ள பொண்ணு தான். ஆனா எனக்கு ஆபத்து வர்றப்பவும் அதே மாதிரி அமைதியா… பயந்துட்டு இருக்கணும்ன்னு அவசியமில்லையே. எந்த மாதிரியான பெண்ணா இருந்தாலும்… தனக்கு ஆபத்துன்னா எதிர்த்துப் போராடத் தான் செய்வா” அவள் பேசப் பேச… அவனுக்குள் குற்ற உணர்ச்சி அதிகரிக்க அமைதி காத்தான்.

அதன் பிறகு அவள் என்ன பேசினாள்... இவன் என்ன பதில் சொன்னான்? எதுவுமே அவனுக்குத் தெரியாது? அவன் தன் யோசனையில் உழன்று கொண்டிருந்தான். அப்பத்தா சொல்லிய வார்த்தைகளும்... சூரியா பேசிய பேச்சும் அவன் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

தன்னுடன் படுக்கை வரை பகிர்ந்து கொண்ட பெண்கள் எல்லாம்... அவர்களாக மனம் உவந்து... தன் மேல் நம்பிக்கை வைத்துத் தான் தங்களை இழந்தார்களா? தான் அவர்களை அவ்வளவு துச்சமாகத் தூக்கி எறிந்தப் போது... சிலர் அவனைத் திட்டினாலும்... வேறு வாழ்க்கைத் தேடிப் போய்விட்டனர். பலர் அவனுக்குச் சாபம் தான் கொடுத்துச் சென்றனர். அதிலும் ராகினி கொடுத்த சாபம்... அவளின் வார்த்தைகள் மனதில் எழுந்து அவனை இம்சித்தது.

‘என்னைக் கேள்விக் கேட்க பெண் வேண்டாம்... என் மனசாட்சியே கேள்வி கேட்குதே... நான் செய்தத் தவறுகளை உணர்ந்துத் திருந்தி விட்டேன். சூர்யா என் தவறுகள் உனக்குத் தெரியும் போது என்னை மன்னிப்பாயா?’ ஒரு பக்கம் அவன் நல்ல மனம் தன் தவறுகளை எண்ணித் திருந்திப் புலம்ப... மறுபக்கம் அவனின் வேதனையடைந்த மனது,

‘பெண்கள் என்றாலே பேய்கள்... சுயநலப் பிசாசுகள்... பெண்கள் நல்லவர்கள் என்றால்... ஏன் கதிரின் மனைவி அப்படி நடந்து கொண்டாள்? அவர்கள் சந்தர்ப்பவாதிகள். நேரத்திற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்வார்கள். அவர்களை நம்பாதே’ என்று வாதிட்டது.

அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான். பின் மெதுவே எழுந்துக் குளியலறைச் சென்று முகத்தில் தண்ணீர் அடித்துக் கழுவியவன், சற்று நிதானித்தான். வெளியில் வந்தவன் கொஞ்சம் அமைதியாய் யோசித்தான்.

‘கதிரின் மனைவி… நான் பழகிய பெண்கள்… எல்லாம் அது மாதிரி இருந்திருக்கலாம். ஆனால் சூர்யா அந்த மாதிரிப் பெண் இல்லை. அவள் மிகவும் நல்லவள். எனக்கு அவள் காதல் வேண்டும். அவள் அன்பு வேண்டும். நடந்து முடிந்ததை யாராலும் மாற்ற முடியாது. ஆனால் நடக்கவிருப்பதை என்னால் மாற்ற முடியும். ஆம்… இனிமேல் சூர்யாவிற்கு நல்ல கணவனாய் இருப்பேன். அவளுக்கு மனதால் கூடத் துரோகம் நினைக்க மாட்டேன்’ மனதுக்குள் உறுதியாய் சொல்லிக் கொண்டான். உறுதியான முடிவு எடுத்த பின் தான் அவன் மனம் தெளிவானது.

**************************************************

“கெட்டிமேளம்… கெட்டிமேளம்…” குரல் ஒலிக்க… மேளமும் நாதஸ்வரமும் முழங்க… அந்தத் தேவர்கள் சாட்சியாகத் தமிழ், சூரியாவின் கழுத்தில் மங்கலநாணைப் பூட்டினான். அந்நேரம் சூரியாவின் கண்களில் வழிந்த அதீத காதலில் அவன் அப்படியே மகுடிக்கு மயங்கும் பாம்பைப் போல் மயங்கித் தான் போனான்.

தான் தேர்வுச் செய்தப் பச்சைப் பட்டில் தேவதைப் போலிருந்தவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தவன், சட்டென்று அவள் தோள்பட்டையில் கை வைத்து அவளைத் தன் அருகில் இழுத்து… அவள் நெற்றியில் முத்தமிட்டுத் தன் மகிழ்ச்சியை அவன் வெளிப்படுத்தினான். அவனின் செயலில் அருகிலிருந்தவர்கள் நகைக்க… சூரியா முகம் சிவக்கத் தலைக் குனிந்தாள்.

“டேய் தமிழ்… பக்கத்தில் நாங்க எல்லாம் இருக்கோம்டா” ஆதவன் குரல் கொடுக்க…

“உன்னை யார்டா பார்க்கச் சொன்னது…? குறிஞ்சி சிஸ்டர் முதல்ல இவன் கண்ணை மூடுங்க” தமிழ் குறிஞ்சியைப் பார்த்துச் சொன்னான்.

“அண்ணா... கவலையே படாதீங்க... முதல்ல அவர் வாயை மூடுறேன். அதுக்கப்புறம் வாய் பேசினாத் தானே”

“செல்லம்... நீ என் வாயை மூடுவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அது என் விருப்பப்படி...” குறிஞ்சியின் காதில் கிசுகிசுப்பாய் ரகசியமாய்ச் சொல்லிய ஆதவன் தன் பார்வையை அவளின் உதட்டின் மேல் பதிக்க... அவன் பார்வையில் தெரிந்த வேட்கையில் அவள் உள்ளுக்குள் உருகியது.

“டேய் ஆதி... நாங்க எல்லாம் இங்கே தான் இருக்கோம்” இப்பொழுது தமிழ் ஆதவன் பேசியதைத் திருப்பிப் பேச, குறிஞ்சி தன் மயக்கம் தெளிந்துக் கணவனைச் செல்லமாய் முறைத்தாள்.

“ச்சு... என்ன இது? எல்லோரும் இருக்கும் போது...” தன் முழங்கையால் அவன் விலாவில் அவள் இடிக்க... அதைக் கண்டு எல்லோரும் சிரிக்க... அங்கே மகிழ்ச்சி அலைப் பரவியது.

ஆதிமூலமும், தையல்நாயகியும் பேரனின் கல்யாணத்தைக் கண்கள் குளிரப் பார்த்தனர். அவர்களின் மனமும் குளிர்ந்துப் போய் நிறைந்திருந்தது. அதிலும் தமிழ் இந்தளவுக்குச் சூரியாவிடம் அன்போடு இருந்தது அவர்களுக்குப் பெருத்த நிம்மதியை அளித்தது. மேகநாதன், சிவகாமி இருவரின் மனதும் பெரும் பாரம் நீங்கிய உணர்வில் இருந்தது. மகளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்த திருப்தியில் சந்தோசம் அடைந்தனர். பரணி மட்டும் அக்காவைப் பிரியப் போகிறோம் என்று கவலையில் இருந்தான்.

திருமணம் முடிந்துத் தமிழின் வீட்டிற்கு அனைவரும் செல்ல... அங்கே மணமக்களுக்குப் பாலும் பழமும் கொடுக்கப்பட்டது. அவ்வளவு நாள் காதல், கல்யாணம் என்று விளையாட்டாய் நினைத்துக் கொண்டிருந்த சூரியாவுக்கு... தமிழின் வீட்டிற்குள் காலடி வைத்ததும்...

மனதில் பயப்பந்து உருள ஆரம்பித்தது. அவளின் முக மாற்றம் தமிழின் கண்ணில் பட்டது. அவள் கையை ஆறுதலாக அழுத்திப் பிடித்துக் கொண்டு, ‘நான் இருக்கிறேன்…’ என்பது போல் கண்களை மூடித் திறந்தான். அவனின் அந்தச் சிறு செயலில் அவளின் மனம் அலைப்புறுதல் நின்று அமைதியடைந்தது.

“சூர்யா… இனியும் நீ சின்னப் பிள்ளை மாதிரி நடந்துக்கக் கூடாது. பெரியவங்களுக்கு மரியாதைக் கொடுத்து நடந்துக்கணும். நீ தான் மொத்த வீட்டுப் பொறுப்பையும் பார்த்துக்கணும். மாப்பிள்ளையை அனுசரிச்சு நடந்துக்கோ. அவர் கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும்… நீ பெரியவங்க முன்னாடி பதவிசா நடந்துக்கணும். இதையும் நீ தான் அவருக்குச் சொல்லணும்” இப்படி நூறு பக்கத்துக்கு அறிவுரை என்ற பெயரில் சிவகாமி பாடம் எடுக்க… சூரியாவுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது.

அங்கே வந்த தையல்நாயகி அதைக் கவனித்துவிட்டார். அவர் சூரியாவின் அருகில் வந்தவர், “ஏம்மா… சூர்யா கவலையா இருக்க… நானும் உன்னைப் போல் ஒண்ணும் தெரியாமல் வந்தவத் தான். என்ன மாதிரி உனக்கும் போகப் போகப் பழகிரும். சிவகாமி… நீ ஏன் பச்சைப் புள்ளைய பயமுறுத்துற…? அதுபாட்டுக்கு உங்க வீட்டுல இருக்கிற மாதிரி இருக்கட்டும். நான் அவள நல்லாப் பார்த்துக்குவேன். நீ கவலைப்படாதே”

“இல்லைங்கம்மா… அதெல்லாம் நீங்க அவளை நல்லாப் பார்த்துக்குவீங்கன்னு எனக்குத் தெரியும்” என்று சொல்லிய சிவகாமி மகளை அணைத்துப் பிரியா விடைப் பெற, மேகநாதனுக்குப் பொண்ணைப் பிரிவது துக்கமாய் இருந்தது. பரணி வாய்விட்டு அழுதுவிட்டான். அதைக் கண்டு சூரியாவும் அழுதாள். தமிழ் அவளை ஆதரவாய் தன் கையணைப்பிலேயே வைத்திருந்தான்.

****************************************

இரவின் தனிமையில் தமிழின் அறைக்குள் நுழைந்த சூரியா தயக்கத்துடன் கதவருகிலேயே நின்றாள். காதலனாய் தமிழிடம் அவள் பேசியிருந்தாலும்... கணவனாய் அதுவும் இப்படித் தனிமையில் சந்திப்பது இதுவே முதல் முறை என்பதால் அவளுக்குத் தயக்கமாகவும், வெட்கமாகவும் இருந்தது. கட்டிலின் மேல் அமர்ந்திருந்த தமிழ் அவளின் வரவை உணர்ந்துத் திரும்பிப் பார்த்து,

“என்ன சூர்யா அங்கேயே நின்னுட்ட... இங்கே வா?” அவன் இயல்பாக அவளை அழைக்க... அவளுக்கோ நாணத்தில் கால்கள் தயங்கியது.

“எதுக்கு இவ்வளவு தயக்கம்?” என்றபடி அவள் அருகே வந்தவன், “ரிலாக்ஸ் பேபி...” என்று அவள் தோளை ஆறுதலாய் பற்றி... அவளை அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்தான். அவள் மௌனமாய் அமைதியாய் தலையைக் குனிந்துக் கை விரல்களை ஆராய்வது போல் பார்த்துக் கொண்டிருக்க... அவன் குனிந்திருந்த அவள் தலையைப் பார்த்தான்.

பல பெண்களைப் பலவிதமாகக் கையாண்டவனுக்குத் தன் மனைவியை எப்படிக் கையாளுவது? என்று தெரியவில்லை. தன்னுடைய செயல் ஏதாவது ஒரு விதத்தில் அவள் மனதைக் காயப்படுத்தி விடுமோ என்று உள்ளுக்குள் அஞ்சினான். தமிழிடம் இருந்து எந்த வார்த்தையும் வரவில்லை என்றதும்... சூரியா அவனை நிமிர்ந்துப் பார்த்தாள். அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து, தமிழ் அவள் கையை மெல்ல மென்மையாய்ப் பற்றினான்.

“மெகந்தி நல்லாச் சிவந்திருக்கு இல்ல...” ஏதோ பேச வேண்டும் என்று அவன் பேச, அவளோ அவன் தொடுகை உண்டாக்கிய கிளர்ச்சியில் அவஸ்தையாய் நெளிந்தாள். ஆனால் அவன் அதை உணரவில்லை. செக்க செவேலென்று சிவந்திருந்த மருதாணிச் சிவப்பைப்

பார்த்தவனுக்கு... அன்று ஆதவன் வீட்டில் மூதாட்டி ஒருவர் சொன்னது அவனுக்கு அந்த நேரத்தில் நியாபகம் வந்தது. அதை நினைத்தும் அவன் முகம் பூவாய் மலர்ந்தது.

“ஆதி வீட்டில் அந்தப் பாட்டி சொல்லிச்சே... மெகந்தி நல்லாச் சிவந்தா... ஹஸ்பெண்ட் மேல அதிக லவ் இருக்கும்ன்னு. அப்படின்னா உனக்கு என் மேல் அதிக லவ் இருக்கா?” அவள் மனம் பற்றித் தெரிந்து இருந்தும் அவள் வாயால் கேட்க விரும்பி அவன் கேட்டான்.

“லவ் இல்லாதவங்கத் தான் உங்களுக்காகக் கையை அறுத்துக்கிட்டாங்களாக்கும்” அவனின் வார்த்தைக் கேட்டு அவள் செல்லமாய்ச் சிணுங்கினாள்.

அந்தச் சிணுங்களில் தன்னைத் தொலைத்தவன், மெல்ல அந்தக் காயத்தை வருடி... குனிந்து அதில் முத்தமிட்டான். அந்தக் காயத்தில் முத்தமிடும் போது அவள் உள்ளங்கையில் இருந்த மருதாணி வாசம் அவனைச் சுண்டி இழுத்தது. அவள் கைகள் இரண்டையும் அகல விரித்து வைத்து அதில் முகம் புதைத்து மருதாணி வாசனையை நுகர்ந்தான்.

“சூப்பர் ஸ்மெல் இல்ல...” முகத்தை நிமிர்த்தாமல் அவன் கேட்க... அவளிடமிருந்து பதிலில்லை. அவன் நிமிர்ந்து அவள் முகம் பார்க்க... அவளோ கண்களை மூடி, உதடுகள் துடிக்க... உணர்வின் ஆதிக்கத்தில் இருந்தாள்.

அவள் கைகளில் அவன் மீசை முடி உராய்ந்ததில் அவள் உணர்வுகள் தூண்டப்பட... அதில் அவள் சித்தம் கலங்கி அவன் தோளில் பூமாலையாய் சரிந்தாள். அவளின் பூப் போன்ற தேகம் அவன் மேல் விழவும் அவனின் உணர்வுகளும் எங்கெங்கோ பறந்துச் செல்ல ஆரம்பித்தது. தானும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாதவனாய்... அவளை அணைத்து அவன் கைகள் அடுத்தக் கட்டத்திற்கு முன்னேறியது. என்ன தான் அவன் உணர்ச்சிவசப்

பட்டாலும் அவளைக் கண்ணாடி பாத்திரம் போல் மென்மையாக... மிகுந்த கவனத்துடன் கையாண்டான்.

இது நாள் வரை காமம் மட்டுமே அவன் கண்களையும், மனதையும் மறைத்திருந்தது. முதன் முறையாக ஒரு பெண்ணின் காதலை உணர்ந்து... தன் செயலால் அவள் மனம் காயப்பட்டு விடுமோ என்று பார்த்து பார்த்து அவன் நடந்து கொள்வது கண்டு அவனுக்கே தன்னைக் குறித்து ஆச்சிரியமாக... அதேசமயம் அதிசயமாக இருந்தது. வேகமும் மூர்க்கமும் கொண்டு மற்ற பெண்களுடன் அவன் கூடிய கூடல் தராத மன அமைதியை... சூரியாவுடனான மென்மையான காதலான இந்தக் கூடல் அவனுக்குத் தந்தது.

அவனின் தொடுகையில் சில சமயம் பூவாய் மலர்ந்து... சில சமயம் அலைக் கடலாய் பொங்கி எழுந்து... எனச் சூரியா காட்டிய பல்வேறு பரிணாமங்களில்... அனுசரணையில் தமிழ் மொத்தமாய் அப்படியே அவள் காலடியில் வீழ்ந்துத் தான் போனான். அதிலிருந்து மீள அவன் நினைக்கவே இல்லை.

தன் வாழ்நாள் முழுவதும் அவள் அன்பில்... காதலில்... வாழ வேண்டும் என்று அவன் மனம் விரும்பியது. உயிர் பிரியும் நேரத்தில் கூட அவள் மடியில்... அவள் அணைப்பில் பிரிய வேண்டும் என்று அந்தக் கணம் அவன் மனம் பேராசைப்பட்டது.

## உயிர் : 14

“சூர்யா... சூர்யா...” மாடியிலிருந்து கீழ் நோக்கிக் கத்தினான் செந்தமிழ்நம்பி. காலையில் எழுந்ததும் மனைவியைச் செல்லமாகச் சீண்டிக் கொஞ்ச வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் கண்களைத் திறவாமல் பக்கத்துப் படுக்கையைக் கைகளால் துளாவ... அது காலியாக இருந்தது. மெதுவே கண் விழித்தவன் அறையைச் சுற்றித்

தன் கண்களைச் சுழல விட்டான். அவன் மனைவி அங்கே இருப்பதற்கான அறிகுறி இல்லை.

“ச்சே... எங்கே போனா அவ?” வாய்விட்டுப் புலம்பியபடி எரிச்சலுடன் எழுந்து அமர்ந்தவன் கண்ணில்... கட்டிலின் பக்கவாட்டு மேஜையின் மீது இருந்த ப்ளாஸ்க்கும், கூடவே இருந்த ‘காபியைக் குடிக்கவும்’ என்ற குறிப்பும் தென்பட, எரிச்சல் கோபமாய் மாறியது. காகிதத்தைக் கசக்கித் தூர எறிந்து விட்டு, அறையை விட்டு வெளியில் வந்தவன் மேலிருந்தபடி மனைவியை அழைத்தான்.

“ஆச்சி... அவங்க கூப்பிடறாங்க...” சமையலறையில் தையல்நாயகி சொல்லச் சொல்ல... கோழிக் குருமா வைத்துக் கொண்டிருந்த சூரியா அவரைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

“எதுக்கு இந்தக் கத்துக் கத்துறவன்... ஏம்மா சூர்யா... காப்பியக் கொண்டு போய் வச்சியா என்ன?” அப்பத்தா யோசனையுடன் கேட்க,

“நீங்க சொன்னதும் வச்சிட்டேன் ஆச்சி...” அவசரமாகப் பதிலளித்தவளைப் பார்த்து அவர் ஏதோ சொல்ல வரும் முன்... அதற்குள் மூன்று தடவை மனைவியை ஏலம் போட்டு விட்டான் தமிழ்.

“நீ போம்மா ... நான் பார்த்துக்குறேன்” அவர் சொல்ல...

“நீங்க போய் உட்காருங்க ஆச்சி... இன்னும் ஐஞ்சு நிமிசம் தான்... இதை இறக்கியதும் நான் போய்ப் பார்க்குறேன்” அவரை வேலை வாங்குவதற்கு விருப்பம் இல்லாமல் மறுத்தவள், அவரை ஓய்வு எடுக்க அனுப்பி வைத்துவிட்டு மீதம் இருந்த வேலைகளை நொடியில் செய்து முடித்தாள்.

சமையல் முடிந்ததும் எல்லாவற்றையும் உணவு மேஜையில் வைத்து விட்டு... மீண்டும் ஒருமுறை எல்லாம் சரியாக இருக்கிறதா... என்று சரி பார்த்துவிட்டே தங்கள் அறைக்குச்

சென்றாள். வரவேற்பறையில் இருந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஆதிமூலம்,

“ரொம்ப நல்ல பொண்ணு தையலு… . அவம் காயப்பட்ட மனசுக்கு ஏத்த மாதிரி அருமையான பொண்ணாத் தான் அந்தக் கடவுள் கொடுத்திருக்காரு” கணவர் சொன்னதைக் கேட்டத் தையல்நாயகி, அதை ஆமோதிப்பது போல் தலையசைத்தார். இருவரின் மனமும் சூரியாவின் நடவடிக்கையில் நெகிழ்ந்திருந்தது.

அறைக்குள் நுழைந்த தன்னை ஏறெடுத்தும் பார்க்காமல் கட்டிலில் முகத்தைத் திருப்பிக் கொண்டு அமர்ந்திருந்த கணவனைக் கண்டதும், அவன் கோபத்தில் இருப்பது சூரியாவுக்குப் புரிய… அவன் அருகில் நெருக்கமாய் அமர்ந்தவள்,

“என்னோட நம்பிக்கு… என்ன கோபம்?” கொஞ்சும் குரலில் அவன் தோளில் உரசிக் கொண்டு கேட்டவளைக் கண்டு, அவனாலும் தன் கோபத்தை அதிக நேரம் இழுத்துப் பிடிக்கக் முடியவில்லை.

அவளை அணைத்துக் கொண்டு கட்டிலில் விழுந்தவன், அவள் கூந்தலில் முகம் புதைத்து, அதன் வாசத்தை நுகர்ந்தபடி, “நேத்துக் கல்யாணமானவன் எதுக்குப் பொண்டாட்டியைத் தேடுவான்னு உனக்குத் தெரியாது? காலையில் என்னைக் கவனிக்கிறதை விட்டுட்டு எங்கே போன பேபி?” கேள்வி என்னமோ கோபமாய்க் கேட்பது போல் இருந்தாலும், ஏனோ அவனின் குரல் கொஞ்சிக் கெஞ்சித் தாபத்துடன் ஒலித்தது.

“ம்… உங்க ஆசைப் புரியுது. ஆனா ஆச்சி பாவம் இல்ல. அவங்கத் தனியா வேலைச் செய்றதைப் பார்த்துட்டு நான் சும்மா இருக்க முடியுமா? அதான் அவங்க கூடப் போய் ஹெல் பண்ணிட்டு வந்தேன்” பேசிக் கொண்டே அவன் முகமெங்கும் இதழொற்றிக் கொண்டே வந்தாள்.

“அதான் எல்லா வேலைக்கும் ஆள் இருக்கே பேபி… நீயும், அப்பத்தாவும் கஷ்டப்பட வேண்டியது இல்லையே” அவனும் அவளுக்கு ஒத்துழைத்தப்படி சொல்ல,

“ஆயிரம் பேர் இருந்தாலும் நாம செய்ற மாதிரி வருமா? இவ்வளவு நாள் ஆச்சி கஷ்டப்பட்டாங்க சரி. இப்பத்தான் நான் வந்துட்டேனே… இனியாவது அவங்க ரெஸ்ட் எடுக்கட்டும்” சூரியா சொன்னதைக் கேட்டவன் காதில்…

‘இந்த ரெண்டுப் பெருசு, அப்புறம் கூடவே இலவச இணைப்பா இருக்கானே உன் தம்பி… இந்த மூணு பேருக்கும் பொழுதுக்கும் வடிச்சுக் கொட்டத் தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டியா? அதுக்கு நீ வேற ஆளைப் பாரு. என்னால முடியாது…’ அலட்சியமாய் ஆணவமாய்ப் பேசியப்படி காரிலேறி வெளியேறிய அண்ணி என்ற பெயரில் தன் அண்ணனின் வாழ்க்கையை நாசமாக்கிய அந்த ராட்சசியின் குரல் ஒலிக்க, அவன் கைகள் அசையாமல் அப்படியே நின்றுவிட்டது.

“என்ன நம்பி… இன்னும் கோபம் போகலியா? நைட் முழுதும் உங்க கூடத் தானே இருக்கேன். அதனால பகல் முழுவதும் நான் தாத்தா, ஆச்சி கூடத் தான் இருக்கணும். ப்ளீஸ் நம்பி… நான் சொல்றதையும் புரிஞ்சிக்கோங்க” அவனிடம் அசைவு இல்லை என்றதும் அவன் முகத்தைத் தன் கைகளில் தாங்கிப் பார்த்தவள், ‘என்னைப் புரிந்துக் கொள்ளேன்’ என்பது போல் கெஞ்சும் பார்வைப் பார்த்தாள்.

“ச்சே… ச்சே… உன் மேல் என்னால் கோபப்பட முடியுமா பேபி?” அவள் கண் பார்த்து சிரித்தவனின் கன்னக் குழியை… அவள் கண்ணிமைக்காமல் பார்த்து ரசித்தாள்.

“என்ன பேபி… ஆளையே முழுங்குற மாதிரி அப்படிப் பார்க்கிற?” அவள் மூக்கோடு தன் மூக்கை வைத்து உரசியபடிக் கூறியவனின், கன்னத்தில் முத்தமிட்டவள்,

“நம்பி… நீங்க சிரிக்கும் போது உங்க கன்னத்தில் விழுற கன்னக் குழி எவ்வளவு அழகா இருக்குத் தெரியுமா?”

“அது மட்டும் தான் அழகா? நான் இல்லியா பேபி?” ஆதங்கத்துடன் கேட்டான் தமிழ். அவன் அடிமனதில் தான் அழகில்லை என்ற தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடே அவனின் வார்த்தையில் வெளிப்பட்டது.

“நீங்க அதை விட ரொம்ப அழகு. இந்த உலகத்திலேயே அழகு நீங்க மட்டும் தான்” கண்களில் வழிந்தக் காதலுடன் அவள் கூறியதைக் கேட்டவனுக்குக் கர்வமாய் இருந்தது.

“உன் அழகுக்கு முன்னாடி நானெல்லாம்… உன் கால் தூசிப் பெற மாட்டேன் பேபி”

“நம்பி…” கண்டிப்புடன் கூறிய சூரியா, “அழகுன்னு எதைச் சொல்றோம் நம்பி? புற அழகையா? இல்லை மன அழகையா? காதலிக்கும் பெண்ணை ஏமாற்றாமல் அவளையே கைப்பிடித்த உங்க மனசு அழகில்லையா…! அது தான் நம்பி உண்மையான அழகு”

சூரியா சொன்னச் சொல்லில் அவன் முகம் இருண்டது. அதை அவளுக்குக் காட்டாமல் அவள் தோள் வளைவில் முகம் புதைத்தான்.

“என் கண்ணுக்கு என் புருசன் மட்டும் தான் அழகு” அவன் காதில் கிசுகிசுப்பாய் சொன்னவள் அவனை இறுக அணைத்துக் கொள்ள, அதில் முற்றிலும் தன்னைத் தொலைத்தவனாய் அவளைத் தன் வசப்படுத்த முயன்று… அதில் வெற்றியும் பெற்றான்.

“சாப்பிடப் போகலாம் வாங்க…” கண்ணாடிப் பார்த்து தலைவாரிக் கொண்டிருந்தவன் தன் பின்னால் நின்று கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் கையிலிருந்த சீப்பைக் கீழே போட்டு விட்டு, தன் கைகள் இரண்டையும் பின்னால் கொண்டு போனவன் மனைவியின் இடையை

வளைத்துத் தன்னுடன் சேர்த்து பின்பக்கமாய் அணைத்தான்.

“கட்டாயம் சாப்பிடப் போய்த் தான் ஆகணுமா பேபி?” தன் தலையைப் பின்னோக்கிச் சாய்த்து அவள் தலையின் மீது செல்லமாக முட்டியபடி அவன் கேட்க,

“ம்... ம்... இன்னும் கொஞ்ச நேரத்தில் மறுவீட்டுக்குக் கூப்பிட பரணி வந்திருவான்” அவன் முதுகில் முகம் புதைத்த வண்ணம் அவள் பதிலளிக்க... அவனுக்கோ அவளின் செயல் சுகமாய் இருக்க... கண் மூடி அமைதியாய் இருந்தான்.

“போலாமா?” மீண்டும் அவள் கேட்க, அவன் தன்னைச் சமன்படுத்திக் கொண்டு அவளை விடுவித்தான்.

“போலாம் வா...” அவள் கைப்பற்றி நடந்தவன்,

“ஹேய் பேபி... கொஞ்சம் நில்லு” என்று அவளைப் பிடித்து நிறுத்தியவன்,

“இது என்னப் அப்பத்தா மாதிரி சேலைக் கட்டிட்டு... மாடர்ன்னா... ஜீன்ஸ், ஸ்கர்ட்ன்னு போட கூடாதா பேபி? என்ன இது பட்டிக்காடு மாதிரி?” அவன் முகம் சுளிக்க...

“சேலை உங்களுக்குப் பட்டிக்காட்டு ட்ரெஸ் மாதிரியா தெரியுது?” அவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

“அய்யோ பயமாயிருக்கே பேபி...” வேண்டும் என்றே பயந்துப் போனவனாய் அது தான் சாக்கு என்று அவளை அணைத்தான்.

“நான் அங்கே அம்மா வீட்டில் அப்படித் தான் ட்ரெஸ் பண்ணுவேன். ஆனால் இங்கே பெரியவங்க முன்னாடி அந்த மாதிரி ட்ரெஸ் போடுறது... எனக்குச் சரின்னுத் தோணல. நாம ரெண்டு பேருமா தனியா இருக்கும் போது

மாடர்ன் ட்ரெஸ் போடுறேன்” அவன் சட்டைப் பொத்தானைத் திருகியபடி சொன்னவளின் காதில் அவன் ரகசியமாய் ஏதோ சொல்ல,

“நம்பி… உங்களை…” அவள் கோபமாய்ச் சொல்ல வரும் முன், அந்த இடத்தை விட்டு ஓடியே விட்டான் தமிழ்.

“ஸ்வீட் ராஸ்கல்…” மெதுவாய் முணுமுணுத்தவள் தன்னவன் பேசிய ரகசியப் பேச்சை நினைத்து முகம் சிவந்தவளாய் கீழே போனாள்.

“அப்பத்தா… சூர்யாவை நீ ஏன் சேலையைக் கட்டச் சொல்ற? சுடிதார் மாதிரி மாடர்ன் ட்ரெஸ் போட்டா நல்லாயிருக்கும்ல” அவன் சொல்வதைக் கேட்டு சூரியா அவசரமாக,

“ஆச்சி நான் ஏதும் அவரிடம் சொல்லல. அவரா தான் சொல்றாரு. எனக்கு ஒண்ணும் தெரியாது?” விட்டால் அழுது விடுபவள் கூற,

“எம் பேத்திய பத்தி எனக்குத் தெரியாதா ” என்று அவளை அணைத்துக் கொண்ட தையல்நாயகி…

“நானா வேணாம்ன்னு சொல்லுறேன். தாராளமா போடட்டும். விருந்தாளிங்க வந்தா மட்டும் புடவக் கட்டிக்கோ சூர்யா” பேரனிடம் சொன்னவர்… சூரியாவிடம் முடித்தார்.

“ஏன் தையலு… நீயும் சுடிதாரு எல்லாம் போட்டா என்ன?” ஆதிமூலம் இசகுபிசகாய் கேள்வி கேட்டு, மனைவியின் கடும் கண்டனத்துக்கு ஆளானார்.

“வயசானக் காலத்தில இந்த மனுசனுக்குப் புத்தி போறப் போக்கப் பாரு…” முகத்தைத் தன் தோளில் இடித்துத் தன் கோபத்தைக் கணவரிடம் காட்டினார் அப்பத்தா.

“இந்த வயசுலேயும் இதுங்கப் பண்ற லொள்ளைப் பாரு…” தமிழ் சூரியாவிடம் சொல்லிச் சிரிக்க,

“பாட்டி இப்படிப் பேசுறாங்களே… தாத்தா கோபப்பட மாட்டாரா?” அப்பாவியாய் விழி விரித்து அவள் கேட்க,

“யாரு அப்பச்சியா? அப்பத்தா கிட்ட அவராவது… கோபப்படுறதாவது… இப்ப வரைக்கும் ரெண்டும் காதல் பறவைகள்…”

“நம்மள மாதிரி என்ன நம்பி…!” ரகசியமாய்ச் சூரியா பேசிய பேச்சில், தன் மீதே அவனுக்குக் கோபம் வந்து அவனின் முகம் மாற… சாப்பாட்டில் தன் கவனத்தைத் திசைத் திருப்பினான்.

“தமிழு… இன்னும் கொஞ்சம் குருமா வச்சுக்கோல… எல்லாம் உம் பொண்டாட்டி கைப்பக்குவம் தான். நல்லாச் சாப்பிடுவ” அப்பத்தா சொல்லியபடி பெரிய கோழித் துண்டை அவன் தட்டில் வைக்க, தன் மீதிருந்த அவனின் கோபம் தட்டிலிருந்த கோழியின் மீது திரும்பியது.

“இது சூர்யாவா சமைச்சா…?” அவன் கோபமாய் அப்பத்தாவைப் பார்க்க,

“ஆமால… அவ தான் சமைச்சா… அதுக்கு எதுக்கு நீ இம்புட்டுக் கோபப்படறவ?”

“அப்பத்தா… அவளுக்கு நான்வெஜ்ன்னாலே பிடிக்காது. அதுல அவளைப் போய்ச் சமைக்க வச்சிருக்கீங்களே?”

அதற்குள் சூரியா, “எங்க வீட்டில் நான்வெஜ் சமைச்சுப் பழக்கம் இருக்கு. நான் மட்டும் தான் சாப்பிட மாட்டேன்” அவனைச் சமாதானப்படுத்தவும் தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

“ஆனாலும் இனி மேல் நீ இதெல்லாம் சமைக்க வேணாம்” உறுதியாய் கூறியவன், “அப்பத்தா… நான்வெஜ் மட்டும் சமையக்கார அம்மாவை சமைக்கச் சொல்லுங்க”

“ஏண்டா பேராண்டி... உம் பொண்டாட்டி மேல இவ்வளவு பாசமா உனக்கு? கடைசியில் நீயும் காதல் வலையில சிக்கிக்கிட்டியாவே” ஆதிமூலம் அவன் காதில் முணுமுணுக்க, அவர் சொன்னதன் அர்த்தம் மெதுவாய் அவனுக்கு உரைத்தது.

‘நான் அவளைக் காதலிக்கிறேனா? ம்ஹும்... இந்த அப்பச்சி தேவையில்லாமல் உளறுது. அவளுக்கு என் மேல் காதல் இருக்கு. அதே மாதிரி எனக்கும் அவள் மேல் பாசம் இருக்கு... அக்கறை இருக்கு... அதைத் தாண்டி வேறு எதைப் பத்தியும் நான் யோசிக்கத் தயாரா இல்லை’ மனதுக்குள் சொல்லிக் கொண்டவன் சாப்பாட்டில் தன் கவனத்தைப் பதிக்க, அவன் தட்டில் இருந்த கோழித் துண்டுகள் அவனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது.

‘தானா வலிய வந்து மாட்டுறக் கோழியைச் சும்மா விடலாமா? ம்ஹும்... அப்படி விட்டா அது பாவமாச்சே... அடிச்சுக் குருமா வைச்சுற வேண்டாம்? கோழி ருசி எப்படி இருக்குன்னு ஒரு கை பார்த்துட வேண்டாமா? இல்லாட்டிக் கோழி கோச்சுக்காது’ அன்று அவன் மனதுக்குள் சொல்லிய வார்த்தைகள் இன்று நியாபகம் வந்து அவன் மனதைக் கலங்க வைத்து, அவன் குற்றவுணர்ச்சியை அதிகப்படுத்தியது. தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் சாப்பிட்டு எழுந்தான்.

மறுவீடு விருந்து முடிந்துக் கிளம்பிய மகளை, “சூர்யா இங்கே ஒரு ரெண்டு நாளு தங்கிட்டுப் போகலாம் இல்ல” ஆதங்கப்பட்டார் அவளின் அன்னை சிவகாமி.

“நீங்க சொல்றதுப் புரியுது. ஆனா பெரியவங்க ரெண்டுப் பேரும் தனியா இருப்பாங்க. நீங்க தானே சொன்னீங்க... அவங்களை அனுசரிச்சு நடந்துக்கோன்னு. இப்போ அவங்களைத் தனியா விட்டுட்டு இங்கே இருக்க முடியுமா?”

“என் பொண்ணு பெரிய மனுசி மாதிரிப் பேசுறது எனக்குப் பெருமையா இருக்கு” அவர் தன் மகளை நினைத்துப்

பெருமைப்பட்டுக் கொண்டார்.

மாமியாரிடம் தன் மனைவி பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்த தமிழின் மனம் நெகிழ்ந்தது. தன்னை மட்டுமில்லாமல் தன் சுற்றத்தையும் நேசிக்கும் பெண் மனைவியாக வந்தது தான் செய்த அதிர்ஷ்டம் என்றே எண்ணினான்.

“வேற எங்கேயாவது போகலாமா?” காரில் ஏறியதும் சூரியாவைப் பார்த்துத் தமிழ் கேட்க,

“வேண்டாம்ங்க... வீட்டுக்குப் போகலாம்”

“டைம் சிக்ஸ் தர்ட்டி தான் ஆகுது. இவ்வளவு நாள் அப்பத்தா தனியாத் தான் இருந்தாங்க. அது மாதிரி இன்னைக்கு ஒரு நாள் தனியா இருந்தாத் தப்பில்ல. அதான் அப்பச்சி கூட இருக்கே. அவரு பத்து ஆளுக்குச் சமம்”

“ம்... அஷ்டலட்சுமி கோவிலுக்குப் போகலாம்” அவனுக்காக அவள் ஒத்துக் கொள்ள,

“ஒரு சினிமாவுக்கோ, பீச்சுக்கோ இல்ல ஷாப்பிங்க்கோ கூப்பிடுவன்னு பார்த்தா... கோவிலுக்கா?”
சிறுபிள்ளையாய் கோபத்தில் முகத்தைச் சுளித்தான் அவளருமைக் கணவன்.

“கல்யாணமாகி முதன் முதலா உங்க கூட வெளியில் வர்றேன். மங்களகரமா கோவிலுக்குப் போகலாம்ன்னு சொன்னேன். வேணும்ன்னா ஒண்ணு செய்வோம்... சாமிக் கும்பிட்டதுக்கு அப்புறம் உங்க விருப்பப்படி கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள பீச்சுக்குப் போயிட்டு வரலாம்” அவன் கோபம் போக அவனின் முழங்கையைத் தன் கையால் வளைத்துக் கொண்டு அவன் தோளில் சாய... அவனின் கோபம் இருந்த இடம் தெரியாமல் பனி போல் விலகியது.

கோவிலுக்கு மனைவியுடன் நுழைந்தவன் முதன் முறையாகக் கடவுள் முன் கைக் கூப்பி, கண்ணை மூடி முழு மனதுடன் பிரார்த்தனைச் செய்தான்.

'கடவுளே... இது போல் என்றும் என் சூர்யா... என் மேல் அன்பு வைச்சுருக்கணும். அவள் மனம் நோகாம நானும் நடந்துக்க வேணும். எங்க ரெண்டுப் பேரோட வாழ்க்கையும் சந்தோசமா அமைய நீ தான் துணை இருக்கணும்' மனம் உருக அவன் வேண்ட... 'இனி தான் உன் வாழ்க்கையில் என் விளையாட்டு இருக்கு மகனே...' என்பது போல் அந்தத் தெய்வம் சிரித்தபடி அருள்பாலித்தது அவன் காதில் விழவில்லை.

"நம்பி... கொஞ்சம் தள்ளி உட்காருங்க. யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?" கடற்கரையில் அமர்ந்த தமிழ், வேண்டும் என்றே அவளை இடித்துக் கொண்டு அமர, அவள் கடுமையுடன் அவனைப் பார்த்துச் சொன்னாள்.

"என் பொண்டாட்டி நான் எப்படி வேணும்ன்னாலும் உட்காருவேன். இதில் மத்தவன் நினைக்க என்ன இருக்கு?" அவள் தோளில் கையைப் போட்டுக் கொண்டு அவளைத் தன் அருகே அவன் இழுத்தான். அவளும் அவன் தோளில் வாகாய் சாய, அவள் கூந்தலில் சூடியிருந்த பூவின் மணம் அவனைக் காந்தம் போல் இழுக்க, அவன் குனிந்து அவள் கூந்தலில் இருந்த மல்லிகைப் பூவை முகர்ந்தான். அதன் வாசம் அவனை எங்கெங்கோ அழைத்துச் செல்ல... அவன் அதிலிருந்து மீள விரும்பாதவனாய்... அதில் ஆழ முகம் புதைத்து அப்படியே அமர்ந்திருந்தான்.

திடீரென்று அவன் தோள் சட்டை ஈரத்தை உணர, அவனின் உணர்வலைகள் சட்டென்று அறுபட, அவசரமாய் அவளிடம் இருந்து விலகியவன், தன் தோளில் புதைந்திருந்த அவள் முகத்தை ஒற்றை விரல் கொண்டு நிமிர்த்தினான். கண்களில் கண்ணீர் வழியப் பார்க்கவே பரிதாபமாக இருந்தாள் அவன் மனையாள். அவன் பதறிப் போனவனாய் அவளின் விழி நீரைச் சுண்டி எறிந்தவன்,

“பேபி ஏன்டா என்னாச்சு?” பதட்டத்துடன் ஒலித்தது அவனின் குரல். அதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாய்க் கண்ணீர் விட்டவளைக் கண்டு அவன் தான் தவித்துப் போனான்.

“நான் எதுவும் தப்பா...” அவன் முடிக்கும் அவன் வாயில் தன் கையை வைத்துத் தடுத்தவள், மறுப்பாய் தலையசைத்தாள்.

“போன தடவை இங்கே வந்து உங்களைச் சந்தித்தது நியாபகம் வந்தது” என்றவள் குரல் இறங்கிப் போய் ஒலித்தது. அதற்கு அவனிடம் இருந்து பதில் இல்லை. அவளின் வார்த்தையில் அப்படியே அசையாது அவன் அமர்ந்திருந்தான்.

“அன்னைக்கு இங்கே வருவதற்கு முன் நான் தவிச்சத் தவிப்பை வார்த்தையில் சொல்ல முடியாது. உங்களைப் பார்த்து மனம் விட்டுப் பேசிய பின் தான் எனக்கு நிம்மதியாச்சு. அதுக்கு அப்புறமும் நான் உங்களுக்கு ஃபோன் பண்ணிப் பார்த்து நீங்க எடுக்கலைன்ன உடனே என் உயிர் கையில் இல்லை. மனசு வெறுத்துப் போய்த் தான் உயிரை விடத் துணிஞ்சேன். அப்போ கூட உங்களைக் கைப்பிடிப்பேன் நினைச்சுக் கூடப் பார்க்கல. இப்போ அதை எல்லாம் நினைச்சா எனக்கு என்னமோ கனவு போல் இருக்கு. என் கனவை நனவாக்கியது நீங்க தான். என்னைக் காப்பாத்தி எனக்கு ஒரு வாழ்க்கையைக் கொடுத்து இருக்கீங்க. இது எல்லாம் உங்களால் மட்டுமே சாத்தியம். நீங்க மட்டும் அன்னைக்கு வரலைன்னா...” என்றவள் அதற்கு மேல் அடக்கமாட்டாமல் சுற்றுப் புறம் மறந்து அவன் மடியில் கவிழ்ந்து கதறியழ ஆரம்பித்தாள்.

அவளின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவன் உடலை விதிர்க்கச் செய்து அவன் உள்ளத்தைக் கொல்லாமல் கொன்றது. அவன் அன்று தான் இருந்த மனநிலையை இன்று நினைத்துப் பார்த்தவன்... மனதுக்குள் கூசிப் போனான். அவளைத் தன் உடல் சுகத்திற்காகப்

பயன்படுத்தி விட்டுத் தூக்கியெறிய வேண்டும் என்று எண்ணிய தன் கேவலமான எண்ணத்தை இப்பொழுது எண்ணிப் பார்த்தவனுக்கு... அதன் தாக்கத்தைத் தாங்க முடியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

தன் மேல் உயிரையும் வைத்திருக்கும் காதல் மனைவியைப் பத்தோடு பதினொன்றாக எண்ணிய தன் மடமையை எண்ணி மானசீகமாய் மனதுக்குள் தன்னையே ஓங்கி அறைந்து கொண்டான். மெல்லக் கண்களைத் திறந்தவன் இன்னமும் தன் மடியில் படுத்து அழுகையில் குலுங்கிக் கொண்டிருந்த மனைவியை இரக்கத்துடன் பார்த்தவன், அவள் அழுவது கண்டு மனம் தாங்காமல் தன் கைகளால் அவள் தலையை ஆறுதலாய் தடவிக் கொடுத்தான். அதில் மெல்ல ஆறுதல் அடைந்து அவளின் அழுகைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது. தன் கைத் தொடுகையில் ஆறுதல் அடைந்து அமைதியான தன்னவளைக் கண்டு அவன் முகம் வேதனையில் ஆழ்ந்தது.

## உயிர் : 15

“அண்ணா… அண்ணா… பூ வாங்குண்ணா…” சிக்னலுக்காகக் காத்திருந்த செந்தமிழ்நம்பியின் காரின் கண்ணாடியைத் தட்டினாள் பத்து வயது சிறுமி ஒருத்தி. அவள் கையில் இருந்த பூவைப் பார்த்ததும் அவனுக்குத் தன் மனைவியின் நினைவு வர, மலர்ந்த முகத்துடன் காரின் கண்ணாடியை இறக்கினான்.

“பூ என்ன விலை?” என்று கேட்டவன், அந்தச் சிறுமி பதில் சொன்னதும் நூறு ரூபாயை எடுத்து நீட்டியபடி, “நீ படிக்கலியா? ஏன் படிக்காம பூ வியாபாரம் பண்ற?”

“நான் நாலாவது படிக்கிறேன்ண்ணா… ஸ்கூலு போயிட்டு வந்து அப்பால… அம்மாக்கு பூ வியாவாரதுல ஹெல் பண்ணுவேன்” சிரித்தபடி பேசியவள் அவன் கேட்டப் பூவை அளந்துக் கொடுத்துவிட்டு… அவன் நீட்டிய நூறு ரூபாயை வாங்க யோசித்தவளாய்,

“அண்ணா… என் கிட்டச் சில்லறை இல்லியே” பரிதாபமாகச் சொல்ல,

“பரவாயில்ல நீயே வச்சுக்கோ” அவன் புன்னகையுடன் அவள் கையில் ரூபாயைத் திணிக்க, அவளோ அதை மறுத்துவிட்டு,

“நீங்க வேணா இனாமா பூ வச்சுக்கோங்க… உழைக்காத காசு உடம்புல ஒட்டாதுன்னு எங்க அம்மா சொல்லியிருக்கு” என்றவள், பூவை அவனிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர,

“ஏய் நில்லு…” அவன் அவளை நிறுத்துவதற்குள் சிக்னல் விழுந்துவிட, பின்னால் இருந்த வாகனங்கள் தங்கள் ஹார்னை அலற விட, வேறுவழி இல்லாது காரை எடுத்தவன் சிறிது தூரம் சென்று காரை நிறுத்தினான்.

காரை விட்டு இறங்கியவனின் கண்கள் அந்தச் சிறுமியைத் தேட, அவள் இன்னமும் அங்கே சிக்னலில் நின்றுக் கொண்டிருப்பதைக் கண்டான். அவளிடம் செல்வதற்கு முன் அருகில் இருந்த கடையில் சில்லறையை மாற்றிக் கொண்டு அவளை நோக்கி ஓடினான்.

“பாப்பா… இந்தா உன் காசு…” தன் முன் மூச்சிரைக்க நின்றவனை அவள் அடையாளம் கண்டு கொண்டவளாய்,

“தாங்க்ஸ்ண்ணா…” அவன் கொடுத்ததை வாங்கிக் கொண்டவள், “இதுக்குப் போய் ஏன்ண்ணா… நீங்க இவ்வளவு கஷ்டப்பட்டு ஓடி வாரீங்க. சில சமயம் பூ விக்காம மிஞ்சி அழுகிப் போய்க் குப்பையில் தான் தூக்கிப் போடுவோம். அப்படி வீணா போகாம உங்க கிட்டக் கொடுத்ததுல சந்தோசம் தான் அண்ணா. சரிண்ணா… நா வாறேன்”

அடுத்த வேலைச் சாப்பாட்டிற்குக் கஷ்டப்படும் போதும் உழைக்காமல் வரும் பணம் ஒட்டாது என்று தத்துவம் பேசி விட்டுச் செல்லும் அந்தச் சிறுமியைப் பார்த்துக் கொண்டு அசையாது நின்றிருந்தான் தமிழ். பொழுதுபோக்கு இடங்களுக்குக் கூட்டிச் செல்ல ஒரு ஆள், பரிசுப் பொருட்கள் வாங்கிக் கொடுக்க ஒரு ஆள், வயிற்றுப் பசித் தீர்க்க ஒரு ஆள், உடல் பசியைத் தணிக்க ஒரு ஆள் என நேரத்திற்கு உடை மாற்றுவது போல் ஆண்களை மாற்றும் பெண்களைச் சந்தித்துப் பழகியவன் கண்களுக்கு இந்தச் சிறுமி வித்தியாசமாகத் தெரிந்தாள்.

‘இவள் வளர்ந்தால் சூர்யா மாதிரித் தான் வருவாள். ம்… சூர்யாவைப் போல் நிறையப் பெண்கள் இருக்கத் தான் செய்றாங்க. என் கண்ணில் தான் அவர்கள் படவில்லை போலும்? அப்படி அவர்களைப் பார்த்திருந்தால் என் பாதை மாறிப் போயிருக்குமோ? அப்படிப் பாதை மாறிப் போயிருந்தால்… இன்று சூர்யாவுடன் என் வாழ்க்கை நன்றாக இருந்திருக்குமோ?’

காரிலேறி அமர்ந்தவன் மனம் வெகுவாய் குழம்பித்தான் போனது. அவனின் மனம் உணர்ச்சி கடலாய்க் கொந்தளித்தது. வெகுவாய் சிரமப்பட்டுத் தன் மனதை அடக்கியவன், ஆழ்ந்து மூச்செடுத்துத் தன்னை அமைதிப்படுத்தினான். அப்பொழுது அவன் நாசி மல்லிகைப் பூவின் வாசத்தை உணர்ந்தது. அது அவனுக்குச் சூரியாவின் நியாபகத்தை ஏற்படுத்தி அவன் மனதை வருத்திய விசயங்கள் பின்னுக்குத் தள்ளியது. மனைவியின் நியாபகம் வந்ததும் மனம் உற்சாகத்தில் துள்ள... அவன் கைகள் வேகமாய்க் காரைக் கிளப்பியது.

****************************************

“அப்பத்தா சூர்யா எங்கே?” வீட்டிற்குள் நுழைந்தவன் அங்கே வரவேற்பறையில் அமர்ந்துத் தொலைக்காட்சிப் பெட்டியில் ஓடிக் கொண்டிருந்த தொடர் நாடகத்தில் தன்னைத் தொலைத்திருந்த தையல்நாயகியிடம் கேட்டான்.

“சமையல் கட்டுல இருப்பா தமிழு” அவனுக்குத் தேவையான பதிலை அளித்தவர், அருகிலிருந்த கணவரிடம், “ஏங்க... இந்தப் பொண்ணு ஏன் அடுத்தவப் புருசனையே குறி வைக்கிறாவ? நா மட்டும் இவளப் பெத்தவளா இருந்தேன்... வெசம் வச்சுக் கொன்னுப் இருப்பனாக்கும். பொண்ணாவா இவ... பேயி...” அந்த நாடகத்தில் நடிக்கும் நடிகையை அவர் வசைமாறிப் பொழிய அதைக் கேட்டுச் சிரித்தபடி சமையலறைப் பக்கம் சென்றான் தமிழ்.

இரவு உணவுக்காக அடுப்பில் மும்முரமாக வேலைச் செய்து கொண்டிருந்த சூர்யாவை நோக்கி பூனைப் போல் அடியெடுத்து வைத்தான் தமிழ். அவளும் கை வேலையில் கவனமாக இருந்ததால் அவனைக் கவனிக்கவில்லை. அவள் பின்புறமாகச் சென்றவனின் கைகள் அவளின் இடுப்பைப் பிடித்து இழுத்துத் தன்னுடன் சேர்த்தணைக்க, அவனின் திடீர் செய்கையில் பதறிப் போய் அலற வாயைத்

திறந்தவளின் இதழ்களைத் தன் இதழ்களால் அழுந்த மூடினான்.

வலுக்கட்டாயமாய் அவனிடமிருந்து தன் உதடுகளைப் பிரித்தவள், “ச்சு... என்ன நம்பி இது? இது நம் பெட்ரூம் இல்ல... கிட்சன்” கோபமாய்ப் பார்த்தபடி அவனை முறைத்தாள். அவனோ அவளைத் தழுவிய கைகளை விடாமல், அவள் தோள்பட்டையில் நாடியை வைத்து, அவள் கைகளில் இருந்த கரண்டியைத் தானும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு அடுப்பில் உள்ளதைக் கிளறிக் கொண்டே,

“அதனால் என்ன பேபி?” சரசமாகக் கூறியவனின் உதடுகள் அவள் கன்னத்தில் ஊர்வலம் வர, அவள் பட்டென்று அவன் கையை விலக்கிவிட்டுத் தள்ளி நின்றாள்.

“ஹாலில் ஆச்சி, தாத்தா இருக்காங்க... பேசாமப் போங்க...” வாயில் விரல் வைத்து அவள் மிரட்ட... மனதுக்குள் அவன் சிரித்துக் கொண்டே அவள் சொல்லுக்குப் பயந்துப் போவது போல் வெளியில் போனான்.

“ம்... அந்தப் பயம் இருக்கணும்” தனக்குள் முணுமுணுத்துக் கொண்டவள் வேலையில் கவனமாக... மறுபடியும் தமிழ் பயமே இல்லாதவனாய் அவளிடம் வந்து நின்றான். ஆனால் இந்த முறை எந்தச் சில்மிசமும் பண்ணாமல், கையிலிருந்த பூவை அவள் கூந்தலில் சூடி, அவள் தோளின் வழியே இருபுறமும் தொங்க விட்டவன், அவளைப் பார்த்துச் சிரித்தான்.

“அட... உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா? ஒருவேளை அய்யாவுக்கு ஏற்கெனவே எக்ஸ்பீரியன்ஸ் இருக்கோ?” கண் சிமிட்டியபடி அவள் கேட்டது... அவன் நெஞ்சில் சம்மட்டியால் அடித்தது போல் வலியை ஏற்படுத்தியது. அவன் முகத்தைத் தொங்கப் போட்டவனாக, அங்கிருந்து வெளியேறப் போக, அவன் கையைப் பிடித்துத் தடுத்தவள்,

“நம்பி… சாரி நம்பி… சும்மா விளையாட்டுக்குத் தான் சொன்னேன்” கெஞ்சும் குரலில் அவள் அவனிடம் மன்னிப்புக் கேட்க, அப்போதும் அவன் முகம் தெளியாததைக் கண்டவள், தன் கால்களை எம்பி அவன் உயரத்திற்கு எழும்பி அவன் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டாள்.

“ப்ளீஸ் சாரி நம்பி…” மீண்டும் மன்னிப்பைக் கேட்டவளைக் கூர்ந்துப் பார்த்தவன்,

‘நீ மன்னிப்புக் கேட்க வேண்டியது இல்ல பேபி. நான் தான் மன்னிப்புக் கேட்க வேண்டியவன்…’ மனதுக்குள் சொல்லிக் கொண்டவன், வெளியே அவளைப் பார்த்துச் சிரித்தான்.

“ம்… இது தான் என் நம்பிக்கு அழகு…” அவன் இருகன்னத்தையும் பிடித்து ஆட்டியவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் தமிழ் தாத்தா, பாட்டியிடம் தாங்கள் இருவரும், ஆதவன் குறிஞ்சியுடன் தேனிலவுக்குச் செல்வதாகக் கூற அப்பத்தா சரியென்று சம்மதம் சொல்ல, ஆதிமூலம்…

“ஏம் பேராண்டி… உன்னோட சேர்த்து எங்களுக்கும் ஹனிமூனுக்கு டிக்கெட் புக் பண்ணேன்” ஆசையாய் அவர் கேட்க, சூரியாவும்…

“அவங்களும் வரட்டுமே… ஜாலியா இருக்கும்” அப்பாவியாய் அவளும் சொல்ல, அவளை முறைத்துப் பார்த்தான் தமிழ்.

“எனக்குன்னு இப்படியொரு தத்தி பொண்டாட்டியும், தத்தி அப்பச்சியும் வந்து வாய்ச்சி இருக்காங்களே…” தலையில் அடித்துக் கொண்டவன், அப்பத்தாவிடம், “எம் பொண்டாட்டிக்கு என்னாலப் புரிய வைக்க முடியாது. நீ உம்

புருசனுக்கு... உன் ஸ்டையில்ல வேப்பிலை அடிச்சுப் புரிய வை”

“உமக்கு இப்பத் தான் இளமத் திரும்புதோ? அந்தக் காலத்துல எத்தன கனிமூனு நீங்களும், நானும் கொண்டாடி இருப்போம். பாவம் சிறுசுகள அதுங்கள தனியா என்சாய் பண்ண விடுங்களேன்” கணவரைக் கண்டிக்கிறேன் பேர்வழி என்று குடும்ப ரகசியத்தைச் சபையில் அம்பலப்படுத்தினார் தையல்நாயகி.

அதைக் கேட்டுத் தமிழ், “சுத்தம்...” என்று கூறியபடி மீண்டும் தன் தலையில் அடித்துக் கொள்ள, அவனின் செயல் கண்டு சூரியாவோ கலகலவெனச் சிரித்தாள். அவள் சிரிக்கும் அழகைக் கண்ணிமைக்காமல் பார்த்தான் தமிழ்.

*******************************************

“ஏண்டா ஆதி... இவங்க ரெண்டுப் பேரும் சேர்ந்துப் பேசுறதுக்காகவா... இவங்களை ஹனிமூன் கூட்டிட்டு வந்தோம்” ஊட்டியில் இருந்த அந்தப் பெரிய பூங்காவில் தங்களுக்கு முன்னே பேசியபடி நடந்து சென்று கொண்டிருந்த சூரியாவையும், குறிஞ்சியையும் கண்டு எரிச்சல் அடைந்தபடித் தன் நண்பன் ஆதவனிடம் சொன்னான் தமிழ்.

“பிரெண்ட்ஸ்குள்ள பேசுறதுக்கு ஆயிரம் இருக்கும். நமக்கு என்ன வந்தது?” அசால்ட்டாய் தோளைக் குலுக்கினான் ஆதவன்.

“நீ ஏன் சொல்ல மாட்ட... நல்லா ஒரு மாசமா மேரேஜ் லைப்பை என்ஜாய் பண்ணிட்டு... நீ இதுவும் பேசுவ... இன்னமும் பேசுவ” மனதில் மூண்ட கோபத்துடன் எரிச்சலாய்ப் பேசினான் தமிழ்.

“தமிழ்... என்னே மாற்றம் உந்தன் மாற்றம்?” போலியாய் வியந்தான் ஆதவன்.

“டேய் நானே கடுப்புல இருக்கேன். நீ வேற கடுப்பைக் கிளப்பாதே”

“தமிழ்... நீ சூர்யாவை காதலிக்கிறியா?” ஆதவன் யோசனையுடன் நண்பனைப் பார்த்துக் கேட்டான். அன்று அப்பச்சி கேட்டதைப் போல் நண்பனும் பேசக் கேட்டவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

“டேய் என்னடா எல்லாரும் இதே கேள்வியைக் கேட்கிறிங்க. அவள் என் மனைவி டா. அவளை எனக்குப் பிடிச்சியிருக்கு. அவள் மனம் கோணாம நான் நடந்துக்கணும் அது என் கடமை. புதுசா கல்யாணமான வைப் கிட்ட ஒரு ஹஸ்பென்ட் என்ன எதிர்பார்ப்போனோ அந்த எதிர்பார்ப்பில் தான் நான் புலம்பறேன். இதில் காதல் எங்கே இருந்து வந்தது?” நீளமாய்த் தமிழ் பேசியதில் ஆதவனும் சற்றுக் குழம்பித்தான் போய்விட்டான்.

“ம்... என்னவோ போ... நீயும் உன் வியாக்கினமும்... எனக்கு ஒண்ணும் மட்டும் நிம்மதியா இருக்கு. சூர்யாவைப் பிடிச்சியிருக்குன்னு சொன்னே பாரு... அது ஒண்ணுப் போதும் உன் வாழ்க்கை ஒழுங்கா இருக்கிறதுக்கு...” என்ற ஆதவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

படகுத்துறை செல்லும் போது ஆதவன் குறிஞ்சி அருகில் வந்து அவள் தோளில் கையைப் போட்டுக் கொண்டு, “சூர்யா சிஸ்டர்... நீங்க தமிழோட போட்டிங் போங்க. நானும் குறிஞ்சியும் தனியா போட்டிங் போறோம்”

அவன் சொன்னதும் சரியென்று தலையசைத்த சூரியா, தமிழை நோக்கிச் செல்ல, குறிஞ்சி ஆதவனைக் கோபமாய் முறைத்தாள்.

“நீங்க எப்படி என் பிரெண்ட் கிட்ட இப்படிப் பேசலாம்... அவள் என்ன நினைச்சுக்குவா?” அவள் சண்டைப் பிடிக்க...

“ஏய் என் மக்குப் பொண்டாட்டி அங்கே பாரு…” ஆதவன் தமிழை நோக்கிக் கையைக் காட்ட, ஆதவனை நோக்கித் தமிழ் வெற்றிக் குறி போல் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான்.

“ஹனிமூனுக்கு வைப்பைக் கூட்டிட்டு வந்தா… அவள் உன் கூடச் சுத்திட்டு இருக்கா… அவளுக்குத் தான் அறிவிலைன்னா… என் மக்குப் பொண்டாட்டிக்கும் அறிவில்லை. பாவம் பயல் நொந்துப் போயிட்டான்” ஆதவன் சொல்லச் சொல்ல குறிஞ்சி தவறு செய்ததைப் போல் தலைக் குனிந்தாள்.

“நான் இதை நினைக்கவே இல்லைங்க…”

“நீ தமிழை நினைக்க வேணாம். உன் அப்பாவி புருசன் நினைப்புக் கூடவா உனக்கு வரல?” குறும்பாய் கண் சிமிட்டியபடி அவன் கேட்க, அவள் நாணத்துடன் அவன் தோள் சாய்ந்தாள்.

அதன் பின் சூரியாவே தன்னிடம் பேச வந்தாலும் குறிஞ்சி அவளைத் தமிழுடன் இணைந்துச் செல்லும்படி சொன்னாள். ஊட்டியில் இருந்த ஐந்து நாட்களும் தமிழ் சூரியாவோடு சேர்ந்துச் சம்சாரச் சாகரத்தில் மூழ்கி முங்கி எழுந்தும் அவன் மனதிலிருந்த தாகம் அடங்கவில்லை. இன்னமும் தேன்நிலவு கொண்டாட அவன் விரும்பிய போதும், கடமை அவனை அழைக்கச் சென்னைத் திரும்பினர்.

****************************************

தன் கையிலிருந்த கடைசிப் ஃபைலையும் சரி பார்த்துவிட்டு நிமிர்ந்த தமிழின் கண்கள் கடிகாரத்தில் நிலைத்தது. ‘சினிமாவிற்கு அழைத்துச் செல்கிறேன்’ என்று சூரியாவிற்குத் தான் வாக்குக் கொடுத்தது அப்போது தான் அவனுக்கு நியாபகம் வந்தது. அலுவலகத்தை விட்டு அவசரமாக வெளியில் வந்து காரிலேறினான்.

‘போச்சு… என்ன திட்டுத் திட்டப் போறாளோ? அவள் கோபத்தை மலையிறக்க… என்ன பாடுப்பட வேண்டியிருக்குமோ?’ மனதில் புலம்பிக் கொண்டே வீட்டை நோக்கிக் காரை வேகமாகச் செலுத்தினான்.

அவன் பழகிய பெண்கள் எல்லாம் அப்படித்தான். அவன் கிளம்பி வர கொஞ்சம் தாமதமானால் கூட… முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்குப் பல ஆயிரக்கணக்கில் ஏதாவது வாங்கிக் கொடுத்து மனதைக் குளிர்வித்தால் ஒழிய அவர்கள் கோபம் தீராது. அவர்களோடு சூரியாவையும் இணைத்து அவன் குழம்பிக் கொண்டு வீட்டின் முன் காரை நிறுத்தினான்.

பலவித யோசனையில் இருந்தவனுக்குத் தலைவலி அழையா விருந்தாளியாய் வந்துவிட, தலையைப் பிடித்துக் கொண்டே தங்கள் அறைக்குச் சென்றான். அவன் வந்த சில நிமிடங்களில் அறைக்குள் நுழைந்த சூரியா அவனை நோக்கி வந்தாள். அவள் வருகை உணர்ந்து அவன் திரும்பிப் பார்க்க… வெளியில் செல்வதற்கு ஏற்றார் போல் கிளம்பி நின்றிருந்தவளைக் கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது. தான் அவளை ஏமாற்றமடையச் செய்ததை நினைத்துத் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

“சாரி பேபி… வேலை இருந்தது… டின்னருக்கு வேணும்னா வெளியில் போயிட்டு வரலாமா?”

“பரவாயில்ல நம்பி… நீங்க என்ன வேணும்ன்னா இப்படிப் பண்ணினீங்க? இன்னைக்கு இல்லைன்னா இன்னொரு நாள் சினிமாவுக்குப் போய்க்கலாம்” அவள் அவனைச் சமாதானப்படுத்த அவன் ஆச்சிரியப்பட்டுப் போனான். இந்தக் காலத்தில் இப்படியொரு அனுசரணையான பெண்ணா என்று…?

“என்ன நம்பி… தலைவலிக்குதா?” தன்னிச்சையாய் அவன் கை தலையைத் தடவியதைக் கண்டவள் பதற்றத்துடன் கேட்க,

“ம்… ம்…” அவன் தலையாட்ட…

“நான் காபி போட்டுக் கொண்டு வர்றேன்… டேப்லெட் போட்டாச் சரியாயிரும்” என்றவள் அறையை விட்டு வெளியேறினாள். அவளைக் கண்டு வியந்தவாறு படுக்கையில் சாய்ந்தான் அவன்.

ஐந்தே நிமிடங்களில் மாத்திரையும், காபியுடன் வந்தவள் அதை அவனுக்குக் கொடுத்துப் போட்டுக் கொள்ளச் செய்து… தலைவலி மருந்தை இதமாக அவன் தலையில் தடவிவிட்டாள். அன்னையைப் போன்று அவள் கவனித்த கவனிப்பில்… கரிசனத்தில்… அவன் கண்ணோரம் கரித்தது.

அன்று இரவு என்றுமில்லாத நாளாய் தன்னை நாடிய கணவனைக் கண்டு அவளுக்குத் தான் ஆச்சிரியமாய் இருந்தது.

“என் நம்பிக்கு என்னாச்சு?” தன் நாடியை அவன் மார்பில் வைத்துத் தாங்கிக் கொண்டு சிரித்தபடி அவள் கேட்க,

“ஒவ்வொரு நாளும்… ஒவ்வொரு விதமாய் நீ காட்டுற பாசம்… அன்பு பார்த்து நான் பிரமிச்சுப் போறேன் பேபி” அவள் கையை எடுத்து முத்தமிட்டபடி அவன் சொல்ல,

“ம்ஹும்… அப்புறம்?”

“என்னோட லைப்பில் உன்ன மாதிரி ஒரு பொண்ணு வருவான்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல. என்னை அப்படியே மயக்குறடி. இந்த நிமிசம் என் உயிர் போனா கூட எனக்குச் சந்தோசம்டி” அவன் பேச பேச அவள் முகத்தில் கோபத்தின் சாயல் ஏறியது.

“ஏய்… என்னடி திடீர்ன்னு முகம் ரெட்டிஸ் ஆகுது?” அவள் கோபப்படுவது கூடத் தெரியாமல் அவன் கேட்க, அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள். அவள்

முறைத்துப் பார்க்கவும் தான் அவள் கோபமாய் இருப்பதையே அவன் உணர்ந்தான்.

“நான் சொன்னதுக்கா கோபமா இருக்க? அப்படி எல்லாம் உன்னை விட்டுட்டுப் போக மாட்டேன் பேபி. நூறாயுசுக்கு உன் கூடத் தான் வாழ்வேன் பேபி” அவன் அவளைக் கொஞ்சிக் கொண்டே சமாதானப்படுத்தினான். தான் பேசிய பேச்சுக்குத் தான் அவள் கோபமாய் இருக்கிறாள் என்று அவனாகத் தப்பர்த்தம் கண்டு பிடித்துக் கொண்டான்.

“ப்ளீஸ் ஸ்டாப் இட் நம்பி...” சப்தமாய் இரைந்தவளை அதிர்ந்துப் போய் அவன் பார்க்க,

“அது என்ன என்னை ‘டி’ போட்டுப் பேசுறது? எப்படி நீங்க அது மாதிரிப் பேசலாம்?” அவள் கோபமாய்ப் பேச, இவன் இன்னமும் திகைப்பில் இருந்து மீளவில்லை.

“இங்கே பாருங்க நம்பி... நீங்க இப்படிப் பேசுறது எனக்குப் பிடிக்கல. நான் உங்க பொண்டாட்டியா இருக்கலாம்... நான் உங்க அன்புக்கு, காதலுக்குப் பணிஞ்சுப் போறவள் தான்... உங்கள் மேல நான் உயிரையே வச்சியிருக்கேன் தான்... இல்லைங்கல்ல... அதுக்காக நான் உங்களுக்கு அடிமை இல்லை. எனக்கு என் சுயமரியாதை ரொம்ப முக்கியம். கணவனா இருந்தாலும் என் தன்மானத்தை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். அதனால இனி மேல் என்னை இந்த மாதிரி ‘டி’ போட்டுப் பேசுறது, அப்புறம் ஆணாதிக்க மனப்பான்மையில் இந்தக் கையை நீட்டி அடிக்கிறது... இதெல்லாம் நமக்குள் என்றுமே வர வேணாம்” அவள் தீர்க்கமாய்ப் பேசப் பேச இவன் சப்தநாடியும் ஒடுங்கி அடங்கிப் போனது.

கொஞ்ச நேரத்திற்கு முன் குளிர் மழையாய் காதலில் தன்னைச் சுகமாய் நனைத்தவள்... சாதாரண ஒரு சொல்லுக்காக இப்போது சுட்டெரிக்கும் சூரியனாய்த் தகிப்பது ஏன்...? அவளின் ஒருபக்கத்தை மட்டுமே

பார்த்தவனுக்கு... அவளின் மறுபக்கம் தெரிந்ததும் அப்படியே விக்கித்துப் போனான். இதற்கே இப்படியென்றால் அவனின் தவறுகள் அவளுக்குத் தெரிய வரும் போது...?????????????

## உயிர் : 16

“குட்மார்னிங் நம்பி...” காலை வணக்கம் கூறியபடி அறைக்குள் நுழைந்த சூரியாவின் முகத்தைப் பார்க்க முடியாமல்... உடையை எடுப்பது போல் அலமாரியைத் திறந்து, அதற்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டான் தமிழ்.

நேற்று அவள் கோபமாய்ப் பேசினாலும்... அதற்கு அடுத்த நொடி அவனிடம் காதலாய் நெருங்கத் தான் செய்தாள். ஆனால் அவனின் குற்றமுள்ள நெஞ்சுத் தான் குறுகுறுத்துத் தவித்துப் போனது. தன்னைப் பற்றிய தவறுகள் அவளுக்குத் தெரிய வரும் போது அவளின் பிரதிபலிப்பு எப்படி இருக்கும்? என்று தெரியாமல் மனதுக்குள் குழம்பிப் போனான்.

தன்னைப் பற்றிய உண்மைகள் மட்டும் அவளுக்குத் தெரியுமானால்... நிச்சயம் அவள் அவனை மன்னிக்கப் போவதில்லை. தன்னை வெறுத்து ஒதுக்கி... தன்னை விட்டுப் பிரிந்துப் போய்விடுவாளோ என்று அவன் அஞ்சினான். அவளின் கோபத்தைக் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் அவளின் புறக்கணிப்பை... பிரிவை அவனால் நிச்சயம் தாங்கிக் கொள்ள முடியாது.

“நம்பி... இனி மேல் இந்த டீசர்ட் எல்லாம் போட கூடாது?” அவன் கையில் வைத்திருந்த டீசர்ட்டை பிடுங்கியவள் அதை மீண்டும் உள்ளே வைத்தாள். அவளின் செய்கையில் தன் மனக்குழப்பத்தை ஒதுக்கி வைத்தவன், ‘ஏன்?’ என்பது

போல் ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி அவளைக் கேள்வியாய் பார்த்தான்.

“நீங்க ஃபார்மலா ட்ரெஸ் பண்ணினாத் தான் உங்க கிட்ட வேலைச் செய்றவங்க எல்லாரும் உங்களை மதிப்பாங்க. ஓனர்... நீங்களும், அவங்களும் ஒரே மாதிரி ட்ரெஸ் போட்டா நல்லாவா இருக்கும்?” அவனைப் போல் புருவத்தை உயர்த்தி அவனிடமே எதிர் கேள்வி கேட்டாள் அவள்.

“அப்போ முதலாளி வேற... தொழிலாளி வேறன்னு பிரிச்சிப் பார்க்கச் சொல்றியா?” அவன் குரல் ஒரு மாதிரியாக ஒலிக்க... அவளோ அதைக் கண்டு கொள்ளாமல் அலமாரில் அவனுக்குச் சட்டை, பேண்ட்டை தேடிக் கொண்டிருந்தாள்.

“ம்... இது நல்லாயிருக்கும்...” என்று தான் தேர்ந்தெடுத்ததை அவன் கையில் கொடுத்தவள்... “நம்பி... நான் அந்த அர்த்தத்தில் சொல்லல. உங்களோட தோற்றம் அவங்கக் கிட்டே இருந்து வேறுப்படுத்திக் காட்டணும் தான் அப்படிச் சொன்னேன். இதில் முதலாளி – தொழிலாளி பிரச்சினை எங்கே இருந்து வந்தது. நான் என்ன... அவங்க கூடச் சரிக்குச் சமமாப் பேசக் கூடாதுன்னு சொன்னேனா? இல்ல... அவங்க பிரச்சினைகளில் தலையிடாம ஒதுங்கி இருக்கச் சொன்னேனா? இல்லையே... அது வேறு... இது வேறு நம்பி. உங்க தோற்றத்தைப் பார்த்தா... உங்க கிட்ட வேலை செய்றவங்களுக்கு உங்க மேல மரியாதையா வரணும். அந்தளவுக்குக் கண்ணியமா உங்க அப்பியரன்ஸ் இருக்கணும்”

அவள் சொல்ல... சொல்ல... இதில் இவ்வளவு இருக்கிறதா என்று ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தான் அவன். தன்னவளின் தெளிவான சிந்தனைக் கண்டு மனதிற்குள் அவன் பெருமைப் பட்டுக் கொண்டான். அவள் சொல் பேச்சுக் கேட்டு உடையை மாற்றியவன், தலையில் வைப்பதற்காக ஹேர் ஜெல்லைக் கையில் எடுக்க...

“நோ ஜெல்…” என்று அவன் கையை அவள் தடுக்க…

“இன்னும் வேற என்ன இருக்கு டீச்சரம்மா…” கைக் கட்டி வாய் பொத்தி அவன் போலிப் பணிவுடன் நிற்க, அவனைக் கண்டு அவள் சிரித்தபடி அருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்தவள்,

“நோ கடுக்கன் ஆல்சோ…” நமட்டுச் சிரிப்புச் சிரித்தபடி அவன் காதில் கை வைக்க,

“இது ஃபேசன் பேபி… இது உனக்குக் கடுக்கனா?” கடுப்புடன் சொன்னான்.

“அந்தக் காலத்துல இதைக் கடுக்கன்னு தான் சொல்லுவாங்க…” என்றவள் அதைக் கழட்ட, அவனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அவளின் செயலுக்குக் கட்டுப்பட்டு அவளிடம் காதைக் கொடுத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

“அப்புறம் இப்படித் தலையை வாரக் கூடாது…” கழட்டிய கடுக்கனை அவன் கையில் கொடுத்துவிட்டு, அவன் முகவாயில் கை வைத்து சிலும்பிக் கொண்டிருந்த அவன் முடியைப் படிய வைத்து அழகாய் சீவிவிட்டாள். அவளின் செயலில் மெய்மறந்து அமர்ந்திருந்த தமிழ், இப்பொழுது அவள் அருகாமையில் தன்னையே தொலைத்தான்.

“ம்… இப்போ எவ்வளவு அழகா இருக்கீங்க” அவன் கன்னம் வழித்துத் திருஷ்டிக் கழித்தவளைக் கண்டவனுக்கு, அவன் அன்னையின் நியாபகம் வந்தது. அவன் மனத்திரையில்… அவர் இதே போல் செய்தது புகை மூட்டம் போல் தெளிவில்லாமல் தெரிந்தது.

“நம்பி…” சூரியா அவனை உலுக்கவும் தான் தன் நினைவுகளைக் களைந்தான் அவன்.

“இப்பவாவது நான் போகலாமா டீச்சர்…?” பவ்யமாய்க் கேட்டவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது.

“இன்னும் ஒண்ணு பாக்கியிருக்கு…” அவனை அழைத்துக் கொண்டு நேரே பூஜையறைக்குச் சென்றவள், அங்கிருந்த விபூதியை எடுத்து அவன் நெற்றியில் பூசிவிட்டாள். அதை அவனும் பணிவாய் வாங்கிக் கொண்டதைப் பார்த்த அப்பத்தா வாயைப் பிளந்தபடி நின்றிருந்தார்.

“ஏலேய்… தமிழு… நீயாவே இப்படி மாறிப்புட்ட…” தாடையில் கையில் வைத்து அங்கலாயித்தவரை…

“நானே தான் அப்பத்தா…” பொய்யாய் வருந்தியப்படி… முகத்தைப் பாவம் போல் வைத்துக் கொண்டு கூறினான் தமிழ்.

“இப்ப உன்னப் பாக்க எவ்வளவு அழகா இருக்கு. முதல்ல போட்டியே ஒரு ட்ரெசு… கோமாளி மாதிரி” அப்பத்தாவின் பேச்சுக்குச் சூரியா சுடிதாரில் இல்லாத காலரைப் பெருமிதமாய்த் தூக்கி விட்டுக் கொள்ள…

“ம்… ஆச்சியும், பேத்தியும் ஒண்ணுச் சேர்ந்திட்டிங்களா… அப்பச்சி நம்மப் பாடு திண்டாட்டம் தான்” தாத்தாவைத் தனக்குத் துணைக்கு அழைத்தான் பேரன்.

“அவ சொல்றதுல என்ன தப்பு இருக்குங்கறேன்…” தன் மனைவிக்குச் சாதகமாய் அவர் பேச… தமிழ் தான் கடுப்பானான்.

“அப்பச்சி உம்ம பொண்டாட்டியை விட்டுக் கொடுக்க மாட்டியே” தாழ்ந்தக் குரலில் அவன் முணுமுணுக்க,

“நீ மட்டும் உம் பொண்டாட்டியை விட்டுக் கொடுப்பியாக்கும்” பதிலுக்கு அவர் அவனை வார…

“எங்கே விட்டுக் கொடுக்க... வாயைத் திறக்க விட்டாத் தானே...” போலியாய் அலுத்துக் கொண்டவனைப் பார்த்து மனதுக்குள் சிரித்தவர்,

“இங்கேயும் அதே தான் பேராண்டி...” சொல்லிவிட்டு நமட்டுச் சிரிப்பு சிரிக்க... அதைக் கண்டு அவனுக்கும் சிரிப்பு வந்தது.

காரில் செல்லும் போது சூரியா செய்தச் செயல்கள் அவனுக்கு நியாபகம் வர, முன்புறம் இருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். அவனின் முகம் அவனுக்கே வித்தியாசமாய்த் தெரிந்தது. ஒரு பக்குவப்பட்ட மனிதனின் தோற்றம் போல் அவன் முகம் இருப்பது கண்டு அவனுக்கே ஆச்சிரியமாய் இருந்தது. இது சூரியாவின் காதலால் வந்த பக்குவம் என்பது அவனுக்கு மட்டும் தான் தெரியும். அவள் தன்னை எப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கிறாள் என்று நினைத்தவன் முகம் சிரிப்பில் மலர்ந்திருந்தது.

தமிழ் சென்றதும் சூரியாவை அழைத்த தையல்நாயகி, “அம்மாடி... இன்னும் ரெண்டு நாளுல ஆடிப் பிறக்கப் போகுது. அதைப் பத்தி உங்க அம்மா கிட்ட பேசணுமே”

நகரத்தில் வளர்ந்தச் சூரியாவுக்கு ஆடி மாசத்தைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. சந்தோசத்துடன் தன் அம்மாவிற்கு அலைப்பேசியில் அழைத்தவள் அவரிடம் நலம் விசாரித்து விட்டு, தையல்நாயகியிடம் அலைப்பேசியைக் கொடுத்தாள்.

“சிவகாமி நல்லாயிருக்கியாம்மா...”

......................

“எனக்கு என்ன கொறச்சலு... அதாம் உம் பொண்ணு என்ன நல்லாப் பார்த்துக்குறாளே. நான் நேரா வெசயத்துக்கு வாறேன்... நாளைக்கு ஆடிப் பிறக்குதே... அது பத்திப் பேசத் தான் கூப்பிட்டேன்”

.........................

“இந்தக் காலத்துல யாரும் அதைப் பெருசாப் பார்க்குறது இல்லத் தான். இருந்தாலும் நாம சடங்கு, சம்பிராதயங்கள அப்படியே விட்டுற முடியுமாச் சொல்லு”

.....................

“சரி அப்படின்னா சரி... நாளைக்குப் பத்து மணிக்கு நேரம் நல்லாயிருக்கு. நீங்க ரெண்டுப் பேரும் கௌம்பி இங்கே வாங்க” பேச்சை முடித்துக் கொண்டு அலைப்பேசியைச் சூரியாவிடம் நீட்டினார்.

“ஆச்சி... அம்மா, அப்பாவை எதுக்குக் கூப்பிட்டு இருக்கீங்க?” அவள் மெதுவாய் அவரிடம் கேட்டாள்.

“ஆடி மாசத்துல புதுசா கல்யாணமான ஜோடிங்களப் பிரிச்சி வச்சுருவாங்க. ஏன்னா ஒருவேளை ஆடிமாசம் கொழந்தை உண்டானா... சித்திரையில் தான் கொழந்தைப் பிறக்கும். பிஞ்சுக் கொழந்தையால சித்திரைக் கத்திரி வெயிலைத் தாங்க முடியுமா? அது தான் அந்தக் காலத்துல அப்படிச் செஞ்சாங்க... இப்போ யாருக்கு அது புரியுது. சொன்னா நம்மளைத் தான் முட்டாள் மாதிரிப் பார்க்குறாங்க. யாரு எப்படிப் போனா நமக்கு என்ன? நாம ஒழுங்கா இதையெல்லாம் மதிச்சு நடந்துக்குவோம்” அவர் சொல்லச் சொல்ல சூரியாவிற்குத் தலைச் சுற்றியது.

‘என்னது... ஒரு மாசம் நம்பியைப் பிரிஞ்சி இருக்கணுமா? ஐயோ... இப்ப நான் என்ன பண்ணட்டும்? அவ்வளவு நாள் என்னால் நம்பியை விட்டுட்டு இருக்க முடியாதே...” காதல் கொண்ட அவள் மனம் தவித்துப் புலம்பியது. கண்களில் கண்ணீர் தளும்பி நின்றது.

இரவு வீட்டிற்கு வந்த நம்பி... என்றும் இல்லாமல் இன்று சூரியாவின் முகம் வாடி இருப்பதைக் கண்டான். என்னவாக இருக்கும் என்று விசயம் தெரியாமல் அவனின் மண்டைக்

காய்ந்தது. எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு அறைக்குள் வந்த சூரியாவைக் கண்டதும்,

“ஹேய் பேபி... ஏன் உன் முகம் ஒரு மாதிரியிருக்கு?” அவள் கையைப் பற்றி அருகில் அமர வைத்தவன் கவலையுடன் கேட்டான். தன்னைப் பற்றி ஏதோ தெரிந்ததால் தான் அவள் அவ்வாறு இருக்கிறாளோ என்று அவன் மனதுக்குள் பயந்துச் செத்துக் கொண்டிருந்தான்.

அவன் கேட்டதும் தான் தாமதம்... அவள் மனம் உடைந்துப் போய் அழ ஆரம்பித்தாள். அவளின் அழுகையில் அவன் இன்னமும் தவித்துப் போனான். அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு ஆறுதல் படுத்தியவன்,

“என்ன சொல்லு சூர்யா... சொன்னாத் தானே தெரியும்?” அவள் பதில் சொல்லும் வரை அவனின் ஒவ்வொரு நொடியும் வெகு பயங்கரமாய்க் கழிந்தது.

“நாளைக்கு ஆடியாம்...” அழுது கொண்டே அவள் சொல்ல... விசயம் வேறு என்று அப்பொழுது தான் அவனால் நிம்மதியாய் மூச்சுவிட முடிந்தது.

“ஆடிக்கு என்ன?”

“ஆடி மாசம் ஹஸ்பென்ட் அன்ட் வைப்பை பிரிச்சி வைப்பாங்களாம். நாளைக்கு ஆடிப் பிறக்குது... ஆச்சி நம்மளையும்...” அவள் முடிக்காமல் அழ ஆரம்பிக்க... அதைக் கேட்டு அவன் எரிச்சல் அடைந்தான்.

“இந்தக் கிழவி லொள்ளுத் தாங்கல. அவனவன் ஆடி மாசம் ஆடி காரே வாங்கறான். இந்தக் காலத்துல போய்ப் பிரிச்சு வச்சிட்டு... நீ இங்கேயே இரு... நான் போய் அந்தக் கிழவியை ரெண்டுல ஒண்ணுக் கேட்டுட்டு வர்றேன்” வேகமாய் எழுந்தவனின் கைப்பிடித்துத் தடுத்தவள்,

“பெரியவங்கச் சொன்னாக் காரணம் இருக்கும். நீங்க போக வேணாம். முதல்ல உட்காருங்க” என்றவள் தையல்நாயகி சொன்னக் காரணத்தை அவனிடம் சொல்ல... அது அவனுக்குக் கூடக் கொஞ்சம் கோபத்தைக் கிளப்பியது.

“இப்படி முட்டாள்த்தனமா பேசுறதுக்கு... அப்பத்தாவால மட்டும் தான் முடியும்” கோபத்துடன் மொழிந்தவனைச் சமாதானப்படுத்துகிறேன் என்று அவள் அணைத்து ஆறுதல் படுத்த, அவனும் அவளை ஆறுதல் படுத்த... அவர்களின் அணைப்பு மேலும் மேலும் இறுகி... அவர்களை அடுத்தக் கட்டத்திற்கு இழுத்துச் சென்றது.

************************************************

தமிழ் ஒரு மணி நேரமாகப் புரண்டுப் புரண்டுப் படுத்தும்... தூக்கம் வருவேனா என்று சண்டித்தனம் செய்தது. இன்று காலையில் சூரியா அவள் அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டாள். அவளைப் பிரியும் போது அவனுக்குமே மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது. இவ்வளவு நாள் இவளைப் பார்க்காமல் எப்படி வாழ்ந்தேன்? என்று மனம் வியந்தது. இன்னும் ஒரு மாதம் இவளை விட்டு எப்படிப் பிரிந்திருப்பேன்? என்று மனதுக்குள் ஏங்கினான்.

பகலில் எல்லாம் வேலையில் மூழ்கித் தன் நினைவுகளைச் சற்று ஒதுக்கி வைத்தவனுக்கு இரவினில் அது மாதிரிச் செய்ய முடியவில்லை. படுக்கையைப் பார்த்தும் சூரியாவுடன் அவன் கூடிய கூடல் நியாபகத்துக்கு வந்தது. அறையில் ஒவ்வொரு மூலையும் பார்க்கும் போதும்... எங்கும் எதிலும் அவளே நிறைந்திருந்தாள். வெகுவாய் முயன்றுத் தூங்கியவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது,

“நம்பி...” கதிர் மெல்லிய குரலில் அழைத்துக் கொண்டே ரத்தம் தோய்ந்தக் கட்டுக்களுடன் இருந்த தன் கையைத் தமிழை நோக்கி நீட்ட... அலறிக் கொண்டு எழுந்தான் தமிழ். முகத்தில் வியர்வை முத்து முத்தாய் துளிர்த்து இருக்க...

அதைத் துடைக்கக் கூட இயலாதவனாய் அப்படியே விதிர்த்துப் போய் அமர்ந்திருந்தான்.

இவ்வளவு நாளும் அவன் எதை மறக்க வேண்டும் என்று எண்ணினானோ அது… இந்த ஒன்பது ஆண்டுகளாகக் கனவு வடிவில் வந்து அவனுக்குத் திரும்பத் திரும்ப நியாபகப்படுத்திக் கொண்டே இருந்தது. அந்த நினைவை விரட்டத் தான் அவன் தினமும் தன்னிலை மீறி மது அருந்திவிட்டு வருவது. ஆனால் திருமணமாகி இத்தனை நாளில் அவனுக்கு ஒருநாள் கூட இந்த மாதிரிக் கனவு வந்தது இல்லை. அதனால் என்னமோ மதுவின் நினைவும் அவனுக்கு வரவில்லை. அந்தளவுக்குச் சூரியாவின் அருகாமை அவனின் வேதனையைக் குறைத்திருந்தது. இன்று அவள் அவனருகில் இல்லாததால் அந்தக் கனவு மறுபடியும் வந்து அவனின் மனதின் ரணத்தைக் குத்திக் கிளறிவிட்டது.

படுக்கையை விட்டு எழுந்தவன்… தன் அலமாரியில் ஓரமாய் ஒளித்து வைத்திருந்த சிகரெட் பாக்கெட்டுகளை எடுத்துக் கொண்டு பால்கனிப் பக்கம் வந்தான். அப்பத்தாவிற்குச் சிகரெட், மது இதெல்லாம் பிடிக்காது என்பது அவனுக்குத் தெரியும். மது பாட்டிலை அவன் வீட்டிற்குக் கொண்டு வருவதில்லை. அப்படியே கொண்டு வந்தாலும் அப்பச்சியுடன் சேர்ந்து உடனே அதைக் காலி செய்து விடுவான். அப்பத்தாவிற்குத் தெரியாமல் அவன் பதுக்கி வைத்திருப்பது இந்தச் சிகரெட் ஒன்று தான்.

அவனால் தன் மனதில் எழுந்த வேதனையை… சிகரெட்டை பாக்கெட் பாக்கெட்டாக ஊதித் தள்ளியும் குறைக்க முடியவில்லை. அந்தத் துயரச் சம்பவங்களை நினைத்துப் பார்க்க கூடப் பிடிக்காதவனாய் கண்களை இறுக மூடிக் கொண்டான். ஆனால் அது ‘உன்னை அவ்வளவு எளிதில் நான் விட்டு விடுவேனா’ என்பது போல் அவனின் மனதில் படம் போல் ஓடியது.

செங்கதிர் என்ற கதிர் அவனின் பெரியப்பா மகன். இவனை விடப் பத்து வயது பெரியவன். அப்பச்சி, அப்பத்தா, பெரியப்பா, பெரியம்மா, கதிர், அப்பா, அம்மா, இவன் என்று ஒரே குடும்பமாய் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தனர். யார் கண் பட்டதோ தெரியாது... ஒருநாள் இவனின் அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா நால்வரும் ஒரு திருமணத்திற்காக ரயிலில் சென்ற போது... அவர்கள் சென்ற முதல் வகுப்புப் பெட்டியில் இருந்த ஏசியில் கோளாறு ஏற்பட்டு அது தீப்பிடித்து எரிந்ததில் நால்வரும் அந்த இடத்திலேயே உடல் கருகி மரணம் அடைய... அதில் குடும்பம் மொத்தமும் நிலைக் குழைந்து போனது. அப்போது கதிருக்கு பதினைந்து வயது, இவனுக்கு ஐந்து வயது.

கதிர் தான் பெரியவனாய் தன்னைத் தேற்றிக் கொண்டு அப்பச்சி, அப்பத்தாவுக்குத் தைரியம் சொன்னவன்... இவனின் துயரம் கண்டு இவனைத் தாயுமானவனாய் தாங்கிக் கொண்டான். பத்தாம் வகுப்போடு படிப்புக்கு முழுக்குப் போட்டவன், தொழிலைக் கையில் எடுத்தான். தொழிலில் முதலில் தட்டுத் தடுமாறியவன் நாட்கள் செல்லச் செல்ல... ஆதிமூலம் உதவியுடன் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறினான். அதன் பின் அவனுக்குத் தொழிலில் பின்னடைவு ஏற்படவே இல்லை.

எல்லோருக்கும் தமிழாய் இருந்தவன் கதிருக்கு மட்டும் அவன் நம்பி. ஏனென்றால் சிறு வயதில் ‘ழ’கரம் கதிருக்குச் சரியாக உச்சரிக்க வராது. அதனால் அவன் தந்தை திட்டுவதால் அவன் தமிழை நம்பி என்றே அழைத்தான். தமிழுக்கும் அண்ணன் என்றால் அவ்வளவு பாசம், மரியாதை... அவனின் ரோல் மாடல் அவன் அண்ணன் என்றால் மிகையாகாது.

இப்படி நன்றாகச் சென்று கொண்டிருந்த வாழ்கையில்... புயலாய் நுழைந்தாள் சங்கீதா. கதிரின் அலுவலகத்தில் புதிதாய் வேலைக்குச் சேர்ந்திருந்தாள் அவள். அவளைப் பார்த்த மாத்திரத்தில் கதிருக்குப் பிடித்துப் போய் விட ஒரே

மாதத்தில் அவன் தன் காதலை அவளிடம் சொல்ல... அவள் சந்தோசமாய்ச் சம்மதித்தாள். அவ்வளவு பெரிய பணக்காரனை எந்த முட்டாளாவது வேண்டாம் என்பாளா?

கதிரின் காதல் விசயம் அறிந்த ஆதிமூலமும், தையல்நாயகியும் சந்தோசத்துடன் கல்யாணத்திற்குச் சம்மதித்தனர். கல்யாணம் முடிந்து கொஞ்ச நாளிலில் கீதா தன் விசத்தைக் கக்க ஆரம்பித்தாள். கதிரின் பணம் பிடித்த அளவுக்கு... அவனின் குடும்பமோ, அவனோ அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனோ மென்மையானவன், அன்பானவன். அவளைப் பூ போல் நடத்தியது அவளுக்குப் பிடிக்கவில்லை. வீண் ஆடம்பரத்தையும், டாம்பீகத்தையும், பகட்டாய் உடை உடுத்திக் கொண்டு காரில் உலா வருவதையும் விரும்பியவளுக்கு... கதிரின் அன்பு கட்டுப்பாடுகள் பிடிக்கவில்லை போலும். கதிரின் மேல் காதல் இல்லை என்று வெகு தாமதமாய் அவளுக்குப் புரிய... தினமும் அவனுடன் சண்டைப் போட்டாள். கதிர் அதையும் சகித்துக் கொண்டு அவளுடன் குடும்பம் நடத்தினான். தானாக விரும்பி அமைத்துக் கொண்ட வாழ்க்கைத் தோல்வியில் முடிந்ததைப் பெரியவர்களுக்குத் தெரியப்படுத்தி... அவர்களை வேதனையில் ஆழ்த்த அவன் விரும்பவில்லை.

சங்கீதா கண்டப்படி ஊர் சுற்றுவதாக அவனின் நெருங்கிய நண்பர்கள் சொல்ல... அதை அவன் முதலில் நம்பவில்லை. எதேச்சையாய் ஒருநாள் ஹோட்டலில் அவளைப் பார்த்தான். அவள் யாரோ ஒருவனுடன் தோள் சாய்ந்தமர்ந்து உணவு உண்டுக் கொண்டிருப்பதைக் கண்டவனுக்கு ஆத்திரம் எழுந்தது. அதே ஆத்திரத்துடன் அவள் முன் வந்த கதிர் அவளைத் தட்டிக் கேட்க, அவளோ கோபத்தில் எகிறினாள்.

“உன்னை மாதிரி பொட்டைப்பயல் கூட எல்லாம் என்னால் வாழ முடியாது. எதுக்கும் டாக்டர் கிட்டப் போய் உன்னைச் செக் பண்ணிக்கோ” என்று அவள் இளக்காரமாகப் பேச...

அவ்வளவு நாள் பொறுமைக் காத்தவன் எரிமலையாய் பொங்கி எழுந்துவிட்டான்.

“படுக்கையில் வீரத்தைக் காட்டுறவன் ஆம்பிள்ளை இல்லை. நான் மனுசனா நடந்துகிட்டது உனக்குத் தப்பாத் தெரியுது ம்... . நீ பேசிய பேச்சுக்கு உன்னை வெட்டிப் போட்டுருப்பேன். எங்க அப்பச்சி, அப்பத்தா மனசு கஷ்டப்படக் கூடாதுன்னு பார்க்கிறேன். எனக்கு என் கௌரவம் முக்கியம். இதுக்கு மேலே நீ இப்படி நடந்துக்க நினைச்ச... உன்னைக் கொன்னுப் போட்டுருவேன்” என்று கர்ஜித்தவன் அவள் கையைப் பற்றி வீட்டிற்கு இழுத்து வந்தான். அவனின் கர்ஜனையைப் பார்த்தோ என்னமோ அவளும் கொஞ்ச நாள் பயந்துப் போய் அடங்கி இருந்தாள்.

குடும்பக் கௌரவம் என்று அவளை அழைத்து வந்தாலும் அவளுடன் குடும்பம் நடத்தவும் அவனால் முடியவில்லை... அவள் பேசிய வார்த்தைகளை அவனால் மறக்கவும் முடியவில்லை. அதையே நினைத்து நினைத்துக் குடிக்க ஆரம்பித்தான். அப்படி ஒரு நாள் நன்றாகக் குடித்து விட்டு காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் அலைப்பேசியில் தமிழை அழைத்து, தன் வாழ்க்கையில் நடந்ததை எல்லாம் சொல்லிப் புலம்பியவன்,

“டேய் இந்தப் பொம்பளைங்களே இப்படித்தான்டா. நம்மளை நாய் மாதிரி அவங்கப் பின்னாடி அலைய விடுறதுல அவளுகளுக்கு அப்படியொரு சந்தோசம். இவளுகளுட்ட எல்லாம் கெஞ்சக் கூடாதுடா. அதே மாதிரி மென்மையையும் காட்டக் கூடாதுடா. அப்படி நாம நடந்துகிட்டோம்ன்னா நம்மளப் பொட்டைப் பய மாதிரி பார்ப்பாளுங்க. இதோ என்னைய பார்த்த மாதிரி... இவளுகளுக்கு எல்லாம் முரட்டுத்தனம் தான்டா சரி. நாய் மாதிரிக் குழையக் கூடாது... புலி மாதிரிப் ஆக்ரோசமாய்ப் பாயணும்டா” வெறித்தனமாய்க் கத்திப் பேசியவனைக் கண்டு திகைத்துப் போய்விட்டான் தமிழ். அவனுக்கு அப்பொழுது பதினெட்டு வயது தான் இருக்கும்.

“போதும்டா நம்பி... இந்த வாழ்க்கை எனக்குப் போதும்டா... எனக்கு எல்லாமே வெறுத்துப் போச்சுடா. நான் இந்த உலகத்தை விட்டே போறேன்” என்றவன் அதற்கு மேல் பேசவில்லை. கதிரின் அலறல் மட்டுமே அவனுக்குக் கேட்டது.

தமிழ் பெரியவர்களிடம் சொல்லி அழுதுப் புலம்ப... அடுத்த ஒருமணி நேரத்தில் அவர்களுக்குக் காவல் நிலையத்தில் இருந்து அழைப்பு வந்தது. லாரியில் அடிப்பட்ட கதிரை மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாக அவர்கள் சொல்ல... பதறி அடித்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடியவர்கள்... அங்குப் பார்த்தது குத்துயிரும் குலையிருமாய் இருந்த கதிரைத் தான். தன்னைப் பார்க்க வந்த அப்பச்சியையோ இல்லை... அப்பத்தாவையோ... கதிர் கவனிக்கவில்லை. தன் சொந்தப் பிள்ளைப் போல் வளர்த்தத் தம்பியைத் தான் அவன் பார்த்தான்.

“நம்பி...” ரத்தம் தோய்ந்த தன் கையை அவனின் பக்கம் நீட்ட... தமிழ் வந்து அதைப் பற்றுவதற்குள் கதிரின் உயிர் அவனை விட்டுப் பிரிந்திருந்தது.

கதிரின் பிரிவைத் தாங்காமல் அழுது கரைந்த தமிழைப் பெரியவர்கள் ஒருவாறாய் முயன்றுத் தேற்றினர். அவனும் துயரத்தில் இருந்த தேறினாலும் கதிர் பேசியது அவனின் மனதில் தீராத வடுவாய் பதிந்து போனது. அதை விடச் சங்கீதா செய்தச் செயல்... அவனைப் பெண்களைக் கண்டால் வெறுக்கச் செய்தது. எந்தவித வருத்தமும், கவலையும் இல்லாமல் கதிர் இறந்த மறுமாதமே... அவள் தன் காதலனுடன் சென்றுவிட்டாள்.

என்ன தான் பெரியவர்களுக்குத் தெரியாமல் கதிர் தன் வாழ்க்கையை மறைக்க முயன்றாலும்... அவளின் மனைவி அவனுக்குத் தெரியாமல் அவர்களைத் தேளாய் கொட்டத் தான் செய்தாள். அதிலேயே அவர்களுக்கும் அவளின் குணம் நன்கு தெரிந்து விட... பேரனுக்காகப் பொறுத்துப் போயினர். அதனால் அவள் காதலனுடன் போனது

அவர்களுக்கு அப்படி ஒன்றும் பெரியதாய் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. அவள் கதிரைத் தரக் குறைவாய் பேசியது மட்டும் அவர்களுக்குக் கடைசி வரை தெரியவில்லை. தமிழும் கதிர் தன்னிடம் சொன்ன ரகசியத்தை அவர்களிடம் சொல்லவில்லை.

கையில் இருந்த சிகரெட் முடிந்து அதன் கனல் அவன் கையைச் சுட... சட்டென்று தன் கையை உதறினான் தமிழ். அதோடு சேர்த்துத் தன் பழைய நினைவுகளையும் உதறித் தள்ளியவன் படுக்கையில் விழுந்தான். ஆனால் அவனுக்கு உறக்கம் தான் வரவில்லை.

மறுநாள் தமிழின் அறையைச் சுத்தம் செய்யப் பணிப் பெண்ணுடன் அங்கு வந்த அப்பத்தா... பால்கனி முழுவதும் புகைத்து விட்டுத் தூக்கி எறியப்பட்ட சிகரெட் துண்டுகளின் எண்ணிக்கையைக் கண்டு திகைத்துப் போய்விட்டார். பிறகு ஒரு முடிவுடன் அலைப்பேசியை எடுத்தவர் சூரியாவின் வீட்டின் எண்களை அழுத்தினார்.

அன்று இரவு தன்னிலை மறக்கும் அளவுக்குக் குடித்துவிட்டு தள்ளாடியபடி வீட்டிற்கு வந்த தமிழ்... அங்கே தனக்காகக் கதவைத் திறந்துவிட்ட சூரியாவைக் கண்டதும் அதிர்ந்துப் போய் அப்படியே நின்றுவிட்டான்.

## உயிர் : 17

“சூல்...யா... நீ எங்கே இங்கே?” விழி விரித்து ஆச்சிரியமாய்க் கேட்ட செந்தமிழ்நம்பி... அடுத்த நொடி முகத்தில் சந்தோசத்தைக் காட்டினான்.

“வந்தூ... ட்டியா... எனக்குத் தெரியும் நீ... என்னை விட்டுட்டு இருக்க மாட்டேன்னு?” குதூகலத்துடன் சொல்லியவன் அவள் முகத்தைப் பார்க்க... அவளோ அவனைப் பார்த்தப்படி அப்படியே அசையாது நின்றிருந்தாள். ஒருவேளை அவளையே நினைத்துக் கொண்டிருப்பதால்... தனக்கு மட்டும் எங்கும் அவள் பிம்பம் தோன்றுகிறதோ என்று தன் கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் அவளைப் பார்த்தான்.

அவனின் செய்கையை உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் உள்ளே வருவதற்கு ஏதுவாக வழி விட்டு விலகி நின்றாள். அவள் உருவம் அசைவதைக் கண்டு திருப்தியுற்றவனாய்,

“ம்... நீ வந்துட்டேன்னு இப்ப நம்பறேன்” என்றவன் அவளை அணைக்க வரவும், அவனிடமிருந்து வந்த மதுவின் நாற்றம் அவளுக்குக் குமட்டிக் கொண்டு வர... அவன் கையில் அகப்படாமல் தள்ளி நின்றாள். அவள் விலகிச் சென்றதை அவன் கவனிக்கவில்லை. அணைப்பதற்குச் சென்ற அவனின் கைகள் காற்றில் துளாவ... அவை பிடிமானம் இல்லாமல் தத்தளித்ததில், அவன் நிதானம் தவறிக் கீழே விழப் போனான். அதைக் கண்டு ஓடி வந்து அவனைப் பிடித்தவள் சற்றுச் சிரமப்பட்டுத் தன் தோளில் அவனைத் தாங்கியப்படி தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அவனைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு நிமிர்ந்தவளின் கைகளை அவன் பிடித்துக் கொண்டு, “சூல்யா... பேப்... பி...” என்று சொல்லிக் கொண்டே

அவளின் கையில் முத்தமிட வர, அவள் வேகமாய் அவன் கையை உதறினாள்.

“ஏன் பே... பி... நா வேணா... மா...?” புலம்பியப்படி படுத்திருந்தவனைக் கண்டு அவளுக்கு என்ன செய்வது? என்று தெரியவில்லை.

அவன் உடுத்தியிருந்த ஆடைகள் கசங்கி, தலைமுடிக் கலைந்து... கண்கள் சொருக, வாயை ஆவெனப் பிளந்து கொண்டு படுத்திருக்கும் கணவன் அவளுக்கு வித்தியாசமாகப் பட்டான். அவள் அறிந்த நம்பி நேர்த்தியாய், மடிப்புக் கலையாமல் உடுத்தி, புன்னகை முகத்துடன் பார்க்கக் கம்பீரமாக இருப்பான். இந்த மாதிரி ஒரு கோலத்தில் அவனைப் பார்க்க அவளுக்குச் சகிக்கவில்லை. அதிலும் அவன் குடித்துவிட்டு வந்தது அவளுக்குப் பெருத்த அதிர்ச்சியைக் கொடுத்தது.

மீண்டும் அவன் முகம் பார்த்தாள். அவன் நன்றாக உறங்கிக் கொண்டிருப்பது கண்ணில் பட, காலையில் எழுந்ததும் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு அவனுக்குப் பக்கத்துப் படுக்கையில் படுத்தாள். கண்களை மூட முயன்றும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. முதல் முறையாக எதிர்காலத்தைப் பற்றிய ஒரு பயம் வந்தது. வெகு நேரம் யோசித்துக் கொண்டிருந்தவள் எப்பொழுதுத் தூங்கினாள் என்று அவளுக்குத் தெரியாது.

நடுஇரவில் விழித்த தமிழ் எழுந்து அமர... அதிகப் போதையில் அவனுக்குத் தலைப்பாரமாக இருக்க... தலையைத் தன் இரு கைககளால் தாங்கிக் கொண்டான். சிறிது நேரம் தன்னை நிதானப்படுத்திக் கொண்டவனுக்கு இரவில் நடந்தது கொஞ்சம் கொஞ்சமாய் நியாபகம் வர... வேகமாய்ப் பக்கத்துப் படுக்கையைப் பார்த்தான். அவன் நினைத்தது போல் அங்கே சூரியா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

‘அப்போ நடந்து எல்லாம் கனவு இல்லையா? போச்சு… எல்லாம் போச்சு… சாதாரணமா டி போட்டுப் பேசியதுக்கே… அந்தக் குதி குதிச்சா… இப்போ என்ன என்னெல்லாம் பேசப் போறாளோ?’ மனதுக்குள் புலம்பியவன் அவளைச் சமாதானப்படுத்தலாம் என்றெண்ணி அவள் அருகே சென்றான். அவனிடம் இருந்து வந்த மதுவின் வாடை அவனுக்கே ஒரு மாதிரியாக இருக்க… படுக்கையை விட்டு எழுந்தவன் குளிக்க எண்ணி குளியலறைக்குள் புகுந்தான்.

குளித்து முடித்து நேரே மனைவியிடம் வந்தவனுக்கு அவள் தூங்கும் அழகைக் கண்டு எப்பொழுதும் போல் தாபம் ஏற… அவளைச் சமாதானப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைப் பின்னுக்குத் தள்ளினான்.

“பேபி…” என்று தாபத்துடன் அழைத்தபடி அவள் கழுத்தில் முகம் புதைக்க… அவளும் தூக்கக் கலக்கத்தில்,

“நம்பி…” என்றபடி அவனை இறுக்கமாய் அணைத்துக் கொண்டாள். அவளின் செயலில்… அவளுக்குத் தன் மேல் கோபம் இல்லை என்று அவனாக நினைத்துக் கொண்டு… அவனின் கைகள் அவள் மேனியில் எல்லை மீற… அவளுக்குச் சட்டென்று விழிப்பு வந்தது.

“முதல்ல கையை எடுங்க…” ஆத்திரத்துடன் சொன்னவள் அவன் கைகளை முரட்டுத்தனமாய் விலக்கி விட்டுப் படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

அவனோ கிளறப்பட்ட தன் உணர்வுகளை அடக்கும் வழித் தெரியாமல், அவள் கையைப் பற்றிச் சுண்டி இழுத்தான். அவன் இழுத்ததில் அவள், அவன் மேலே வந்து விழ, அவன் கரங்கள் அவளை ஆக்டோபஸ் போல் சுற்றி வளைத்தது. என்ன தான் அவன் குளித்தாலும் அவனிடம் இருந்து வந்த மது வாடை அவளுக்கு உமட்டிக் கொண்டு வர முயன்ற அளவு அவனை எதிர்த்துப் போராடினாள்.

தன் தொடுகைக்கு உருகிக் கரைகிறவள்... என்றும் இல்லாமல் இன்று அவள் தன்னை எதிர்த்துப் போராடுவது கண்டு... அவளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து அவளை விட்டு அவன் விலகினான். அவள் முகத்தை அவன் பார்க்க... அவளோ அவன் முகத்தைப் பார்க்க கூடப் பிடிக்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் அந்தச் சிறு உதாசீனமே அவனுக்குப் பெருத்த வலியைக் கொடுத்தது.

“பேபி... சாரி பேபி... இனி மேல் நான் குடிக்க மாட்டேன். நேத்து நீ இங்கே இல்லையா... உன்னோட பிரிவைத் தாங்க முடியாம தான் நான் குடிச்சேன். என்னால உன்னை விட்டுட்டு இருக்க முடியல பேபி. மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது பேபி”

அவனின் வார்த்தைகள் அவளின் உள்ளத்தைக் கரைக்கத் தான் செய்தது. ஆனால் அவனிடம் அவள் கேட்க வேண்டிய கேள்விகள் இருந்ததால் அவன் புறம் திரும்பியவள்,

“எனக்கும் தான் உங்களைப் பிரிஞ்சி மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது. அதுக்காக நானும் உங்களை மாதிரி தண்ணி அடிக்கவா?” அவளின் வார்த்தைகள் கூர்மையாய் அவனைத் தாக்கியது.

“பேபி... நீ... என்ன சொல்ற?” அவனின் வார்த்தைகள் தட்டுத் தடுமாறியது.

“உங்களுக்கு ஒரு நியாயம்... எனக்கொரு நியாயமா?” புருவத்தைக் கேள்வியாய் அவள் உயர்த்த... அவளின் கேள்விக்குப் அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

“என்னோட பிரிவைத் தாங்க முடியாம... எனக்காகக் குடிச்சேன்னு நீங்க சொல்றது கொஞ்சமும் நம்பும்படியா இல்லியே” உதட்டை பிதுக்கியவள், “நீங்க தள்ளாடிட்டு வந்த நிலைமையைப் பார்த்தா... நீங்க குடிக்கிறதில் டாக்டரேட் வாங்கின ஆள் மாதிரியில்ல தெரியுது” அவள் குரலில்

இருந்த நக்கலில் அவன் அவமான உணர்வில் தலையைக் குனிந்தான்.

இதே இது அவன் அப்பத்தா அவனைக் கேட்டு இருந்தால்... ‘என்ன கிழவி லொள்ளா?’ என்று அவரை மிரட்டி இருப்பான். ஆனால் இதைக் கேட்பது அவனின் மனைவி... அதுவும் ஆசை மனைவி. இதற்கு என்ன பதில் சொல்வது? என்று அவனுக்குத் தெரியவில்லை. பதில் சொல்லாவிட்டால் அவள் அவனை மன்னிக்கவும் மாட்டாள். அவளை அருகில் வைத்துக் கொண்டு அவனால் சந்நியாச வாழ்க்கை வாழவும் முடியாது. அவனுக்கு அவள் வேண்டும்... அவள் அன்பு வேண்டும்... அவள் காதல் வேண்டும்... மொத்தத்தில் அவளுள் அவன் மொத்தமாய்க் கரைந்துப் போக வேண்டும்.

“சாரி பேபி... எனக்குக் குடிப் பழக்கம் உண்டு...” தலையைக் குனிந்தப்படி மெதுவாய் இறங்கிப் போன குரலில் அவன் சொன்னான்.

“ம்... இன்னமும் வேற என்ன என்ன நல்ல..... பழக்கம் எல்லாம் இருக்கு... அதையும் இப்பவே சொல்லிடுங்க. எல்லா அதிர்ச்சியையும் மொத்தமாய் நான் தாங்கிக்கிறேன். இப்படி இன்சால்மென்ட் பேஸ்சிசில் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொல்லாதீங்க” அவன் செயலால் ஏற்பட்ட துக்கம் தொண்டையை அடைத்ததோ என்னமோ... ‘ம்க்கும்’ என்று தொண்டையைச் செருமிச் சரி செய்து கொண்டாள்.

“சிகரெட் பிடிப்பேன்...” அவன் அடுத்துச் சொல்ல... அவள் உணர்ச்சியில்லாத முகத்துடன் அவனைப் பார்த்தாள்.

“அப்புறம்...” மேலும் அவள் கேட்க...

அவன் தன் மறுப்பக்கத்தை... தன் தவறுகளைச் சொல்லிவிடலாமா என்று ஒரு கணம் யோசித்தான். பிறகு

வேண்டாம் என்று முடிவெடுத்தவன் வாயை இறுக மூடிக் கொண்டான்.

‘இதுக்கே இந்தப் போடு போடுறா… இதையும் சொன்னேன்… அவ்வளவு தான் நீயாச்சு… உன் தாலியுமாச்சுன்னு தூக்கிப் போட்டுட்டுப் போயிருவா. அவளைக் கல்யாணம் பண்ணிய பிறகு நான் ஒழுக்கமாய்த் தானே இருக்கேன். அதுக்கப்புறமும் நான் தவறு செய்தால் அவள் என்னை என்ன? என்று கேட்கட்டும். கடந்த காலத்தை மாற்ற முடியாது. இனிவரும் காலங்களில் அவளுக்கு நல்ல கணவனா நான் இருப்பேன். இதில் பழைய குப்பையை நானே கிளறி… அவள் கோபத்தை அதிகப்படுத்துவானேன்’ என்று ஆண் மகனாய் தன்னைப் பற்றி மட்டுமே நினைத்தவன் அமைதிக் காத்தான். அவனின் மறுப்பக்கம் அவளுக்குத் தெரிய வந்தால், அது அவளின் பூவிதயத்தை எந்தளவுக்குக் குத்திக் கிழிக்கும் என்று அவன் அறியாமல் போனது அவனுடைய துரதிர்ஷ்டம்.

“வேற எதுவும் இல்லையா?” அவள் கேட்டதும் அவன் வேகமாய் மறுப்பாய் தலையசைத்தான்.

“ஓகே நீங்க படுங்க…” என்றவள் தான் படுக்கப் போக… அவளின் செயலில் அவன் சந்தோசமாகி அவளை அணைத்துக் கொண்டு படுக்கப் போனவனின் கைகளைத் தட்டி விட்டவள்… அவனைக் கோபமாய் முறைத்துப் பார்த்தாள்.

“நான் உங்களப் படுங்கன்னு தான் சொன்னேன். என்னைக் கட்டிப் பிடிக்கச் சொல்லல”

“நீ இன்னும் கோபமா இருக்கியா?” அவள் என்ன நிலையில் இருக்கிறாள்? என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை.

“நீங்க செய்றக் காரியம் கோபத்தை வரவழைக்காமல் இருந்தால் தான் ஆச்சிரியம். நீங்க இப்படி மொடாக்

குடிக்காரரா இருப்பீங்கன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல. உங்கள மாதிரி ஒரு ஆளை என் லைப் டைமில் நான் பார்த்துக் கிடையாது. அப்படி நான் பார்த்த முதல் ஆள் நீங்க தான். இது நானா தேடிக்கிட்ட வாழ்க்கை… அதனால நான் அழுதுப் புலம்புறதுல ஒரு பிரயோஜனமும் இல்ல. எனக்கு இதையெல்லாம் ஜீரணிக்கக் கொஞ்ச டைம் கொடுங்க” என்றவள் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டாள்.

அவள் முகத்தில் தெரிந்த எல்லையற்ற வேதனையைக் கண்டவன் உள்ளம் வலித்தது. தன்னால் தான் அவளுக்குக் கஷ்டம் என்பதை உணர்ந்து அவன் மேலேயே அவனுக்கு வெறுப்பாய் இருந்தது.

“நான் தான் சாரி சொன்னேனே பேபி…” அவன் குரலில் படக்கென்று கண்ணைத் திறந்தவள்,

“செய்றது எல்லாம் செஞ்சிட்டு சாரி சொன்னா சரியாப் போச்சா? ஓகே நான் உங்களை மன்னிச்சிட்டேன்னே வச்சுக்கோங்க…” அதைக் கேட்டதும் அவன் முகம் ஆயிரம் வாட்ஸ் பல் போல் பிரகாசமாக… அதைக் கண்டு அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

“ரொம்பச் சந்தோசப்படாதீங்க… நான் இன்னமும் முடிக்கல… இன்னும் ஒரு மாசம் உங்களுக்கு டைம் கொடுக்கிறேன். இந்த ஒரு மாசத்துல நீங்க குடிக்காம இருந்தா… நம்ம உறவை பத்தி நான் யோசிக்கிறேன். இல்ல… இந்த ஒரு மாசத்துல நீங்க மறுபடியும் குடிச்சிட்டு வந்தா… என்னை மறந்துருங்க… அதுக்கப்புறம் நான் யோசிக்கவே மாட்டேன்… நம்ம உறவு…” அவள் தன் கையைக் கத்திரிக்கோல் போல் வைத்து வெட்டுவது போல் சைகைக் காட்டினாள்.

இந்தளவுக்கு அவள் பேசியதே அவனுக்கு நிம்மதியாய் இருக்க… சந்தோசத்துடன் சரியென்றான். அவள் அருகில் இருந்தால்… அவன் ஏன் மதுவின் உதவியை நாடப்

போகிறான்? அவனின் மன வேதனையைப் போக்கத் தான் அவள் இருக்கிறாளே. தன்னால் முழுக் கட்டுப்பாடுடன் இருக்க முடியும் என்று அவன் உறுதியாக நம்பினான்.

*************************************

“பேபி... இன்னையோட நீ போட்ட ஒன் மன்த் கண்டிசன் முடியுது” என்று சொல்லியபடி சூரியாவின் அருகில் வந்த தமிழின் கைகள் தைரியத்துடன் அவள் மேனியில் ஊர்வலம் போனது.

அவன் சொன்னது போல் நடந்து காட்டினான். அதன் பின் ஒருநாளும் அவன் மது அருந்தவும் இல்லை... அவள் அருகில் வரவும் இல்லை. இவள் தான் அவன் அருகாமையில்... ஒற்றைப் பார்வையில் உருகித் தவித்துப் போனாள். ஏண்டா இப்படியொரு கட்டளையை அவனுக்கு விதித்தோம் என்று மனதுக்குள் தன்னையே கடிந்துக் கொண்டாள். இந்தக் காலத்தில் யார் தான் குடிக்கவில்லை...? என்று மனதுக்குள் தன் கணவனுக்குத் தானே சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டாள். அந்தளவுக்கு அவன் அவளை முழுமையாய் ஆட்டிப் படைத்தான்.

“நம்பி... நான் கண்டிசன் போட்டதுனால தான் நீங்க குடிக்காம இருந்தீங்களா...” அவன் தொடுகையில் மனம் மயங்கினாலும் அவனின் மனம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவளுக்கு ஆசையாய் இருந்தது.

“அதுவும் ஒரு காரணம் தான்... இல்லைங்கல்ல... ஆனா இந்த ஒரு மாசமும் நீ சரியாப் பேசாது என்னை எவ்வளவு வருத்திச்சு தெரியுமா? உன் மேல் பிராமிசா... இனிமேல் இந்த மாதிரி நடந்துக்க மாட்டேன். சாரிடா... உன்னையும் ரொம்ப வருத்திட்டேன்” உண்மையான வருத்தத்துடன் சொன்னவனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள். அவன் மேல் காதல் கொண்ட நெஞ்சம் அவனின் இந்தச் சிறிய தவறை மன்னித்தது. ஆனால் அவனின் பெரிய

தவறு தெரிய வரும் போது அவள் இதே போல் மன்னிப்பாளா?

ஒரு மாதமாய் அடக்கி வைத்த அவனின் உணர்வுகள் காட்டாற்று வெள்ளம் வெடித்துக் கிளம்பியது. அது அவனின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்பட்டுச் சூரியாவைத் திக்குமுக்காட வைத்தது. தன் வேகத்தில், முரட்டுத்தனத்தில் அவளைக் காயப்படுத்தக் கூடாது என்று நினைக்கும் அவன்... அந்த நினைவை மறந்து அவளுடன் ஆவேசமாய்க் கூடினான். அப்பொழுது அவனுக்குத் தெரியவில்லை. அது தான் அவளுடன் அவன் கூடும் கடைசிக் கூடல் என்று..!

மறுநாள் தமிழ் அலுவலகம் சென்றுவிட... சூரியா அப்பத்தாவிடம் பேசிக் கொண்டிருந்தாள். தங்கள் இருவரின் பிரச்சினையைப் பெரியவர்களிடம் சொல்லி... அவர்களை மனவருத்தம் அடையச் செய்ய அவள் விரும்பவில்லை.

“சூர்யா கண்ணு... நீ வந்ததுக்கு அப்புறந்தேன்... தமிழு முகத்துல சிரிப்பைப் பாக்க முடியுது... உன்னப் பிரிஞ்சி அவனால இருக்க முடியலன்னு தான்... ஆடியாவது ஒன்னாவாதுன்னு அதைக் கண்டுக்காம உன்ன இங்கே கூப்பிட்டேன்” தையல்நாயகி பேரனின் மனதை அவளுக்கு எடுத்துச் சொன்னார். அவளுக்கும் அது தெரியுமாதலால் அவருக்குப் புன்னகையைப் பதிலாகக் கொடுத்தாள்.

“அப்பத்தா... அவங்க கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாதா?” அவனைப் பற்றி அறியும் ஆவலில் அவள் அவரிடம் கேட்க...

“தமிழு ஒத்த புள்ள சூர்யா... அவம் பெரியப்பன்... அதான் என் மூத்த புள்ள... அவனோட பையன் கதிரு தான் இவனுக்குக் கூடப் பிறந்த அண்ணணா இருந்தான்” அவரின் வார்த்தையில் இருந்த வேறுபாட்டை அறிந்தவள் அதை அவரிடம் கேட்டாள்.

“ஏன் ஆச்சி இருந்தாருன்னு சொல்றீங்க? இப்ப அவரு எங்கே?”

தையல்நாயகி தன் கைகளை மேலே தூக்கிக் காண்பித்துக் கண்கள் கலங்க, “அவம் சொர்க்கத்துக்குப் போயி சேர்ந்துட்டான்...” வேதனையில் அவர் குரல் நடுங்கியது.

“ஏன்...?” அதைக் கேட்டு அவளுக்கும் அதிர்ச்சி... அவள் கேட்டதும் மடைத் திறந்த வெள்ளம் போல் எல்லாவற்றையும் அவளிடம் சொல்லியவர்... மறந்தும் சங்கீதாவை பற்றி அவளிடம் சொல்லவில்லை. அதைத் தலைக்குனிவு என்று நினைத்தாரோ இல்ல அப்படி ஒருத்தி இருந்தாள் என்பதை மறந்துப் போனாரோ என்னமோ அவளைப் பற்றிச் சூரியாவிடம் மூச்சுவிடவில்லை.

பழசை எல்லாம் தான் தேவையில்லாமல் கிளறி விட்டுவிட்டோமோ என்று மனதுக்குள் வருந்தியவள்... பெரியவரின் மன வருத்தத்தைப் போக்கும் பொருட்டு... தமிழைப் பற்றிக் கேட்டாள். அவ்வளவு தான் அப்பத்தா வாய் கொள்ளாச் சிரிப்புடன் அவனைப் பற்றி எடுத்துவிட... அதை அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

“ஆச்சி... அவரோட சின்ன வயசுப் ஃபோட்டா எல்லாம் எங்கே இருக்கு?”

“உங்க ரூமுல தான் இருக்கும். அவம் இன்னுமா உங்கிட்ட காட்டல...”

“இல்லியே ஆச்சி... சரி நானே எடுத்துப் பார்த்துக்கிறேன்” என்றவள் மதிய உணவுக்குப் பின் தூக்கம் வராமல் கணவனின் அலமாரியைக் குடைந்தாள். அலமாரியின் அடியில் புகைப்படங்கள் குவிந்துக் கிடக்க... அதைப் புதையல் போல் ஆசையுடன் அள்ளிக் கொண்டாள்.

அவள் ஒவ்வொரு ஆல்பமாய் எடுத்து ரசித்துப் பார்த்தாள். அதில் சிறு குழந்தையாய் இருந்த தமிழைக் கண்டதும்...

அவனைப் போல் சாயலில் தனக்குக் குழந்தைப் பிறந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனையில் மிதந்தாள். அந்தக் கற்பனை அவளுக்கு அவ்வளவு சந்தோசத்தைக் கொடுத்தது. ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டு வந்தவள் கண்ணில்... கறுப்புக் நிறத்தில் இருந்த நாட்குறியேடு தென்பட்டது.

‘அட... நம்பிக்கு டைரி எழுதற... நல்ல பழக்கம் எல்லாம் இருக்கா?’ மனதுக்குள் வியந்தவள் அதைத் திறந்தாள்.

அதை ஆவலுடன் படித்தவளின் கண்கள் ஆத்திரத்தில் சிவந்தது. தான் பழகிய பெண்களைப் பற்றிய கேவலமான வர்ணனைகள், அவர்களை எப்படிப் படுக்கையில் வீழ்த்தியது?, பெண்களைப் பற்றிய தன் கேவலமான எண்ணங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் அதில் கிறுக்கி இருந்தான் அவன். ஏனோ அதில் கதிரைப் பற்றியும், சூரியாவைப் பற்றியும் அவன் எழுதவில்லை. அப்படி அவன் எழுதி இருந்தால் கூட அவனின் மன உணர்வுகளை அவளால் புரிந்திருக்க முடியும். தன் உணர்வுகளுக்கு வடிகால் என்று அவன் எழுதி இருந்தது... அவனின் மனைவியின் உணர்வுகளைக் கொல்லாமல் கொன்றது.

‘என் நம்பியா இதை எழுதினான்? என் நம்பி இந்தளவுக்குக் கெட்டவனா... கேவலமானவனா...? என் நம்பி பெண்களை ஏமாற்றிப் படுக்கையில் வீரத்தைக் காண்பித்த கோழையா? என் நம்பி பெண் பித்தனா?’ மனதுக்குள் பல கேள்வி எழ... அடுத்தடுத்த தாக்குதலில் அவளுக்கு மூளை வேலைச் செய்ய மறுத்தது. எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ தெரியாது? கடிகாரத்தின் ஓசையில் தன்னினைவுக் கலைந்தவள்... அவசரமாய் அனைத்தையும் எடுத்து எடுத்த இடத்தில் அப்படியே வைத்தாள்.

மீண்டும் கட்டிலில் வந்து அமர்ந்தவளுக்குத் தான் படித்த விசயத்தை ஜீரணிக்க முடியவில்லை. கண்களில் காதல் வழிய தன்னை நாடி வரும் கணவனின் காதல் முகத்தை

மனக்கண்ணில் கொண்டு வந்தவள் கண்ணில் கண்ணீர் வழிந்தது.

‘அந்தக் காதல் பொய்யில்லையே. இல்லை நான் தான் காதல் என்று நினைத்து அவனிடம் ஏமாந்து விட்டேனா?’ பலவாறுக் குழம்பியவள் மனதில் அவனைச் சந்தித்தது முதல்... இப்போது நடந்தது வரை படமாய் ஓடியது.

எந்த இடத்திலும் அவன் அவளைக் காதலிப்பதாய் சொல்லவில்லை. அதே போல் அவனாய் அவளைத் தேடி வரவும் இல்லை. இவளாகத் தான் அவனைத் தேடிப் போனாள். இவளாகத் தான் தன் காதலை அவனிடம் சொன்னாள். அவன் தன்னைப் பெண் பார்க்க வந்தது கூடத் தற்செயலாகத் தான். அன்று அவள் தற்கொலை செய்ய முயன்றப் போது... ஒருவேளை அவள் உயிர் போயிருந்தால் கூட அவன் பெரியதாய் கவலைப்பட்டு இருக்க மாட்டான். அவளைப் பற்றி அவன் சிறிதும் கவலைப்படவில்லை. தான் அவனுக்காக உயிரை விடத் துணிந்ததால் பாவப்பட்டு வாழ்க்கைப் பிச்சைப் போட்டிருக்கிறான்.

அதற்கு மேல் அவளால் சிந்திக்க முடியவில்லை... நேரே அப்பத்தாவிடம் போனவள் சுற்றி வளைக்காமல், “ஆச்சி அவங்க எப்படிக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சாங்க?” பெண்களைப் பற்றிய அவன் கோட்பாடை படித்ததும் அவளுக்குப் புரிந்துப் போயிற்று. அவனுக்குத் திருமணத்தில் பெரியதாய் நாட்டம் இருக்காது என்று.

“அத ஏன் கேக்குற? உம் ஃபோட்டோ பார்த்தும் முடியவே முடியாதுன்னான்... நான் பட்டினி கிடந்து இல்ல... உன்னைப் பொண்ணுப் பார்க்க அழைச்சிட்டு வந்தேன்...” அவர் வெள்ளேந்தியாய் சொல்லச் சொல்ல உள்ளுக்குள் சூரியா நொறுங்கிப் போனாள். அதன் பின் அவர் பேசியது எதுவும் அவள் காதில் விழவில்லை.

‘ஆக... பெண் பார்க்க வந்ததும் எனக்காக இல்லை. என் போட்டோ பார்த்தும் வேண்டாம் என்று தான் மறுத்து இருக்கிறான். அதான் என் ஃபோன் கால் ஒன்றைக் கூட எடுக்கல போலிருக்கு. நான் தான் முட்டாள்தனமாய் ஏமாந்துப் போயிட்டேனா? வலிய வந்து காதலைச் சொன்ன என்னை எந்தளவுக்குக் கேவலமா நினைச்சு இருப்பான்?’ அவனை உருகி உருகிக் காதலித்த தன் மடமையை எண்ணி மனதுக்குள் நொந்துப் போனாள்.

அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தவள்... தாங்க மாட்டாமல் ஓவென்று கதறியழுதாள். அவன் தன்னை ஏமாற்றியதை விட... தான் ஏமாந்துப் போனதை நினைத்துத் தான் அதிகம் வருந்தி அழுதாள். தன் வேதனையை அழுகையில் கரைத்தவளுக்கு அதற்கு மேல் அழுவதற்குக் கண்களில் கண்ணீர் இல்லை. மெதுவாய் எழுந்தவள் முகத்தைக் கழுவி கொண்டு அமர்ந்தாள். அடுத்து என்ன செய்வது என்று திட்டமிட்டாள். இனி ஒரு நிமிஷம் கூட அவனுடன் வாழ அவளால் முடியாது என்ற நிலைக்கு அவள் வந்திருந்தாள்.

“ஹாய் பேபி...” அப்பொழுது உள்ளே நுழைந்த தமிழ் அவளருகில் வந்து எப்பொழுதும் போல் உல்லாசமாய் அவளை அணைத்தான்.

‘கையை எடுறா நாயே... நீ வாழ்க்கைப் பிச்சைப் போடுற அளவுக்கு நான் ஒண்ணும் தரம் தாழ்ந்துப் போகல. உன்னைக் கண்டாலே அருவருப்பாய் இருக்கு. என்னைத் தொடாதடா...’ என்று வெறிக் கொண்டு கத்த வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

அவன் கட்டிய தாலியை அவன் முகத்தில் விட்டெறிந்து விட்டுப் போக வேண்டும் போல் ஓர் உணர்வு வெறிக் கொண்டு எழ, அவன் அணைப்பை விலக்க முயன்றாள். அவளால் அது முடியவில்லை. அவளால் ஓய்ந்து போயிருந்த தன் மனதால் உடலில் பலத்தைக் கொண்டு வர முடியவில்லை.

மனதில் எழுந்த உணர்வுகளின் போராட்டத்தின் தாக்கம் தாங்காமல் அவளின் நினைவு மெல்லத் தப்பியது. அவளின் எண்ணங்களைப் பற்றி அறியாமல் அவன் அவளின் தோள் வளைவில் முகம் புதைத்து முன்னேற... அப்பொழுது தான் கவனித்தான்... அவளிடம் இருந்து எந்தவிதப் பதிலும் இல்லாததை. அவள் முகம் பார்க்க எண்ணி அவன் அவளைச் சற்றே விலக்க... அவளோ வாடிப் போன முல்லைக் கொடியாய் அவனின் கைகளில் தொய்ந்து விழுந்தாள்.

## உயிர் : 18

“சூர்யா கண்ணு… எம் வம்சத்தைத் தழைக்க வந்த எம் ராசாத்தி…” தையல்நாயகி மனம் நெகிழ்ந்தவராய் சூரியாவை அணைத்துக் கொண்டார்.

சூரியா மயக்கம் போட்டு விழுந்ததும்… தமிழ் பதறிப் போனவனாய் அவளை மருத்துவமனைக்கு அழைத்துப் போக நினைத்துத் தூக்கிக் கொண்டு கீழே வர, அப்பத்தா என்னமோ ஏதோவென்று பயந்துத் தானும் உடன் வருவதாய் அவர்களுடன் தொற்றிக் கொண்டார். சூரியாவைப் பரிசோதித்த மருத்துவர் அவள் கர்ப்பமாய் இருக்கும் விசயத்தைச் சொல்லி… கொஞ்சம் ஓய்வு எடுத்துவிட்டு வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி கூறினார்.

அதைக் கேட்டத் தமிழ் சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போனான். சூரியாவை அள்ளி எடுத்து… அவளைத் தன் தோளில் சாய்த்து அரவணைத்துக் கொள்ள வேண்டும் போல் அவனுக்குள் ஆசை எழுந்தது. அருகில் அப்பத்தா இருந்ததால் முயன்றுத் தன் ஆசையை அடக்கிக் கொண்டான். அப்பத்தா அவளை அன்போடு அணைத்துக் கொண்டு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த… தமிழோ அவளைப் பார்த்தபடி அருகில் நின்றிருந்தான்.

மருத்துவர் சொன்னச் செய்தி அவள் காதில் இடி போல் விழுந்தது. அவனை விட்டுப் பிரிய வேண்டும் என்று முடிவு எடுத்த நிலையில் இந்தக் குழந்தையை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவள் ஒற்றையாளாய் இருந்த போது தைரியமாக முடிவெடுத்தவள்… இப்போது ஈருயிராய் இருக்கும் போது என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினாள். அவனை விட்டுப் பிரிந்தாலும் அவனை நியாபகப்படுத்த என… அவன் மகவுத் தன்னுடன் இருக்குமே என்ற கழிவிரக்கம் எழ அவள் கண்களில் கண்ணீர் தளும்பியது.

வீட்டிற்கு வரும் போதும் காரில் அவள் யாருடனும் பேசவில்லை. தமிழோ அவளின் பார்வைக்காகத் தவமிருக்க... அவளோ மறந்தும் அவன் பக்கம் தன் பார்வையைத் திருப்பவில்லை. வீடு வந்ததும் அப்பத்தா அவளைத் தனியே விடவில்லை. இந்த மகிழ்ச்சியான செய்தியை முதலில் அவளின் பெற்றோருக்குத் தெரிவித்தார். தமிழும் ஆதவனுடன் தன் சந்தோசத்தைப் பகிர்ந்து கொள்ள... அந்த இரவு நேரத்திலும் எல்லோரும் அவளைப் பார்க்க வந்துவிட்டனர். அதன் பின் தமிழ் எதிர்பார்த்தத் தனிமை மட்டும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

“சூர்யா... ரொம்பச் சந்தோசமா இருக்குடா” அவளுக்குப் பிடித்த திரட்டுப் பாலை ஊட்டியபடி சிவகாமி தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அந்த நேரத்திலும் மகளுக்குப் பிடித்த இனிப்பு வகைகளைச் செய்து கையோடு எடுத்துக் கொண்டு வந்திருந்தார்.

“ஒரு குழந்தையே... இன்னொரு குழந்தையைச் சுமக்கிறதே... அடடே... ஆச்சிரியக் குறி” பரணி அக்காவை வழக்கம் போல் வம்பிழுக்க... எப்போதும் அவனின் கிண்டலுக்குச் சிணுங்கும் சூரியா இன்று ஏனோ அமைதியாய் இருந்தாள்.

“பரணி கரெக்டா சொன்ன...” மனைவியைப் பார்த்தப்படி மச்சினனுக்குக் ஹை பை கொடுத்தான் தமிழ். அவள் அவன் பக்கம் திரும்பினால் தானே...

“பரணி... நீ சும்மா இருடா...” மேகநாதன் மகனை அடக்கியவர், மகளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டார். அவரின் ஆறுதலில் சூரியாவுக்குக் கண்ணைக் கரித்தது.

‘அப்பா... என்னை உங்களுடன் கூட்டிக்கிட்டு போயிடுங்களேன். எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கல’ மனதுக்குள் அழுதுப் புலம்பியவள்... ஏனோ வாய்விட்டுச் சொல்லவில்லை.

அவனைப் பிரிய வேண்டும் என்று முடிவெடுத்தவள் ஏனோ எல்லோர் முன்பும் கணவனை அசிங்கப்படுத்த முயலவில்லை. அவளுக்குக் கத்திப் பேசிச் சண்டைப் போட்டுப் பழக்கம் இல்லை. ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அவரை விட்டு விலகிப் போக வேண்டுமே தவிர, தேவையில்லாமல் கூச்சல் போடுவதை அவள் அறவே விரும்பவில்லை.

தனக்கு ஏதாவது ஒன்று என்றால்... ஒரு சிலர் அழுது ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக் கூட்டுவர். ஒரு சிலர் மனதுக்குள் அழுதாலும், குமைந்தாலும் அதைச் சற்றும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இறுகிப் போய் இருப்பர். சூரியா இரண்டாம் வகை... அவளின் வேதனையை யாரிடமும் காட்ட விரும்பவில்லை. அதற்குக் காரணக் கர்த்தாவான கணவனிடம் கூட அவள் தன் வேதனையையோ இல்லை கோபத்தையோ காட்ட நினைக்கவில்லை.

துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பதற்கிணங்க அவனை விட்டுத் தூரமாகச் செல்லத் தான் விரும்பினாள். இதில் அவனை ஏமாற்றி விட்டான் என்று குற்றம் சாற்றுவதை விட... வலியப் போய் ஏமாந்தது இவள் தவறு அல்லவா...? தவறு முழுவதும் அவள் பேரில் இருக்க அவள் யாரை நொந்து என்ன பயன்?

“சூரி... கங்கிராட்ஸ்டி...” குறிஞ்சி ஓடி வந்தவள் தன் தோழியைக் கட்டிக் கொண்டாள். ஆதவனும் தன் வாழ்த்தை தமிழிடம் தெரிவித்தான்.

“வா... வா... குறிஞ்சி” தோழியை வரவேற்றவள் தன் அருகில் இருத்திக் கொண்டாள்.

“எங்க சூர்யா மாதிரி நீ எப்ப நல்ல வெசயம் சொல்லப் போற” அப்பத்தா கேட்க, குறிஞ்சியோ வெட்கத்துடன் தலையைக் குனிந்தாள்.

“இன்னும் ரெண்டு வருசம் போகட்டும் பாட்டி” அவளுக்குப் பதிலாக ஆதவன் பதிலளித்தான்.

“மொத கொழந்தையைச் சீக்கிரம் பெத்துக்கணும் ராசா. ரொம்ப நா தள்ளிப் போடாதீக” பெரியவராய் அவர் அறிவுரை சொல்ல… சிறியவர்கள் கேட்டுக் கொண்டனர்.

“தமிழ்… உனக்கு ஆண் குழந்தைப் பிடிக்குமா? இல்லை பெண் குழந்தையா?” ஆதவன் நண்பனிடம் கேட்டான்.

“எனக்குச் சூர்யா மாதிரி பெண் குழந்தைத் தான் வேணும்” மனைவியைப் பார்வையால் விழுங்கிய படித் தமிழ் சொல்ல… அதைக் கேட்டு சூரியாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

‘அது எப்படிடா… உன்னால மட்டும் இப்படியொரு ஆக்ட் பண்ண முடியுது. பெண்களைப் பத்தி அவ்வளவு கேவலமா எழுதி வச்சிருக்க… கேவலமா அவங்களைப் பயன்படுத்தி இருக்க… அப்படிப்பட்ட உனக்குப் பெண் குழந்தைக் கேட்குதா? பெண்களை ஆராதிக்கத் தெரியாத உனக்கு எல்லாம் பெண் குழந்தை ஒரு கேடா?’ மனதுக்குள் ஆத்திரமாய் நினைத்தவள் முகமும் அதே ஆத்திரத்தைப் பிரதிபலித்தது.

“சூர்யா… என்னடிச் செய்யுது?” குறிஞ்சி தோழியின் முக மாறுதலைக் கவனித்துவிட்டாள்.

“டையர்டா இருக்கா சூர்யா?” சிவகாமி கேட்கவும் இது தான் சாக்கு என்று அவள் மௌனமாய்த் தலையசைத்தாள்.

“நீ போய் ரெஸ்ட் எடு…” என்று அனைவரும் சொல்லவும்… கணவன் இருக்கும் அந்த இடத்தில் இருப்பதற்கு அவளுக்கும் பிடிக்கவில்லை. அவளுக்குச் சிந்திக்கச் சற்றுத் தனிமை தேவைப்பட்டது. அவள் எழவும்… தங்களின் வாரிசின் வரவை தன்னவளுடன் தனிமையில் கொண்டாட நினைத்த தமிழும் எழுந்து அவள் அருகில் வந்தான்.

‘ஐயோ... இப்போ இவன் எதுக்கு என் கூட வர்றான்?’ அவள் மனம் கூக்குரலிட்டது.

“வா... சூர்யா” அவள் கையைப் பிடிக்க எண்ணி அவன் தன் கையை அவளை நோக்கி நீட்ட, அவளோ அதைக் கண்டு கொள்ளாமல் முன்னே நடந்தாள். அவனோ அதைச் சிறிதும் பொருட்படுத்த வில்லை. மாடிப்படியில் காலை வைக்கும் போது தான் அவனின் அறைக்குச் செல்ல வேண்டுமே என்ற எண்ணம் வந்து அவளுக்கு ஆயாசமாக இருந்தது. அவனுடன் கூடிக் களித்த அந்த அறைக்குச் செல்லவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

சட்டென்று பக்கவாட்டில் திரும்பி அவள் விருந்தினர் அறை நோக்கிச் செல்ல, அவன் அவள் கையைப் பற்றித் தடுத்து,

“அங்கே எங்கே போற பேபி?” அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் மெதுவாய் கேட்டான்.

‘உன்னைப் பார்க்கப் பிடிக்கல... அதான் நான் அங்கே போறேன்டா’ மனதில் எரிச்சலுடன் நினைத்தவள்,

“என்னால மாடியேற முடியல. இனி நான் இங்கே தான் இருக்கப் போறேன்” அவன் முகம் பார்க்காமல் அவள் சொல்ல...

“ஓ... அப்படின்னா ஓகே... உனக்கு எது சௌகரியமா இருக்குமோ அதைச் செய்” என்றவன் அறைக்குள் நுழைந்ததும்... அவளை இறுக அணைத்துக் கொண்டு தன் மகிழ்ச்சியை அவளுக்கு உணர்த்தினான்.

“ரொம்ப... சந்தோசமா இருக்கு பேபி. இந்தச் சந்தோசம் நீயில்லாமல் எனக்குக் கிடைச்சு இருக்காது” மனமாற அவளிடம் சொல்லியவனை வெறுப்புடன் விலக்கி விட்டுக் கட்டிலில் அமர்ந்தாள்.

“சாரி பேபி... நீயே டையர்டா இருக்கே... இதில் நான் வேற...” தன்னைத் தானே கடிந்தவன், ஏசியைப் போட்டுவிட்டு அவளைப் படுக்க வைத்து... போர்த்திவிட்டான். அவனின் செயலைக் கண்டு அவள் மனதில் மீண்டும் ஆத்திரம் மூண்டது.

‘செய்றது எல்லாம் செஞ்சிட்டு... எவ்வளவு பாசமா இருக்கிற மாதிரி நடிக்கிறான் ராஸ்கல்’ பல்லைக் கடித்தாள் அவள்.

அவளின் முக மாற்றம் அவனைக் கவர்ந்ததோ என்னமோ, “பேபி என்ன செய்து? ஏதும் வலிக்குதா?” கரிசனக் குரலில் அவன் வினவ, அவனின் கரிசனம் கண்டு அவளின் கண்ணோரம் துளிர்த்தது.

‘ஏன் நம்பி இப்படிப் பண்ணின? என்னால தாங்க முடியல நம்பி... எனக்குப் பைத்தியம் பிடிச்சிரும் போலிருக்கு. என்ன பண்றது... என்ன செய்றதுன்னு எனக்குத் தெரியல. என்னை ஆறுதலா அணைச்சுக்கோ நம்பி... எனக்குப் பயமாயிருக்கு நம்பி’ அவள் காதல் கொண்ட மனம் அவனின் தூய அன்பிற்காக ஏங்கியது. அவனின் அன்பு, காதல் எல்லாம் அவளுக்கு மட்டும் தான் என்று தமிழ் எப்போது? எப்படி? அவளுக்குப் புரிய வைக்கப் போகிறான்...?

“பேபி... நீ பூ மாதிரி மென்மையானவள்...” அவளின் வாடிய முகம் கண்டு அவள் நெற்றியில் முத்தமிட்டபடி அவன் சொல்ல... அதற்கும் அவளுக்கு அழுகை வந்தது. அதை அவனுக்குக் காட்டிக் கொள்ளாமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள். சிறிது நேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அதன் பின்பு அறையை விட்டு வெளியில் வந்தான். அவன் போனதை உணர்ந்தவள் கண்கள் தானாகக் கண்ணீரைச் சொரிந்தது.

‘நான் பூப் போலிருக்கேன்னா... அதான் உனக்கு என்னைப் பிடிக்காமல் போனதா? உனக்குத் தான் முரட்டுத்தனமாய் இருக்கிற பெண்களைத் தானே பிடிக்கும். என்னை மாதிரி

ஏமாந்த இளிச்சவாய்களை உனக்குப் பிடிக்குமா?' அவன் எழுதி வைத்திருந்ததை எண்ணி எண்ணி ஒரு மூச்சு அழுதாள். தன் ஏமாற்றத்தை அழுகையில் கரைத்தவளுக்கு... மீண்டும் அவன் மேல் கோபம் வந்தது.

'பெண்கள் திமிரா இருந்தா உனக்கு என்னடா... நீ என்ன பெரிய இவனா... அவர்களை அடக்குவதற்கு? உனக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தது?' கோபமாய் நினைத்தவள், 'நீ செஞ்சப் பாவத்துக்கு எல்லாம்... நீ என் கிட்டப் பதில் சொல்லித் தான் ஆகணும். பெண்களையா நீ அடக்குற... நான் உன்னை அடக்கிக் காட்டுறேன்டா...' வன்மைமாய் நினைத்தவள் மனதில் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது. அவனின் தவறுக்கான தண்டனையை அவள் முடிவுச் செய்தப் பின் தான் அவள் மனம் சிறிது அமைதியுற்றது.

இரவில் நம்பி அவள் அருகில் படுத்து அணைக்க வர, அவள் அருவருப்பில் முகம் சுளித்தாள்.

"எனக்குப் பிடிக்கல..." பட்டென்று முகத்தில் அடித்தார் போல் சொன்னவளை அவன் புரியாமல் பார்த்தான்.

"அது... அது... வந்து... உங்க கை பாரமா இருக்கிற மாதிரி இருக்கு... மூச்சு முட்டுது" என்னமோ நிறை மாதக் கர்ப்பிணி போல் அவள் சொல்ல... அதில் அவன் உருகிப் போனான்.

"வேணாம் பேபி... நீ தனியாவே படு" என்றவன் அவளிடம் இருந்து தள்ளிப் படுத்துக் கொண்டான். அதன் பின்னரே அவள் நிம்மதியாய் உறங்கினாள். அடுத்தடுத்து வந்த நாட்களில் அவள் இதே சொல்ல... அனுபவம் இல்லாத அவனும் அவள் சொல்லுக்குக் கட்டுப்பட்டான். வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு ஏதும் ஆபத்து வந்துவிடுமோ என்று அவனும் அவள் அருகில் செல்லப் பயந்தான்.

*****************************************************

கையிலிருந்த புடவையைத் தன் உடலில் சுற்றிய சூரியா... முன்புறம் கொசுவம் மடிக்க முடியாமல் நிரம்பக் கஷ்டப்பட்டாள். அவள் குனிந்துப் பார்ப்பதற்கு அவள் வயிறு இடம் கொடுக்கவில்லை. புதுப் பட்டுப்புடவை அடங்கி மடங்குவேனா என்று சண்டித்தனம் செய்தது. இன்று அவளுக்கு வளைகாப்பு... அதான் புதுப் புடவையைக் கட்டிக் கொண்டு வரச் சொல்லி அவளிடம் கொடுத்தனர். உடன் வந்த அன்னையை மறுத்துவிட்டு உடை மாற்ற வந்தவளுக்குப் புடவைப் பெருத்த சோதனையைக் கொடுத்தது.

அந்தச் சமயம் பார்த்து உள்ளே நுழைந்த தமிழ் அவளைப் பார்த்தான். மேடிட்ட வயிறுடன் தாய்மைக் கொடுத்த வனப்பில் சூரியா அவனின் கண்ணுக்குப் பேரழகியாய் தெரிந்தாள். அவள் புடவையுடன் போராடுவதைக் கண்டு... சற்றும் தாமதிக்காமல் அவள் கால் அருகே கீழே குனிந்தவன் கொசுவத்தின் மடிப்பைச் சரி செய்துவிட்டான்.

“ம்... இப்போ சரியாயிருக்கு...” அவன் சொல்லவும் அவள் முகம் கருத்தது.

‘எத்தனை பெண்களுக்குப் புடவைக் கட்டிப் பழக்கமோ...?’ நக்கலாய் நினைத்தவள் மனம் உலைக்கலமாய்க் கொதித்தது.

“இப்ப எல்லாம் உன் கிட்ட நிறையச் சேஞ்ஜஸ் தெரியுது பேபி. நீ ரொம்ப மாறிட்ட பேபி...” அவளின் முக மாறுதல் கண்டோ இல்லை அவளின் செயல்களில் மாற்றம் கண்டோ அவன் அப்படிச் சொன்னான்.

“பேபி... உனக்கு என் மேல் ஏதும் கோபமா? எதுவாயிருந்தாலும் சொல்லு... நீ இப்படி என்னைக் கண்டுக்காம இருக்கிறது பார்த்து மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு” உண்மையான வருத்தத்துடன் அவன் சொல்ல... அவள் பதில் பேசாமல் தலையைக் குனிந்து நின்றிருந்தாள்.

அதற்குள் அவளை நலங்கு வைக்க அழைக்க... தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவனிடம் இருந்து நழுவினாள். வளைகாப்பு முடிந்து அவள் அம்மா வீட்டிற்கு அவள் புறப்பட... அவன் தவித்துப் போனான்.

“அப்பத்தா... அவளைப் போக வேண்டாம்ன்னு சொல்லு. நம்ம வீட்டில் டெலிவரி பார்த்துக்கலாம்”

“இல்ல தமிழு... இந்த மாதிரி நேரத்துல அவ அம்மா வீட்டில் இருக்கறது தான்ய்யா... நல்லது. நாங்களும் வயசானவங்க... நீயும் வேலைக்குப் போய்டுவ... திடீர்ன்னு வலி வந்தா நாங்க என்ன பண்ணுவோம் சொல்லு? கொஞ்சம் யோசிச்சுக்கோய்யா. நீ வேணும்ன்னா சூர்யா கூடப் போயி தங்கிக்கோ இல்ல அப்ப அப்பப் போய்ப் பாத்துக்கோ”

சூரியாவும் குழந்தை உண்டான நாளில் இருந்து எதையோ பறிக் கொடுத்தார் போலிருப்பது அவன் மனதை உறுத்த... அரைகுறை மனதாய் அவளை அவள் அம்மா வீட்டிற்குச் செல்ல அனுமதித்தான். அவள் கிளம்பும் முன் அவளைத் தனியே அழைத்தவன்,

“பேபி...” என்னமோ தன் உயிரே தன்னை விட்டுப் பிரிவதுப் கண்கள் கலங்க அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவன் அணைப்பில் அவள் உருகிப் போகவில்லை... உணர்வுகள் மரத்து இரும்பாய் இறுகிப் போயிருந்தாள்.

“உடம்பைப் பார்த்துக்கோ... ஏதாவது ஒண்ணுன்னா எனக்கு ஃபோன் பண்ணு. ஐ மிஸ் யூ பேபி” உள்ளம் உருக அவன் கூறிய வார்த்தைகளை மரம் போல் நின்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

“பேபி...” அவள் வயிற்றில் முத்தமிட்டவன்... சட்டென்று தன் பின்னந்தலையில் தட்டிக் கொண்டு, “உங்க அம்மாவையும் பேபின்னு சொல்றேன். உங்களையும் பேபின்னு சொல்றேன். அதனால இனி மேல் நீங்க எனக்குச் செல்லம்

மட்டும் தான். செல்லம்... அம்மாவைப் படுத்தாம சமத்தா இருக்கணும். இந்த அப்பாவை மாதிரி இல்லாமல்... அம்மாவைப் போல நீங்க நல்லவங்களா இருக்கணும்" இதைச் சொல்லும் போதே அவன் குரல் கலங்கி ஒலித்தது. தன்னைப் பற்றிய நினைவுகள் வந்ததும் அவன் முகம் சற்றுச் சுருங்கிச் சரியானது. பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவன்,

"பேபி... உன்னை மாதிரி அழகான பெண்ணைச் சீக்கிரம் பெத்துக் கொடு. எனக்கு நம்ம செல்லத்தைக் கொஞ்சணும்ன்னு ஆசையா இருக்கு" அவன் சொன்னதைக் கேட்டதும் அவ்வளவு நேரம் உயிரற்றச் சிலைப் போல் நின்றிருந்தவளுக்கு உயிர் வந்தது.

'நிச்சயம் உன் பொண்ணை... உன் கிட்டக் கொடுக்காம... வேறு யார்கிட்டக் கொடுக்கப் போறேன். என் வயிற்றில் வளருவது பெண் குழந்தைத் தான். நான் அந்தக் கடவுளைக் கும்பிடுவது நிஜம் என்றால்... அந்தக் கடவுள் இருக்கிறார் என்பது உண்மை என்றால்... இது பெண் குழந்தையாகத் தான் பிறக்க வேண்டும். நீ பெண்களுக்கு இழைத்த அநீதிக்கு... நீ செய்த பாவத்துக்கு... அதற்கான கூலியை நீ வாங்க வேண்டாம்...? அந்தக் கூலியே உன் பொண்ணுத் தான்டா முட்டாளே...' ஏளனமாய் நினைத்தவள் முகத்தில் இளக்காரமாய்ப் புன்னகைத் தோன்றியது.

**************************************************

"சூர்யா சொல்றதைக் கேளும்மா... வலி அதிகமாகிட்டா... டெலிவரி சிக்கலாயிடும்" சிவகாமி மகளின் பிடிவாதம் கண்டு கெஞ்சினார்.

"இல்லம்மா... அவர் வராம... நான் இங்கே இருந்து ஒரு அடி கூட நகரமாட்டேன். முதல்ல அவருக்கு ஃபோன் பண்ணி வரச் சொல்லுங்க..." பல்லைக் கடித்து வலியைப் பொறுத்துக் கொண்டு பேசினாள் சூரியா. நள்ளிரவு

நேரத்தில் தமிழை எப்படித் தொந்திரவுப் படுத்துவது என்று தெரியாமல் விழித்தார் சிவகாமி.

இன்று இரவு அவளைப் பார்க்க வந்த தமிழ் பத்து மணி வரை அங்கே தான் இருந்தான். அதன் பின்பே தன் வீட்டிற்குச் சென்றான். அப்பத்தா கூட அவனை இரவு சூரியா வீட்டில் தங்கும்படி சொல்லத் தான் செய்தார். ஆனால் அவன் தான் பெரியவர்களைத் தனியாக விட்டு விட்டு அங்கே அவளுடன் இருக்க முடியாது என்று மறுத்துவிட்டான்.

“அவளுக்குத் தான் அப்பா, அம்மா, தம்பின்னு ஏகப்பட்ட பேர் இருக்காங்க. இங்கே உங்களைப் பார்க்க யார் இருக்கா?” பேரன் தங்கள் மேல் வைத்திருக்கும் அன்பில் அவரின் மனம் நெகிழ்ந்து போனது.

“மாப்பிள்ளை... சூர்யாவுக்கு வலி வந்திருச்சு... ஹாஸ்பிட்டல் வான்னா... நீங்க இல்லாம வர மாட்டேன்னு அடம் பிடிக்கிறா. நீங்க கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க” சிவகாமி, தமிழிடம் நிலைமையின் வீரியத்தைப் பதற்றத்துடன் எடுத்துச் சொல்ல,

“அவக்கிட்ட ஃபோனை கொடுங்க” அவரிடம் சொன்னவன் அலைப்பேசியைக் காதில் வைத்துக் கொண்டே உடையை மாற்றினான்.

“ம்....” என்ற குரலிலே சூரியாவை உணர்ந்தவன்,

“உனக்கு அறிவுக் கொஞ்சமாவது இருக்கா... நீ முதல்ல ஹாஸ்பிட்டல் போ... நான் நேரே அங்கே வர்றேன். இப்ப நீ இருக்கிற நிலைமையில் நான் அங்கே வந்து உன்னைக் கூட்டிட்டுப் போறது உனக்கு அவ்வளவு சேஃப் இல்ல. சொன்னாப் புரிஞ்சிக்கோ பேபி” தன்மையுடன் அவன் சிறு பிள்ளைக்கு எடுத்துச் சொல்வது போல் சொல்ல... அவளோ அவன் சொல்வதைக் கொஞ்சமும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

“நீங்க இங்கே வந்தாத் தான் நான் ஹாஸ்பிட்டல் வருவேன்... இல்லைன்னா... நான் இப்படியே செத்...” அவள் முடிக்கவில்லை... மறுபக்கம் அவன் அலறிவிட்டான்.

“பேபி... உன் வாயால் அப்படிச் சொல்லாதே. நான் காரில் ஏறிட்டேன். இன்னும் பதினைந்து நிமிடத்தில் வந்து அங்கே விடுவேன். நீ கவலைப்படாதே... நீ எனக்கு வேணும் பேபி... உன் கூட நான் நிறைய வருசம் வாழணும் பேபி...”

அந்தக் கடுமையான பிரசவ வலியிலும், அவன் குரலில் இருந்த பதற்றம், கவலை, வேதனை, வலியை இனம் கண்டு கொண்ட சூரியா அதை மிகவும் ரசித்து அனுபவித்தாள். அவள் கண்கள் அவனைப் பழிவாங்கும் வெறியில் பளபளத்தது. சூரியாவின் எண்ணம் நிறைவேறுமா...???

## உயிர் : 19

“நம்பி... ரொம்ப வலிக்குது... தாங்க முடியல...” சூரியா வலியில் துடித்தபடி வேதனை நிரம்பிய விழிகளுடன் தன் அருகில் நின்றிருந்த கணவனைப் பார்த்தாள். கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களாக அவனின் பெயரைச் சொல்ல மறந்தவளாய் இருந்தவள், இன்று தன் பெயரைச் சொன்னதும் அவளை அதிசயமாகப் பார்த்தான் தமிழ்.

“நம்பி...” பல்லைக் கடித்து வலியைத் தாங்க முடியாமல் அரற்றியவளின் வேதனைப் புலம்பல் அவன் காதில் விழ, அவள் கையை அவன் இறுக பற்றிக் கொண்டான். அவனால் செய்ய முடிந்தது அது மட்டுமே...

பிரசவ அறைக்குள் தன்னைக் கொண்டு செல்லும் போதே... கணவனும் உடன் வர வேண்டும் என்று அடம் பிடித்தவளைக் கண்டு... மருத்துவரும் அவன் உள்ளே வருவதற்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்தார். அவனும் பிள்ளைப் பிறப்பு என்பது மிகச் சாதாரண ஒன்று என்று எண்ணித் தான் உள்ளே நுழைந்தான். அங்கே வந்த பின் தான் தெரிந்தது... ஒரு குழந்தையின் ஜனனத்தில்... தாயின் மறுஜனனம் அடங்கி இருக்கிறது என்று.

சூரியா துடித்த துடிப்பு, அவள் அலறிய அலறல்... எல்லாம் கண்டு அவன் வெலவெலத்துப் போனான். பெண்ணின் உடலைப் போகப் பொருளாய் பார்த்தவனுக்கு... அதே பெண்ணின் உடல்... தன் குழந்தைக்காக எத்தனை வலிகளைத் தாங்குகிறது என்பதைக் கண்கூடாகப் பார்த்தான். இன்று தன் மனைவியின் மூலம் பெண்ணின் உடல் வலிமையையும், மனவலிமையையும் நேரில் கண்டவன் பிரமித்தான்.

படுக்கையில் பெண்களிடம் வீரத்தைக் காட்டிய தன் கோழைத்தனத்தை நினைத்து இப்போது வருந்தினான். பெண்கள் ஆண்களை விடப் பல மடங்கு உடல் மற்றும் மன

வலிமைக் கொண்டவர்கள்… அவர்கள் ஆண்களுக்கு அடங்கிப் போகிறார்கள் என்றால் அது ஒன்று காதலாக இருக்க வேண்டும்… இல்லை அவன் மேல் வைத்த நம்பிக்கையாக இருக்க வேண்டும் என்ற உண்மை அவனுக்கு மிகத் தாமதமாகத் தான் புரிந்தது.

அப்போது சூரியா அவன் கையைப் பற்றி முறுக்கவும் தான் அவன் தன் நினைவுக் கலைந்து அவளைப் பார்த்தான். அவன் கையை அவள் பிடித்த பிடியில் அவனுக்கு அப்படியொரு வலி ஏற்பட்டது. அவள் இந்தளவுக்கு அழுத்திப் பிடிக்கிறாள் என்றால் அவளுக்கு எந்தளவுக்கு வலித்திருக்க வேண்டும் என்ற நினைவே அவன் மனதில் வலியைக் கொடுக்க… அவனையும் அறியாமல் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவன் விழியில் இருந்து வழிந்தக் கண்ணீர் அவள் தலையில் துளித் துளியாய் சொட்ட… அவள் சட்டென்று அவனை நிமிர்ந்துப் பார்த்தாள். அவன் முகத்தில் இருந்த வேதனை, கண்களில் வழிந்தக் கண்ணீர் எல்லாம் கண்டு… அந்த நேரத்திலும் அவள் மனதில் சொல்ல முடியாத ஒரு திருப்தி எழுந்தது.

“நர்ஸ்… ஏதாவது செஞ்சு அவள் வலியைக் குறைக்க முடியாதா?” அவன் பதற்றத்துடன் அங்கிருந்த செவிலிப் பெண்ணிடம் கூற… அவளோ அவனைப் பார்த்து,

“சார்… டெலிவரின்னா… இப்படித் தான் இருக்கும். பொண்ணுன்னாலே வலியைப் பொறுத்துப் பழகிக்கணும்”

‘இந்த மாதிரி நேரத்தில்… இந்தம்மா தத்துவம் பேசுறதைப் பாரு…’ கடுப்புடன் அவன் நினைக்கும் போதே… அப்பொழுது அங்கே வந்த மற்றொரு செவிலிப் பெண்,

“சாருக்கு… அவங்க வைப் மேல அவ்வளவு லவ். அதான் அப்படித் துடிக்கிறார். பாருங்க… சார் கண்ணிலும் கண்ணீர்… . ஏன் சார்… இது உங்களுக்கு முதல் குழந்தையா?” அவள் கேட்கவும் தான் அவன் தன்

கன்னத்தைத் தொட்டுப் பார்த்தான். அவன் கைகள் ஈரத்தின் பிசுபிசுப்பை உணர்ந்தது.

‘நானா... நானா அழுதேன்? இந்த மாற்றம் என்னுள் எப்படி வந்தது? இது தான் காதலா? அவளுக்கு ஒன்று என்றால்... என் உயிர் துடிக்கிறதே... இது தான் காதலா? எனக்குக் காதல் வராது... காதலிப்பது பாவம் என்று நினைத்த நானா... காதலில் வீழ்ந்துவிட்டேன்...? அதுவும் என்னவளிடமே...’ அவன் மனம் பற்றி அவனுக்கு முழுமையாகப் புரிய... மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன், கண்களில் காதல் வழிய மனைவியின் கையை ஆறுதலாய் பற்றிக் கொண்டான்.

அவன் மனைவியோ அது எதையும் உணரும் நிலையில் இல்லை. தன் மகவைப் பிரசவிக்கும் உச்சக்கட்ட வேதனையில் இருந்தாள். அடுத்தப் பத்து நிமிடங்களில் அவர்களின் தேவதை மண்ணுலகுக்கு விஜயம் செய்தாள். குழந்தைப் பிரசவித்த அசதியிலும் சூரியா,

“நம்பி... என்ன குழந்தை?” அவள் கேட்கவும், அவனை முந்திக் கொண்டு மருத்துவர், “பெண் குழந்தை...” என்று பதிலளித்தார்.

“உன்னைப் போல் பெண் பிறந்திருக்கிறாள்...” தமிழ் மகிழ்ச்சியுடன் அவள் நெற்றியில் முத்தமிட... அவளோ எதையோ வென்றுவிட்ட சந்தோசத்தில் இருந்தாள். அதை அவன் அறியவில்லை.

“சூர்யா... உன்னய உரிச்சு வச்சுப் பிறந்திருக்கா... எம் கொள்ளுப் பேத்தி. எங்க வீட்டு மகாலச்சுமி...” தையல்நாயகி தன் கொள்ளுப் பேத்தியைக் கையில் வைத்துக் கொஞ்சினார். ஆதிமூலம் ஆசையுடன் அந்தப் பிஞ்சுக் குழந்தையைத் தடவிக் கொடுத்தார். பெரியவர்கள் இருவருமே இந்தப் பிறவிப் பயனை அடைந்து விட்டது போல் மகிழ்ந்தனர்.

தமிழ் பெருமிதமாய்த் தன் அப்பத்தா, அப்பச்சியைப் பார்த்தான். அவனுக்குப் பூ போன்று மென்மையாய் தேவதைப் போல் அழகாய் இருந்த மகளைக் கண்டு கர்வமாய் இருந்தது. இந்த வரத்தை அவனுக்கு அளித்த தன் மனைவி மேல் அவனுக்குக் காதல் ஊற்றுப் பெருக்கெடுத்தது. அவன் தன் காதலை உணர்ந்திருந்ததில் இருந்து, இமைக்கும் பொழுதுக் கூட வீணாகாமல் சூரியாவை விட்டு நகராமல் அவளைச் சுற்றி சுற்றி வந்து அடைக்காத்தான்.

ஆனால் சந்தோசப்பட வேண்டிய சூரியாவோ தனக்குள் இறுகிப் போயிருந்தாள். குழந்தைப் பிறந்த சந்தோசத்தில் அவளின் மாற்றத்தை தமிழ் மட்டும் அல்ல... மற்ற யாரும் கவனிக்கவில்லை. இடையில் ஒருநாள் ஆதவனும், குறிஞ்சியும் குழந்தையைப் பார்த்துவிட்டுப் போயினர். ஐந்தாம் நாள் கடைசியில் சூரியாவை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்குச் செல்ல அனுமதி அளித்தார் மருத்துவர்.

“அப்பா... நீங்களும் அம்மாவும் வீட்டுக்குப் போங்க... நான் அவருடன் அங்கே போயிட்டு வர்றேன்” மேகநாதனிடம் அவள் சொல்ல...

“சூர்யா... முதல்ல நம்ம வீட்டுக்குப் போகலாம். நல்ல நாள் பார்த்து... நாங்களே உன்னை அங்கே கொண்டு போய் விடறோம்” சிவகாமி மகளைத் தடுத்தார்.

“அவள் அங்கே வரட்டும் அத்தை. எனக்கும் முதன் முதலா எங்க மகளை எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகணும்ன்னு ஆசையா இருக்கு. இரண்டு மணி நேரம் கழிச்சு நானே இவங்களைக் கொண்டு வந்து விட்டுறேன்” கையில் வைத்திருந்த மகளை ஆசையுடன் பார்த்தபடித் தமிழ் சொல்ல... அதற்கு மேல் சிவகாமியாலும் மறுக்க முடியவில்லை.

சூரியா ஏறக் கார் கதவைத் திறந்துவிட்டவன்... அவள் ஏறியதும் கையிலிருந்த மகளை அவளிடம்

கொடுத்துவிட்டு, மறுபுறம் வந்து காரில் ஏறியவன் அதை உற்சாகத்துடன் கிளப்பினான். கார் சிக்னலுக்காக நிற்கும் போது, பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த மகளைக் கண்டவன்… குனிந்து அவள் கால் பற்றி அதில் முத்தமிட்டான்.

“சோ ஸ்வீட் இல்ல… பேபி…” சூரியாவைப் பார்த்து அவன் கேட்க… அவளோ பதில் சொல்லாமல் வெளியில் வேடிக்கைப் பார்த்தாள். அவள் ஏன் அப்படி இருக்கிறாள்? என்று அவன் யோசிப்பதற்குள் சிக்னல் விழுந்துவிட, அந்த யோசனையைத் தள்ளி வைத்துவிட்டு காரை எடுத்தான்.

வீட்டிற்குள் நுழைந்தவளை ஆரத்தி எடுத்து வரவேற்ற தையல்நாயகி, தன் கொள்ளுப் பேத்தியைத் தன் மடியில் இருந்து கீழே விடவில்லை. அவர்கள் மூவரும் சின்னவள் தூங்கும் அழகைக் கண்ணிமைக்காமல் பார்த்து ரசித்தனர். இதை எல்லாம் எந்தவித உணர்வும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சூரியா.

“ஆச்சி… அவளைக் கொடுங்க… மேலே ரூமில் படுக்க வைக்கிறேன்” அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்காமல் அவள் கேட்க,

“ரொம்ப நேரம் கையில வச்சாலும் சூடு தான்… இவள நீ கொண்டு போயிப் படுக்க வையி…” தையல்நாயகி சின்னவளைப் பெரியவள் கையில் கொடுக்க… அவள் மகளை வாங்கிக் கொண்டு மாடியேறப் போனாள்.

“பேபி… இங்கே கொடு…” மகளைத் தன் கையில் வாங்கிக் கொண்டு அவன் மாடியேற… அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

அறையின் வாயிலில் ஒருகணம் தயங்கி நின்றவள், நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். மகளுக்காக நிறையப் பொருட்களை வாங்கிக் குவித்திருந்தான். கட்டிலுக்குப் பக்கத்திலேயே

மகளுக்குத் தொட்டில் போடப்பட்டு இருந்தது. அதில் படுக்க வைக்கத் தெரியாமல் அவன் திணற... அவன் கையில் இருந்து மகளை வாங்கியவள், அதில் படுக்க வைத்து... கொசுவலைக் கொண்டு அதை மூடி விட்டாள்.

“நான் போறேன்...” அவள் சொன்னதும்... மகளின் தூங்கும் அழகை ரசித்துக் கொண்டிருந்தவன் அவள் வார்த்தையில் இருந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ளத் தவறினான்.

“வேற எதுவும் வேணுமா? என்ன வேணும்ன்னு சொல்லு... நான் எடுத்துட்டு வர்றேன்” மகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவன் பதிலளிக்க...

“நான் போறேன்னு சொன்னேன்...” அவள் குரலிலிருந்த அழுத்தம் கண்டு அவள் புறம் திரும்பியவன்... அவள் சொன்னதன் அர்த்தம் புரியாமல் அவளைப் பார்த்தான்.

“எங்கே...?” இப்பொழுதும் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பது அவன் அறிவுக்கு எட்டவில்லை.

“என்னோட வீட்டுக்கு...?”

“என்ன பேபி... ஜோக் அடிக்கிற... இது தான் உன்னோட வீடு” சிரித்தபடிச் சொன்னவன்... அவள் அருகில் வந்து அவளை அணைக்க முன்றான்.

“ச்சீ... என்னைத் தொடாதே...” அருவருப்பில் முகம் சுளித்தவளாய் ஓரடிப் பின்னால் நகர்ந்தாள் அவள். அவளின் அருவருப்பான பார்வையில், முகம் சுளித்தலில், அவனை விட்டு அவள் தள்ளி நின்றதில் அவன் மனம் பெரிதும் அடிப்பட்டுப் போனது. தன் ஒற்றைப் பார்வையில் முகம் மலரும், தன் தொடுகையில் உருகிக் குழையும் அந்தச் சூரியாவா இவள்? என்று அவன் அவளை நம்ப மறுத்தான். இவள் சூரியா போல் வேறோருத்தியோ என்று கூட அவன் மனம் சந்தேகப்பட்டது. ஏனெனில் அவன் அறிந்தச் சூரியா இப்படிப்பட்டவள் இல்லையே...!

“பேபி...” அதிர்ந்தக் குரலில் அவன் கேட்க...

“போதும் உன் நடிப்பு... இன்னும் எத்தனை நாளைக்கு நடிச்சு என்னை ஏமாத்தப் போற? உன்னைப் பத்தின எல்லா உண்மையும் எனக்குத் தெரிஞ்சுப் போச்சு. இனி தேவையில்லாமல் நீ நடிச்சு... எனக்காக உன் எனர்ஜியை வேஸ்ட்டாக்க வேண்டாம்” ஆத்திரத்தில் முகம் சிவக்க நின்றிருந்தவளைக் கண்டவனுக்குப் பயத்தில் குளிரெடுத்தது.

எந்த உண்மை அவளுக்குத் தெரியக் கூடாது என்று பயந்து அவளிடம் இருந்து மறைத்தானோ... அந்த உண்மை அவளுக்குத் தெரிந்திருப்பது கண்டு அவன் திகைத்துப் போனான். இவ்வளவு காலம் அவள் தன்னிடம் காட்டிய இறுக்கத்திற்கான காரணத்தை அவன் மிகவும் தாமதமாய் உணர்ந்தான். அவன் தான் செய்தக் காரியத்திற்கு என்ன சமாதானம் கூறினாலும் அது அவளிடம் எடுபடாது என்று அவனுக்குத் தெரியும்.

மன்னிக்கக் கூடிய அளவுக்கு அவன் செய்தது ஒன்றும் சாதாரணத் தவறில்லையே. இப்பொழுது அவளிடம் மன்னிப்புக் கேட்பதா? இல்லை தான் செய்தக் காரியத்துக்கு விளக்கம் கொடுப்பதா? எதைச் செய்தால் அவள் கோபம் குறையும் என்று அவனுக்குச் சத்தியமாய்த் தெரியவில்லை. வாழ்க்கையில் முதன்முறையாக அடுத்து என்ன செய்வது? என்று தெரியாமல் விழித்துக் கொண்டு பரிதாபமாய் நின்றிருந்தான்.

“உனக்கு அது எப்படித் தெரியும்?” முயன்றுத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளைப் பார்த்து வினவினான்.

அவள் அவனைக் கேட்டதும் ‘நான் அப்படிப்பட்டவன் இல்லை... நான் உத்தமன், நல்லவன், வல்லவன்...’ என்று ஏதாவது பிதற்றுவான் என்று அவள் எதிர்பார்த்தால்... அவனோ உண்மையை ஒப்புக் கொள்ளும் விதமாய்... ‘உனக்கு எப்படித் தெரியும்?’ என்று அல்லவா கேட்கிறான்?

செய்வதை எல்லாம் செய்துவிட்டு... என்ன தெனாவெட்டு இருந்தால்... இப்படித் தைரியமாய்ப் பேசுவான்? அதற்கும் அவள் மனம் ஆத்திரத்தில் கொதித்தது.

அவனுக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லாமல், அலமாரிப் பக்கம் தன் கையை நீட்டினாள். அவளின் கையைத் தொடர்ந்து தன் பார்வையைச் செலுத்தியவனுக்குப் புரிந்து போனது... அவள் எதைப் பார்த்துத் தெரிந்துக் கொண்டிருப்பாள் என்று?

“ச்சே...” தன் மடமையை எண்ணி தன் நெற்றியில் ஓங்கி அறைந்து கொண்டான்.

“இவளுக்கு எல்லாம் தெரிஞ்சுப் போச்சே... இனி எப்படி ஏமாத்தறதுன்னு வருத்தமா இருக்கா?” இளக்காரமாய் அவனைப் பார்த்து அவள் கேட்க,

“இல்ல பேபி... நான் உன்னை ஏமாத்தணும்ன்னு நினைக்கல...” அவள் அருகில் வந்து கையைப் பிடிக்க, அதைச் சட்டென்று உதறித் தள்ளினாள்.

“என் கிட்டே வராதே... அப்படி மீறி வந்தே... என் உயிரை விடக் கூட நான் தயங்க மாட்டேன். என்னைப் பத்தி உனக்கு நல்லாத் தெரியும். ஏற்கெனவே நீ வேணும்ன்னு உயிரை விடத் துணிந்தவள் நான்... இப்போ நீ வேணாம்ன்னு உயிரை விட எனக்கு ரொம்ப நேரம் ஆகாது” முகத்தில் சினம் கொப்பளிக்க அவள் பேசப் பேச... அவன் விக்கித்துப் போனான்.

“வேணாம் பேபி... நீ அப்படி எல்லாம் செஞ்சிராதே. நான் உன் கிட்டேயே வரல” என்று அவசரமாகச் சொன்னவன்...

“இது தான் பேபி... இதுக்குத் தான் நான் உன்னிடம் என்னைப் பத்திச் சொல்லல. எனக்குத் தெரியும் என்னைப் பத்தின உண்மைகள் உனக்குத் தெரிந்தால்... நீ உயிரை விடக் கூடத் துணிவாய் என்று. அதுக்குத் தான் நான்

மறைச்சேன். இதை நான் வேணும்ன்னு செய்யல பேபி... என்னை நம்பு" அவன் பரிதாபக் குரலில் கெஞ்சியது அவள் மனதைச் சிறிதும் அசைக்கவில்லை.

"ஆமாம் ஆமாம்... நம் காதல் அந்தக் காவியக் காதல் பாரு. உன்னைப் பத்தித் தெரிஞ்சதும் நான் உயிரை விடுவதற்கு... காலுக்கு உதவாத செருப்பைத் தூக்கித் தூரப் போட்டுப் போறது மாதிரி... நான் போயிட்டே இருந்திருப்பேன். நிச்சயம் நீ சொல்ற மாதிரி நான் உயிரை விட்டிருக்க மாட்டேன். ஏன்னா அன்னைக்கு உன் மேல காதல் இருந்தது... ஆனால் இப்போ என் மனசுல இருந்த அந்தக் காதல் செத்து ரொம்ப நாளாச்சு..." ஆங்காரமாய் ஆரம்பித்தவள் குரல் கடைசியில் சத்தம் குறைந்து உடைந்தது போனது. மனம் தாங்க முடியாத வேதனையில் கண்களை மூடியவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"பேபி ப்ளீஸ்... அழாதே... நான் நல்லவனா மாறி ரொம்ப நாளாச்சு. என்னைக்கு உன் காதலை உணர்ந்தேனோ... அன்னைக்கு நான் என் வாழ்க்கை முறையை மாத்திக்கிட்டேன். இப்போ என் மனசில் நீ மட்டும் தான் நிறைஞ்சு இருக்க. ஐ லவ் யூ பேபி... என் மனசை நான் உணர்ந்திட்டேன். நான் திருந்திட்டேன் பேபி..." அவன் அவளிடம் கெஞ்ச அவள் அவனின் வார்த்தைகளை நம்பவில்லை.

"பெண்களைப் பத்தி அவ்வளவு கேவலமா நினைக்கிறவரு திருந்திட்டேன்னு சொல்றது... நம்பும்படியாய் இல்லியே... யாரை ஏமாத்த இந்த வேசம். இனியும் உங்களை நம்பி ஏமாற நான் பழைய முட்டாள் சூர்யா இல்லை" பேசியவள் அறையை விட்டு வெளியேறப் போக எத்தனிக்க...

"பேபி... நான் அது மாதிரி நடக்கக் காரணம் என்னன்னா..." அவன் ஆரம்பிக்கும் முன்னே கையமர்த்தித் தடுத்தவள்,

“உங்க கேவலமான காரியத்துக்குத் திரும்பத் திரும்பச் சப்பைக்கட்டுக் கட்டாதீங்க...” அவள் சொல்லும் போதே... அவர்களின் செல்ல மகள் மெல்லச் சிணுங்கினாள். ஆனால் அவள் அதைக் கண்டு கொள்ளாமல் வெளியேற முயல... கஷ்டப்பட்டு வலியைத் தாங்கிப் பெற்ற மகளின் அழுகைக் கூட அவளைச் சலனம் செய்யவில்லை என்றால்... அவளின் மனம் எந்தளவுக்குக் காயப்பட்டு இறுகிப் போயிருக்கு என்று அப்பொழுது தான் தமிழுக்கு உரைத்தது.

மகளைக் கையில் ஏந்திக் கொண்டு அவள் அருகில் ஓடி வந்தவன்... வழி மறுப்பது போல் அவள் முன் நின்று கொண்டு,

“நம்ம சண்டையில் நம்ம பொண்ணை ஏன் இழுக்குற? இந்தா முதல்ல அவளைக் கவனி...” பசியில் அழ ஆரம்பித்திருந்த மகளை மனைவியின் கையில் திணிக்க முற்பட்டான். அவளோ குழந்தையைக் கையில் வாங்கிக் கொள்ளாமல் கையைக் கட்டிக் கொண்டு அவனை உறுத்துப் பார்த்தாள்.

“ப்ளீஸ் சூர்யா... சொல்றதைக் கேளு” சின்னவள் முகம் சிவக்க... அழுவதைக் கண்டு தகப்பனாய் அவன் மனம் பதறித் துடித்தது.

சூரியா அவனின் துடிப்பை பார்த்து ரசித்தவள், “உன் பொண்ணுன்னா உனக்கு எப்படித் துடிக்குது? அது மாதிரி தானே உன்னால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பெத்தவங்களுக்கும் மனசு துடிச்சிருக்கும். நீ அவங்க வாழ்க்கையை அழிச்சப்போ அவங்களுக்கும் இது மாதிரித் தானே இருந்திருக்கும். பிறந்து ஐந்து நாளான உன் பொண்ணு பசியில் அழறது உனக்குத் தாங்க முடியல என்ன? உயிரை விட மேலான கற்பை உன் கிட்டப் இழந்தப் பெண்களின் கண்ணீரைக் கண்ட அவங்கப் அம்மா, அப்பாவுக்கு எப்படி இருந்திருக்கும்? நீ செஞ்சப் பாவத்துக்கு எல்லாம்... நீ பதில் சொல்ல வேண்டாம்?”

“அதுக்குத் தான் கடவுள் உனக்குப் பெண் குழந்தைக் கொடுத்து இருக்கார். நீ செஞ்ச மொத்தப் பாவத்தின் சம்பளம் தான் உன் பொண்ணின் உருவமாய் உன் கையில் இருக்கு… ஒரு பெண்ணை வளர்த்து ஆளாக்கி… உன்னை மாதிரி அயோக்கியன் கையில் மாட்டிறாம பாதுகாத்து… நல்லவன் ஒருத்தன் கையில் பிடிச்சுக் கொடுக்கும் வரைக்கும் அந்தப் பெத்தவங்கப் படுற பாடு என்னன்னு உனக்குப் புரிய வேண்டாம். உன் பொண்ணை வளர்த்துப் பாரு… அப்போ உனக்குப் புரியும்… பெண்ணைப் பெத்தவங்களோட வலி என்னன்னு…” அவளின் வார்த்தைகள் அவன் நெஞ்சில் சம்மட்டியாய் தாக்க… அவன் உயிரற்ற உடலாய் நின்றிருந்தான்.

சூரியா என்னமோ வீராப்பாய் பேசினாலும்… மகளின் அழுகை அவள் மனதைக் கரைத்து… அவளின் நெஞ்சுப் பகுதியை நனைத்தது. அதற்கு மேல் மனம் தாங்காதவளாய் அவன் கையிலிருந்த மகளை அவனிடம் இருந்து பறித்தவள்… கட்டிலில் அமர்ந்து… மகளின் பசியை ஆற்றினாள். மடியில் படுத்திருந்த மகளைப் பார்க்க பார்க்க… அவளுக்குக் கண்களில் கண்ணீர் நிறைந்தது. மெல்லக் குழந்தையின் கன்னத்தை ஆசையுடன் வருடிக் கொடுத்தாள்.

‘போயும் போயும்… இந்தப் பாவப்பட்டவனுக்குப் போய் மகளாய் வந்து பிறந்தாயே…?’ மகளின் எதிர்காலம் குறித்து அழுகையில் கரைந்தாள்.

மகளுக்குப் பசியாற்றி விட்டு அவளைத் தொட்டிலில் கிடத்தியவள்… சிறிது நேரம் அவள் தூங்கும் வரை அருகில் இருந்து பார்த்து விட்டுக் கதவை நோக்கி நடந்தாள். அவளின் அழுது சிவந்திருந்த முகத்தைக் கண்டத் தமிழ் மனதுக்குள் முடிவெடுத்தவனாய்… வேகமாய்ச் சென்று கதவைத் தாளிட்டு அதன் மேல் சாய்ந்து நின்றான். பின் தன் அலைப்பேசியை எடுத்து சிவகாமிக்கு அழைத்தவன்,

“அத்தை நான் தான் பேசறேன். என்னால என் மனைவியையும், மகளையும் பிரிந்திருக்க முடியாது. அதனால் இனிமேல் அவங்க ரெண்டுப் பேரும் என் கூட இங்கே தான் இருக்கப் போறாங்க...” மனைவியைப் பார்த்துக் கொண்டே அழுத்தம் திருத்தமாய் அவன் சொல்ல... அவளோ அவனை நிமிர்ந்துப் பார்த்து முறைத்தாள். அவனும் பதிலுக்கு அவளின் பார்வையைத் தாங்கிக் கொண்டு... அவளை நேர் பார்வைப் பார்த்தான்.

## உயிர் : 20

செந்தமிழ்நம்பி தன் முன் நின்றிருந்த மனைவியை வைத்த கண் வாங்காமல் பார்க்க... அவளோ அவனின் பார்வையின் வீரியத்தைத் தாங்க முடியாமல் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினாள். அதைக் கண்டதும் அவன் மனம் கனிந்தது. ஒரே நாளில் ஓய்ந்துப் போனவள் போல் தோற்றம் அளித்த தன்னவளைக் கண்டவனின் மனம் வேதனையடைந்தது. எப்போதும் சிரித்த முகத்துடன், சிறுபிள்ளைப் போல் துள்ளித் திரிந்தவளைத் திருமணம் என்ற பெயரால் வாட்டி வதைத்து விட்டோமோ என்று வருந்தினான்.

“ஏன் பேபி என்னைக் கொல்லுற... என்னையும் வருத்தி... உன்னையும் வருத்தி... இதெல்லாம் தேவையாச் சொல்லு?”

“அப்போ நீ செஞ்சது மட்டும் சரியா? அதை மறந்துட்டு... மன்னிச்சுட்டு நான் உன் கூட வாழணுமா? அது என்னால் முடியாது... நீயாச்சு... உன் பொண்ணாச்சு... என்னை விடு” அவள் பேசப் பேச... அவனுக்குள் கோபம் எழுந்தது. ‘எவ்வளவு தழைந்துப் போனாலும் எடுத்தெறிஞ்சுப் பேசுறாளே’ என்று கடுப்பாக இருந்தது அவனுக்கு.

“நீயா வந்து காதலிச்ச... என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு கெஞ்சின... அப்புறம் நான் இல்லைன்னா வாழ முடியாதுன்னு எனக்காக உயிரையும் கொடுக்கத் துணிஞ்ச... அதைப் பார்த்து நான் மனசு மாறி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு... இதோ இந்த நிமிசம் வரை என் நெஞ்சில் உன்னைச் சுமந்துக்கிட்டு இருக்கேன்னே... அப்படிப்பட்ட என்னை விட்டுட்டு நீ போயிருவியா? இல்லை போகத் தான் நான் விடுவேனா? நீ வேணும்ன்னா வர்றதுக்கும், போன்னா போவதுக்கும் நான் ஒண்ணும் உன் வீட்டு நாய் குட்டி இல்ல. நான் உன் புருசன்... அதை நீ மனசுல வச்சுக்கோ”

“காதல், கல்யாணம் இதெல்லாம் நான் வாழும் வாழ்க்கைக்குச் சரிப்பட்டு வராதுன்னு தான்… உன்னை மாதிரி குடும்பப் பெண்கள் பக்கம் என் பார்வையைத் திருப்பாமல் ஒதுங்கி நான் பாட்டுக்கு நிம்மதியா இருந்தேன். அப்படிப்பட்டவன் உன் காதலுக்கு மரியாதை கொடுத்துக் கல்யாணம் பண்ணிட்டு ஒழுங்கா, உனக்கு உண்மையா வாழ்ந்தேன்னா இல்லையா? இப்போ சொல்றேன் கேட்டுக்கோ… உன்னை நான் என்னை விட்டு பிரிந்து போக விட மாட்டேன். புயல் மாதிரி வந்து என் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுட்டு இப்போ போறேன் போறேன்னா… உன்னைப் போக விட்டுட்டு வேடிக்கைப் பார்த்துட்டு இருக்க நான் என்ன பொட்டப் பயலா?” சிங்கமாய்க் கர்ஜித்தவன் தன் ஆறடிக்குமாய் நிமிர்ந்து நின்றான்.

“ஆமாம்… நானா தான் உன்னைக் காதலிச்சேன்… நானா தான் இப்போ உன்னை விட்டுப் போகணும்ன்னு முடிவுப் பண்ணி இருக்கேன். போதுமா?” அவன் பேசியது கண்டு அஞ்சாமல் அவளும் பதிலுக்குப் பதில் பேசினாள்.

“ஒரு ஆண்… ஒரு பெண்ணிடம் வலியப் போய்த் தன் காதலைச் சொல்லலாம். ஆனால் ஒரு பெண்… ஒரு ஆணிடம் வலியப் போய்க் காதலைச் சொன்னால் என்னைப் போல் தான் கேவலப்பட்டு இருக்கணும். நான் கேவலப்பட்ட வரை போதும். நீ உண்மையாச் சொல்லு? என்னை நீ… உன் கூடப் பழகுறப் பொண்ணுங்களோட சேர்த்து பத்தோடு பதினொண்ணா நினைக்கல” அவள் கேட்டதுக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவன் முகம் கறுத்துப் போய்த் தலைக் குனிந்து நின்றான். ஏனெனில் அவள் கூறுவதும் உண்மைத் தானே.

“என்ன பதில் பேச முடியலல…? ஓஹோ… அப்படித்தான் நினைச்ச இல்ல… அப்படி நினைச்சவரு காதல்ல கசிந்து உருகுறேன்னு சொல்றது தான் நம்பற மாதிரி இல்ல. நான் உன்னை விட்டுப் போறது உனக்கு மட்டுமானத் தண்டனை இல்லை. யார் என்னன்னுத் தெரியாம… கண்டதும்

காதல்ன்னு உன்னைப் பார்த்தும் காதல் வலையில் விழுந்தேனே… அந்தப் பாவத்துக்கு எனக்கு நானே கொடுத்துக்கிற தண்டனைத் தான் இது” என்றவள் கதவுக்கு அருகில் வந்து நின்றும், அவன் அதை விட்டு அசையாமல் அங்கேயே நிற்க,

“நான் போகணும்… முதல்ல வழியை விடு…” கதவில் சாய்ந்திருந்த அவனை அப்புறப்படுத்த எண்ணித் தன் கைகளால் அவனைத் தள்ளிவிட்டாள். அவனோ அவள் கைகளை லாவகமாகப் பிடித்துத் தடுத்தபடி அவளைத் தன்னுடன் சேர்த்து அணைக்க முற்பட, அவனின் செயலை எதிர்த்தவள் அவனைச் சராமரியாக அடிக்க ஆரம்பித்தாள்.

“அடி… நல்லா அடிச்சுக்கோ… அப்படியாவது என் மேலுள்ள கோபம் தீரும்ன்னா என்னை அடிச்சே கொன்னிரு” சிங்கமாய்க் கர்ஜித்தவன், பூனையாய் அவள் அன்பிற்கு, காதலுக்குக் கட்டுப்பட்டு அடங்கி நின்றான். அவள் அடிப்பதற்கு ஏதுவாய் கைகளைக் கட்டிக் கொண்டு அவன் அசையாமல் நிற்க, அதற்கு மேல் அவளால் அவனை அடிக்க முடியவில்லை.

“ஏன் நம்பி… இப்படிச் செஞ்சே? நீ ஏன் நல்லவனா இல்லாமப் போயிட்டே? எல்லாரையும் மாதிரி வாழணும் நான் ஆசைப்பட்டது தவறா நம்பி… . உனக்குள்ள இப்படியொரு கொடூரம் எப்படி வந்தது? நீ ஏன் பொய்த்துப் போன நம்பி…?” அவன் சட்டைக் காலரைப் பிடித்து அழுகையுடன் கேட்டவளைப் பார்த்து,

“அப்போ எனக்குத் தெரியாதே பேபி… என்னையும் ஒருத்தி உயிருக்கு உயிராய் காதலிப்பாள்ன்னு. என் வாழ்க்கைத் தடம் புரள்றதுக்கு முன்னே நீ வந்திருக்கக் கூடாதான்னு எத்தனை நாள் என்னை நானே வருந்திக் கேள்வி கேட்டிருக்கேன் தெரியுமா? ஒண்ணு மட்டும் சத்தியமாய்ச் சொல்றேன்… நீ என் வாழ்க்கையில் வந்த பின் வேறு எந்தப் பெண்ணுக்கும் என் வாழ்க்கையில் இடம் இல்லை. அதை மட்டும் நான் உறுதியாய் உன்னிடம் சொல்ல முடியும்.

என்னோட காதலி... என்னோட மனைவி எல்லாம்... நீ தான் பேபி... நீ மட்டும் தான் பேபி... ஐ லவ் யூ பேபி... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிக்கோ பேபி..." அவள் முகத்தைத் தன் கைகளில் தாங்கியப்படி காதலோடு சொன்னவன், அவள் முகமெங்கும் முத்தமழைப் பொழிய... எதிர்க்க வேண்டிய அவளோ தொய்ந்துப் போய் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

"நம்பி... நீ ஏன் இப்படிப் பண்ணினே?" அவன் மார்பில் முகம் புதைத்திருந்தவள் வாய் விடாமல் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல... அவனோ வேதனையுடன் அவளின் துயரத்தைப் போக்க இயலாதவனாய் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டு நின்றிருந்தான்.

கணவன், மனைவி இடையில் எத்தனை சண்டை வந்தாலும்... கண்ணுக்குத் தெரியாத மெல்லிய அன்பு என்ற இழைத் தான் அவர்களைப் பிரியவிடாமல் சம்சாரச் சாகரத்தில் கட்டி வைத்து இருக்கிறது. சட்டென்று முடிவெடுத்து உதறிவிட்டுப் போகிற பந்தம் இல்லை இந்தப் பந்தம். வாழ்க்கை முழுமைக்கும் நம்முடன் வரப் போகிற பந்தம் இது. இவ்வளவு ஏன்... சிலசமயம் நம் உயிர் போனாலும்... நமக்காக உயிரையும் விட்டு இடுகாடு வரை வரும் அழியாப் பந்தம் இது. இதை நாம் கையாளுவதைப் பொறுத்து இது அமையும்.

"ப்ளீஸ் பேபி... நடந்து முடிந்ததுக்கு என்னால் எந்த விளக்கமும் கொடுக்க முடியாது. ஆனால் இனிமேல் நடப்பதற்கு நான் உத்திரவாதம் கொடுக்கிறேன். உனக்கு நல்ல கணவனாய், நம் மகளுக்கு நல்ல தகப்பனாய் நான் இருப்பேன். என்னை நம்பு பேபி.." அவள் தலையை ஆறுதலாய் தடவியப் படி அவன் சொல்ல... அவன் கைகளை மெல்ல விலக்கிவிட்டுத் தள்ளி நின்றாள் அவள்.

"வேண்டாம் நமக்குள் எதுவும் சரிப்பட்டு வராது. என்னை என் வழியில் போக விடுங்க நம்பி" மெதுவான குரலில் அவள் கூறினாலும் உறுதியான குரலில் அவள் கூற,

அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை? ஆனால் ஒன்றை மட்டும் கவனித்தான் அது… இவ்வளவு நேரம் அவனை மரியாதை இல்லாமல் ‘வா’, ‘போ’ என்று பேசியவள், இப்போது மரியாதையோடு விளிப்பதை அறிந்து கொண்டான். அவளை எப்படியாவது சமாதானம் செய்துவிடலாம் என்று நம்பினான்.

“நம்பி… எனக்கு ரொம்ப நேரம் நிக்க முடியல… தலைச் சுத்துது. ப்ளீஸ் வழி விடுங்க” அவள் சொல்லவும், அவள் முகத்தைக் கூர்ந்துப் பார்த்தான்.

முகம் எல்லாம் ரத்தப் பசை இழந்து, வெளுத்துப் போய் இரத்தசோகை வந்தவள் போல் இருந்தவள்… நிற்க முடியாமல் அவஸ்தையாய் நின்றுக் கொண்டிருந்தாள். பிரசவம் முடிந்தப் பெண்ணின் உடல் எந்தளவுக்கு சக்தி இல்லாமல் நோஞ்சானாய் இருக்கும் என்பது அவன் அறிவுக்கு அப்பொழுது தான் எட்டியது. அவன் வேகமாய் அவள் புறம் குனிந்து அவளை ஒரே தம்மில் அலேக்காய் தூக்கியவன், அவளின் எதிர்ப்பைச் சமாளித்துக் கட்டிலில் உட்கார வைத்தான்.

பின்பு தலையணையை அவள் முதுகுக்கு அணைவாய் போட்டவன் அவளைச் சாய்வாக அமர வைத்தான். கட்டிலில் சோர்வாய் தலைச் சாய்ந்தவளைப் பார்த்தவன் மனம் தன்னைத் தானே நொந்தது. ஏதோ ஒரு வேகத்தில் அவள் தான் தன் நிலைமை மறந்து பேசினால் என்றால்… தானும் அவளுக்குச் சரிக்குச் சமமாய்… அவளின் உடல்நிலையைக் கருதாமல் வீணாய் பேசிக் கொண்டிருந்ததை நினைத்து மனம் வருந்தினான்.

“ஜூஸ் ஏதாவது எடுத்துட்டு வரவா பேபி?” கரிசனமாய்க் கேட்க, அவன் கரிசனம் கண்டு அவள் கண்கள் கண்ணீரைச் சொரிந்தது. அவனின் கரிசனத்தில் கோபம் போய் அவளின் காதல் கொண்ட மனம் கொஞ்ச கொஞ்சமாய் வெளிவந்தது.

“இப்படி எத்தனை பேர் கிட்டக் கேட்டு இருப்பீங்க?” அழுகையில் அவள் குரல் தேம்பியது. அவள் சொன்னதைக் கேட்டு அவனுக்கு ஒரு புறம் வேதனை அளித்தாலும், மறுபுறம் அவனுக்குச் சந்தோசமாய் இருந்தது. அவளுக்கு மட்டுமே சொந்தமான தான்... ஒரு காலத்தில் மற்ற பெண்களுக்கும் சொந்தமாய் இருந்தவன் என்ற உணர்வு தான் அவள் மனதைப் போட்டுக் குழப்புகிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

ஒன்றும் பேசாமல் அறையிலிருந்து வெளியேறியவன்... பத்து நிமிடங்கள் கழித்து உள்ளே வந்தான். அவன் கையில் மிதமான சூட்டில் சத்துமாவு பானம் இருந்தது.

“ம்... குடி பேபி...” அவள் புறம் அவன் கோப்பையை நீட்ட... அவ்வளவு நேரம் பேசியதில் அவளின் தொண்டை வறண்டுப் போய் இருந்ததால், அதை மறுக்காமல் வாங்கிக் குடித்தாள். அவள் குடித்து முடிந்ததும் அவள் அருகில் அமர்ந்தவன்,

“நான் யார் கிட்டேயும் இந்த மாதிரி நடந்துகிட்டது கிடையாது பேபி. உன் கிட்ட மட்டும் தான் நான் இப்படி நடந்துக்கிறேன்” என்றவன் அவளை அணைத்துக் கொள்ள... உடலிலும் மனதிலும் சக்தி இல்லாததாலா இல்லை இந்த மாதிரி நேரத்தில் அவனின் அணைப்பு அவளுக்குத் தேவைப்பட்டதோ என்னமோ அவளும் அவன் நெஞ்சில் சாய்ந்து கண் மூடி அமைதியாய் இருந்தாள். காயமும் அவனே... அதற்கு மருந்தும் அவனே என்பது போலிருந்தது அவளின் செயல்.

“தமிழு... தமிழு...” அதற்குள் அப்பத்தாவின் குரல் வெளிப்புறம் கேட்க, தமிழ் அவள் கையை ஒரு முறை அழுத்தி விட்டு எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

“சூர்யா வீட்டுல எல்லாரும் வந்துருக்காக... அப்படியே அவளச் சாப்பிட வரச் சொல்லுய்யா... . பாலு

கொடுக்குறதால அவளுக்கும் பசி தாங்காது. ரெண்டுப் பேரும் சீக்கிரம் வாங்க"

"நீ போ அப்பத்தா... நான் அவளைக் கூட்டிட்டு வர்றேன்" என்றவன் அவரை அனுப்பி வைத்துவிட்டு கதவைத் தாளிட்டான். நேரே அவள் அருகில் வந்தவன்,

"பேபி... உன்னோட அப்பா, அம்மா வந்துருக்காங்க... நீ என்னை விட்டு போயிருவியா?" அவள் கால் அருகே மண்டியிட்டு அமர்ந்தவன், அவள் கையைப் பிடித்துக் கொண்டு பாவமன்னிப்புக் கேட்பது போல் கேட்டான். இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் தலைக் குனிந்தாள்.

"நான் உன்னிடம் நிறையப் பேசணும். எனக்குக் கொஞ்சம் வாய்ப்புக் கொடு. அதுக்கு அப்புறமும் நீ என்னை விட்டுப் போகணும்ன்னா... நானே உன்னைக் கொண்டு உன் வீட்டில் விட்டுறேன்" அவன் சொல்ல, மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் அவள் தலையை மட்டும் ஆட்டினாள். கிட்டத்தட்ட பத்து மாதங்களாய் அவள் எடுத்திருந்த வைராக்கியத்தை... அவன் ஒரு நொடியில் அதைப் பொடிப் பொடியாய் தூளாக்குவதை அவள் உணர்ந்தாள்.

"சரி வா... சாப்பிட்டு வரலாம்..." தான் எழுந்து அவள் எழுவதற்கு ஏதுவாய் அவன் கையை நீட்ட... அவளோ,

"நீங்க போய்ச் சாப்பிடுங்க... பாப்பா எப்பன்னாலும் எந்திரிப்பா..." மகளின் மேல் அவளுக்கு இருந்த அக்கறை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால யாரோ... இந்தப் பாப்பாவை விட்டுட்டுப் போறேன்னு சொன்னாங்களே... நீ அவங்களைப் பார்த்தியா பேபி...?" நமட்டுச் சிரிப்புடன் அவன் கேட்க... அவளோ தன் சிறுபிள்ளைத்தனமான செயலை நினைத்து வெட்கி மீண்டும் தலைக் குனிந்தாள்.

“உன் நிலையில் யாரா இருந்தாலும் இப்படித் தான் பேசி இருப்பாங்க. நீ பேசியது... செஞ்சது... எதுவும் தப்பில்லை. நீ எதுக்காகவும், யாருக்காகவும் தலைக் குனிய வேண்டியது இல்லை பேபி. என்னை மாதிரிக் கெட்டவங்க தான் தலைக் குனியணும். நீ ரொம்ப ரொம்ப நல்லவள். அந்தப் பாரதி கண்ட புதுமைப் பெண் போல் தலை நிமிர்ந்து நீ இருக்கணும்” தன் ஒற்றை விரலால் அவள் தாடையை நிமிர்த்தியவன் அவள் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தப்படிச் சொல்ல... அவளுக்குள் ஏதோ ஒன்று உருகியது.

“நீ இங்கேயே இரு... நான் சாப்பாடு எடுத்துட்டு வர்றேன்”

“நீங்க வேணாம்... அம்மாவைக் கொண்டு வரச் சொல்லுங்க” அவள் அவசரமாய் மறுக்க... அவன் அடிப்பட்டார் போல் கண்ணில் வலியுடன் அமைதியாய் அவளைப் பார்த்தான்.

“நீங்க இங்கே வந்துட்டா... எல்லாரும் ஏதாவது நினைக்க மாட்டாங்களா? அதான் சொன்னேன்...” தன் கை விரல்களை ஆராய்ந்தபடி அவள் சொல்ல... அவனுக்கு நிம்மதியாய் இருந்தது.

“நீ சொல்லி நான் தட்டுவேனா...” விளையாட்டாய் அவள் கன்னம் தட்டிச் சொன்னவன்... கீழே சென்று அவள் சொன்னபடி அவள் அம்மாவை அனுப்பி வைத்தான்.

“என்ன சூர்யா இது... தனியாக் கைக்குழந்தையை உன்னால் எப்படிப் பார்த்துக்க முடியும்? ரெண்டுப் பேருக்குமே அனுபவம் கிடையாது. பேசாம நம்ம வீட்டுக்கு வந்துடும்மா... குழந்தை வளர்க்குறது சின்னப் பிள்ளை விளையாட்டு இல்ல. இந்த மாதிரி நேரத்தில் நீ என்ன என்ன சாப்பிடணும் உனக்குத் தெரியுமா? என்ன மாதிரியான பக்குவம் இருக்கணும்ன்னு உனக்குத் தெரியுமா? குழந்தைக்கும் மருந்து அது இது நிறையப் பக்குவம் பார்க்கணும் இதெல்லாம் உனக்கும்,

மாப்பிள்ளைக்கும் எங்கே தெரியப் போகுது? அவர் தான் சொன்னாருன்னா… நீயாவது எடுத்துச் சொல்லி இருக்கலாம்ல” சிவகாமி மனம் தாங்காமல் புலம்பினார்.

சூரியாவுக்கு உடனே அன்னைக்குப் பதில் சொல்ல முடியவில்லை. என்ன தான் கணவனை அவள் எதிர்த்தாலும்… தாயிடம் கூட அவனை விட்டுத் தர அவளுக்கு இயலவில்லை. அதிலும் அவன் ஒன்று சொல்லி… இவள் அதற்கு மாற்றுக் கருத்து ஒன்று சொன்னால்… அது அவ்வளவு ரசிக்காதே. அவளின் காதல் கொண்ட மனது அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டது.

“அதான் ஆச்சி இருக்காங்களேம்மா… நாங்க சமாளிச்சிக்கிறோம்”

“அதுக்கு மட்டுமா சொல்றோம்… இந்த மாதிரி சமயத்துல நீங்க ரெண்டுப் பேரும் கட்டுப்பாட்டோட இருக்கணும். அதுக்குத் தான் பிரிச்சு வைக்கிறதே” அன்னை சொல்லியது முதலில் புரியவில்லை என்றாலும் பிறகு அவளுக்குப் புரிந்து அவளின் முகம் சிவந்து போயிற்று.

“எங்களுக்கு அதெல்லாம் தெரியும்மா… நான் பார்த்துக்கிறேன்…” அவள் அன்னையைச் சமாதானப்படுத்த,

“என்னமோ கல்யாணம் ஆனாலே எல்லாப் பொண்ணுங்களும் எப்படித் தான் இந்த மாதிரி மாறிவிடுறிங்களோ தெரியல. எங்களுக்கு இருக்கிறது ஒரே ஒரு மகள் நீ. உனக்குச் சம்பிராதயக் கட்டுக்கள் செய்ய முடியலையேன்னு தான் எனக்கு வருத்தமா இருக்கு. ஆனா எனக்கு ரொம்பச் சந்தோசமா தான் இருக்கு. இந்தளவுக்கு உன் புருசனோட மனசு ஒத்து வாழ்றது நினைச்சா… எனக்குப் பெருமையாத் தான் இருக்கு சூர்யா” அவள் மனம் நெகிழ்ந்துச் சொல்ல… சூரியாவோ உள்ளுக்குள் உடைந்தாள்.

முன்பு போல் அவர்களால் மனம் ஒத்து ஆதர்ச தம்பதிகளாய் வாழ முடியுமா? என்ற கேள்வி அவள் மனதை அரித்தது. ‘ஏன் உன்னைக் கல்யாணம் பண்ணும் போது மட்டும் அவன் நல்லவனாவா இருந்தான்? பல பெண்களுடன் வாழ்ந்த அதே நம்பி தானே அன்றும் இருந்தான். இப்போ மட்டும் நீ ஏன் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிற? அவனைப் பத்தின உண்மை உனக்குத் தெரிஞ்சதால தான் நீ இப்படி நடந்துக்கிறியா? அப்படின்னா உன் வாழ்நாள் முழுவதும் உண்மையை மறைச்சு அவன் உன் கூட வாழ்ந்து இருந்தா நீ என்ன பண்ணி இருப்ப? அவன் தான் உண்மையை ஒதுக்கிறானே... அதே சமயம் செஞ்சத் தவறுக்கு மன்னிப்புக் கேட்கிறானே. நீ அவனை மன்னிக்கக் கூடாதா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு அப்புறம் உனக்கு உண்மையா இருக்கேன்னு சொன்னானே அதை நீ கவனிச்சியா? தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பவனுக்கு மன்னிப்பைக் கொடுக்கப் போறியா? இல்ல தண்டனைக் கொடுக்கப் போறியா?’ அவளின் மனசாட்சி அடுத்தடுத்துக் கேள்விக் கேட்க... அதற்கு அவளிடம் பதில் இல்லை.

சாயந்திரம் வரை தமிழால் சூரியாவை தனியே சந்திக்க முடியவில்லை. அவளின் பெற்றோர் அங்கே இருந்ததால் அவனாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் போன பின்பாவது அவளிடம் பேசலாம் என்றால்... அப்பத்தாவும், அப்பச்சியும் கொள்ளுப் பேத்தியைக் கொஞ்சிக் கொண்டு அவர்கள் அறையில் இருக்க அவன் கையைக் கட்டிக் கொண்டு அமைதியாய் இருந்தான். இரவு சீக்கிரம் உணவை முடித்துக் கொண்டு மனைவியைக் காண ஓடி வந்தான். மகளின் உடைகளை அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்த சூரியா அவனின் வரவு உணர்ந்துத் திரும்பினாள்.

“அதை அப்புறம் பார்த்துக்கலாம்... முதல்ல நீ வா...” என்றவன் அவளை அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்தான். அவள் கையைப் பிடித்துக் கொண்டு,

“தேங்க்ஸ் பேபி... எங்கே உன் அப்பா, அம்மா கூடப் போயிருவியோன்னு பயந்துட்டே இருந்தேன்” அவன் சொல்வது உண்மை என்பதை அவன் முகத்திலிருந்த பதட்டம் சொல்லாமல் சொல்லியது.

“நான் உன் கிட்ட மனசு விட்டுப் பேசணும் பேபி... இப்போ பேசலாமா?” அவன் கேட்டதற்கு அவள் சம்மதமாய்த் தலையாட்ட, அவன் தொடர்ந்தான்.

“என் வாழ்க்கையை மாற்றிப் போட்ட அந்த நிகழ்வை... நான் இதுவரைக்கும் யாரிடமும் சொன்னது இல்லை. இவ்வளவு ஏன் அப்பச்சி, அப்பத்தாவுக்குக் கூடத் தெரியாது” என்றவன் கதிரின் வாழ்க்கை, அவனின் வார்த்தைகளால் தன் வாழ்க்கைத் தடம் புரண்ட விதம், தான் வாழ்ந்தத் தான்றோன்றித்தனமான வாழ்க்கை எல்லாவற்றையும் சொன்னான். அவனுக்குள் இருந்த இன்னொரு முகம் அவளுக்குத் தெரிந்ததும், ஆதரவற்று அநாதையாய் நின்ற அவனின் மனநிலையை அவளால் ஊகிக்க முடிந்தது. அவனின் நிலைக்காக அவள் வருந்தினாள்... பரிதாபப்பட்டாள்.

“அதுக்காக நான் செஞ்சது சரின்னு சொல்லல... உன்னைச் சந்திச்சதுக்கு அப்புறமா தான் நான் செஞ்சது எவ்வளவு பெரிய தப்பு எனக்குப் புரிஞ்சது. எவ்வளவு நாள் மனசுக்குள் வருந்தி இருப்பேன் தெரியுமா? நான் சந்திச்ச முதல் பொண்ணா நீ இருந்து... நான் நல்லவனா திருந்தி இருக்கக் கூடாதான்னு எத்தனை நாள் நான் ஏங்கி இருப்பேன் தெரியுமா? இப்போ நான் திருந்திட்டேன் பேபி... என்னை நம்பும்மா” அவன் உள்ளம் உருகப் பேச,

“உங்க அண்ணி அப்படி நடந்தாங்கன்னா... எல்லாப் பெண்களும் அதே மாதிரித் தான் இருக்கணுமா? ஏன் நம்பி இப்படி ஒவ்வொரு பெண்களோட வாழ்க்கையைப் பாழாக்கினீங்க... அவங்களும் என்னை மாதிரித் தானே உங்களை உருகி உருகிக் காதலிச்சு இருப்பாங்க?” மற்ற பெண்களுக்காக அவள் பரிதாபப்பட்டாள்.

“ஹைய்யோ பேபி... பேபி...” அவள் சொன்னதைக் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான். “என்னை யாரும் உருகி உருகிக் காதலிக்கவும் இல்லை. எனக்காக அவங்க ஏங்கிட்டு இருக்கவும் இல்லை. அவங்களும் டைம் பாஸுக்கு லவ் பண்ணாங்க. ஒத்து வரலன்னதும் அவங்க வழியை அவங்கப் பார்த்துட்டுப் போயிட்டாங்க. என்னை உருகி உருகிக் காதலிச்சு... எனக்காக உயிரையும் கொடுக்க முன் வந்தது நீ மட்டும் தான் பேபி. உன் காதலுக்கு நான் கட்டுப்படாமல் இருந்தால் நான் மனுசனே இல்லை. நான் அடிப்படையில் எல்லா உணர்வுகளும் கொண்ட சாதாரண மனுசன் தான். இடையில் கதிரின் வார்த்தையில் என் வாழ்க்கைக் கொஞ்சம் தடம் மாறியிருச்சு. அதையும் இப்போ உன்னோட காதல் சரி பண்ணிடுச்சு” அவன் சொல்லச் சொல்ல... அவள் அமைதியாய் இருந்தாள்.

“சரி பேபி... இப்ப நான் கேட்பதுக்குப் பதில் சொல்லு? நம்ம கல்யாணத்துக்கு முன்னமே நான் தப்பானவன்னு தெரிந்தால் என்ன செய்திருப்ப...? என்னை வேண்டாம்ன்னு ஒதுக்கி... வேறு கல்யாணம் பண்ணி இருப்பியா?” அவன் சொல்லும் போதே அவன் வாயை தன் கைக் கொண்டு மூடியவள்,

“ச்சே... என்ன இது லூசுத்தனமாய்ப் பேசாதீங்க... உங்களப் பத்தின உண்மைத் தெரிஞ்சி இருந்தா... நான் உங்களை விட்டு ஒதுங்கிப் போயிருந்திருப்பேன். ஆனால் வேற கல்யாணம் பண்ணி இருக்க மாட்டேன். நான் சாகும் வரைக்கும் எனக்கு நீங்க மட்டும் தான் கணவன். அது தாலிக் கட்டினால் மட்டும் வர்ற சொந்தம் இல்ல. இது மனசு சம்பந்தப்பட்டது” அவள் சொல்லி முடித்ததும் அவன் உணர்ச்சி வசப்பட்டவனாய் அவளை இறுக அணைத்தான்.

“இது தான் பேபி நீ... எனக்காக என்னை மட்டும் நேசிப்பவள் நீ... உன்னை மாதிரி ஒரு பெண்ணைப் பார்ப்பது அபூர்வம். நீ எனக்குக் கிடைச்ச அரிய பொக்கிஷம். உன்னை விட்டு விட்டு நான் எப்படி வாழ்வேன் பேபி? நீ என்னை விட்டுப் பிரிந்தால்... அந்த நிமிசம் நான் செத்துப் போவேன். நீ

எனக்கு வேணும் பேபி. என்னை நீ மன்னிக்க மாட்டியா?” அவளிடம் பதில் இல்லாமல் போகவும் அவன் அவள் முகத்தைப் பார்த்தான்.

“ஏன் பேபி... நான் திருந்திட்டேன்னு சொன்னதை நீ நம்பலியா பேபி?” அவன் பரிதாபமாக அவள் முகம் பார்த்துக் கேட்க... அவள் தனக்காகப் பரிதாபப்படுவதா? இல்லை அவனுக்காகப் பரிதாபம் கொள்ளுவதா? என்று தெரியாமல் விழித்தாள்.

“மன்னிப்பு... இந்த வார்த்தைக்கு அர்த்தம் இருக்கா நம்பி? என்னைக் கேட்டா நிச்சயம் அர்த்தம் இல்லைன்னுத் தான் சொல்வேன். ஒருத்தர் செய்றத் தவறை மத்தவங்க வாய் வார்த்தையா மன்னிச்சிட்டேன்னு சொல்லலாம். ஆனால் மனதளவில் அதை மன்னிச்சாங்களான்னா... அது யாருக்கும் தெரியாது? அது அவங்களுக்கு மட்டுமே தெரிஞ்ச ரகசியம். ஒருவர் தவறை மற்றவர் மறக்கலாம்... ஆனால் மன்னிக்க முடியாது. அதே மாதிரி நீங்க செஞ்சதை என்னால் மன்னிக்கவோ... இல்லை மறக்கவோ முடியல நம்பி... நான் என்ன பண்ணட்டும்?” அவள் பரிதாபமாகக் கேட்க,

“ஓகே பேபி... உனக்கு அது தான் விருப்பம்ன்னா நானும் உன் வார்த்தைக்குக் கட்டுப்படுறேன். நாளைக்குக் காலையில் உன்னை உன் வீட்டில் கொண்டு போய் விட்டுறேன். ஆனால் அதுக்கு முன்னாடி... உனக்காக என்னை மாப்பிள்ளையா பார்த்த உன் அப்பா கிட்டேயும்... எனக்காக உன்னைப் பெண் பார்த்த என் அப்பாத்தா கிட்டேயும்... நம் பிரிவினைக்கான காரணத்தை நாமச் சொல்லிட்டுப் பிரிஞ்சரலாம்” கொஞ்சமும் அலட்டாமல் அவன் சொன்னதைக் கேட்டு அவள் அதிர்ந்துப் போய் அவன் முகத்தை இமைக்காமல் பார்த்தாள்.

## உயிர் : 21

“அவங்க... அவங்களுக்கு ஏன் சொல்லணும்?” கண்களில் மிரட்சியுடன் சூரியபிரியா செந்தமிழ்நம்பியைப் பார்த்துக் கேட்டாள்.

“ஏன் சொல்லணுமா? நல்லாத் தான் கேள்விக் கேட்கிற... நீ என்னைப் பிரிஞ்சு உன் வீட்டுக்குப் போயிட்டா... ரெண்டு வீட்டிலும் ஏன்? எதுக்குன்னு கேள்விக் கேட்க மாட்டாங்களா? எப்படியும் அவங்கக் கிட்டச் சொல்லித் தான் ஆகணும். அதான் இப்பவே சொல்லிட்டுப் பிரிஞ்சிட்டா... பின்னாடி எந்தப் பிரச்சினையும் வராதுப் பாரு” அவன் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்ல... இதைக் கொஞ்சமும் அவள் யோசிக்கவில்லை என்பதை அவளின் திகைத்த முகம் காட்டிக் கொடுத்தது.

அவனுக்குத் தெரியும் அவர்கள் இருவருக்கு இடையில் உள்ள பிரச்சினையை... அவளின் பெற்றோர்களே ஆனாலும் அவர்களிடம் கூட அவள் சொல்ல மாட்டாள் என்று. வேறொரு பெண்ணாக இருந்தால்... இந்நேரம் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி... அவனின் மேல் வழக்குப் பதிவு செய்து... நீதிமன்றத்துக்கு அவனை இழுத்திருப்பாள். சூரியா அவ்வாறு செய்யாததே அவனுக்குப் பெருத்த நிம்மதியைத் தந்து... அவள் மேல் மரியாதையை உண்டுப் பண்ணியது.

“பேபி... தவறு எல்லாம் என் மேல் தானே. இப்போ இந்தப் பிரிவினைக்கும் நானே காரணம்ன்னு சொல்லிக்கிறேன். நீயா பிரிஞ்சிப் போகல... நானாத்தான் பிரிய முடிவெடுத்து இருக்கேன் சொல்றேன். ஏற்கெனவே எல்லாருக்கும் கெட்டவனா இருந்தவன் தானே. இப்போ இவங்களுக்கும் கெட்டவனா இருந்திட்டுப் போறேன். என்ன அப்பத்தா தான் என் மேலக் கொஞ்சம் கோபமா இருக்கும்? பரவாயில்லை... அவங்களை நான் சமாளிச்சுக்கிறேன். யாரும் உன்னை ஒரு கேள்விக் கேட்க முடியாதபடி நான் பார்த்துக்கிறேன். நீ

பயப்படாதே” அவளை ஏதும் சொல்லி விடுவார்களோ என்று எண்ணி அவள் பயப்படுவதாய் அவன் நினைத்துக் கொண்டு பேசினான்.

“வேண்டாம்... உங்களை அசிங்கப்படுத்திட்டு... நீங்க எனக்கு நியாயம் செய்ய வேண்டாம். என்னோட அப்பா, அம்மாவே ஆனாலும் அவங்க முன்னாடி நீங்க குற்றவாளி போல் தலைக் குனிஞ்சு நிக்கிறதை என்னாலப் பார்க்க முடியாது. அதனால் தான் இதுவரைக்கும் நான் யார்க்கிட்டேயும் நம்மப் பிரச்சினையைச் சொல்லல. உங்களக் கேவலப்படுத்திட்டு நான் சந்தோசமா இருப்பேன்னு... நீங்க எப்படி நினைக்கலாம்? நான் உங்களைப் பிரிஞ்சிப் போகணும்ன்னு முடிவெடுத்தேன் தான் இல்லைங்கல்ல... அதுக்காக உங்களை அசிங்கப்படுத்திட்டு பிரியணும்ன்னு நான் நினைக்கல. நீங்க சொல்றதை நான் கேட்க மாட்டேன்” கண்களின் கண்ணீர் வழியச் சொன்னவளின் காதல் அவனைச் சுகமாய்த் தாக்கியது.

அவளின் எல்லையில்லா அன்பில் அவன் கரைந்து காணாமல் போனான். இத்தகையைத் தூய அன்பை ஒருவர் மேல்... மற்றொருவர் வைக்க முடியுமா? என்று பிரமித்தான். அவளின் தயக்கத்திற்கு அவன் ஒரு காரணத்தை நினைத்துக் கொண்டிருக்க... அவளோ அவன் மனம் குளிரும்படி வேறொரு காரணத்தைச் சொன்னாள். என்ன தவம் அவன் செய்தான்... இப்படியொரு காதல் மனைவி கிடைப்பதற்கு...!

“என் மேல் அவ்வளவு காதலா பேபி...?” கண்களில் காதல் வழிய... அவன் பார்த்தப் பார்வை, அவளின் இதயத்தை ஊடுருவிச் சென்றதை அவள் உணர்ந்தாள். அவனின் கடந்த காலம் எதுவாக இருந்தால் என்ன... இப்போது அவன் கண்ணில் வழியும் காதல் பொய்யில்லையே... அது சொல்லாமல் சொல்கிறதே இவள் மீதானக் காதலை!!!

“ம்...” என்றவள் தலையை மேலும் கீழுமாய் அசைத்தாள்.

“உனக்கும் என் மேலுள்ள காதல் கொஞ்சமும் குறையல... அதே மாதிரி நானும் உன்னை என் உயிருக்கு உயிராய்க் காதலிக்கிறேன். ரெண்டுப் பேரு மனசுலேயும் இவ்வளவு நேசத்தை வச்சிட்டு... நாம பிரியத் தான் வேணுமா பேபி? என் காதலை உனக்கு உணர்த்துவதற்கு... எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா?” கண்களில் ஏக்கத்துடன் கேட்டவனிடம்... மறுத்துக் கூறவும் இயலாதவளாய் நின்றிருந்தாள்.

“ப்ளீஸ் பேபி... நான் உன்னை எந்தவிதத்திலும் தொந்திரவுப் பண்ண மாட்டேன். நீ என்னை நம்பலாம். நம்ம மகளுக்கு அம்மாவா இருந்தாப் போதும். வேறு எதையும் உன்னிடம் நான் எதிர்பார்க்க மாட்டேன்” அவள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவன் முகத்தைப் பார்த்தாள்.

“பேபி... எந்த ஒரு செயலிலும் நம்ம ரெண்டுப் பேரோட விருப்பம் இருக்கணும்ன்னு சொல்வல்ல. எனக்கு உன் கூட வாழணும்ன்னு விருப்பம் இருக்கு... என் விருப்பத்துக்கு நீ சம்மதிக்க மாட்டியா?”

“எனக்கு மட்டும் என்ன உங்களைப் பிரியணும்ன்னு வேண்டுதலா? உங்களைப் பிரிஞ்சி நான் மட்டும் சந்தோசமாவா இருப்பேன்? அதுக்காக நீங்க செஞ்சத் தப்பை ஈசியா எடுக்கவும் முடியல... அதே சமயம் உங்களைப் பிரியவும் முடியல. நான் என்னத்தான் பண்றது?” அவனைப் பார்த்து அவள் பரிதாபமாகச் சொல்ல...

“ப்ளீஸ் பேபி... எனக்காகக் கொஞ்சம் யோசிச்சுப் பாரேன்” ஏக்கக் குரலில் கேட்டவனுக்கு அவளால் ஏமாற்றத்தைக் கொடுக்க முடியவில்லை.

“ம்... சரி...” என்றவள் அதற்கு மேல் பேச்சை வளர்க்க விரும்பவில்லை.

வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு என்று வெட்டிக் கொண்டு போவதற்கு இது ஒன்றும் இடையில் வரும் வழிப்போக்குப் பயணம் இல்லை. காலம் முழுவதும் கூட வரும் உறவு இது. இதை இருவருமே உணர்ந்து இருந்ததால்… வார்த்தையால் கூட மற்றவரைக் காயப்படுத்த விரும்பவில்லை. தான் என்கிற அகங்காரம் அவர்களுக்கு இடையில் வீணாய் நுழைவதை அவர்கள் இருவருமே விரும்பவில்லை.

மேலும் மேலும் பேசினால் அது இருவருக்குமே மிகுந்த வேதனையை ஏற்படுத்தி மன உளைச்சலைத் தரும் என்று அவளுக்குத் தெரியும் ஆதலால் அவளும் மேற்கொண்டு வாயைத் திறக்கவில்லை. அவள் இந்தளவிற்கு இறங்கி வந்து சம்மதித்ததே அவனுக்கும் பெருத்த நிம்மதியாய் இருக்க… அவனும் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

*******************************************

தன் கையில் இருந்த அட்டிகையைக் கழுத்தில் மாட்ட முயற்சி செய்தாள் சூரியா. அதன் கொக்கியை அவளால் மாட்ட முடியவில்லை. நாலைந்து முறை முயன்றும் அவளால் முடியாததால், சலிப்புற்றவளாய், “ச்சே…” என்று எரிச்சல் பட்டுக் கொண்டிருக்கும் போது தமிழ் உள்ளே நுழைந்தான்.

சந்தன நிறத்தில் பட்டுடுத்தித் தேவதைப் போலிருந்தவளைக் கண்டு அவன் மனம் தடுமாறத் தான் செய்தது. ஆனாலும் முயன்றுத் தன் தடுமாற்றத்தை வெளிக்காட்டாமல் மறைத்துக் கொண்டு அவள் அருகில் சென்றான். இன்று அவர்களின் மகளுக்குப் பேர் சூட்டும் திருநாள். அதற்குத் தான் அவள் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

“என்ன பேபி…?”

“இந்த நெக்லஸ் போட முடியல…” அவள் நீட்டியதைத் தன் கைகளில் வாங்கியவன், அவள் கழுத்தில் போட்டுவிட்டான்.

அதைக் கண்டு எதையோ நினைத்தவளாய் அவள் முகம் கடுகடுத்தது.

“இதைக் கூடத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க... எத்தனை பேருக்கு இப்படிப் போட்டு விட்டிருப்பீங்க...? நான் ஒரு லூசு...” தலையில் தட்டியவள், “உங்களுக்குத் தான் இதில் அனுபவம் அதிகம் இருக்குமே?” நக்கலாய் அவனைப் பார்த்து அவள் சொல்ல... அதில் அவன் மனம் காயப்பட்டாலும் அவளிடம் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

“ஆமாம் ஆமாம்... இதுக்குன்னு ஸ்கூல் வச்சு நடத்துறாங்க... நான் அதில் போய் ட்ரைனிங் எடுத்துட்டு வந்தேன். நெக்லஸ் கூக் மாற்றதுப் பெரிய கம்பச் சூத்திரம் பாரு... ரொம்பக் கஷ்டமாயிருப்பதுக்கு...” கேலியாய் பேசியவன், “இதெல்லாம் உனக்கு மட்டும் தான் செய்வேன் பேபி...” என்று அவளைக் கொஞ்சியவன், பின் சீரியசாக, “வருங்காலத்துல வேற ஒருத்தங்களும் உனக்குப் போட்டிக்கு வரலாம். அதுக்கு மட்டும் நீ பெர்மிசன் கொடுத்தாப் போதும்” அவன் சொல்லச் சொல்ல, அவள் கொதிப்படைந்துப் போய் அவனை முறைத்தாள்.

“அந்த ஒருத்தங்க யாரு?” கண்களில் நெருப்புப் பறக்க அவள் கோபத்துடன் கேட்க,

“ஐயோ பயமா இருக்கே பேபி...” என்று போலியாய் பயந்தவன், அவள் அருகில் வந்து அவளை இறுக்கி அணைத்து, “அந்த ஒருந்தங்க... யாருன்னா...?” அவன் நிறுத்த, கண்களில் தவிப்பைத் தேக்கி வைத்தபடிப் பார்த்தவளைக் கண்டு அவன் மனம் இளகியது.

“அது வேறு யாருமில்ல... நம்மப் பொண்ணு தான்...” அவள் தலையில் முட்டியபடி அவன் நமட்டுச் சிரிப்புடன் சொல்ல, அவன் கையில் செல்லமாய் அடித்தபடி,

“கொஞ்ச நேரத்தில் என்னமாய்ப் பயமுறுத்திட்டீங்க…” என்று சிணுங்கியவளை,

“உன்னைத் தவிர வேறு யாரையும் நினைச்சுக் கூடப் பார்க்க மாட்டான் உன் நம்பி…” கணவன் சொன்னதில் மனம் நெகிழ்ந்தவளாய் அவன் தோளில் சாய்ந்துக் கொண்டாள். அவனும் தன் நேசத்தைப் பறைச் சாற்றும் விதமாய் அவளை அணைத்துக் கொண்டான்.

இந்த ஒரு மாதக் காலமாய் அவர்களுக்கு இடையில் நண்பர்கள் போல் நல்ல புரிதல் இருந்தது. அதற்கு மேல் கணவன் மனைவி உறவில் பெரியதாய் முன்னேற்றம் இல்லை. அவனும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவள் அருகாமை ஒன்று மட்டும் அவனுக்குப் போதுமானதாய் இருந்தது. அவன் என்ன தான் அவளிடம் நன்றாக நடந்து கொண்டாலும்… அவளின் அடிமனதில் உள்ள பயம், கவலை அவளையும் அறியாமல் இது போல் அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். ஆனால் அவன் ஒன்றும் அதைப் பற்றி அதிகம் யோசிக்க மாட்டான். அவளின் அந்தப் பயத்தை, கவலையைப் போக்கத் தான் நினைப்பானே தவிர ஒருமுறை கூட அவளைக் கடிந்து கொண்டது இல்லை.

மனைவியை அழைத்துக் கொண்டு கீழே வந்தவன் கண்ணில் மாமியாரின் கையிலிருந்த மகள் தென்பட்டாள். ஒரு மாதக் குழந்தைக்கு என்று தைக்கப்பட்ட பட்டுப் பாவாடையை அணிந்துக் குட்டித் தேவதையாய் உறங்கிக் கொண்டிருந்த மகளைக் கண்டதும் அவன் நெஞ்சம் பெருமையில் கர்வமாய் விம்மியது.

“கீதாஞ்சலி… கீதாஞ்சலி… கீதாஞ்சலி…” மகளின் காதில் அவளின் பெயரை மூன்று முறைச் சொல்லியவனுக்கு அந்த உலகத்தை வென்றுவிட்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. இருவரும் மனமொத்துத் தான் இந்தப் பெயரை தேர்ந்து எடுத்திருந்தனர். தன் மன மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பொருட்டு, சூரியாவின் நெற்றியில் முத்தமிட்டான்.

திடீரென்று அவன் முத்தம் கொடுத்த அதிர்ச்சியில் அவள் அவனை நிமிர்ந்துப் பார்க்க, அவனோ கையிலிருந்த மகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். வேஷ்டி, சட்டையில் ஆண்மையின் கம்பீரத்துடன் இருந்த அவனைக் கண்டு, அவள் உள்ளம் அவள் வசம் இல்லை. அவனின் அழகு அவளைக் காந்தம் போல் அவன் பால் ஈர்த்தது. எல்லாம் ஒரு நொடித் தான்... இதே அழகுத் தானே... அத்தனை பெண்களையும் படுக்கையில் வீழ்த்தியது என்று நினைக்கும் போதே அவள் முகம் இருண்டு போனது. அவளின் பார்வையை உணர்ந்தோ இல்லை எதேச்சையாகவோ நிமிர்ந்தத் தமிழின் கண்ணில் அவளின் முக மாற்றம் பட்டுவிட்டது.

“பேபி... கண்டதையும் நினைச்சு நீ குழம்பாதே... நீ, நான், நம் அஞ்சுப் பாப்பா... நம்ம மூணு பேரை மட்டும் நீ நினைவில் வை. இது தான் உண்மை... இந்த நொடி தான் மெய்...” அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன், அவள் காதில் குனிந்துச் சொல்ல.. அவள் தன் முகத்தை மாற்றிக் கொண்டாள்.

“ஹைய்யோ... இந்தப் பட்டுக்குட்டியைப் பார்க்கும் போது... எனக்கும் சீக்கிரம் குழந்தையைப் பெத்துக்கணும்ன்னு ஆசையா இருக்கு” அஞ்சலியைக் கையில் வைத்துக் கொண்டு குறிஞ்சி ஆசையுடன் சொல்ல,

“முதல்ல... அதைச் செய்யடியம்மா...”அப்பத்தா அவளைப் பார்த்துக் கிண்டலடித்தார்.

‘நம்பி சாப்பிட்டானான்னு தெரியலையே? எங்கே போனான்?’ கணவனைத் தேடி சூரியா வீட்டின் முன்புறம் வர, தமிழ் ஆதவனுடன் வராந்தாவில் நின்றுப் பேசிக் கொண்டிருந்தான்.

“தமிழ்... உன்னைப் இப்படிக் குடும்பஸ்தனா பார்க்க... எவ்வளவு சந்தோசமாயிருக்குத் தெரியுமாடா?” ஆதவன் மனம் நிறைந்த சந்தோசத்துடன் சொன்னான். நண்பனின்

அசட்டுத்தனமான கொள்கைகளைக் கண்டு பயந்தவன் அவன் தானே...

“ம்... எல்லாம் சூர்யாவோட காதல் தான் காரணம் ஆதி. அவள் இல்லாமல் எனக்கு இந்தச் சந்தோசம் கிடைச்சிருக்காது. என் வாழ்க்கையில் தேவதையாய் வந்தவள் அவள். அந்தத் தேவதைத் தந்த வரம் தான் என் குட்டித் தேவதை...” தமிழ் சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் உண்மை இருந்தது... மகிழ்ச்சி இருந்தது. அதை உணர்ந்தவனாய் ஆதவன் அவனை அணைத்துக் கொண்டான்.

கணவன் சொன்னதைக் கேட்டு சூரியாவின் கண்கள் கலங்கிவிட்டது. தன்னைத் தேவதையாய் கொண்டாடும் கணவனுக்குத் தான் என்ன செய்தோம்? மேலும் மேலும் அவனின் தவறைச் சுட்டிக் காட்டி... அவனை நோகடிக்க அல்லவா தான் செய்கிறோம் என்று மனதுக்குள் வருந்தியவள், சத்தமில்லாமல் வந்த வழியே திரும்பச் சென்றாள்.

“என்ன சிவகாமி... உம் பேத்தியைக் கீழ விட மனசு வரலியா?” என்று கேட்டபடி சிவகாமி அருகில் வந்து அமர்ந்தார் தையல்நாயகி.

“என் தங்கத்தை விடவே மனசில்ல. நாங்க எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறோம்ன்னு சொன்னா நீங்க ஒத்துக்க மாட்டேங்கிறிங்க... எங்களுக்கும் எங்க பேத்தியை அழைச்சிட்டுப் போகணும்ன்னு ஆசையிருக்காதா?” தன் மனதில் இருந்த ஆதங்கத்தைப் பெரியவளிடம் படபடவெனக் கொட்டிவிட்டார் சிவகாமி.

“சிவகாமி உம் ஆதங்கம் எனக்குப் புரியாம இல்ல. நீ கொஞ்சம் தமிழ யோசிச்சுப் பாரு. அப்பன், ஆத்தா இல்லாத புள்ள... இப்பத்தேன் பொண்டாட்டி, புள்ளன்னு குடும்பப் பாசத்தை அனுபவிக்குறான். அத நாம ஏன் கெடுக்கணும் சொல்லு? உனக்கு என்ன உம் பேத்தி உம் வீட்டுக்கு

வாரணும் அவ்வளவு தானே... நான் தமிழு கிட்டப் பேசி அனுப்பி வைக்கேன். நீ வெசனப்படாம இரும்மா" மூத்தவராய் அனுபவம் மிக்கவராய் தையல்நாயகி பேசியதும்,

"ஏதோ ஆதங்கத்துல பேசிட்டேன்... என்னை மன்னிச்சிருங்கம்மா... எங்களை மட்டும் யோசிச்சேன்... மாப்பிள்ளையை நினைச்சுப் பார்க்கல" சிவகாமி மனமுவந்து மன்னிப்பு வேண்ட...

"அடப் போ சிவகாமி... நமக்குள்ள மன்னிப்பு எல்லாம் எதுக்கு?" பெருந்தன்மையாய் பேசித் தான் பெரிய மனுசி என்பதை அவர் நிரூபித்தார்.

"என்ன அப்பச்சி... உம்ம பொண்டாட்டி போற திசைப் பக்கம் எல்லாம் உம்ம கண்ணு அலைபாயுதே என்ன விசயம்?" தன் அருகில் அமர்ந்திருந்த அப்பச்சியை வம்பிழுத்தான் தமிழ்.

பேர் வைக்கும் வைபவத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் சென்றிருக்க... வீட்டில் உள்ளவர்கள் மட்டுமே எஞ்சி இருந்தனர். தையல்நாயகி தன் கையில் அஞ்சலியை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்க, அருகில் சூரியா அமர்ந்திருந்தாள்.

"உம் அப்பத்தா கையில கொழந்தையோட பார்க்கும் போது... உம் அப்பனையும், பெரியப்பனையும் அவள் தூக்கிக் கொஞ்சின நியாபகம் வந்துது" அவரின் கண்கள் கலங்கியது.

"போதும் போதும்... ரொம்பத் தான் உருகாதே பெருசு. இந்த வயசுல சைட் அடிக்கிறதப் பாரு" அவன் பேச்சை மாற்றும் பொருட்டு அவரைக் கிண்டலடிக்க,

"நீ உம் பொண்டாட்டியை சைட் அடிக்கிறத விடவா... நாங்க சைட் அடிச்சிட்டோம்" பதிலுக்கு அவரும் சிலிர்த்துக் கொண்டார்.

“என் வைப்பை நான் சைட் அடிப்பேன்…” அவன் முறுக்கிக் கொள்ள,

“அதே மாதிரி தான் நானும்…” அவர் பேசும் போதே… தையல்நாயகி,

“ரெண்டுப் பேத்துக்கும் வேற ஜோலிக் கழுத இல்ல. அதான் வெட்டித்தனமாப் பேசிப் பொழுதப் போக்கிட்டு இருக்குங்க. நீ வா… நாம பாப்பவத் தூங்க வைக்கப் போகலாம்” என்றபடி அவர் எழவும்… பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி அவரைப் பின் தொடர்ந்தாள் சூரியா. அவள் சிரிப்புடன் போவதை மன நிறைவுடன் பார்த்துக் கொண்டிருந்தான் தமிழ்.

அன்றிரவு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த சூரியா, யாரோ பேசும் சத்தம் கேட்டு விழித்தாள். தமிழ் மகளைக் கையில் ஏந்திக் கொண்டு அவளுடன் தான் பேசிக் கொண்டிருந்தான்.

“உங்க அம்மா கோபம் குறையவே குறையாதா செல்லம். எனக்கு என்னமோ அவள் கோபம் இப்போதைக்குக் குறையற மாதிரித் தெரியல. குடிச்சிட்டு வந்ததுக்கே உங்க அம்மா… என்னை ஒரு மாசம் தள்ளி வச்சா. அதுக்கே அப்படின்னா… இவ்வளவு பெரிய தப்புக்கு எத்தனை வருசம் தள்ளி வைக்கப் போறாளோ? ஆனா ஒண்ணுச் செல்லம்… அவள் என்னைப் புரிஞ்சிக்கிட்டு என் கிட்ட வர்ற வரைக்கும்… நான் காத்திட்டு இருப்பேன். அது என் ஆயுள் முழுமைக்கும் என்றாலும் பரவாயில்லை… நான் பொறுமையாய்க் காத்திருப்பேன்” மகளின் முகம் பார்த்து அவன் பேச, அவன் பேசியது என்ன புரிந்ததோ அவன் மகள் பொக்கை வாய் திறந்து சிரித்தாள்.

“நான் திருந்திட்டேன்னு நீங்களாவது அவளுக்கு எடுத்துச் சொல்லுங்கச் செல்லம். நீங்க வளர்ந்து வந்து உங்க அம்மா கிட்டச் சொல்வீங்களா?” கடைசி வார்த்தைச் சொல்லும் போது அவன் குரல் உடைந்தது.

அவன் கண்ணில் இருந்து விழுந்த ஒரு சொட்டுக் கண்ணீர் மகளின் பாதத்தில் பட்டது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த சூரியாவுக்கு, அவன் தன் கண்ணீரால் மகளின் பாதத்தைக் கழுவித் தான் செய்தப் பாவத்தைப் போக்குவது போலிருந்தது. அந்தக் காட்சியைக் கண்ட அவளின் கண்களும் கலங்கியது.

## உயிர் : 22

“பேபி... அஞ்சு செல்லத்துக்கு வேற ட்ரெஸ் போட கூடாதா? கோபத்துல முடியப் பிச்சிட்டு அழுறதப் பாரு” இன்று தான் முதன் முறையாகத் தங்கள் மகளைக் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள் செந்தமிழ்நம்பி தம்பதியினர்.

“ஆச்சி தான் பட்டுச் சட்டைப் போட சொன்னாங்க...” கணவனிடம் விளக்கம் சொன்னவள், ‘நான் என்ன செய்வது?’ என்பது போல் அவனைப் பார்த்தாள்.

“அதுக்கு வேற வேலையில்ல...” என்றவன் பட்டுச் சட்டையைக் கழட்டிவிட்டு, பருத்தியாலான மிருதுவான உடையை எடுத்து அவனே மகளுக்கு அணிவித்தான். சூரியா அவன் தங்கள் மகளைக் கையாளும் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

“என்ன பேபி... பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?” ஒற்றைப் புருவத்தைத் தூக்கி அவன் கேள்வியாய் அவளைப் பார்த்துக் கேட்டான்.

“நீங்க அஞ்சுவை ஹண்டில் பண்றதைப் பார்த்தேன்... எவ்வளவு அழகா அவளுக்கு எல்லாம் செய்றீங்க...” அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

“இதுல ஏதும் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கான்னு கேட்டுறாதே. நம்ம பொண்ணுக்கு மட்டும் தான் நான் செய்றேன்” அவன் பயத்துடன் அலறினான்.

“போங்க நம்பி... சும்மா... சும்மா... எதையாவது உளறாதீங்க... நீங்க எப்பவுமே நம்ம செல்லத்துக்கு மட்டும் தான் அப்பான்னு எனக்குத் தெரியும். யூ ஆர் குட் டாடி இன் த ஹோல் வேல்ர்ட். யூ ஆர் சோ ஸ்வீட் நம்பி...” நம்பிக்கையுடன் சொன்னவள், அவன் முடிக் கோதி அவன்

நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவள்... அவன் கையிலிருந்து மகளை எடுத்துக் கொண்டு,

“வாங்கப் போகலாம்...” என்று அவள் முன்னால் நடக்க, அவன் ஆச்சிரியத்துடன் அவளைப் பார்த்தபடி பின் தொடர்ந்தான்.

தன்னை நல்ல தந்தையாய் நினைப்பவளால்... நல்ல கணவனாய் நினைக்க முடியவில்லை என்பதை உணர்ந்த அவன் மனம் உள்ளுக்குள் வருந்தியது. எல்லாம் சில வினாடிகள் தான்... நிச்சயம் என்றாவது ஒருநாள் தன் அன்பு அவள் மனதை மாற்றித் தன் பக்கம் திருப்பும் என்று மனதுக்குள் நம்பிக்கையுடன் நினைத்துக் கொண்டான்.

“சூர்யா... நீ தமிழு கூட முன்னாடி உட்காரேன்...” ஆதிமூலம் அவளிடம் சொல்ல, அவளோ அதை மறுத்துவிட்டு தையல்நாயகியோடு பின் புறம் அமர்ந்தாள்.

“என்ன அப்பச்சி... ரொம்பச் சோகமா இருக்கப் போலிருக்கு?” அவரைச் சீண்டினான் தமிழ். கோவிலுக்குப் போகும் அரைமணி நேரம் அவனுக்கும் பொழுதுப் போக வேண்டுமே.

“உம் பொண்டாட்டி... எங்க ரெண்டுப் பேத்தையும் பிரிச்சிட்டாளே...” அவர் சோகமாய்ச் சொல்ல...

“சின்ன வயசு நாங்களே தனித் தனியா உட்காரும் போது... காலம் போன காலத்துல உனக்கு இது தேவையா அப்பச்சி? பேசாம அடங்கி உட்காரு... இல்ல... நான் பொல்லாதவன் ஆயிடுவேன்”

“ஹிம்... ஏன் சொல்ல மாட்ட... நான் உனக்குப் பாவம் பார்த்தா... நான் உனக்குப் பாவமா போயிட்டேனா?” அவர் கோபப்பட,

“என்ன ஒரு ரைமிங்...” அவன் சிலாகிக்க... அதைக் கேட்டு ஆதிமூலம் வாய் விட்டுச் சிரிக்க... அவரின் சிரிப்புச் சத்தம் கேட்டு, சின்னவள் தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்துப் பயந்துப் போய் அழ ஆரம்பித்தாள்.

“இப்படிச் சிரிச்சா... சின்னப் புள்ளய பயமுறுத்துவீக... செத்த நேரம் வாயை மூடிக்கிட்டு இருக்க மாட்டீரா?” அப்பத்தா சத்தம் போடவும்... அதற்கு மேல் வாயைத் திறக்க அவர் என்ன முட்டாளா? அதைக் கண்டு தமிழுக்குச் சிரிப்பு வர... அவன் முன்பக்க கண்ணாடி வழியே மனைவியைப் பார்க்க... அவளும் அவனைப் பார்த்துத் தான் சிரித்துக் கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் அவனின் புன்னகை விரிந்தது.

கோவிலில் அஞ்சலியின் பெயருக்கு அர்ச்சனை செய்து, அவளைக் கடவுளின் பாதத்தில் வைத்து எடுப்பதற்காக அர்ச்சகர் அவளைத் தூக்கிக் கொண்டு உள்ளே போக, தமிழ் தவித்துப் போனான்.

“அப்பத்தா எதுக்கு அஞ்சுவை அவர் கையில் கொடுக்குற... பாவம் அவள் பயந்து அழப் போறா”

“இது ஒரு சம்பிரதாயம் தமிழு... அதெல்லாம் பாப்பா பயப்பட மாட்டா பாரு” அப்பத்தா சொன்னது போல் அஞ்சலி கொஞ்சம் கூட அழாமல் சிரித்தபடி வரவும் தான் அவன் மனம் நிம்மதியானது.

‘இந்தச் சந்தோசத்தை என் ஆயுளுக்கும் நீட்டிக்க வை இறைவா...’ தமிழ் வெகுநாட்களுக்குப் பின் கடவுளிடம் வேண்டினான்.

மகளைக் கையில் ஏந்திக் கொண்டு கோவிலில் இருந்து வெளியில் வந்த சூரியாவை இளம்பெண்கள் மூவர் சூழ்ந்துக் கொண்டனர். அவள் கையிலிருந்த மகளை அவர்கள் கொஞ்ச... அதைப் பார்த்தத் தமிழ் மனைவியின் அருகில் இயல்பாய் வந்தான். அந்தப் பெண்கள் மகளைக்

கொஞ்சுவதைப் பார்த்து... மகளின் புறம் பார்வையைத் திருப்பியவன்... எப்பொழுதும் போல் இன்றும் மகளின் அழகில் பெருமை கொண்டான்.

அவன் முகத்தில் இருந்த புன்னகையை அவன் மனையாளோ வேறுவிதமாய் எடுத்துக் கொண்டாள். அவ்வளவு நேரம் இருந்த அவளின் இணக்க நிலை மாறி முகத்தில் கடுமை வந்தது. மகளின் அருகாமையில் மனைவியின் முக மாற்றத்தைக் கவனிக்காமல் போய்விட்டான்.

வீட்டிற்கு வந்ததும் மகளைத் தூங்க வைத்தவள்... பின் அமைதியாய் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கட்டில் அமர்ந்துக் கொண்டாள்.

“பேபி... நான் கடைக்குக் கிளம்பறேன்... வா வந்து டிபன் எடுத்து வை” அவளின் மாற்றத்தை அவன் உணராமல் பேச,

“நான் எதுக்கு எடுத்து வைக்கணும்... அதுக்கும் அவங்களையே எடுத்து வைக்கச் சொல்லுங்க” அவள் பேசியது கேட்டு அவனுக்குக் கொஞ்சமும் புரியவில்லை.

‘எவங்களைச் சொல்றா?’ என்று யோசித்தவன் அவள் அருகில் வந்தான்.

“யாரைச் சொல்ற பேபி?” புரியாதவனாய் அவன் கேட்க, அவளோ அவனைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்து,

“அதான்... கோவில் வாசலில் உங்க மகளைக் கொஞ்சினாங்களே அந்தப் பொண்ணுங்களைச் சொன்னேன்” அவள் யாரைச் சொல்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது. ஆனால் ஏன் அவர்களைச் சொல்கிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை.

“நான் அவங்களுக்கா தாலிக் கட்டி இருக்கேன். உனக்குத் தானே தாலிக் கட்டி இருக்கேன். நீதானே என் வைப்...

அப்போ நீ தான் எனக்குச் சாப்பாடு எடுத்து வைக்கணும்" அவன் சரசமாய்ச் சொல்லியபடி அவள் அருகில் ஒட்டிக் கொண்டு அமர,

"ஓஹோ... அப்படியொரு நினைப்புக் கூட உங்களுக்கு வருமா?" அவள் எகிறவும், 'தமிழ்... ஏண்டா இப்படி வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கிற... பேசாம ரூட்டை மாத்து' மனதுக்குள் சொல்லிக் கொண்டவன் அதைச் செயல்படுத்த முயன்றான்.

"எனக்கு உன் நினைப்பைத் தவிர வேற எந்த நினைப்பும் இல்ல பேபி" அவனின் கெஞ்சல் அவள் மனதைக் கரைக்க...

"உங்க மனசில் நான் மட்டும் தானே இருக்கேன் நம்பி. வேறு யாருக்கும் அங்கே இடம் இல்லைல்ல..." கண்களில் கண்ணீர் முத்துத் துளிர்க்கக் கேட்டவளை அவன் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். அவளின் காயம் பட்ட மனம் அவனுக்குப் புரியத்தான் செய்தது. அவளின் காயத்தை எப்படிப் போக்குவது? என்று... அதற்கான வழித் தான் அவனுக்குத் தெரியவில்லை.

*****************************

"தமிழு என்னய்யா... ரொம்பக் களைச்சுப் போயி வந்துருக்க..." சோர்வாய் வந்து அமர்ந்தப் பேரனைப் பார்த்துத் தையல்நாயகி கேட்டார். அவன் பதில் பேசாமல் அவரைப் பார்த்துப் புன்னகைத்தான்.

சூரியாவும், அஞ்சலியும் அவளின் அம்மா வீட்டிற்குச் சென்றிருந்தனர். சிவகாமி ஆதங்கப்பட்டதில் இருந்த நியாயத்தைத் தமிழிடம் தையல்நாயகி எடுத்துச் சொல்லி... அவர் தான் அவளை அவள் அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தார். மனைவியும், மகளும் போனதில் இருந்து பேரனின் முகம் தெளிவில்லாமல் இருப்பதைக் அவர் கண்டு கொண்டார்.

“தமிழு… நீயும் சூர்யாவும் சந்தோசமா இருக்கீகளா?” அப்பத்தா திடீரென்று கேட்கவும் அவன் அதிர்ந்துப் போய் அவரைப் பார்த்தான்.

“சந்தோசமாத் தான் இருக்கோம்…” சட்டென்று சமாளித்துக் கொண்டு பதிலளித்தான்.

“உன்ன விட எனக்கு அனுபவம் ஜாஸ்தில… எங் கிட்டப் பொய் சொல்லாதே. என்ன தான் நீங்க ரெண்டுப் பேரும் சந்தோசமா இருக்கிற மாதிரிக் காட்டிக்கிட்டாலும்… உம் பார்வை அவ பின்னாடி ஏக்கத்தோட அலையறதை நான் என் ரெண்டுக் கண்ணால பார்த்தேன். என்ன ஏமாத்த நினைக்காதவே” அவர் தன்னைக் கண்டு கொண்டு விட்டாரே என்ற எண்ணத்தில் அவன் தலைக் குனிந்தான்.

அவர்களுக்கிடையில் நடந்ததை எல்லாம் சொல்லியவன், “அவள் என்னை மன்னிக்கவே மாட்டாளா அப்பத்தா?” பரிதவிக்கும் குரலில் கேட்டவனைப் பார்க்கும் போது அவருக்கும் பாவமாகத் தான் இருந்தது.

“அது நீ தப்புச் செய்றதுக்கு முன்னே யோசிச்சிருக்கணும். எங்களை மாதிரிப் பொம்பளைங்க மன்னிக்கிறதால தான் உன்ன மாதிரி ஆம்பிளைங்க தைரியமாத் தப்பைச் செஞ்சிட்டுத் திரியரிங்க… இந்த வெசயத்துல நா… ஒரு பொம்பளையா எம் பேத்திக்குத் தான் சப்போர்ட்டு பண்ணுவேன்” அவர் ஆணித்தரமாகச் சொல்ல…

“அப்பத்தா நீயே என்னைப் புரிஞ்சிக்கலன்னா எப்படி?” அவன் கேட்டதில் உருகிப் போனவர், அவனைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார்.

“நா ஒரு பெண் சென்மமா அப்படிச் சொன்னேன்… ஆனா எம் பேரனுக்கு அப்பத்தாவா… நா உனக்குத் தான் சப்போர்ட்டு தமிழு. உன்ன நா புரிஞ்சிக்காம வேறு யாருய்யா புரிஞ்சிக்குவா?” அவர் கண்ணீர் உகுக்க…

அங்கே அமைதி நிலவியது. ஆதிமூலம் இதைப் பார்வையாளராய் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

“உம் நல்ல மனசுக்கு எந்தக் கொறையும் வராது தமிழு. கூடிய சீக்கெரம் எம் பேத்தியும் உன்னப் புரிஞ்சிக்குவா பாரு” அவர் அவனுக்குத் தன்னம்பிக்கை அளிக்க... அதில் அவன் முகம் தெளிந்தது.

அன்று இரவு தமிழ் நன்கு உறங்கிக் கொண்டிருக்கும் போது... அவன் கனவில் கதிர் வந்தான். ரத்தம் தோய்ந்தக் கரங்களை அவனை நோக்கி நீட்டியபடி, ‘நம்பி’ என்று அழைக்க இவன் பயந்துப் போனவனாய் எழுந்து அமர்ந்தான். அவன் மேனி முழுவதும் வியர்வையில் தொப்பலாய் நனைந்து இருந்தது. இதற்கு மேலும் இந்தக் கனவை வளர விடுவதில் அவனுக்கு விருப்பம் இல்லை. இது ஒருநாள் இல்லை ஒருநாள் அவனையே அழித்துவிடும் என்று எண்ணினான். அதனால் இந்தக் கனவைக் களைவதற்காக என்ன செய்ய வேண்டும்? என்று யோசிக்க ஆரம்பித்தான்.

மறுநாள் மனநல மருத்தவரைச் சந்தித்து ஆலோசனைக் கேட்டான். அவர் ஆலோசனைப் படி மருந்துகளை உட்கொண்டு இரவில் நன்கு உறங்கினான். பத்து நாளில் கொஞ்சம் கொஞ்சமாய் அந்தக் கனவின் பிடியில் இருந்து வெளியில் வந்தான். இந்தப் பத்து நாளும் மனைவியும், மகளையும் பார்க்கத் தவறவில்லை. ஆனால் அவன் தான் சிகிச்சை எடுப்பதை அவளிடம் சொல்லாமல் மறைத்து விட்டான்.

அம்மா வீட்டில் இருந்து வந்த சூரியாவுக்குத் தமிழின் மாற்றம் பெரிதாகத் தெரியவில்லை. வந்த மூன்றாம் நாள் அவனின் மாற்றத்தைத் தெரிந்துக் கொண்டாள். இரவில் மகள் அழுதால் எப்போதுமே தமிழ் தான் முதலில் எழுந்து மகளை எடுத்துச் சூரியாவிடம் கொடுப்பான். இப்பொழுது எல்லாம் அஞ்சலி எத்தனை முறை எழுந்தாலும், அழுதாலும்... அவன் அந்த மாதிரி எழுவது இல்லை. ஏதோ

அடித்துப் போட்டார் போல் அவன் அயர்ந்துத் தூங்கிக் கொண்டிருப்பதை யோசனையுடன் அவள் பார்த்தாள்.

அவனுக்கு என்னவானது? என்ற கேள்வி அவள் மனதில் கவலையாய் எழுந்து அரித்தது. அந்த நள்ளிரவு நேரத்திலும் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவள் மனதைப் போட்டுப் பாடாய்ப் படுத்த... அவனை உலுக்கி எழுப்பினாள்.

“ஆங்... என்ன பேபி? ஏதும் வேணுமா?” கொட்டாவி விட்டபடி எழுந்து அமர்ந்தான் தமிழ்.

“நம்பி... நீங்க இப்ப எல்லாம் ரொம்ப மாறிட்டிங்க...” அர்த்த ராத்திரியில் எழுப்பி மனைவி இப்படிக் கேட்டால் எந்தக் கணவனும் பயந்துத் தான் போவான். அதே போல் அவனும் பயந்துவிட்டான்.

“ஹேய் பேபி... நான் எந்தத் தப்பும் பண்ணல... என்னை நம்பும்மா” பதட்டத்துடன் அவன் சொல்ல, அவள் நிதானமாய்த் தன் மனதில் எழுந்த சந்தேகத்தை அவனிடம் கேட்டாள். அதைக் கேட்டதும் தான் அவன் மனம் நிம்மதியடைந்தது.

“ஏன் பேபி... உனக்குச் சந்தேகம் கேட்குறதுக்கு நேரம் காலம் எல்லாம் கிடையாதா?” அவளைத் தன் கைவளைவில் கொண்டு வந்தவன், தான் மனநல மருத்துவரை சந்தித்ததைச் சொன்னான்.

“அந்தக் கனவுத் திரும்ப... திரும்ப... வந்துட்டே இருந்தது. அது என் குணத்தை மறுபடியும் மாத்திருமோன்னு பயந்துத் தான் நான் டாக்டர் கிட்டப் போனேன்” அவன் சொல்ல சொல்ல...

அவள் உள்ளம் அவனுக்காய் பாகாய் உருகியது. மனைவி என்ற பெயரில் அவள் அருகில் இருந்தும் அவனைக் கவனிக்காமல் விட்டதற்குத் தன்னைத் தானே நொந்துக்

கொண்டாள். இனியாவது அவனின் துன்பத்தில் தானும் பங்கு கொள்ள வேண்டும் என்று முடிவுச் செய்தாள்.

“ஏன் நம்பி... என்கிட்ட நீங்க ஏன் இதைச் சொல்லல?”

“உனக்கு ஒண்ணுத் தெரியுமா... நீ என் பக்கத்தில் இருந்தா... ஒருநாளும் இந்தக் கனவு எனக்கு வந்தது இல்லை. அதான் அன்னைக்கு நீ உங்க அம்மா வீட்டுக்குப் போன போது அந்தக் கனவு வந்ததால தான் நான் குடிச்சிட்டு வந்தேன். அதே மாதிரி இப்பவும் நீ உங்க அம்மா வீட்டுக்குப் போகவும் திரும்ப அந்தக் கனவு வந்துருச்சு. திரும்ப நான் குடிச்சிட்டு வந்து... அப்புறம் நீ ஒரு மாசம் என் கூடப் பேசாம இருந்து... இதெல்லாம் தேவையான்னு தான் டாக்டர் பார்க்க ஓடினேன்”

அவன் விளையாட்டாய் சொன்னாலும்... அவளின் அருகாமையை அவனுக்குத் தேவையாய் இருந்ததைச் சொல்லாமல் சொன்னான். அதில் புதைந்திருந்த காதலை, அன்பை அவள் உணர்ந்தாள். அவனின் மனக் காயத்திற்குத் தான் தான் மருந்து என்பதைப் புரிந்துக் கொண்டாள். திருந்தி மன்னிப்புக் கேட்டவனை இன்னமும் கஷ்டப்படுத்துவதில் அவளுக்குமே உடன்பாடு இல்லை. அவன் கழுத்தில் தன் கைகளை மாலையாய் போட்டுக் கொண்டு,

“நம்பி சாரி நம்பி...” என்று சொல்லியபடி அவன் முகமெங்கும் அவள் முத்தமழைப் பொழிய... எதிர்பாராத இந்த முத்தத்தில், அவளின் அடக்கப்பட்ட காதல் பீறிட்டுக் கொண்டு வெளிப்பட்டதில்... அவன் சுகமாய்த் திணறினான்.

“நம்பி...” கணவனிடம் எதையோ எதிர்பார்த்தபடி... கண்களை மூடிக் கொண்டு, உதடுத் துடிக்க அவள் இருந்தவிதம் அவன் மனதை அப்படியே தடம் புரட்டியது.

“பேபி உனக்குச் சம்மதமா?” அவன் பரிதவிப்புடன் கேட்க, அவனின் உணர்வுகளும் கொஞ்சம் கொஞ்சமாய் உயிர்தெழுந்து கொண்டிருந்தது.

“ம்…”

“பேபி… அஞ்சு செல்லத்துக்கு இப்போ தான் ரெண்டு மாசம் முடிஞ்சு இருக்கு…”

“ம்… ம்…” இன்னமும் கண்களை மூடிக் கொண்டு அவள் மயக்கத்தில் பதில் சொல்ல,

“பேபி… கவர்ன்மென்ட்டே ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடைவெளி வேணும்ன்னு சொல்லுது. நல்லா யோசிச்சுக்கோ” அவன் கேட்டதில் அவள் மயக்கம் தெளிந்து கண் திறந்தாள்.

“அதை நான் சொல்லணும் நம்பி… உங்களப் பேச விட்டாப் பேசிட்டே தான் இருப்பீங்க. இனி நோ பேச்சு. ஒன்லி ஆக்சன் தான்” என்றவள் அவன் கழுத்தை வளைத்துப் பிடித்து அவன் இதழில் தன் இதழைப் பதித்தாள்.

“ஹையோ… ஒண்ணும் தெரியாத பச்சைப் புள்ளைய இப்படி ரே பண்ணப் பார்க்காளே…” தன் உதட்டை விடுவித்துக் கொண்டு மூச்சு வாங்க அவன் பேச,

“நம்பி நீ அடங்க மாட்ட….” என்று சொல்லிக் கொண்டே அவள் அவனை இறுக அணைக்க,

“நானா அடங்க மாட்டேன்… உன்னிடம் மட்டும் தான் நான் அடங்குவேன் பேபி. இப்பப் பாரு அய்யாவோட ஆக்சனை…” அவள் செய்தச் செயல்களை எல்லாம் தனதாக்கிக் கொண்டு அவன் சொல்ல… அவள் விருப்பத்துடன் தன் வசம் இழந்து அவன் வசமானாள்.

## உயிர் : 23

ஓராண்டு கழித்து...

“தமிழு...” அப்பத்தாவின் அலறலில் அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அவன் அப்படியே கீழே ஓடி வந்தான். சூரியாவும் அஞ்சலியை தூக்கிக் கொண்டு அவன் பின்னே வந்தாள்.

அங்கே ஆதிமூலம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டவன் பதறிப் போய் அவரைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றான். உரிய நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும் ஆதிமூலத்தைக் காப்பாத்த முடியவில்லை. எந்த ஒரு அவஸ்தையும் படாமல் அவரின் உயிர் இந்தப் பூலோகத்தை விட்டுப் பிரிந்து சென்றது. கணவர் இறந்ததை அப்பத்தாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“ஆச்சி... இந்த இட்லியாவது சாப்பிடுங்க...” தன் கையிலிருந்த இட்டிலியைப் பிட்டு அவர் வாய் அருகில் கொண்டு சென்றாள் சூரியா. அவரோ அதை மௌனமாய் மறுத்துவிட்டு, எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆதிமூலம் போனதில் இருந்து அவர் ஏதும் பேசவில்லை... உணவு உட்கொள்ளவில்லை. இவ்வளவு ஏன் அவன் இறந்த செய்திக் கேட்டு, ‘ஐயோ ராசா... என்னை விட்டுட்டுப் போயிட்டீகளே...’ என்று அழுகுரல் கொடுத்தவர் தான்... அதன் பின் அழவும் இல்லை.

“அப்பத்தா... கொஞ்சமாவது சாப்பிடு அப்பத்தா... உனக்குப் பிரசர், சுகர் இருக்கு. உடம்புக்கு எதாச்சும் படுத்த போகுது” தமிழும் தன் பங்குக்குக் கெஞ்சினான். அவனின்

வார்த்தைக் கேட்காதது போல் அவர் அப்படியே அமர்ந்திருக்க... இருவரும் வெளியில் வந்தனர்.

“நம்பி... எனக்கு என்னமோ ஆச்சியை நினைச்சாப் பயமாயிருக்கு?” உண்மையில் பயந்துப் போனவளாய் கணவனின் தோளில் சாய்ந்துக் கொண்டாள் சூரியா.

“வீணா எதுக்குப் பயப்படுற... அப்பத்தா கொஞ்ச நாளில் சரியாயிரும்...” அவனுக்கும் மனதுக்குள் கவலையாகத் தான் இருந்தது. ஆனால் வெளியில் அவன் காட்டிக் கொள்ளவில்லை.

அவர்கள் பயந்துப் போலவே ஆதிமூலம் இறந்த மூன்றாம் நாள் தையல்நாயகியின் உயிர் தூக்கத்திலேயே பிரிந்தது. மனமொத்து வாழ்ந்த அந்தத் தம்பதியர் இறப்புக் கூடத் தங்களுக்குள் இடையில் பிரிவை உண்டாக்க விரும்பவில்லை. அன்று எல்லாம் அழுதச் சூரியாவை, தமிழால் சமாதானப்படுத்த முடியவில்லை.

“நாமளும் அதே மாதிரி மனமொத்து வாழணும் நம்பி... ஆச்சியை மாதிரி... நானும் உங்களை விட்டுட்டு உயிர் வாழ மாட்டேன் நம்பி. ஐ லவ் யூ நம்பி” காதலோடு சொன்னவளை அதே காதலுடன் அவன் அணைத்துக் கொண்டான்.

மூன்று வருடம் கழித்து...

“அப்பா... நீங்க இன்னமும் கிளம்பலியா?” அப்பொழுது தான் குளித்து முடித்து வந்த தமிழைக் கண்ட அவன் குட்டித் தேவதை அஞ்சலி இடுப்பில் கையை வைத்துக் கொண்டு முறைத்தாள்.

“இதோ ஒன் மினிட்ல கிளம்பிருவேன் செல்லம்” மகளிடம் சொல்லிக் கொண்டே அவன் உடையை மாத்த,

“உங்கள திருத்த முடியாது…” தலையில் அடித்துக் கொண்டாள் சின்னவள்.

“ம்ஹூம்… என்னாலேயே உங்க அப்பாவைத் திருத்த முடியல அஞ்சு. அப்புறம் உன்னால மட்டும் எப்படி முடியும்?” சொல்லிக் கொண்டே மகளிடம் ஹை பை கொடுத்துக் கொண்டாள் சூரியா.

“அம்மாவும் பொண்ணும் கூட்டணியா போடுறீங்க… என்னை மாதிரி ஒரு பையன் வரட்டும்… நான் அவன் கூடச் சேர்த்துட்டு உங்க ரெண்டுப் பேரையும் கவனிச்சுக்கிறேன்” மனைவியின் மேடிட்ட வயிறை பார்த்துக் கொண்டே அவன் சொன்னான். சூரியா இரண்டாவது குழந்தை உண்டாகி இருந்தாள். இப்பொழுது அவளுக்கு ஐந்தாம் மாதம் நடந்து கொண்டிருந்தது.

“ம்ஹூம்… எனக்கு அப்பா தான் வேணும்” சட்டென்று அன்னையிடம் இருந்து தந்தையின் பக்கம் தாவினாள் சின்னவள். அவளைப் பாசத்துடன் அணைத்துக் கொண்ட தமிழ், ‘எப்படி?’ என்பது போல் ஒற்றைப் புருவம் தூக்கி தன் மனையாளைப் பார்க்க… அவளோ, “வெவ்வ்வேவே…’ என்று பழிப்புக் காட்டினாள்.

“உதட்டையா சுளிக்கிற… சுளிக்கிற அந்த உதட்டை… நைட் வந்து கவனிச்சுக்கிறேன்” அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன் சொல்ல… அவள் வெட்கத்துடன் தலைக் குனிந்தாள்.

“ஹலோ… இன்னைக்கு எனக்குப் பேரண்ட்ஸ் மீட்டிங் இருக்கு. போகலாமா? வேணாமா?” மகள் சொன்னதும் இருவரும் அவசரமாய் அவள் படிக்கும் பள்ளிக்குக் கிளம்பிச் சென்றனர்.

தமிழின் விதி அங்கே மகளின் ஆசிரியர் உருவத்தில் அமர்ந்திருந்தது. அந்த இளம்பெண் ஆசிரியர் அஞ்சலியைப் பத்தி அவனிடமே பேசிக் கொண்டிருக்க…

அதைக் கண்டு சூரியா கடுப்பானாள். தமிழோ மகளின் குறும்புகளை, அவள் படிப்பைக் கேட்கும் ஆர்வத்தில் மனைவியை மறந்துப் போய்விட்டான்.

‘இவளுக்கு என்ன பார்த்தா ஆளா தெரியலியா? பொண்ணுக்கு அம்மாவா நான் குத்துக் கல்லாட்டம் அவ கண் முன்னாடி உட்கார்ந்து இருக்கேன். அவ என்னடா என்னைக் கண்டுக்காம... அவனை மட்டும் கண்டுக்கிறா... ஒருவேளை பெண்களைப் பார்க்கா என்கிற கண் வியாதி ஏதும் வந்திருக்குமோ’ மனதிற்குள் கடுப்புடன் நினைத்தவள் அதே கடுப்பில் அமர்ந்திருந்தாள்.

காரில் ஏறியதும் சூரியா படபடவெனப் பொரிய ஆரம்பித்தாள். “அவளுக்கு நீங்க மட்டும் தான் கண்ணுக்குத் தெரிவீங்களா? நாங்க எல்லாம் தெரிய மாட்டோமா? என் மகளைப் பத்தி என் கிட்டச் சொல்லாம... அது என்ன உங்களைப் பார்த்துட்டே பேசுறா” அவள் யாரைச் சொல்கிறாள் என்பதைத் தமிழ் புரிந்து கொண்டான்.

“நீ குழந்தை உண்டாகி இருக்கிறதால... உன்னால அஞ்சலியை கவனிக்க முடியாதுன்னு நினைச்சு அவங்க... என் கிட்டச் சொல்லி இருக்கலாம். நீ தப்பா நினைக்காதே பேபி” அவன் சமாதானமாகச் சொல்ல...

“போதுமே... நான் மத்தப் பொண்ணுங்களை ஒரு வார்த்தைச் சொல்லிறக் கூடாது. அவங்களுக்குச் சப்போர்ட் பண்றதுக்கு வரிஞ்சுக் கட்டிட்டு வந்துடுவீங்களே...” அவள் கோபமாய்ப் பேச...

அவன் அவளை மறுத்துப் பேச வாயைத் திறக்க முயலும் போது... மகள் தன்னைக் கவனிப்பதைக் கவனித்துவிட்டான். அதன் பின் வீடு வரும் வரை அவன் ஒன்றும் பேசவில்லை. மகளுக்கு மதிய உணவு ஊட்டி அவளைத் தூங்க வைக்கும் வரை பேசாது இருந்தவன்... அதன் பின் மனைவி அருகில் வந்தான்.

“ஏன் பேபி… இப்படி எல்லாம் பேசுற… நான் அப்படிப் பட்டவனா? இன்னுமா நீ என்னைப் புரிஞ்சிக்கல…” அவன் வேதனையுடன் சொல்ல… அவனின் வேதனை அவளையும் வாட்டியதோ என்னமோ…

“சாரி நம்பி… என்னையும் அறியாம நான் பேசிட்டேன். இனிமேல் நான் அப்படிப் பேச மாட்டேன்” சொல்லிக் கொண்டே அவன் மார்பில் சாய்ந்துக் கொண்டாள்.

“அன்னைக்கே அந்த ராகினி சொன்னா…” அவன் ஏதோ நினைவில் சொல்ல… அவன் மார்பில் இருந்து முகம் நிமிர்த்தியவள் சந்தேகமாய்…

“யார் ராகினி? அவள் என்ன சொன்னா?” கூர்மையாய் அவனைப் பார்த்தபடிக் கேட்டாள்.

‘தமிழ்… உன் வாய் தான்டா உனக்குச் சத்ரு…’ தன்னைத் தானே கடிந்துக் கொண்டவன்,

“அது… அது… வந்து…” அவன் இழுக்க…

“நீங்க பழகினப் பொண்ணுங்கள்ள ஒருத்தி தானே…” அழுகையில் முகம் சுருங்கக் கேட்டவளைக் கண்டு,

“ப்ளீஸ் பேபி… நடந்து முடிஞ்சதையே பேசாதே… இப்ப நான் மாறிட்டேன் பேபி… அதை நிரூபிக்க நான் என்ன செய்யணும்? வேணும்ன்னா அஞ்சலி மாதிரி தோப்புக் கரணம் போடவா?” என்றவன் காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட…

“ஒண்ணு… ரெண்டு…” என்று அவள் சந்தோசமாய் முகம் கொள்ளாச் சிரிப்புடன் அதை எண்ண ஆரம்பிக்க…

“அடிங்… புருசன்காரன் ஆச்சே போனாப் போகுதுன்னு பாவப்படுவன்னு பார்த்தா… நீ தோப்புக் காரணத்தை எண்ணவா செய்ற… உன்னை” அவளை அடிக்க வருவது

போல் அவளருகில் வந்தவன் அவளை அணைத்துக் கொண்டான். அவனின் செய்கைக் கண்டு அவள் கலகலத்துச் சிரிக்க... அவன் ஆசையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்றுமே தன்னவன் தன்னைத் தான் நேசிக்கக் வேண்டும்... தன்னை மட்டும் தான் பார்க்க வேண்டும்... தன்னை மட்டும் தான் பூஜிக்க வேண்டும்... தன்னை மட்டும் தான் நினைவில் கொள்ள வேண்டும் என்று எந்தப் பெண்ணாக இருந்தாலும் ஆசைப்படுவாள். இதற்குச் சூரியாவும் விதிவிலக்கு அல்ல. என்ன ஒன்று அவனின் கடந்த காலம் அவளின் உள்ளத்தின் ஓரத்தில் நெருஞ்சி முள்ளாய்க் குத்துகிறது. நிச்சயம் தமிழின் அன்பு, காதல் அதைப் போக்கிவிடும் என்று நம்புவோமாக...

****** ஊனாகி... உயிராகி... காதலாக மாறிவிட்டது... ******